வெள்ளிவிழா

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை 300

மே 2025






பகிர்தலின் மூலம்
விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

*ஞானம் (300)*

*ஆசிரியர்*
ஞானம் பாலச்சந்திரன்

*இணை ஆசிரியர்*
ஞானம் ஞானலக்ஷ்மி

*ஓவியர்*
கிறிஸ்டி நல்லரெத்தினம்

ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6
இலங்கை
தொலைபேசி: + 94 11 2586013
மின்னஞ்சல்: editor@gnanam.info

*ஸ்தாபகர், ஆலோசகர்*
தி. ஞானசேகரன்

*GNANAM - 300*

*Editor*
Gnanam Balachandran

*Co-Editor*
Gnanam Gnanaluxmy

*Artist*
Christi Nallaratnam

*Founder & Adviser*
T. Gnanasekaran

*Published by*
Gnanam Pathippakam
3B, 46th Lane, Colombo 6
Sri Lanka
Tel: + 94 11 2586013
Email: editor@gnanam.info

Price SL Rs. 300/=
US $ 10

PUBLIC DOMAIN
ஞானம் சஞ்சிகையானது
பொதுவெளி (Public Domain)
பதிப்புரிமையை உடையது.

# இதழினுள்ளே.....

## கவிதைகள்


- அநபாய சோழன் 15
- செல்லையா சுப்ரமணியம் 23
- சு. கருணாநிதி 29
- செ. ஞானராசா 29
- கவிஞர் அகளங்கன் 32
- கரவை மகள் 35
- கனகசபாபதி செல்வநேசன் 40
- பீஸாபதி சந்திரசேஹரா / அன்னலட்சுமி இராஜதுரை 49
- சிவநாயகம் சிசிதா 61
- Dr. ஜலீலா முஸம்மில் 73
- வில்வரசன் 82
- எஸ். சுடர்நிலா 87
- கு. யர்சினி 114
- நீ. தர்மலிங்கம் (அமரர்) 131


## கட்டுரைகள்


- மு.பொ. (அமரர்) 8
- வாகரைவாணன் 33
- E. A. G. மிலாணி 79
- லத்பான் றோஸின் 115


## விமர்சனம்


- மொழிவரதன் 53


## பத்தி


- **பேராசிரியர் துரை. மனோகரன்** 134


## வாசகர் பேசுகிறார்


வாசகர் பேசுகிறார் 136


## சிறுகதைகள்


- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் 4
- இரா. சிவலிங்கம் 11
- சி. மௌனகுரு 16
- யே. கிறித்துறாஜா 19
- கிறிஸ்டி நல்லரெத்தினம் (அவுஸ்திரேலியா) 24
- செ. மகேஷ் 30
- கௌசி (ஜேர்மனி) 36
- கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் 41
- சுந்தரிமணியன் (இந்தியா) 45
- ந. பார்த்தீபன் 48
- கீத்தா பரமானந்தன் (ஜேர்மனி) 50
- சமரபாகு சீனா உதயகுமார் 55
- கே. எஸ். சுதாகர் (அவுஸ்திரேலியா) 62
- சி. ரஞ்சிதா 69
- பாலரத்னம் சரண்யா 74
- நிலவூர்ச் சித்திரவேல் 83
- மதிவதனி (சுவிற்சலாந்து) 88
- ஷெல்லிதாசன் 93
- பொ. கருணாகரமூர்த்தி (ஜேர்மனி) 96
- J. A. றஜீவ் 103
- க. சுவர்ணராஜா 106
- விமல் பரம் (இலண்டன்) 108
- ஆ. மோகனசுந்தரம் 122
- வெல்லாவெளி விவேகானந்தம் 127
- ஆறுமுகம் சந்திரமோகன் 132


**வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்**
**கவிப்பெருக்கும் மேவுமாயின்,**
**பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்**
**விழிபெற்றுப் பதவிகொள்வர்.**

# ஞானம் வெள்ளிவிழா



## அனைவருக்கும் அன்பு வணக்கம் !

ஜூன் 2000இல் வெளிவரத் தொடங்கிய ஞானம் சஞ்சிகை, கடந்த 300 மாதங்களாக தொடர்ந்தும் மணம் பரப்பி, தற்போது வெள்ளிவிழாவினைக் கொண்டாடுகிறது. இத்தருணத்தில் உங்கள் அனைவருடனும் மீண்டுமொருமுறை இணைந்துகொள்வதில் நெகிழ்வடைகிறோம்.

ஈழத்துத் தமிழ் வரலாற்றில் 21ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பெற்ற சஞ்சிகை யொன்று, கால் நூற்றாண்டைத் தொட்டிருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது; நிறைவுணர்ச்சியையும் தருகிறது.

“ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை மூலம் இலக்கிய உலகிற்கு எம்மாலான பணியைத் தொடர விழைகின்றோம்...” எனும் நோக்கத்தினை **முதலாம்** சஞ்சிகை யின் ஆசிரியர் தலையங்கத்தில் நாங்கள் முன்வைத்தோம். ஞானத்துடன் பயணித்த அனைவரும், கடந்த இருபத்தைந்து வருடங்களில் யாம் செய்த பணிகளை நன்கு அறிவீர்கள். ஆகையால், அப்பட்டியலை இத் தருணத்தில் தவிர்க்கிறோம்.

**காலத்தின் தேவைக்கேற்ப** இலக்கியப் பணிகளில் நாம் தொடர்ந்தும் கவனத் தைச் செலுத்திவருகிறோம். கடந்த சில ஆண்டுகளாக, பண்டைய எழுத்துகளின் இலத்திரனில் வடிவப் பிரதிகள் இணைய நூலகங்களில் பரவலாகத் தரவேற்றப்பட்டும், ஆவணப்படுத்தப்பட்டும் வருவதைக் காணலாம். வேண்டிய நூல்களை, வேண்டிய நேரத்தில் பெற்றுக்கொள்ளும் வசதி, விரல்நுனிகளில் வந்துவிட்டது. இந்நிலையில், முன்னமே வெளிவந்த ஆக்கங்களைத் தொகுத்து மீண்டும் ஆவணப்படுத்தும் தேவை, தமிழுலகில் தற்போது உள்ளதா? எனும் கேள்வி முன்னெழுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, 289ஆம் இதழான காசிவாசி செந்திநாதையர் நூற்றாண்டுச் சிறப்பிதழில் மறைந்துபோன ஆக்கங்களைத் தேடித் **தொகுத்தலுடன் நிறுத்தாது** அவ்வாக்கங்களைத் தற்காலத்துடன் இணைக்கும் நோக்குடன், 500க்கும் மேற்பட்ட விளக்கக்குறிப்புகளை எழுதி உள்ளடக்கினோம். இந்தப் பணிக்கு எமக்கு ஒருவருட காலம் தேவைப்பட்டது. இப்பணியானது மீட்டெடுத்தல் மற்றும் ஆவணப்படுத்தல் எனும் நிலைகளைத் தாண்டி, **பண்டைய எழுத்துக்களை தற்காலத்துக்குக் கொண்டுவந்து இணைக்கும் முயற்சி**யாக முதிர்வடைந்தது.

இம்முயற்சியின் பின்னர் **சென்ற ஒருவருட காலமாக, இளம் எழுத்தாளர் களுக்கும் படைப்பாளிகளுக்கும் களமமைக்கும் திசையில் எமது கவனத்தைச் செலுத்தினோம்.** ஞானம் 290ஆம் இதழ் தொடங்கி பாடசாலை மற்றும் பல் கலைக்கழக மாணவர்கள் உள்ளடங்கலாக இளம் எழுத்தாளர்களுக்கு கள மமைத்து ஊக்கப்படுத்தினோம். அத்துடன் சிலரின் கன்னிப் படைப்புகளை வெளியிட்டு அவர்களின் இலக்கியப் பயணக் கதவுகளைத் திறந்துவிட்டோம். கடந்த ஒருவருட காலத்தில் வெளிவந்த ஒவ்வொரு இதழ்களிலும் இளம் எழுத் தாளர்களின் எழுத்துகள் உள்ளடக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இம்முயற்சியின் பெறுபேற்றினை இந்த 300ஆம் இதழில் நன்கு கண்டுகொள்ளலாம். இவ்விதழில்

பல பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் கடந்த ஒரு வருடத்துக்குள் ஞானத்தால் உள் வாங்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இது எமக்கு நம்பிக்கை தருகின்றது.

இளம் தலைமுறையினருக்கு களம் அமைத்துக்கொடுத்து அவர்களை வளர்த்தெடுக்கவேண்டியது காலத்தின் தேவையாகும். **இலக்கிய வழி**யின் தொடர்ச்சிக்கு இம்முயற்சி இன்றியமையாதது.

இது நிற்க. 300ஆம் இதழ் பற்றி சில வார்த்தைகள்...

25ஆம் வருட நிறைவில் வெளிவரும் ஞானம் 300ஆவது இதழில், 25 சிறு கதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை இவ்விதழுக்கென எம்மால் கேட்டுப்பெற்ற படைப்புகள் அல்ல. எமக்கு வந்து குவிந்துள்ள கதைகளில் தெரிவுசெய்து, 25 கதைகளை உள்ளடக்கியுள்ளோம்.

தமது இருபதுகளில் உள்ள எழுத்தாளர்கள் தொடங்கி, எண்பதுகளில் இன்றும் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கும் முதிர்ந்த படைப்பாளிகள்வரை எழுதிய **விரவிய கருக்களைக் கொண்ட கதைகள் இவை.** தற்காலத்துத் தமிழ்ச் சமூகம் எதிர்கொள்ளும் நாளாந்த சம்பவங்கள் கருப்பொருளாகி யுள்ளன. இவ்விதழில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து கதைகளும் உச்சம் தொட்டவை எனக் கூறிவிட இயலாது. சில கதைகளில், ஐம்பது வருடத்துக்கு முந்திய கரு மற்றும் கையளிப்பு முறைகளின் சாயல்களை அவதானிக்கலாம். இருப்பினும் இக்கதைகளை ஒருசேர வைத்து தொகுத்து நோக்கும்போது, எவ்வாறு எழுதலாம், எவ்வாறு எழுதுவதைத் தவிர்க்கலாம், எவ்வாறு மெருகூட்டலாம் எனும் சிந்தனைகள் இளம் எழுத்தாளர்கள் மத்தியில் தெளிவுபெறும் எனும் நம்பிக்கை துளிர்விடுகிறது. அத்துடன், எதிர்காலத்தில் இக்காலத்து எழுத்துப்போக்குகளைத் துணியும் **காலக்கண்ணாடி**யாகவும் இவ்விதழ் மிளிரலாம்.

இக்கதைகளுக்கு எமது ஓவியர் **கிறிஸ்டி நல்லரெத்தினம்** அவர்கள், மிகவும் தத்ரூபமான ஓவியங்களினால் உணர்ச்சிகளை எடுத்துக் காட்டியுள்ளார். இவ் விதழுக்கென அவரால் ஏறத்தாழ ஐம்பது ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. அவருக்கு ஞானத்தின் அன்பும் நன்றியும் என்றும் உரியன.

வெள்ளிவிழா காணும் இத்தருணத்தில், மகிழ்ச்சியுணர்வு எம்மைச் சூழும் அதேவேளை, பொறுப்புணர்வு மேலிட்டு நிற்கிறது. எம்மால் செய்யக்கூடிய, எம்மால் செய்யவேண்டிய பணிகளின் பட்டியல்கள் மிகநீண்டு விரிகின்றன.... தமிழ் நெஞ்சங்கள் அனைவரின் ஆதரவுடன் நிதானமாக பயணிப்போம்.

நன்றி, வணக்கம்.

***பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!***

ooo

சிறுகதை



# பேரம்பலத்தார்



காரைக்கவி
கந்தையா பத்மானந்தன்

பாரிச வாதம் வந்தபடியாலை ஒரு கையும் காலும் விளங்காத பேரம்பலத்தார் வெளிவிறாந்தையில போட்டிருந்த சாய்மனைக் கதிரையில படுத்திருந்தார். விறாந்தைக்கு தட்டி கிட்டி ஒண்டும் கட்டாதபடியால வீசின அனல்காத்தை தன்ரை இயங்கக் கூடிய கையில பிடிச்ச பனை ஓலை விசிறியாலை விசுக்கி விசுக்கி விரட்டிக் கொண்டு இருந்தார் . பாவம் அவர் கை உளைய விசிறி வீசுறதை நிப்பாட்டிற நேரமாப் பாத்து அனல் காத்து அவற்றை உடம்பை நல்லா மேஞ்சு போடும். அப்பிடியான நேரத்திலை விட்டத்தைப் பாத்தபடி விரிஞ்சு இருக்கும் அவற்றை கண்ணிலை ஒரு காத்தாடி ஒண்டு விட்டத்திலை பூட்டி இருந்தால் எவ்வளவு நல்லா இருக்கும் எண்ட கனவு தெரியும். உப்பிடி கை உளையிற நேரத்திலை ஆரும் தன்ரை சொந்தக்காரர் வந்தால் விசிறச் சொல்லலாம் எண்டு பூட்டி இருக்கிற படலையை ஒரு நப்பாசையோட எட்டி எட்டி பார்ப்பார் .

அவற்றை சாய்மனைக் கதிரைக்கு முன்னாலை ஏலக்கூடிய கைக்கு எட்டக்கூடிய விதத்திலை ஒரு சின்ன ரீப்போவிலை தண்ணிப் போத்தில் ஒண்டும், ஒரு தகரப் பேணியுக்கை கொஞ்ச விசுக்கோத்தும் இருக்கும். தண்ணி விடாச்சால் போத்திலை ஒரு மாதிரி எடுத்து ஊத்தி ஊத்தி தண்ணி குடிக்கும் பேரம்பலத்தார் பசிச்சால் நாலஞ்சு விசுக்கோத்தை எடுத்து தின்னுவார். அதைப் பாக்கிற ஆருக்கும் கூட்டிலை அடைச்சு தண்ணியும் சாப்பாடும் வைச்சிருக்கிற வளப்பு நாயின்ரை நினைவு வாறதை தவிர்க்கேலாது. அந்த தண்ணி ரீப்போவுக்குப் பக்கத்திலை இருக்கிற ஒரு சின்ன ஸ்ரூலிலை கொஞ்ச கதைப் புத்தகங்கள் இருக்கும். பேரம்பலத்தார் நல்ல வாசகர் எண்டபடியாலை அந்தப் புத்தகங்களை திருப்பித்

திருப்பிப் படிப்பார். அப்பிடித் திருப்பி திருப்பிப் படிக்கேக்கை ஆரும் புதுப் புத்த கங்கள் கொண்ணந்து தரமாட்டினமோ எண்டு ஏம்பலிப்பார்.

பாரிச வாதம் வந்ததாலை குளறிக் குளறிக் கதைக்கிற பேரம்பலத்தார் கதைக்கிறது ஆருக்கும் விளங்காது. அதோட அவருக்கு காதும் கேக்காது எண்டபடியாலை ஆரும் கதைக்கிறது அவருக்கும் விளங்காது. அதாலை வீட்டிலை உள்ள ஒருத்தரும் அவரோடை கதைக்காயினம். பாவம் அவர் ஆரும் வந்து தன்னோடை கதைக்காயினமோ ஊர்ப் புதினம் சொல்ல மாட்டினமோ எண்டு ஏம்பலிப்பார். தற்செயலா அவற்றை சொந்தக்காரர் ஆரும் அவரைப் பாக்கப் போனால் இழுத்து வைச்சுக் கதைப்பார். போறவை அவரோடை கதைச்சுக் கதைச்சே களைச்சுப் போவினம்.

இத்தனைக்கும் பேரம்பலத்தார் ஒண்டும் ஏக்கன் போக்கன் கிடையாது. அண்ணன் தம்பி முடுக்கு இனசனக்கட்டு உள்ள நல்ல படிச்ச பெரிய உத்தியோகத்திலை இருந்த மனிசன். சரியான கட் அண்ட் ரைட்டான பேரம்பலத்தார் கடும் நேர்மையானவர். அதோட தொழில் பக்தி உள்ளவர் எண்டு பேரெடுத்தவர். அவர் பதவி வகிச்ச காலத்திலை எந்தச் சோலி சுறட்டுக்கும் போகாதவர். அவரைப்பற்றி அது இது எண்டு ஒருத்தரும் ஒரு குறை சொன்னது கிடையாது. சுருக்கமாச் சொன்னால் அவர் மிதிச்ச இடத்துப் புல்லும் சாகாது. குடிப்பழக்கம், புகைப் பழக்கம், வெத்திலைப் பழக்கம் எதுவும் இல்லாத பேரம்பலத்தார் கடும் சைவன், கடவுள் பக்தி உள்ளவர், நல்ல சுத்த பத்தமான ஆள்.

கிட்டத்தட்ட ஆறடி உயரம் உள்ள கொஞ்ச தடித்த சரீரம் உள்ள பேரம்பலத்தார் வேலைக்கு வெளிக்கிட்டுப் போகேக்கை ஆக்கள் ஒரு பயம் கலந்த மரியாதையோட பாப்பினம். உப்பிடி போகேக்கை வெளி ஆக்களோடை அதிகம் கதைக்காத பேரம்பலத்தார் பல்லு கொஞ்சம் மிதப்பு எண்டாலும் ஆரும் தெரிஞ்ச ஆக்களைக் கண்டால் வஞ்சகம் இல்லாமல் வாய் நிறையச் சிரிப்போட “என்ன புதினம்...?” எண்டு கேட்டபடி கடந்து போவார். சத்தம் போட்டுக் கதைக்கத் தெரியாத பேரம்பலத்தார் ஆரோடை என்னவும் கதைக்கிறது எண்டால் பிள்ளை குட்டியளின்ரை படிப்பைப் பற்றித்தான் விசாரிப்பார். “அவையைக் கவனமாப் படிப்பி யுங்கோ... படிச்சினம் எண்டால் வாழ்க்கையில ஒரு கஷ்டமும் இல்லாமல் சீவிக்கலாம்...” எண்டு அட்வைஸ் பண்ணுவார். அதுமாதிரியே தன்ரை பிள்ளையளையும் என்ஜினீயர், டாக்குத்தர், அக்கவுண்டன் எண்டு படிப்பிச்சு ஆளாக்கினவர். பேந்து அவைக்கு ஆன இடங்களிலை கலியாணமும் கட்டி வைச்சவர்.

பென்சன் எடுத்த பிறகும் எல்லாம் ஒழுங்காப் போன பேரம்பலத்தாருக்கு பாரிச வாதம் வந்து படுக்கையில விழுந்த பிறகு எல்லாமே மாறிப் போட்டுது. அவற்றை பெண்டில் பிள்ளையள் அவரை ஒரு பாரமா நினைக்க வெளிக்கிட்டினம். “சாய்..... உவராலை மனிசருக்கு சரியான கரைச்சல்... சொல்வழி கேக்க மாட்டார். சிலவேளை ஒண்டுக்கு ரெண்டுக்கும் படுக் கையிலை போடுவார்... உந்தப் பெரிய உருப் படியை ஆராலை தூக்கப் பறிக்க ஏலும்....” எண்டு அவற்றை வீட்டம்மா வாற தன்ரை சொந்த பந்தங்களுக்கு குறை சொல்ல வெளிக்கிட்டா. பிள்ளையளும் “அம்மா பாவம் தானே.... அப்பாவாலை அம்மாவுக்குத்தான் கரைச்சல்.....” எண்டு சொல்ல வெளிக்கிட்டினம் . காது கேக்காததாலை இது ஒண்டும் விளங் காத பேரம்பலத்தார் தன்ரை பாட்டிலை தேமே எண்டு படுத்திருப்பார்.

அவ வீட்டம்மா பாரமான அவரைத் தூக் கேலுமே இழுக்கப் பறிக்க ஏலுமே எண்டு சொல்லேக்கை “அந்த உருப்படியை உனக்கு மேல தாங்கித்தானே இத்தினை வரியம் குடும்பம் நடத்தினனி... பிள்ளைப் பெத்தனி.... இப்ப மட்டும் பாரமா இருக்கோ..” எண்டு சொந்தக்காறர் ஒருத்தரும் கேக்கத் துணி யேல்லை..

“அம்மா பத்து மாதம்தான் எங்களை வயித்திலை சுமந்தவ.... ஆனால் எங்கட அப்பா எங்களைத் தன்ரை நெஞ்சிலை தோளிலை எத்தினை வரியமாச் சுமந்தவர்...எங்களுக்கு தின்னக் குடிக்க உடுக்க கிடுக்க உடுப்பு எடுக்கச் செலவு.... படிப்புச் செலவு... வருத்தம் வந்தால் மருந்து மாத்திரைச் செலவு.. எண்டு எவ்வளவைச் சுமந்திருப்பார்..” எண்டு தாய்க்கு வக்காலத்து வாங்கிற அந்தப் பிள்ளையளும்

யோசிக்கிறேல்லை. தங்களுக்கும் தங்கடை தேப்பனைப் போல ஒரு கடைசிக் காலம் இருக்குது எண்டதை அவை ஒருநாளும் உணருகிறேல்லைப் போல .

உண்ணாண எங்கட சமூகத்தை தாய் வழிச் சமூகம் எண்டு சொல்லுறதாலைப் போல கடைசிக் கந்தாயத்திலை தாயைத் தாங்கிற அளவுக்குப் பிள்ளையள் தேப்பனைத் தாங்கிறேல்லைப் போல. பொம்பிளையளும் இளமையில தங்கட தினவு தீரு மட்டும் ஆம்பிளையளைப் பாவிச்சுப்போட்டு கடைசிக் கந்தாயத்திலை அவைக்கு வருத்தம் வாதை வந்து ஏலாமல் போன பிறகு பிள்ளை குட்டியளோடை சேந்து கொண்டு ஆம்பிளையளை ஒதுக்கி வைச்சுப் போடுவினம் போல. ஆம்பிளையள் உடம்பில தெம்பு இருக்கேக்கையே செத்துக்கெட்டுப் போறது நல்லம். இல்லாட்டில் வருத்தம் வாதை வந்தால் பேரம்பலத்தார் போலக் கிடந்து சீரழிய வேணும்.

**வயதான காலத்திலை வருத்தம் வாதை வருகுதோ இல்லையோ பிள்ளை குட்டியள் கவனிக்காமல் விடுகிறதாலை வாற மன வருத்தத்துக்கு அளவு கணக்கில்லை. அதுக்கு மருந்தே கிடையாது. உதாலைதான் இண்டைக்கு கன இடங்களிலை வயது போனதுகள் என்ரை பிள்ளையளைப் பாப்பனோ என்ரை பேரப் பிள்ளையளைப் பாப்பனோ எண்டு கிடந்து மறுகுதுகள்.**

சாய்மனைக் கதிரையில படுத்திருக்கிற பேரம்பலத்தாருக்கு சில நேரங்களிலை கண்ணீர் வழிஞ்சு கன்னத்திலை கோடு இழுத்து விட்டிருக்கும். ஒரு ஆறுதலுக்குத்தன்னும் பேசப் பறைய ஆளில்லாமல் ஒரு மூலையிலை பாவிச்சு முடிஞ்ச பழைய ரயர் மாதிரி தூக்கிப் போட்டு இருக்கிறதாலை தன்னுக்குள்ளையே கிடந்து குமைஞ்சு குமைஞ்சு மன நோயாளியாய்ப் போன பேரம்பலத்தாருக்கு தான் இருந்த சீரைச் சிறப்பை எண்ணி தன்ரை பெண்டில் பிள்ளையளுக்காக தான் தன்னை ஒறுத்து எவ்வளவு எல்லாம் செய்தன் எண்டதை எண்ணிப்போல கண்ணீர் வழிஞ்சு ஓடும். “கடவுளே என்னை ஏன் இப்பிடி உத்தரிக்க விட்டிருக்கிறாய்..... நான் ஆருக்கு என்ன துரோகம் செய்தனான்.... ஆருக்கு என்ன அநியாயம் செய்தனான்.... என்னைக் கொண்டு போக மாட்டியோ...” எண்டு பேரம்பலத்தார் ஊரிலை உள்ள தெரிஞ்ச கடவுள், தெரியாத கடவுள் எண்டு எல்லாத்தையும் கும்பிடுவார்.

வயதான காலத்திலை வருத்தம் வாதை வருகுதோ இல்லையோ பிள்ளை குட்டியள் கவனிக்காமல் விடுகிறதாலை வாற மன வருத்தத்துக்கு அளவு கணக்கில்லை அதுக்கு



மருந்தே கிடையாது. உதாலைதான் இண்டைக்கு கன இடங்களிலை வயது போனதுகள் என்ரை பிள்ளையளைப் பாப்பனோ, என்ரை பேரப் பிள்ளையளைப் பாப்பனோ எண்டு கிடந்து மறுகுதுகள். அதுகள் செய்த கர்மாவை அது களே அனுபவிச்சுக் கழிக்க வேணும் எண்டு கடவுள் நினைக்கிறதாலைப் போல அதுகளை உப்பிடிக் கிடந்து உத்தரிக்க விட்டுப் போடு வார். உப்பிடிக் கிடந்து உத்தரிக்க விடுகிற விசயத்திலை கடவுளுக்கும் பிள்ளையளுக்கும் கடும் ஒற்றுமை இருக்கும்.

உப்பிடி இருகேக்கை ஒருநாள் பேரம் பலத்தார் கிடந்து உத்தரிச்சது காணும் எண்டு கடவுள் நினைச்சாரோ தெரியாது பேரம் பலத்தாருக்குச் சீவன் போட்டுது. அப்பவும் அவர் தனியாத்தான் கிடந்தவர். அவரைப் பாக்க எடுக்க எண்டு சம்பளத்துக்குப் பிடிச்ச பெடி வந்து பாக்கேக்கைதான் தெரியும் பேரம்பலத்தாருக்கு சீவன் போன விஷயம். அவை பேரம்பலத்தாரின்ரை பெண்டில் பிள்ளை தங்களாலை பேரம்பலத்தாரை பாக்க எடுக்கேலாது எண்டுதான் சம்பளத்துக்கு அந்தப் பெடியனைப் பிடிச்சு வைச்சிருந்தவை.

உண்மையை சொல்ல வேணும் எண்டால் அவை பேரம்பலத்தாரிலை உருகி உந்த ஏற் பாட்டைச் செய்யேல்லை. அவற்றை அண்ணன் தம்பி இனசனம் பேசுவினம். ஊரிலை உள்ளவை குறை சொல்லுவினம் எண்டு போட்டு ஊருக்கு அஞ்சித்தான் உந்த ஏற்பாட்டைச் செய்தவை. சரி பிழை கதைச்ச இனசனம் தற்செயலா பேரம்பலத்தாரைப் பாக்கப் போனால அவை பெண்டில் பிள்ளை மூஞ்சை குடுத்துப் பேசா யினம். வா இரு எண்டு சொல்லாயினம். முகத்திலை அடிக்குமாப் போல கதவைச் சாத்திப்போட்டு வீட்டுக்குள்ளை இருப்பினம். வாறவை அவர் பேரம்பலத்தாரோடை வெளி விறாந்தையில் இருந்து இரைஞ்சு கதைச்சுப் போட்டுப் போவினம். அவன் பெடி வந்தால் தான் பேரம்பலத்தாருக்கு முகம் கழுவுறது ஒண்டுக்கு ரெண்டுக்குப் போறது ஷேவ் எடுக்கிறது குளிக்கிறது முழுகிறது தின்னிறது குடிக்கிறது எல்லாம் நடக்கும். அவன் வந்து எல்லாம் முடிச்சுப் பம்பஸ் மாத்திப்போட்டு போனால் பேந்து அவன் வரும்வரையும் பேரம்பலத்தார் சாய்மனைக் கதிரையிலை அவன் எப்ப வருவான் எண்டு ஏம்பலிச்சபடி பாத்துக்கொண்டு இருப்பார்.

சீவன் போன பேரம்பலத்தாரைப் பாத்ததும் அவன்ரை கண்ணிலை இருந்து ரெண்டு துளி கண்ணீர் வந்தது. படிச்சு நல்ல உத்தி யோகம் பாத்து நல்ல பெயரோடை இருந்து பெண்டில் பிள்ளைக்கு உழைச்சுக் குடுத்து அவையின்ரை நல்லது கேட்டது எல்லாம் பாத்த மனுசன் இப்பிடி பாக்க எடுக்க ஆள் இல்லாமல் அநாதையாக் கிடந்து செத்துப் போனாரே எண்ட பச்சாபத்தாலைதான் அந்தக் கண்ணீர் அவனுக்கு வந்திருக்கலாம். பேரம்பலத்தார் செத்த விஷயத்தை அவன் கதவைத் தட்டி வீட்டுக்குள்ளை இருந்த பெண்டில் பிள்ளையளுக்குச் சொன்னான். சாய்மனைக் கதிரையுக்கை கிடந்த பேரம்பலத்தாரின்ரை முகத்திலை ஒருநாளும் இல்லாத ஒரு மலர்ச்சி தெரிஞ்சுது. இந்த நரகம் பிடிச்ச குடும்பத்திலை இருந்து சுதந்திரம் கிடைச்சுட்டுதே எண்ட நிம்மதி அந்த மலர்ச்சிக்கு காரணமா இருக்கலாம்.

அவன் பெடி போய் சொன்னதைக் கேட்டு வெளியிலை வந்த பெண்டில் பிள்ளை செத்துப்போன பேரம்பலத்தாரைப் பாத்து கொஞ்ச நேரம் மாரடிச்சுப் போய் நிண்டிச் சினம். எண்டாலும் அவையின்ரை முகத்திலை ஒரு சந்தோசமும் நிம்மதியும் தெரிஞ்சுது. சும்மா ஒப்பாசாரத்துக்கு அழ வெளிக்கிட்ட பேரம்பலத்தாரின்ரை வீட்டம்மா நிண்டாப்போல கீழை விழுந்தா. அவவை தூக்கி எடுத்த வோளொருத்தி ஐயையோ அம்மாவுக்கு ஒரு கையையும் காலையும் இழுத்துப்போட்டுது எண்டு கத்தினாள்.

❍❍❍




“டேய் பெரியவன், மூச்சுக்காட்டாமல் உன்ர தம்பியையும் கூட்டிக்கொண்டு வெளியே போயிடு இல்லாட்டி ரெண்டுபேரும் என்னட்ட அடிவாங்கி சாகப்போறியள்.” என்று அம்மம்மா கத்தினாள். அவர்களுக்குத் தெரியும் அம்மம்மாவுக்கு கோபம் வந்துவிட்டால் அவள் காளியாக மாறிவிடுவாள் என்று.

வெளியூரில் படித்துக்கொண்டிருந்த பெரியவன் விடுதலைக்கு ஊருக்கு வந்துவிட்டால் சின்னவனும் அவனோடு சேர்ந்துவிட்டால் வீடே இரண்டாகிவிடும்! அம்மாவையும் அப்பாவையும் சிறுவயதிலேயே இழந்த பேரன் மாரை அம்மம்மாதான் தன் உயிர் போல் பாது காத்து வந்தாள்.

சின்னவனையும் இழுத்துக்கொண்டு வெளியே போன பெரியவன் அம்மம்மாவிடம் திரும்பி வந்து, அவரை அமைதிப்படுத்தி சிரிக்க வைக்கச் செய்வதுபோல் “எப்படி அம் மம்மா நாங்க மூச்சுக் காட்டாமல் இருப்பது? அப்ப நீங்க எங்களைச் சாகச்சொல்லிறியளா?” என்றான் சிரித்துக்கொண்டே

இதைக்கேட்ட சின்னவன், “அண்ணா, உனக்குத் தெரியாதா முந்தி அம்மம்மா யாழ்ப்பாணத்தில் சிறிய பிள்ளையாய் இருந்த காலத்தில் கடையிற் சாமியும் அவரது சீடர்களும் வந்து அம்மம்மா வீட்டில் தங்குவதும் அவருக்கு தீட்சை கொடுத்து மூச்சுப் பயிற்சி செய்து காட்டியதும் என்று அம்மம்மா எத்தனை கதை சொல்லியிருக்கிறா அதெல்லாம் உனக்கு மறந்து போச்சா?” என்று சின்னவன் சொன்னதை ரசித்துக் கேட்டுக்கொண்டு நின்ற அம்மம்மா,

“அதெல்லாம் உன்ர அண்ணனுக்கும் தெரியும்.” என்று முற்றுப்புள்ளி வைத்த அம்மம்மா, “இப்பபோய் நீங்க குளித்துவிட்டு வாருங்க சாப்பிட.” என்று கூறிய அம்மம்மா தோசை சுட ஆரம்பித்தாள்.

அம்மம்மா ஒரு ஆசிரியராக இருந்தே ஓய்வு பெற்றவர். அவருக்கு ஆங்கிலத்திலும் நல்ல அறிவிருந்தது, அதனால்தான் அவருடைய பேரன்மார் அவரைமிஞ்சி அவர்கள் வழிதவறிப் போகாதவாறு தன் கட்டுக்குள் வைத்திருக்கக் கூடியதாய் இருந்தது.

மு. பொ. அவர்களை, அவரின் இல்லத்தில் 2024 ஒக்டோபர் மாதம் சென்று சந்தித்தபோது, ஞானம் சஞ்சிகைக்கு எழுதிய இக்கட்டுரையையும் (நினைவுக்குறிப்பு) ஒரு கவிதையையும் பிரசுரத்துக்குத் தந்தார். 2024 நவம்பர் மாத இதழில் (294) அவரின் இறுதிக் கவிதை பிரசுரமானது. அதன்பின்னர் 6.11.2024 புதன்கிழமை அன்று மு.பொ. அவர்கள் அமரரானார். சாஹித்யரத்னா மு.பொ. அவர்களின் “மூச்சை நிறுத்தி வாழப்பழகு” எனும் இக்கட்டுரையை இவ்விதழில் பிரசுரிக்கின்றோம். – **ஞானம்**

அவர்கள் இருவரும் அம்மம்மா கொடுத்த தோசையை சாப்பிட்டவாறே கதைக்கத் தொடங்கினர்.

சின்னவன் திடீரென அம்மம்மாவை நோக்கி ஒருகேள்வியைப் போட்டான். "அம்மம்மா நீங்க எந்தநாளும் அதிகாலையில் எழும்பியிருந்து ஏன் பிராணாயாமம் செய்கிறீங்க?"

அவள் சிறிது நேரம் யோசித்துவிட்டு "அதைப் பற்றியெல்லாம் நான் உங்களுக்கு பிறகு சொல்லித்தருவன். இப்போ நீங்க உங்கட கவனத்தை படிப்பிலே வையுங்க." என்றாள். பெரியவன் பக்கம்திரும்பி, "நீ பல் கலைக்கழகத்துக்கு எடுபட்டிருப்பது எனக்கு பெரிய மகிழ்ச்சியை தருவதாய் இருக்கு. நீ என்னென்ன பாடங்கள் செய்யப் போவதாக உத்தேசம்?" என்றாள் தொடர்ந்து.

"வரலாறு, இந்து கலாசாரம், ஆங்கிலம்" என்றான் அவன்.

"நல்ல பாடங்கள். ஒன்றுக்கொன்று உதவியாக இருப்பதோடு உன் அறிவையும் மேன்மைப்படுத்தக்கூடியன." என்று அவர் கூறியபோது, "அம்மம்மா எனக்கு நீங்கள் வாசிக்கத் தந்த பேராசிரியர் மூக்கேர்ஜி (Mookerji) எழுதிய "இந்து நாகரிகம்" என்ற நூலை படித்தபோது எனக்குப் பல அறிவின் கதவுகள் திறபட்டது போலிருந்தது."

"அப்படியா?" என்று அவர் மகிழ்ச்சியோடு கேட்டதோடு, "எங்கே நீ புதிதாகத் தெரிந்து கொண்ட சிலவற்றைச் சொல்லு பார்ப்போம்." என்றாள் ஆவலோடு.

"இந்தியாவின் பூர்விக குடிகள் கி.மு. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பெரும் நாகரிகம் அடைந்த மக்களாய் இருந்துள்ளனர். ஹரப்பா, மொஹென்சதாரோ போன்ற இடங் களில் இடம்பெற்ற அகழ்வாராய்ச்சிகள் மூலம் அப்பகுதிகளில் வாழ்ந்த மக்களின் குளியல் முறைகள், கழிவுகளை அகற்றுகின்ற வடிகால் என்பவைகள் மேலைத்தேய நாட்டினரையும் வியக்கவைத்தன."

"மேலும் சிந்துவெளி நாகரிக சிவனின் தியானவடிவம் இன்றைய யோக முறைகளின் முன்னோடியாக இருந்திருக்கவேண்டும் என்றே எனக்கு தோன்றியது. மேலும் ஆரியர் கைபர் கணவாய் மூலம் இந்தியாவுக்குள் புகுந்தபோது இவர்களின் வளர்ச்சியால் பாதிக்கப்பட்டனர். அவர்கள் வெள்ளைத் தோலுடையவர்களாய் இருந்தனர். அவர்களின் கரங்களில் இருந்த ஆயுதம் இரும்பினால் வார்க்கப்பட்டதாக இருந் தது. இதனால் இருசாராருக்கும் இடையில் நடந்த போரில் இந்தியாவின் பூர்விகக் குடிகள் தெற்கு நோக்கி விரட்டப்பட்டனர். அகத்திய முனிவரின் வருகை, விந்திய மலையின் தோற்றம், மற்றும் கறுப்பு வடிவமுடைய காளி, கிருஸ்ணர் ஆகிய கடவுளரின் தோற்றம் இந்திய பூர்வ குடிகளுக்கும் வெள்ளைத் தோலுடைய வந்தேறு குடிகளுக்குமிடையில் ஏற்பட்ட சமரஸ வெளிக்காட்டல்களின் அடையாளம் என்று கூறுவாரும் உண்டு."

"ஆனால் இவற்றைவிட நாம் இன்றுவரை வரும் நமது கடவுளின், வேற்றுலக வாசிகளால் நமது பூமிக்கு, அவர்களது பரிசோதனையின் நிமித்தம் அனுப்பப்பட்டவர்கள் என்ற கருத்து வலுப்பட்டு வருவதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இக்கருத்து தற்போது வலுத்துவருவதற்குரிய காரணம், A.D. AFTER DISCLOSURE என்ற நூல் வெளிவந்ததற்குப் பின்னரே. 1947ல் நியூ மெச்சிக்கோ ரொஸ்வெல் நகருக்கு அருகேயிருந்த நடுபகுதியில் ஒரு பறக்கும் தட்டு வந்துவிழுந்து சேதமடைந்தது. அதற்குள்ளிருந்தோர் (மூவர்) சற்றுத்தள்ளி வீசுண்டு கிடந்தனர். இவர்கள் குள்ளமான தோற்ற முடையவர்களாக இருந்தனர். அவர்களில் ஒருவர் உயிரோடு இருந்ததால் அவரிடமிருந்து வெளிப்பட்ட உணர்வு பார்வையாளர்களை பெரும் துயரத்துக்கு உள்ளாக்கியதாகவும் கூறப்பட்டது."

"மேற்படி பறக்கும் தட்டு பற்றிய அனைத்து விடயங்களையும் அமெரிக்க அரசு அன்று மறைத்துவிட்டது. இப்போ இந்த வேற் றுலக வாசிகளின் வருகையும் அவர்கள் வருகையை பயன்படுத்தும் விடயங்களும் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலைக்கு அமெரிக்கா தள்ளப்பட்டுள்ளது என்றால் அதற்கான காரணங்கள் எமக்கு பின்னர் தெரியவரலாம்." என்று பெரியவன் அம்மம்மா கேட்ட கேள்விக்கு பதிலளித்தது அம்மம்மாவை பெரிதும் மகிழ்வித்தது. மேலும் அவள் நினைத்துக்கொண்டிருப்பது போல் பேரன்மார்

சின்னப்பிள்ளைகள் அல்ல. அறிவும் ஆற்றலும் பெற்றவர்களாய் வளர்ந்திருக்கிறார்கள் என்பதையும் உணர்ந்தாள். அதனால்தான் இவர்களுக்கு தீட்சை கொடுப்பதுபற்றி அவள் தன் குருவிடம் அனுமதி பெற்றிருந்தாள். இதை அவர்களுக்கும் அவள் பின்வருமாறு சொன்னாள்.

"உங்கள் இருவருக்கும் வருகிற பௌர்ணமி மாலை தீட்சை கொடுக்க எனது குருவிடம் அனுமதி பெற்றுள்ளேன்." என்றாள்.

அம்மம்மா இப்படிக்கூறியதும் பேரன்மார் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி தமது மகிழ்ச்சியை அம்மம்மாவுக்குத் தெரிவித்துக் கொண்டனர்.

பேரன்மார் இருவரும் எப்போ பௌர்ணமி வரும் என்று காத்திருந்த நாளும் வந்தது. அன்று அம்மம்மா வழமை போலவே அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து குளித்துவிட்டு தியானத்தில் அமர்ந்தார். அப்படி அமர்ந்திருக்கும் அம்மம்மா சரியாக ஆறுமணிக்கு தியானத்திலிருந்து எழுந்து பேரன்மாருக்கு தேநீர் ஊற்றிக்கொடுத்து தானும் குடிப்பார். ஆனால் இன்று ஏழுமணியாகியும் அவர் ஆழ்ந்த தனது தியானத்திலிருந்து எழுந்திருப்பதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை. இதைப் பார்த்திருந்த சின்னவனுக்கு ஏதோ ஒரு பீதி அடிவயிற்றைக் குடைவது போலிருந்தது. பெரியவன் சின்னவனைப் பார்த்து சிரித்தான்.

"ஏன் அண்ணா சிரிக்கிற?" என்றான் சின்னவன் பயந்து கொண்டே.

"அம்மம்மா நீ நினைப்பது போல் இப்படி எங்களை தனியே விட்டுவிட்டு போகமாட்டா என்று எனக்குத் தெரியும் அதனால்தான் நீ பயப்படுவதைப் பார்த்து சிரிப்பு வருகுது." என்று சொன்னான் பெரியவன்.

"அப்படி என்றால் இன்னும் ஏன் எழும்பாமல் கல்லு மாதிரி இருக்கிறா?"

"சரி நான் அம்மம்மாவை எழுப்பிக் காட்டட்டா?" என்று சவால் விடுத்தான் பெரியவன்.

"அதை நீ செய்தால் உண்மையில் பெரியவன்தான் என்று நான் சொல்லுவேன்."

"இதோ பார், நான் அம்மம்மாவை எழுப்புகிறேன்." என்று சொன்ன பெரியவன் அம்மம்மாவின் அருகே சென்று அவர் காதுக்குள் குசுகுசுப்பது போல் ஏதோ மந்திரம் சொல்வது போல் சொன்னான்.

அவ்வளவுதான். அடுத்த நிமிடம் "ஓம் நாராயணா" என்று கூறியவாறு அம்மம்மா மெதுவாக எழுந்து அவர்களைப் பார்த்து சிரித்து ஆசீர்வதித்தாள்.

அப்போது அங்கே நின்ற சின்னவன், "அண்ணா, உங்கள் காதுக்குள் ஏதோ குசுகுசுத்தான் உடனே நீங்கள் எழுந்துவிட்டீர்கள்! அது சரி, அவன் உங்கள் காதுக்குள் குசுகுசுத்தது என்ன அம்மம்மா?"

"அது வெளியே சொல்லக்கூடாது. நீயே பெரியவனிடம் கேட்டுத் தெரிந்துகொள்."

❍❍❍



வேற்றுலகவாசிகளால் நமது பூமிக்கு, அவர்களது பரிசோதனையின் நிமித்தம் அனுப்பப்பட்டார்கள் என்ற கருத்து வலுப்பட்டு வருவதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இக்கருத்து தற்போது வலுத்து வருவதற்குரிய காரணம், A.D. AFTER DISCLOSURE என்ற நூல் வெளிவந்ததற்குப் பின்னரே. 1947ல் நியூ மெச்சிக்கோ ரொஸ்வெல் நகருக்கு அருகேயிருந்த நடுபகுதியில் ஒரு பறக்கும் தட்டு வந்துவிழுந்து சேதமடைந்தது. அதற்குள்ளிருந்தோர் (மூவர்) சற்றுத்தள்ளி வீசுண்டு கிடந்தனர். இவர்கள் குள்ளமான தோற்றமுடையவர்களாக இருந்தனர்.

படம் : 1947ஆம் ஆண்டு விழுந்த பறக்கும் தட்டின் பகுதிகளை ஆராய்கின்றனர்.






## இரா. சிவலிங்கம்

**கோ**ட்டை புகையிரத நிலையத்தில் பதுளைக்குச் செல்லும் 8.00 மணி கோச்சு புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தது. அவசர அவசரமாக கொட்டகலைக்கு ஒரு டிக்கட்டை வாங்கிக் கொண்டு ஓட்டமும் நடையுமாக வீராச்சாமி பதுளை கோச்சுக்கு ஓடிவந்தார். வரும் வழியில் ஒரு பொலிஸ்காரர் “ஐயா மே ஓயாகே பேக்கே பொட்டக் செக்கரண்ட ஓனே” என்று சொன்னது கூட அவர் காதில் விழவில்லை. கோச்சுக்குப் போகும் அவசரத்தில் இவருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இதனால் கோபமடைந்த பொலிஸ்காரர் கடுமையாகத் திட்டிவிட்டு பேக்கைப் பிடிங்கி செக் பண்ணிவிட்டு சந்தேகத்துக்குரிய பொருள் ஏதுவும் இல்லையென்பதால் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

அந்த பேக்கில் தன் உறவினருக்கான நான்கு, ஐந்து இந்திய சாரிகள், நண்பர்களுக்கான வேட்டிகள், சேட்டுகள், புடைவைகள், குழந்தைகளுக்கான உடைகள், பாஸ்போர்ட், தான் இலங்கையில் பாவித்த அடையாள அட்டை, நவீன முறையில் பெரிதாக்கிய குடும்பப் படம், தான் போகவிருக்கும் தோட்டத்தின் விலாசம், பழைய கடிதங்கள், பிள்ளைகளுக்கான பிஸ்கட்டுக்கள், பத்து பதினைந்து அப்பிள்கள், தோடம்பழங்கள் இவையனைத்தும் அதில் இருந்தன. இவைகளில் தன்னுடைய குடும்ப போட்டோவையும், விலாசத்தையும் அடிக்கடி எடுத்துப் பார்த்துக் கொண்டே இருந்தார். அதுதான் அவருடைய உயிர் நாடியாக இருக்கின்றது.

கோச்சு பதுளை நோக்கி புறப்பட்டது. அன்று கோச்சியில் சரியானக் கூட்டம். வீராச்சாமி ஒருவாறு முண்டியடித்துக் கொண்டு இரண்டாம் வகுப்பு பெட்டியில் ஏறினார். இரண்டாம் வகுப்புக்கு டிக்கட் வாங்கியும் இருப்பதற்கு இடம் கிடைக்கவில்லை. ஒருவாறு தன்னை சுதாகரித்துக் கொண்டு ஒரு இடத்தைப் பிடித்து நின்றுகொண்டார். பேக்கை மட்டும் தன்னுடனேயே வைத்துக்கொண்டார். கோச்சுக்குள் இருந்தவர்கள் அங்கும், இங்கும் அலைந்துக் கொண்டிருந்தார்கள். இரவு இரயில் மிக வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. வீராச்சாமியின் எண்ணங்களோ அதைவிட வேகமாக கடந்த காலங்களை நினைத்து அலைமோதிக் கொண்டிருந்தது.

1972ஆம் ஆண்டு பஞ்சத்தில் தானும் தன் குடும்பமும் பாதிக்கப்பட்டு உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, உயிர் பிழைத்தால் போதுமென்று மச்சானின் உதவியோடு இந்தியாவுக்குச் சென்ற வீராச்சாமி முப்பத்தேழு வருடங்களின் பின்னர் தன்னுடைய உறவினர்களைப் பார்ப்பதற்கு

இலங்கைக்கு வருவதில் அளவில்லா மகிழ்ச்சி. வறுமையிலும் தன்னோடு ஒட்டி உறவாடிய பாசப் பிணைப்போடு வாழ்ந்த அந்த உறவுகளின் முகங்களை மறுபடியும் எப்போது போய் பார்ப்பேன் என மனம் துடிதுடித்தது.

இந்தியாவுக்குச் சென்ற வீராச்சாமி ஆரம்பத்தில் மிகவும் கஸ்டப்பட்டு உழைத்து தன்னுடைய மகளை டாக்டராகவும், மகன்களை எஞ்சினியர்களாகவும் உருவாக்கிவிட்டார். வீராச்சாமியின் சமூக அந்தஸ்தும் பிள்ளை களால் உயர்ந்து விட்டது. தான் பட்ட கஸ்டங்களுக்கெல்லாம் விடிவைத் தேடி விட்டார். அடிக்கடி தன்னுடையப் பிள்ளைகளி டம் தான் பிறந்த தோட்டத்தையும், உறவி னர்கள், நண்பர்கள் பற்றியுமே கதைத்துக் கொண்டிருப்பார். பிள்ளைகளும் தன் தந்தை பிறந்து வளர்ந்த ஊரைப் பார்த்துவிட்டு வருவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொடுத்து அனுப்பினார்கள்.

வீராச்சாமி, உயர்ந்த தோற்றமும், முறுக் கிய மீசையும், கறுப்பு நிறத்தையும் கொண்ட ஒரு திடகாத்திரமான மனிதன். கடுமை யான உழைப்பாளி. தோட்டத்தில் கூலி வேலை செய்தாலும், யாரிடமும் அற்ப சொற்ப சலுகைகளுக்காக கையேந்தாதவர். அவருடைய பேச்சிலும், செயலிலும் ஒரு முன்மாதிரி இருக்கும். பெயருக்கு ஏற்ற வீரதீரச் செயல்களைச் செய்யக் கூடியவர். தோட்ட மக்களுக்கு பல முன்மாதிரியான வேலைத்திட்டங்களை ஆரம்பித்தவர். எப்போதுமே மிக நேர்த்தியாக உடையணிவார். இன்று கூட கதர் வேட்டி, கதர் சட்டையுடன் ஒரு பெரிய முதலாளிபோல் இருக்கின்றார்.

தன்னுடைய தோட்டத்து உறவினர்கள், நண்பர்கள், தான் நட்ட தேயிலைக் கன்றுகள், மரங்கள், தான் பிறந்த லயத்து வீடு, தன் அம்மாவை புதைத்த இடம், தோட்டத்துப் பள்ளிக்கூடம், மாரியம்மன் கோவில், அப்பா வேலைக்குப் போய் இறந்த ஸ்டோர் போன்ற நிகழ்வுகள் ரயில் ஓட்டத்திற்கு மேலாக ஞாபகங்கள் ஒவ்வொன்றாக வந்து போயின.

மணி பன்னிரெண்டை தாண்டி விட்டதென யோசித்துக் கொண்டு பேக்கை ஒரு முறை தடவிப் பார்த்துக் கொண்டார். டிக்கட், டிக்கட் என கேட்டுக்கொண்டு இரண்டு பொலிஸ் அதிகாரிகள் வந்தார்கள். வீராச்சாமி டிக்கட்டை எடுத்துக் காட்டுகிறார். சிறிது நேரத்தில் கோப்பி, கோப்பி என சத்தம் கேட்டப் பக்கம் திரும்பி ஒரு கோப்பியை வாங்கிக் குடித்து விட்டு மீண்டும் பேக்கை தடவிப் பார்த்துக் கொண்டார். வீராச்சாமியின் தாத்தா, பாட்டியெல்லாம் கோப்பிகன்று போட வரவழைக்கப்பட்டப் பரம்பரையாகும். வீராச்சாமியின் அப்பாகூட நன்றாகப் பாடுவார். தோட்டத்தில் நடக்கும் காமன் கூத்து, பஜனை, கல்யாண வீடு, மரண வீடு என்பவற்றில் அவரது அப்பாவின் பாட்டுத்தான்.

அவர் அடிக்கடி முணுமுணுக்கும் பாட்டுக் கூட வீராச்சாமியின் ஞாபகத்திற்கு வந்தது. “கோண கோண மலையேறி கோப்பி பழம் பறிக்கையிலே ஒரு பழம் தப்புதுனு ஒதச்சான் ஐயா சின்ன தொர.... கூனி அடிச்ச மல கோப்பிகன்னு போட்ட மல அண்ணன தோத்த மல அந்தா தெரியுது பார்” கோச்சு நாவலப்பிட்டி ஸ்டேசனில் நின்றது. ஒரு இடத்தைப் பிடித்து உட்காந்து கொண்டார். இந்தியாவிலிருந்து வந்த களைப்பில் அப்படியே கண்ணயர்ந்து தூங்கிவிட்ட வீராச்சாமி, ஒரு குலுக்கு, குலுக்கி கோச்சு நிற்கும் சத்தம் கேட்டது. ஜன்னல் வழியாக தலையை விட்டு எட்டிப் பார்த்தார் கோச்சு றொசல்ல ஸ்டேசனில் நின்றது. அடுத்து அட்டன் ஸ்டேசன் என நினைக்கும் போதே சந்தோசமும், ஏக்கமும் ஏற்பட்டது. கோச்சு பெரிய ஓன் சத்தத்துடன் புறப்பட தொடங்கியது.

அட்டன் ஸ்டேசனை நினைக்கும் போதே சிங்கமல சுரங்கமும், அறுபதடி பாலமும் நினைவுக்கு வந்தது. ஒரு காலத்தில் தோட்டத்து இளைஞர்களோடு எம். ஜி. ஆர். படம் பார்க்க வந்த நினைவுகள் வந்து போயின. கோச்சு கொட்டகல ஸ்டேசனில் நின்றது. பெரிய பெரியபெற்றோல் தாங்கிகளை கண்ட வீராச்சாமி இது கொட்டகலதான் என உறுதிப் படுத்திக் கொண்டார்.

காலைக் குளிர் தன் உடம்பில் பட்டபோது பிறந்த மண்ணின் உணர்வு உடம்பெல்லாம் ஏதோ செய்தது. விடிய நான்கு மணிக்கு வரவேண்டிய கோச்சு காலை ஏழு மணிக்குத்தான் வந்தது. கொட்டகலையைப் பார்த்த வீராச்சாமிக்கு ஆச்சரியமாக இருந்தது. தேயிலைத் தோட் டங்கள் இருந்த இடங்களில் எல்லாம் வீடு களும், கடைகளுமாக இருந்தன. டிரேட்டன் தோட்டத்திற்கு போகும் வழியை ஒருவரிடம் கேட்க அவரும் வழியை சொல்லிவிட்டு




வீராச்சாமியின் முகத்தை எங்கேயோ பார்த்த மாதிரி உள்ளதை நினைத்துக் கொண்டு செல்கின்றார்.

கொட்டகலை விநாயகர் கோவிலை வெளியே இருந்தபடி கும்பிட்டுவிட்டு, அங்கிருந்த ஆட்டோவில் ஏறி டிரேட்டன் தோட்டத்திற்குச் செல்கின்றார். ஆட்டோவில் ஒலித்தப் பாடல் கூட வீராச்சாமிக்கு ஒருவித ஆனந்தத்தைக் ஏற்படுத்தியது. நான் ஆணையிட்டால் இந்த பாட்டுக்கெல்லாம் இருந்த மவுசு தனி. தேர்தல் வந்தா இந்த பாட்டுத்தான். ஐயா நீங்க சொன்ன பால் டிப்போ, இப்படியே கேட்டுப் போங்க என ஒருவழியை ஆட்டோ பையன் காட்டி விட்டான். ஆட்டோவில் இருந்து இறங்கிய வீராச்சாமி பெரிய வாகை மரத்தை தேடினார். என்ன ஆச்சிரியம் அங்கிருந்த பெரிய வாகை மரத்தை காணவில்லை. யாரோ வெட்டி விட்டதை உணர்ந்தார்.

கதர் வேட்டி, கதர் சட்டையுடன் நின்ற வீராச்சாமியை பாலூற்ற வந்த அந்தோனிமுத்து கண்டுவிட்டார். “ஏய் வீராச்சாமி நீ.. நீ.. வீராச்சாமிதானே எப்படா இந்தியாவில் இருந்து வந்த புள்ளக் குட்டி எல்லாம் நல்லா இருக்கா? வா வீட்டுக்குப் போவோம். வீராச்சாமி ஒன்ன பார்த்து எத்தன வருசமாச்சு, நா இன்னும் அதே லயத்திலதான் இருக்கேன். ஒங்க சொந்த காரங்க எல்லாம் ஸ்கீம்ல வீடு கட்டிக்கிட்டுப் போய்ட்டாங்க.” என சொல்லிக் கொண்டே அந்தோனிமுத்து தன்னுடைய வீட்டுக்கு கூட்டிக்கொண்டு செல்கின்றார். புதிய ஒரு ஆள் வருவதைக் பார்த்து நாய்கள் எல்லாம் ஒருமித்து குரைக்கின்றன.

அந்தோனிமுத்துவின் வீடு லயத்தில் தொங்க வீடு கொஞ்சம் மாற்றிக் கட்டியிருந்தார். மூன்று பிள்ளைகளும் டீச்சர் வேலை. மூத்த மருமகன் ஆட்டோ ஓட்டுகின்றான். தனக்கு ஒரு பிரச்சினையும் இல்லையென சொல்லிக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தார். வீட்டினுள் நுழைந்த வீராச்சாமிக்கு ஒரு பேரதிர்ச்சிக் காத்திருந்தது. அந்தோனி முத்துவின் மனைவி யின் மாலையிட்ட பெரிய படம் அவர் இறந்து விட்டதை உணர்த்தியது. ஓரளவு படித்தப் பெண், விரும்பி கலியாணம் கட்டிக் கொண்டார்கள். புள்ளைகள் படித்து டீச்சராக இருக்கு. குடும்பமும் ஓரளவு நல்லா இருப்பதை வீராச்சாமி புரிந்துக் கொண்டார்.

மகள்மார்களை அறிமுகப்படுத்திய அந்தோனிமுத்து தேத்தண்ணிக் கோப்பையோடு வந்தார். தேத்தண்ணியை வாங்கி குடித்தவாறே அங்கிருந்த பழைய போட்டோவைப் பார்த்தார். அதுதான் வீராச்சாமி விளையாடிய ஒலிபோல் டீம். “என் வீராச்சாமி பார்க்கிற இந்த டீம்ல இருந்த ஐஞ்சாறு பேர் இப்ப இல்லடா” வீராச்சாமியின் கண்கள் மட்டுமல்ல இதயமே கலங்கியது.

வீராச்சாமி வந்த விடயம் அந்த லயம் முழுவதும் பரவியது. இதனால் பழைய ஆளுங்க எல்லாம் வந்து நலம் விசாரித்தார்கள். அவர்களுடைய கள்ளங் கபடமற்ற நட்பு அவரை மீண்டும் கண் கலங்க வைத்தது. இதுதான் வீராச்சாமி சேர்த்து வைத்த சொத்து. எத்தனை வருடங்கள் போனாலும் மாறாத அன்பு. அந்த லயத்தில் இருந்த சிறுவர்கள் எல்லாம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வீராச்சாமி எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு அந்தோனிமுத்துவுடன் தன் உறவினர்கள் வீட்டுக்குச் செல்ல ஆரம்பித்தார்.

செல்லும் வழியில் தோட்டத்தைப் பற்றி ஒவ்வொரு விடயமாகச் சொல்லிக் கொண்டு போகின்றார். "வீராச்சாமி இதுதான் நம்ம தங்கையா வீடு. மகன் இப்ப வக்கீலா இருக்கான். எங்க பிரச்சினையெல்லாம் அந்த தம்பியிடம்தான் கேட்டுக்குவோம். இங்க பாரு நம்ம மாரிமுத்து கங்காணி வீடு. மகள் இப்ப பெரிய ஆஸ்பத்திரியில் டாக்டராக இருக்கு. அந்திக்கு வீட்டுல மருந்து கொடுக்கும். இன்னும் என்னவோ பெரிய படிப்பெல்லாம் படிக்குதாம்." ஒருவாறு மேல் ரோட்டுக்கு வந்தனர் இருவரும்.

தனியாக பங்களா மாதிரி கட்டியிருக்கே அது யாரு வீடு அந்தோனி? அதுவா நம்ம டீம்ல இருந்தானே பெரியசாமி வீடு. பெரிய மகனும் படிச்சு எஞ்சினியராக இருக்கான். சின்னவனும் இப்ப அந்த வேலைக்குத்தான் படிக்கப் போறானாம். பெரிய பாராட்டு விழா எல்லாம் தோட்டத்துல செஞ்சாங்க. அந்தோனி இத எல்லாத்தையும் பார்க்கும் போது ரொம்ப சந்தோசமாக இருக்கு. நம்ம அந்த காலத்துல நெனச்சதெல்லாம் நடக்கிற மாதிரி இருக்கு. இந்த வருசமும் கொஞ்ச பேருக்கு டீச்சிங் கெடச்சிருக்கு. நெறைய பேர் பென்சன் காசுல புள்ளைகளுக்கு ஆட்டோ வாங்கி கொடுத்துட்டாங்க. நல்ல மரக்கறித் தோட்டம் போடுறாங்க. புள்ளைகளை பள்ளிக் கூடம் அனுப்புறாங்க. எல்லோரும் ஓரளவு நல்லா இருக்காங்க.

"அந்தோனிமுத்து இதெல்லாம் கேட்கும் போது ரொம்ப சந்தோசமாக இருக்கு. நம்ம பட்டக் கஸ்டத்துக்கெல்லாம் ஒரு விடிவு காலம் கெடச்சிருக்கு என நெனைக்கிறேன். ஆகா என்ன மாதிரி நம்ம ஆளுங்க இருக்காங்க. இப்படித்தான் அந்தோனி இருக்கனும்." இப்படி பேசிக் கொண்டே மேட்டு லயத்தை அடைந்தார்கள். ஒரு லயக் காம்பிராவிலிருந்து "அம்மா எனக்கு பசிக்குது, நா பள்ளிக் கூடத்துக்கு போக மாட்டேன். எனக்கு சாப்பாடு வேணும்" என்ற சத்தம் கேட்டது. "கொஞ்சம் இருடா அண்ணே மாவு புடிக்கப் போயிருக்கான் வந்ததும் ரொட்டி சுட்டு தாறேன்... நீ போ.. எனக்கு சாப்பாடு வேணும். நீ இப்படித்தான் பொய் சொல்லுவ. அங்க பாரு அண்ணே மாவு புடிக்காம சும்மா வாறான். ஏன்டா மாவு புடிக்கல.. இல்லம்மா நீ வேலைக்கு போகாதனால மாவு பதியலனு சொன்னாங்க."

இதைக்கேட்ட தாய்க்கு இதயமே வெடித்து விடும் போல் இருந்தது. இன்னும் எத்தனை நாளைக்கு புள்ளைங்கள பட்டினி போடுறது கடவுளே என புலம்பிக்கொண்டிருப்பது வீராச்சாமியின் காதில் கேட்டது. வீராச்சாமி அந்த படிக்கட்டைத் தாண்டும் போது பக்கத்து லயத்தில் இரு குடும்பத்திற்கும் சண்டை நடக்கின்றது. அதைக் கேட்டதற்கு போய் கெட்ட வார்த்தையும், கைகலப்பும் நடந்து கொண்டிருப்பதை பார்க்கிறார். "வீராச்சாமி இதையெல்லாம் உத்து பார்த்துக்கிட்டு இருக்க இது எல்லாம் தோட்டத்துல வழமையா நடக்கிற விசயம் வா போவோம்."

"இல்ல அந்தோனி தோட்டம் இன்னும் மாறல. பசி பட்டினி போகல. சுகாதாரம் இல்ல. வறுமை கொறையல. நாகரிகம் வளரல. இன்னும் சொல்லப்போனா நா இந்தியாவுக்கு போறப்போ எப்படி இருந்துச்சோ அப்படித்தான் இன்னும் சில பேர் இருக்காங்க. நெனைச்சா கவலையா இருக்கு." வீராச்சாமியின் இதயம் கனத்தது.

"நா கூட மொதல்ல நீ சொன்னத கேட்டு மயங்கி போயிட்டேன். ஆனா அந்தோனி நம்ம ஆளுங்க இன்னும் கஸ்டபடுறாங்க. இவங்க வாழ்க்கையில் முன்னேற வேண்டிய விசயம் நெறைய இருக்கு. சரி அந்தோனி அந்திக்கு வீட்டுக்கு வா வரும் போது கூட்டாளிகளையும் கூட்டிக்கிட்டு வா" என சொல்லிக் கொண்டே உறவினர் வீட்டு கதவை தட்டினார் வீராச்சாமி.

இரவு ஏழு மணி உறவினர் வீட்டில் ஐஸ் கோழி கறி வாசம் வீசியது. வீராச்சாமியின் கூட்டாளிகள் ஒவ்வொருவராக வந்து சேர்ந்தனர். கதையும், சிரிப்புமாக சாராய போத்தல்களில் ஒன்று முடிந்தது. மெதுவாக வீராச்சாமி கதைக்க ஆரம்பிக்கின்றார். "நாம ஒரு காலத்துல கப்பல்ல வந்து கப்பல்ல போனோம். ஏரோ பிளேன அண்ணாந்து பார்த்து ஓடியது ஒரு காலம். இப்ப நா பிளேன்ல வந்து பிளேன்ல போறேன். இந்த நிலைமையை நா உருவாக்கிட்டேன்... நீங்க என்னான்னா இருநூறு வருசமா அதே தேயிலைத் தோட்டத்திலேயே முண்டிக்கிட்டு கெடக்கிறீங்க. லயத்து வீடு, கங்காணி, பிரதிநிதி, சங்கம், கட்சி இதையெல்லாம் தொடர்ந்து நம்பிக்கிட்டு இருந்தீங்களா நீங்க

உருப்பட மாட்டிங்க. சொந்தமா உழைச்சி முன்னேற பாருங்க” என்றார் வீராச்சாமி சற்று தள்ளாடியபடியே. “ஏய் மச்சான் எந்த பயலும் நமக்கு புத்தி சொல்ல வரக்கூடாது.” எல்லோருக்கும் போதை தலைக்கேறி விட்டது. “என்னடா ஐஸ் கோழிய ஆக்கி வச்சிருக்கான். நாட்டு கோழி கெடைக்கலயோ..”

“அறிவு படைச்ச மனுசங்க தாங்களே திருந்தாத வரைக்கும் இவர்களுக்கு விமோசனமே கெடைக்காது. நா இந்தியாவுக்கு போய், அரசியல், அதிகாரிகள், சட்டங்கள், ஒடுக்குமுறைகளுக்கு முகங்கொடுத்து போராடி, போராடி ஒடுக்கலில் இருந்து விடுதலையடைந்து இன்னைக்கு மனுசனா ஒங்கல பார்க்க வந்திருக்கேன். நீங்க என்னடானா” வீராச்சாமி சொல்லிக் கொண்டே போனார். அதைக் கேட்க அங்கே யாருமே இல்லை. கோழிக்கறி ஆறிக்கொண்டிருந்தது. நாற்காலிக்குள் அடியில் படுத்திருந்த பூனையும், நாயும் தருணம் பார்த்திருந்தன.

(யாவும் கற்பனையல்ல)

○○○

# புயல்

காற்றழுத்தம் கூடிக் குறைய
வெப்பப் பரிமாற்றம் நிகழ
புவியீர்ப்பு சக்தி கொண்டு
பிரசவித்தது பெரும் புயல்.

இயற்கையின் தத்துவத்தில்
இருப்பதெல்லாம்
சமத்துவந்தான்.

ஏழை, பணக்காரன்,
பாமரன், படித்தவன்
கீழ்சாதி, மேல்சாதி
விதி விலக்கு ஏதுமில்லை.
கண்ணில் பட்டதெல்லாம்
கவர்ந்திடுமே கடும்புயல்.

காற்றழுத்தம் மாறுவதை
கச்சிதமாய்க் கணித்திடலாம்.
கணக்கிடவே முடியா
மன அழுத்தம் பற்பல.

வீட்டில் பல அழுத்தம்
வேலையில் பல அழுத்தம்.
பாடசாலையில் அழுத்தம்
தெருச்சாலையிலும் அழுத்தம்.

ஏன் அழுத்தம் எதற்கழுத்தம்
என்றாவது சிந்தித்தோமா?

காலைமுதல் மாலைவரை
கடுகதியாய் ஓடுகின்றோம்.

கணக்கில்லாச் சிந்தனைகள்
கணந்தோறும் நிந்தனைகள்.
அரைநொடி ஆவதற்குள்
ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள்.

அச்சத்தின் உச்சியிலே
அனுதினமும் வாழுகின்றோம்.
அரிதான மானுடப் பிறப்பதனை
அவசரமாய் அழிக்கத்
துடிக்கின்றோம்.

சற்று நிதானித்துச் சிந்திப்போம்.
எதைக் கொண்டுவந்தோம்.
எதைக் கொண்டுபோவோம்.
எதற்காக ஓடுகின்றோம்

நிலையற்ற வாழ்வதனில்
நிலைப்பதற்காய்த் துடிக்கின்றோம்.
எமக்கென வகுத்ததெல்லாம்
எமக்கெனவே கிடைக்கப் பெறும்

தேவையற்ற சிந்தனையை
தினந்தோறும் சுருக்கிடுவோம்.
சிந்தை அழுத்தம்
சீக்கிரமாய் சிரத்தைவிட்டு
அகன்றிடுமே
இன்பமான வாழ்வதனை
இனியாவது வாழ்ந்திடுவோம்.

வாழ்வோம் வளமுடன்
வாழ்வோம் நலமுடன்.

**– அநபாய சோழன்** (அவுஸ்திரேலியா)

**70** வயது தாண்டிய மூன்று நண்பர்கள் உரையாடிக் கொண்டிருந்தார்கள் அவர்களுள் ஒருவராக அவரும் இருந்தார். ஒருவர் ஓய்வு பெற்ற அரச அதிகாரி. இன்னொருவர் தனியார் வங்கி ஒன்றில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். மற்றொருவர் ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி. இவரோ பல்கலைக்கழகத்தில் பயிற்றி பின் ஓய்வு பெற்றவர்.

ஓய்வு பெற்றோர் ஒன்று கூடினர்.

ஓய்வு பெற்றோர் ஒன்று கூடினால் என்ன பேசுவர். தம் காலமே பொற்காலம் என்றே பேசுவர். இங்கும் அதுதான் நடந்தது.

தம் காலத்தைப் பொற்காலம் என கூறும் இவர் சமகாலத்தைக் கற்காலம் என்பர். இப்போது இவர்கள் உரையாடலில் இளை ஞர்கள் மாட்டிக் கொண்டார்கள்.

"இன்றைய இளைஞர்கள் முந்திய இளை ஞர்கள் போல இல்லை. அவர்கள் பெரிய வர்களை மதிப்பதே இல்லை". என்றார் ஒரு நண்பர்.

"ஒரு பொறுப்பும் இல்லாதவர்கள் அவர்கள், எல்லாவற்றையும் கேலி பண்ணுகிறார்களே" என்றார் இன்னுமோர் நண்பர்.

"பாவம் அவர்களை போதைப் பொருள் கெடுத்து விட்டது" என்று அனுதாபப்பட்டார் மூன்றாமவர்.

எல்லோர் கூற்றுகளையும் அமைதியாக கேட்டுக் கொண்டு பல்கலைக்கழகத்தில் விரி வுரையாளராக இருந்து ஓய்வு பெற்ற அந்த முதியவர் உட்கார்ந்து இருந்தார். அவர் சிறு வயதிலே மாசேதுங் சிந்தனையால் கவரப் பட்டவர். மா ஓ வின் மேற்கோள்கள் கொண்ட கையடக்கமான சிவப்புப் புத்தகம் அவர் இளமைக் காலத்தில் வெளிவந்திருந்தது, அதன் தலைப்பு "மா ஓவின் மேற்கோள்கள்" அந்தக் காலத்தில் ஒரு குறிப்பிட்ட சாரார் மத்தியில் மிக பிரபலமான புத்தகம் அது. அதில் பல வாசகங்கள் அவருக்கு அன்று மனப்பாடம். அதில் ஒரு மேற்கோள்

"இளைஞர்கள் காலை எழும் இளம் சூரியன் போன்றவர்கள்"

இன்னொரு கோட்டேஷன்



சி. மௌனகுரு

# காலைச்சூரியன்



சிறுகதை

“இளைஞர்களின் கிளர்ச்சிகளுக்கு பின்னால் ஒரு நியாயம் இருக்கும்” என்பதாகும்.

மாணவப் பருவத்தில் அவருக்கு இவை மிகமிகப் பிடித்து இருந்தன. அவர் ஆசிரியரானபின் மாணவ சக்தி மகா சக்தி என்று வகுப்பறையிலே போதித்தும் இருக்கின்றார். எப்போதுமே அவர் மாணவர் கிளர்ச்சிகளுக்கு ஆதரவாக இருந்திருக்கிறார். அவர்கள் கிளர்ச்சியிலே ஒரு ஞாயம் இருக்கும் ஒரு அறம் இருக்கும் என்பது அவரது நம்பிக்கை, அசைக்க முடியாத நம்பிக்கை

பெரியவர்களை அவர்கள் மதிக்காமை அவர்களின் பிழையா அல்லது பெரியவர்களின் பிழையா என்பது பற்றிப் பலருடன் அவர் விவாதித்திருக்கின்றார்.

இளைஞர்கள் ஏதோ அதிருப்திக்குள்ளாகிறார்கள். அதனைக் கண்டு பிடியுங்கள் என அவர் கூறுவார். நண்பர்களின் கூற்றுக்களையும் விவாதங்களையும் அவர் அவதானித்துக் கொண்டே இருந்தார்.

ஒரு நண்பர் அவரிடம் கேட்டார்.

“நாங்கள் சண்டை பிடித்துக் கொண்டிருக்கிறோம் நீங்கள் ஒன்றும் சொல்லாமல் கேட்டுக் கொண்டிருக்கிறீர்களே உங்களுக்கு அபிப்பிராயம் இல்லையா?”

அந்த முதியவர் வாய் திறந்தார்.

“என் அபிப்பிராயத்தை நான் எனக்குள் சொல்லிக் கொண்டிருக்கிறேன் என் அனுபவங்கள் வித்தியாசமானவை என் சிந்தனைகளும் வித்தியாசமானவை அது விவாதத்துக்குரியன அல்ல.” இவரை அவர்கள் வியப்போடு பார்த்தனர்.

தேநீர் அருந்திய பின்னர் அவர்கள் விடை பெற்றுச் சென்றனர். நண்பர்கள் விடை பெற்று சென்ற பின்னர் சிறிது நேரத்தில் அருகிலுள்ள சுப்பர் மார்க்கட்டுக்குச் செல்ல அவர் ஆயத்தமானார்.

அன்று சரியான வெயில் 40 பாகையை தாண்டி இருந்தது. முதியவர்கள் இந்த வெயிலில் வெளியே செல்லக்கூடாது. என்று வேறு முகநூலில் பயமுறுத்தியும் இருந்தார்கள் மனைவியின் கட்டுப்பாட்டையும் மீறி அவர் புறப்பட்டார். குடை கொண்டு செல்ல மறந்து விட்டார்.

அவர் கதவைத் தாளிட்டு விட்டுப் புறப்படுகையில் மனைவி இன்னொரு அறையில் இருந்ததால் அவளும் அதைக் கவனிக்கவில்லை. கவனித்திருந்தால் அவசியம் குடையைக் கொண்டு போங்கோ என்று வற்புறுத்தி இருப்பாள்.

மார்க்கெட்டை நோக்கி நடக்கும்போது வெயிலின் உக்கிரத்தை அவர் அனுபவித்தார். வியர்வை பொங்கி வழிந்தது, தாகம் வேறு. விரைவாக விடயத்தை முடித்து விட்டு வீடு திரும்பிவிட வேண்டும். புறப்படும் முதலே மனைவி அவருக்கு உபதேசித்திருந்தாள்.

“சாமான்களை வாங்கிக்கொண்டு அந்தப் பாரத்தோடு நடந்து வர வேண்டாம் களைத்துப் போவீர்கள் சுப்பர் மார்க்கட்டுக்கு முன்னே ஒரு ஆட்டோ நிக்கும் அதைப் பிடித்துக் கொண்டு வாருங்கள்” சரி என்றும் கூறியிருந்தார்.

ஆனால் நடந்து செல்வது நடந்து வருவது இவையே அவர் முடிவுகளாக இருந்தன. நடந்து செல்வது அவருக்கு உவப்பாக இருந்தது. மிக உவப்பாக இருந்தது.

வீட்டுக்குள்ளயே முடங்கிக் கிடப்பதை விட வெளியிலே ஒளியிலே காலாற நடந்து வருவது உடலுக்கும் நல்லது உள்ளத்துக்கும் நல்லது அல்லவா.

சூப்பர் மார்க்கெட்டை நிரப்பியிருந்த மெல்லிய குளிர் அவருக்கு இதமாக இருந்தது. மார்க்கட்டினுள் வரிசையாக ஒன்றன் பின் ஒன்றாக நின்ற தள்ளு வண்டிகளில் ஒன்றை அத்தொகுதியிலிருந்து வெளியே உருவி எடுத்து உருட்டியபடியே சாமான்களை எடுத்து அதற்குள் போட்டுகொண்டு வந்தார், தள்ளு வண்டி தள்ளித் தளர் நடைபயிலும் பாலகர் ஞாபகம் வந்தனர்.

இரண்டு பெட்டி அம்பேவல பால் பக்கட், இரண்டு கிலோ அரிசி, இவை தவிர இன்னும் சில்லறைச் சாமான்கள். வாங்கி நிறுத்துப் போட்டுக் கொண்டார் தள்ளு வண்டியை வெகு இலகுவாகத் தள்ளிக்கொண்டு கவுண்டருக்கு முன் வந்து நின்றார். கவுண்டரிலே நின்ற பெண் மெஷினிலே எல்லாவற்றையும் நிறுத்து அதற்குரிய பணத்தொகையை கூற பணத்தைக் கொடுத்துவிட்டார், இரண்டு பெரும் பைகளிலே போட்டு அவள் கொடுத்தாள். அந்த இரண்டு பெரும் மூடைகளையும் சுமந்தபடி அவர் வெளியே வந்தார். வெளியே ஒரு ஓட்டோக்காரன் நின்று கொண்டிருந்தான் முதியவர் இரண்டு கைகளிலும் பாரங்களோடு நின்று




## "இளைஞர்கள் காலை எழும் இளம் சூரியன் போன்றவர்கள்"

## "இளைஞர்களின் கிளர்ச்சிகளுக்கு பின்னால் ஒரு நியாயம் இருக்கும்"

கொண்டிருப்பதை அவன் அவதானித்தான். அவரை அவன் பார்த்தான்

"ஓட்டோ வேணுமா?" என்று அவன் கேட் பதுபோல் இருந்தது. இவருக்குள் ஒரு தடு மாற்றம். ஓட்டோ எடுத்துக்கொண்டு போவதா அல்லது நடந்து போவதா.

அவரது இயல்பு தன்னிலேயே எல்லாவற் றையும் பரீட்சித்துப் பார்த்தல். இவர் வேண்டாம் என்று கூறிவிட்டு வெளியே இறங்கி பாரத்தோடு நடக்க தொடங்கினார். சிந்தனையோடு நடந்து சென்று அவர், சூழ உள்ள எதனையும் கவனிக்கவில்லை. முன்னே வரும் எவரையும் அவர் பார்க்கவும் இல்லை. அவர் கால்கள் அவரை இயக்கிக் கொண்டிருந்தன.

முன்னால் ஒருவன் நிற்பது போல உணர்ந்து சட்டென அவர் நின்றார். அவர் முன்னால் நின்றவன். ஒரு இளைஞன். நீண்ட கால் சட்டை அணிந்து இருந்தான் டீஷர்ட் போட்டு இருந்தான். தலை முடி நவீன முறையில் வெட்டப்பட்டிருந்தது. காதிலே ஒரு மின்னி மின்னியது. அந்த அலங்காரம் அவரை ஒரு அது நவீன இளைஞனாக காட்டியது. என்ன விடயம் என்று அவர் கேட்டார்.

"ஒன்றும் இல்லை அங்கிள் வரும்போது உங்களைக் கவனித்தேன் தளர்ந்து போய் வருகிறீர்கள் கூடவே பாரத்தோடும் வருகிறீர்கள். அத்தோடு வெயிலிலே நடந்து வருகிறீர்கள் என்னிடம் இவற்றைத் தாருங்கள் அருகில் தானே உங்கள் வீடு இருக்கிறது நான் கொண்டு வந்து தந்து விடுகிறேன் அங்கிள்" என்றான். இவர் அவனை ஆச்சரியமாக பார்த்தார்.

சொந்த மகன் முன்னால் நின்று உரிமை யோடு கேட்பது போல இருந்தது. ஒரு கணம் நெகிழ்ந்து போனார் முதியவர்.

"மிகவும் நன்றி மகனே நானே காவிச் செல்ல முடியும் உன் பரிவுக்கு நன்றி" என்றார்.

"சரி அங்கிள் கவனமாக செல்லுங்கள் வெய்யில் வேறு உக்கிரம்" என்று அவருக்கு ஓர் உபதேசமும் செய்துவிட்டு அவன் இவர் சென்ற திசையின் எதிர்த் திசையில் நடக்கத் தொடங்கினான். அவன் ஒரு பத்து அடி சென்றிருப்பான் அடடா அந்தப் பையனின் பெயரைக் கேட்க இல்லையே என்று ஒரு எண்ணம் இவருக்கு வந்தது.

"தம்பி" என்று கூப்பிட்டார்.

அவன் திரும்பவில்லை நடந்து கொண் டிருந்தான். மீண்டும் சத்தமாக "தம்பி" என்று கூப்பிட்டார். அவனுக்கு அது கேட்கவில்லை போலும். அவன் மேலும் நடந்து கொண் டிருந்தான்.

இனி கூப்பிடுவதோ அவன் பின்னால் செல்வதோ பயனற்றது என உணர்ந்த அவர் தூக்கிய பாரங்களோடு வீடு நோக்கி நடக்கத் தொடங்கினார்.

காலையில் நண்பர்கள் இன்றைய இளை ஞர் பற்றிக் கூறிய வார்த்தைகள் நினை வுக்கு வந்தன.

பொறுப்பில்லாதவர்கள்
முதியவரை மதிக்காதவர்கள்
போதைப் பொருள்காரர்கள்
மொத்தத்தில் உதவாக்கரைகள்

மீண்டும் ஒரு தடவை எதிர்த் திசையில் செல்லும் இளைஞனை அவர் திரும்பி நோக்கினார்,

அந்தக் காலைச்சூரியன் மிகப் பிரகாசத் துடன் தன் பாட்டுக்கு நடந்து சென்று கொண்டிருந்தது.

❍❍❍

மாவிலி ரவர்க்கோபுரத்தில் பொருத்தப்பட்டுள்ள சிகப்புநிற சமிஞ்சை விளக்கு விட்டுவிட்டு எரிந்து கொண்டிருந்தது. காற்று இதமாகவே வீசிக்கொண்டிருந்தது. நடுச்சாமம் கடந்து நிலவும் காரித்திருந்தது. அதேகணம் இவளது மனமோ அல்லோலப்பட்டுக்கொண்டிருந்தது. ஏற்கனவே உள்ள கடன்களுக்கு மேல் புதிய கடன்களைப் பெறவேண்டிய நிலை வந்துவிடுமோ என்று எண்ணியவண்ணம் புரண்டுபுரண்டு தூக்கம் இன்றி தவித்தாள். ஒரு ரூபாய் வரவென்றால் எட்டு ரூபாய் செலவாகின்ற கதை நம்

இலேசான காற்று இன்னும் மாறவில்லை. காற்று உரக்க இன்னும் நேரமிருக்கிறது. கடற்கரையில் ஏதாவது கிடைத்துவிடாதா என்று காகங்களும் அதற்குமேல் பருந்துகளும் வட்டமடித்தபடி வானில் சுற்றிய வண்ணமே இருந்தன. கிடைக்கின்ற கணப்பொழுதில் தமக்கான இரைகளைக் கௌவிச்செல்கின்ற பருந்துகளின் துருதுருப்பான கால்கள் இரையாகும் மீன்களுக்கு இயமனாகத் தொழிற்பட்டன.

லேயோனோ வலையை சரிபார்த்துக் கொண்டிருந்தான். வந்த கையுடனே சாப்பாட்டை






யே. கிறித்துறாஜா
4ஆம் வருட மாணவன்,
தமிழ்த்துறை,
பேராதனைப்பல்கலைக்கழகம்.

# செய்தி

தொழிலுக்கு எப்போதும் பொருந்தும் என்று கடன் பாரத்தை அடிக்கடி இயல்பாக்கிக் கொள்வாள். இன்றும் அதே இயல்பு நிலைக்கு வர முயன்றுகொண்டிருந்தாள்.

லேயோன் எப்படியும் கரையை அடைந்துவிடுவான் என்று அவளுக்கு உறுதியாய்த் தெரியும். ஆனால், அவன் கொண்டுசென்ற வலைகளோடு அவன் மீளுவானா என்பதுதான் இப்போதைய அவளது கவலை. நேற்று மாலை புறப்படும்போது எந்தத் தயக்கமும் இன்றி அனுப்பி வைத்தவளுக்கு நான்கு மணித்தியாலயங்கள் கழிந்த பின்னரே இந்தியன் றோளர் வந்த செய்தி தெரியும். அக்கணம் முதல் இக்கணம் வரை உறக்கமென்பது வரவில்லை. இடையிடை திரேசம்மாவினையும், அவளது கணவனின் நிலையினையும் எண்ணிப்பார்த்தவளாக இருந்தாள். காலை படகு கரையை அடையும் நேரத்தை எதிர்பார்த்தவளாக சாப்பாட்டோடு கடற்கரையை அடைந்துவிட்டாள்.

அருகிருந்த மரக்கப்பில் கொளுவிவிட்டு "ஏனப்பா இந்த ஐஞ்சரஞ்சிய இழுத்துப் போடுறிங்க" என்று கேட்டவாறே நடந்தவற்றை ஊகித்துக்கொண்ட மரியம் சற்றே முன்னோக்கி நடந்து படகினை எட்டிப்பார்த்தாள். காற்பங்கு வலைதான் படகில் உள்ளது. மிகுதியை றோளர் இழுத்துக்கொண்டு சென்றுவிட்டதை லேயோன் சொல்லாமலே அறிந்துகொண்டாள், அவள். என்னதான் கவலையிருந்தாலும், அழுகை வந்தாலும் தொழில் செய்கின்ற இடத்தில் அழக்கூடாது என்பது இங்குள்ள மீனவர்களின் நீண்டகாலப் பழக்கம். மரியமும் இப்பழக்கத்தை நன்கு அறிவாள். அதனால் தைரியத்தை வருவித்துக்கொண்டு,

"ஏனப்பா உமக்கு தெரியாதோ றோளர் வந்தது" என்றபடி அவனருகே வந்தாள்.

"நிலவு காரிக்குமட்டும் கொஞ்சம் நாரி நிமிரட்டும் எண்டு அணியத்தில அசந்துபோனன், கொஞ்சங்கழிய சரி எண்டு பாதையால

வலையை இழுத்தின்ரு வந்தா தலப்பால வலை இல்ல. பக்கத்தில பாக்கிறன் பத்துக்காணம் இந்தியன் றோளர். இவன் தொண்டிக்காரன் தான். எங்கயிருந்து வந்தானோ தெரியேல ஊருக்கு இப்பிடிக்கிடக்கிறான்.. என்று இடக் கையை வடக்கு நோக்கி ஏத்திக் காட்டினான்.

“எடுத்த வலைக்காசே இன்னும் கட்டிமுடி யேல, வச்ச ரெண்டு சங்கிலியும் வட்டிகட்டாம அப்பிடியே கிடக்கு, என்னப்பா செய்யிற இப்ப”

“வேற என்ன, இந்த ஐஞ்சரஞ்சிக்கு ஓடிப் பாக்க வேண்டியதுதான். அந்தந்தக் கடலுக்கு அந்தந்த வலை இருக்கிறமாதிரி வருமா? என்ன செய்யிற இருந்ததையும் அவன் அள்ளின்ரு போய்ற்ரான். இனி இருக்கிறத வச்சு நாலு கடன அடைக்கவேண்டியதுதான்” என்றபடி வலைவேலையை முடிவுக்குக் கொண்டு வந்தான்.

கொண்டுவந்த புட்டையும், முட்டைப் பொரியலையும், கருவாட்டுப் பொரியலையும் கத்தரிக்காய் சாம்பாரையும் அவள் எடுத்து வைக்கவே மணலில் ஒய்யாரமாக அமர்ந்து சாப்பிடத்தொடங்கினான். பல பிரச்சினை களுக்கும் தீர்வைப் பெறவேண்டும் என்றால் உடல்நலமாக இருக்க வேண்டும் என்றும் உள்ளத்தின் எண்ணங்களுக்கு உடல்நலம் மிக அவசியம் என்றும் கூறுவான். மரியம் சமைத்த உணவில் அவ்வளவு கைப்பக்குவமும், அன்பும் கலந்திருக்கும். அதனால் அதை ருசித்துச் சாப்பிடுவதை இவனும் மறந்ததில்லை.

“என்ன மரியம் வலைய றோளர் வெட்டின்ரு போய்ற்ரானாமே, ராசதுரைக்கும் வலை இல்லை யாம், எவ்வளவு நாள்தான் இந்த இந்தியன் றோளருக்கு பயந்து வாழ்ற, நானும்தான் கேட்டுப்பாக்கிறன் ஒத்துவர மாட்டெங்கிறீங்களே, உங்க உங்களுக்கு பட்டாத்தான் தெரியும்” என்றபடி வாடியருகில் வந்த திரேசா இதற்கு மேலும் பேசுவதற்கு ஒன்றுமில்லை என்பதை அறிந்து அடுத்த முனைநோக்கி நடந்தாள்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் திரேசாவின் கணவன் சூசைமுத்துவும் இவ்வாறுதான் றோளர் படகால் பாதிக்கப்பட்டான். இரவுத்தொழிலுக்குச் சென்றிருந்தவன் வலையைக் கடலில் விட்டுவிட்டு மீண்டும் அதைப் பிடிப்பதற்கு நேரத்தைப் பார்த்திருந்தான். நிலவு காரிக்க இன்னும் நேரமிருந்தது. அதற்கிடையில் படகின் அருகில் றோளர் வருவதனை அவ தானித்துவிட்டான். கடலில் வலை கிடப் பதனை அறிவிக்க ரோச்லைட்டைப் பல வாறும் காண்பித்தான். அவர்கள் அவற்றைப் பொருட்படுத்தாமல் வந்தவழியே வலைகளையும் இழுத்துச்சென்றனர். படகின் அண்ணியத் தட்டில் ஏறி இருகைகளிலும் ரோச்லைட்டுகளை ஏந்தி உரக்கக்கத்தி கூப்பாடுபோட்டவன் கடல் நீரால் உப்புக் கசிந்திருந்த அண்ணியத்தின் ஈரத்தை உணரவில்லை. கால்களின் பிடி சறுகி அண்ணியத் தட்டில் விழுந்தவனுக்கு இன்னும் தான் வலக்கை ஏலவில்லை. அன்றிலிருந்து அவனால் தொழில்செய்யவும் முடியவில்லை.

அவன் மனைவி திரேசா ஊரில் எங்கெல்லாம் தனுஷ்கோடி, தொண்டி றோளர்களால் பாதிப்பு நடக்கிறதோ அங்கெல்லாம் சென்று இதற்கெதிராகத் தீவிர போராட்டம் ஒன்றை செய்யவேண்டி கேட்டுவருகிறாள். ஆனால், “அவன் வாறத என்னசெஞ்சு நாம தடுக்க முடியும். காலகாலமா இதே பிரச் சினதானே. கொஞ்சக்காலமா நடக்குது” என்று இப்பிரச்சினையை விதிப்பயனாக எண்ணிவிட்டனர் பலர். இதற்கு எதிராகப் பல போராட்டங்களும், மனுக்கொடுத்தல் செயற்பாடுகளும் இடம்பெற்றதாயினும் அதற்கு உகந்த சரியான முடிவோ, சாதக நிலைமையோ இன்றுவரை ஏற்படவில்லை. ஆனால், திரேசா மட்டும் சோர்ந்துவிடவில்லை. எவ்வாறு தமிழகத்தில் தொடர் போராட்டங்கள் நடக்குமோ அதே போன்று இங்கும் தொடர் போராட்டங்களை நடாத்தி அரசாங்கத்தின் துரித கவனத்திற்குரிய பிரச்சினையாக இதைக் கொண்டுவர இவள் பல்வேறு வழிகளும் முயன்றுவருகிறாள். எனினும், அதற்கான ஆட்படைதான் இன்னும் சேர்ந்தாகவில்லை.

வீட்டுக்கு வந்துசேர்ந்த மரியமோ கடன் களை அடைப்பது பற்றியே நாள் முழுவதும் சிந்தித்துக்கொண்டிருந்தாள். அந்தக் காலத்தில் இவளது அம்மையா,

“பட்டகடன் அத்தனையும்
பாத்திருக்கப் பறந்திடனும் - நாம
பாய்ச்சுவைச்ச வலையிலதான்
பார சுறா தங்கிடனும்
மரியாயே கண்ணிரங்காய்
மாதாவே தந்திடுவாய்”

என்று அடிக்கடிப் படிக்கின்ற இந்தப்

பாட்டுத்தான் எப்போதெல்லாம் கடன் பற்றிச் சிந்திக்கிறாளோ அப்போதெல்லாம் இவளுக்கு ஞாபகத்துக்குவரும்.

லேயோனோ அடுத்த தொழிலுக்கான ஆயத்தப்படுத்தலில் தீவிரமாக இறங்கிவிட்டான். இவ்வாறு பல இழப்புகளைக் கண்டவன், இவன். ஒவ்வொரு முறையும் ஏது செய்வதென்று தெரியாமல் நின்றிருந்தால் இவனால் இந்த நிலைக்கு வந்திருக்கவே முடியாது. றோளரிடம் பலமுறை வலைகளைப் பறிகொடுத்தவர்களின் பட்டியலில் முதல் ஐந்து நிலைகளுள் இவனுக்கு இடமுண்டு. அத்தனையையும் கடந்து இரண்டு பெண்பிள்ளைகளைப் படிக்க வைக்கிறான். கூடவே மரியத்தின் அம்மா, அப்பா இருவருக்குமான செலவையும் இவனே பார்த்துவருகிறான். அதனால்தான் இவனது மூத்த மகள், மகாகவி பாடிச்சென்ற மீண்டும் தொடங்கும் மிடுக்கின் கதைமாந்தராக நிலவுழவனை மட்டுமல்ல இந்த நீருழவனையும் கொள்ளவேண்டும் என ஆசிரியருடன் சமரசம் செய்துகொண்டாள் போலும்.

வலைக்குத் தேவையான கொடி, கயிறு முதலானவற்றை ஒழுங்குபடுத்திவிட்டு வீட்டுப் படியில் வந்து அமர்ந்தான், லேயோன். அவனருகில் இளைய மகள் மெடோனா வந்து அமர்ந்துகொண்டாள்.

“அப்பா, அடிக்கடி இந்தியன் றோளர், றோளர் எண்டு கதைக்கிறமே அவங்களும் நம்மமாதிரி மீன் பிடிக்கதானே அப்பா வாறாங்க. நம்ம நிலைதானே அவங்களுக்கும், பிறகேனப்பா அடிக்கடி பிரச்சின வருகுது” என்றபடி லேயோனின் முகத்தைப் பார்த்தாள்.

“பிள்ள, அவகளுக்கெண்டு ஒரு எல்ல யிருக்கு அதுமட்டும் வந்துபோறது சரி, ஆனா நம்ம தீவின்ர இறவட்ட வரைக்கும் வந்துபோகினம். அது பிழதானே, நாம நாளைக்குப் பிடிக்க மீன் வேண்டாமோ, கடல் முழுக்க மடிகளப்போட்டு இழுத்து குஞ்சு மீன்களக்கூட விடாம அள்ளின்ரு போயிருவாங்க, இப்பிடிப்போனா நாளைக்கு நீ சாப்பிடவே மீன் கிடகாது. அதுமட்டுமா நம்ம வலைகொடி முழுக்க அள்ளின்ரு போயிருவான், இல்லாட்டு வெட்டிவிட்டிற்ரு போயிருவான், அவனத்துரத்த நம்மால ஏலுமா? முப்பது நாப்பதடி றோளறுகள், அந்த வேகத்தில போவான். கூப்பிட்டாலும் விளங்காது. ராவானா எந்தப் பக்கத்தில இருந்து வாறான் எண்டு தெரியல, நம்ம வலைகளுக்குப் பக்கத்தில வந்தாப்பிறகுதா நமக்கே தெரியுது” என்று லேயோன் சொல்லியபடி இருக்கவும்,

“அப்பிடியாப்பா நடக்குது” என்றபடி மேலும் சொல்லும்படி கேட்டாள் மெடோனா.

“அதுமட்டுமில்ல, அவன் தொழிலுக்கு வாறத வச்சுத்தான் நாம எப்ப கடலுக்கு போக ணும் போககூடாது எண்டு முடிவெடுக்கிற அளவுக்கு நம்ம நிலம இருக்குது. நம்ம கடலில எப்ப நம்மால நினைச்ச நேரத்துக்கு



> **இந்தியன் றோளர்கள் தொழிலுக்கு வாறத வச்சுத்தான் நாம எப்ப கடலுக்கு போகணும் போககூடாது எண்டு முடிவெடுக்கிற அளவுக்கு நம்ம நிலம இருக்குது. நம்ம கடலில எப்ப நம்மால நினைச்ச நேரத்துக்கு தொழிலுக்கு போற நிலம வருமோ தெரியல.**
> **அரசாங்கமும் வேடிக்கதான் பாக்குது. சில வேள வக்கக்காட்டி பயமுறுத்துவான் நம்ம நேவி. இல்லாட்டி ஊம மாதிரி பேசாம கிடப்பான். ஒரு முடிவு காணுறபாடு இல்ல. கேட்டா இது உலக அரசியலாம். ஆனா நமக்கு நம்ம ஊர்ப் பிரச்சினதான்.**

தொழிலுக்கு போற நிலம வருமோ தெரியல. அரசாங்கமும் வேடிக்கதான் பாக்குது. சில வேள துவக்கக்காட்டி பயமுறுத்துவான் நம்ம நேவி. இல்லாட்டி ஊம மாதிரி பேசாம கிடப்பான். ஒரு முடிவு காணுறபாடு இல்ல. கேட்டா இது உலக அரசியலாம். ஆனா நமக்கு நம்ம ஊர்ப் பிரச்சினதான்"

"அப்ப எப்பப்பா நீங்க சந்தோசமா கடலுக்கு போவிங்க" என்ற மகளது கேள்விக்கு "பாப்பம் பிள்ள ஒரு காலம் வரும்தானே" என்றபடி சாப்பாட்டுக்கு கையசைத்தான்.

இரவு முழுவதும் மரியத்துக்கு கடன் பற்றிய சிந்தனைதான் ஓடிக்கொண்டிருந்தது. அது லேயோனுக்கும் தெரியும். ஆனால், கடன் வாங்குவதும் அதை மறுபடி கட்டுவதும் மரியம் தானே. புருசன் பேசுவார் என்று தெரிந்தும் தொழிலுக்கு என்றபடியால் தனது இரு வளையல்களையும் அடைவுக்குத் தந்த ஈஸ்வரியையும், அவசரம் என்று போய் நின்றபோது தனது பரம்பரை நகையென்று பாராமல் அட்டியலை எடுத்துக் கொடுத்த மேரியையும் அவள் நிமிடத்துக்கொரு முறை எண்ணிப்பார்ப்பதுண்டு. கடன்களை கூறிய தவணைக்குச் செலுத்தி பலரது நம்பிக்கைக்குரிய கடனாளியாக உருவெடுத்திருந்தாள் மரியம். அதனால் தொழில் விடயங்களில் இவளுக்கு யோசனை அதிகம். யாருக்கு எந்தத் தவணை சொல்லி கடன் மாறியது என்றும் அதை அடைப்பதற்கு எவ்வாறு திட்டமிடுவது என்றும் இவளே அறிவாள்.

காலைக் காற்றின் மெல்லிய வருடலுக்கு பூவரசம் சருகுகள் நிலத்தின் மீது ஓட்டப் பந்தயம் செய்துகொண்டிருந்தன. குயில்களும் காகங்களும் தத்தம் முறைப்படி காலைநேரத்தை வரவேற்றன. விடிந்து நிலம் தெரியும் முன்னமே நிக்சன் லேயோன் வீட்டுக்கு வந்துசேர்ந்தான். முதலில் லேயோனிடமே கூறவேண்டும் எனக் கொண்டுவந்த செய்தியை நிக்சன் லேயோனிடம் கூறிவிட, குறுகிய கால கடற்சுதந்திரம் கிடைத்துவிட்ட சந்தோசத்தில்,

"மரியம், இளையவளிட்ட கிடக்கிற அந்த ஒருபவுணையும் அடகுவச்சுவிடு. புதுவலைய கட்டி எப்பிடியும் வஞ்சூரன் மடக்கிரலாம். அதுல வாற காச வச்சு எப்பிடியும் பழைய கடன அடைச்சிருவம்" என்று சொல்லவும்,

"என்னங்க சொல்றீங்க, சின்னவள்ட கிடக்கிறதே அது ஒண்ணுதானுங்க. அவள் படிக்கிற பிள்ள, நாலஞ்சு இடங்களுக்கு பேய்ற்ருவாறதுகள், கோயில், மன்றாட்டு எண்டு போறதுகள். வெறுங்களுத்தோடயா போறது" என்று மரியம் வெளியே வந்து நிற்கவும்,

"மீன் படும்போதுதான் உழைக்க ஏலும். இன்னும் ஒரு கிழமையால இந்த மீனத் தேடினாலும் காண ஏலாது. மீனையும் பாம்பையும் கண்டா விடக்கூடாது எண்டு சும்மாவா சொல்லுவாங்க. புதுவல எடுத்தா கிடக்கிற கடன்ல கொஞ்சமாவது அடைக்கலாம். இளையவளுக்கு விளங்கும்தானே. நீ அத அடகு வை" என்றபடி முற்றத்துக்கு வந்து,

"நிக்சன் நம்ம பிறேமிட்ட சொல்லி எனக்கும் ஒரு ரெண்டுகான் மண்ணெண்ண ஏத்தச் சொல்லப்பா" என்றான். "கடல் நம்மக் கைவிட்டி

ராது வேகமாக வாங்கிக்கு போற வேலய பார்” என்றவாறு கடற்கரையை நோக்கி நடந்தான், லேயோன்.

செய்தி என்னவாக இருக்கும் என்று ஊகித்துக்கொண்ட மரியம், நிக்சனிடம் “அண்ணே எத்தினாந்திகதி மட்டும்” என்று கேட்டாள். அவனோ “ஆனி பதின்னாலு மட்டும்” என்றபடி படலையைத் திறந்து நடக்க ஆரம்பித்தான்.

நிக்சன் இந்தச் செய்தியை பல மீனவர்களுக்கும் சொல்லவேண்டும் என்பதற்காக வேகமாக நடந்தான். அச்செய்தி அவசரமானது மட்டுமல்ல அத்தியாவசியமான செய்தியும் கூட. இலங்கை நாட்டுச்செய்திகூட அவ்வளவு சந்தோசத்தை தராது. ஆனால்,

“இன்று நள்ளிரவு முதல் தமிழகக் கடலோர மாவட்டங்களில் மீன்பிடித் தடைக்காலம் அமல். ஏப்ரல் 15 தொடங்கி ஜூன் 14 வரையான 61 நாட்கள் தடைக்காலம் தொடரும்” என்ற இந்தியச் செய்தி சந்தோசம் தரக்கூடியது மட்டுமல்ல லேயோன் போன்றோருக்கு சுதந்திரம் தரக்கூடியது என்பதை நிக்சன் அறிவான்.

இந்தச் செய்தியைச் சொல்லிக்கொண்டே இளையவளின் தங்கச்சங்கிலியை கையில் எடுத்தாள், மரியம். வங்கி செல்வதற்கு மிக விரைவுபடுத்துகிறாள் தன்னை. காரணம் இன்னும் இருப்பது அறுபது நாட்களே.

❍

**சொல் விளக்கங்கள்**

**றோளர்** - இழுவைப் படகு
**உரக்க** - அதிகரிக்க
**மரக்கப்பு** - அளவில் பெரிய மரத்தடி
**ஐஞ்சரஞ்சி** - ஐந்தரை இஞ்சி அளவுடைய வலைக்கண்களை உடைய வலை
**பாதையால** - படகோடு கட்டப்பட்ட வலையின் பக்கம்
**தலப்பால** - படகோடு கட்டப்பட்ட வலைப் பக்கத்தின் எதிர்ப்பக்கம்
**தொண்டிக்காரன்** - தமிழக தொண்டி ஊரைச் சார்ந்த இழுவைப் படகுகள்
**அம்மையா** - அம்மாவின் அப்பா
**மரியா** - யேசுவின் தாய்
**பார** - பாரை மீன்
**இறவெட்ட** - கடலின் ஆழமற்ற கரைமுடிந்து ஆழமான கடல் தொடங்கும் இடம்
**மன்றாட்டு** - செபமாலைத் தியானம்
**கான்** - 200 லீற்றர் கொள்ளளவுடைய கொள்கலன்

❍❍❍




**– செல்லையா சுப்ரமணியம்**



சிறுகதை

# சரிக்கை

கிறிஸ்டி நல்லரெத்தினம்
(அவுஸ்திரேலியா)



**வீ**ட்டின் நடுவே இருந்த ஊஞ்சல் தனிய ஆடிக்கொண்டிருந்தது. அதில் உட்கார்ந்து கொண்டோ அல்லது படுத்துக் கொண்டோ தேவாரங்களை முணுமுணுத்துக்கொண்டோ இருக்கும் அப்பு அங்கில்லை. அவரின் சிம்மாசனம் அது. அதில் உட்கார்ந்து கொண்டு எங்கள் குடும்ப பிணைக்குகளை பஞ்சாயத்து செய்யும் அந்த ஜீவன் இல்லாத வீடு வெறிச்சோடிக்கிடந்தது.

அப்பு, அவர்தான் என் தாத்தா, என்னிடம் கொண்டிருந்த அந்தப் பாசப்பிணைப்பு புறவய மானதன்று. எங்கள் இருவரையும் இணைத்த அந்த நூலை எவரும் தொட்டதில்லை. “ஏ, பையா, உன்ன உங்கம்மா தூக்கிறதக்கு முன்னமே நான்தான் தொட்டுத் தூக்கினன் தெரியுமோ?” என்று கூறி பெருமைப்படுவார். என்னை ஏனே அவர் “பையா” என்று அழைப்பதில் ஒரு இறுக்கமான உரிமையும் உறவும் இருப்பதாய் தோன்றும்.

அம்மாதான் அவரின் ஒரே மகள். எனவே அவருடன் தாத்தாவின் பாசமுடன் உரிமையும் ஒட்டிக்கொண்டது. “மகள், அத எடு... இத எடு” என்று அம்மாவை விரட்டிக்கொண்டே இருப்பார். அம்மாவும் அவர் அன்பில் அடைக்கலமாவார்.

அப்பாவிற்கும் தாத்தாவிற்குமிடையே ஏனே பசை போதவில்லை. அப்பா எமது குடும்பத்தில் சங்கமமானது அறுபதுகளில். அப்பா ஒரு ‘வேதக்காறன்’. சமயம் மாறி வந்து அம்மாவை கைப்பிடித்ததாலோ என்னவோ அப்பாவின்மேல் தாத்தாவிற்கு ஒரு இரண்டாந்தரம். அப்பாவிடம் தாத்தா நேராக முகம்பார்த்து பேசமாட்டார். அப்பா என்றும் மந்தையில் இல்லாத ஆடு.



ஒருமுறை அப்பாவிற்கும் அப்புவிற்கும் இடையே ஏதோ பிணக்கு “என்ர சையிக்கிள தொட வேண்டாம் எண்டு சொல்லு” என்று அம்மாவிடம், அப்பாவின் காதுபட, சற்று உரக்கவே சொல்லிவிட்டார். சாமானிய குடும் பங்களில் சைக்கிள்தான் அந்நாட்களில் டெஸ்லர். வீட்டிற்கு ஒரு வாகனம் மட்டுமே. அப்பாவோ சாது. ஒருபோதும் அப்புவை போருக் கழைத்ததில்லை! எதிர்வசைபாடி பிளவை பெரிதாக்கும் எண்ணம் அப்பாவிற்கில்லை. அப்புவின் சைக்கிளை அப்பாவும் பின்னர் தொட்டதில்லை.

அப்புவைத் தேடி வீட்டிற்கு பலர் வந்து போவதால் எப்போதும் எங்கள் வீடு களைகட்டியிருக்கும். அதற்கும் காரணம் உண்டு. அப்புதான் ஊர் எலும்பு முறிவு மற்றும் ‘பாம்புக்கடி’ வைத்தியர். வைத்தியர் என்ன வைத்தியர் - ஊர் பரியாரியார்.

எங்கள் ஐந்து அறை கல் வீட்டின் முன் பரந்து இருக்கும் குருத்து மணல் முற்றம். முற்றத்தின் மருங்கில் இரண்டு பெரிய மாமரமும் பலாமரமும் (அதென்ன பலா? பிலா மரம் என்றே வாசியுங்கள்!) கிளை விரித்து நிற்கும் வேப்ப மரமும் இருந்தன. அப்புவைப்பார்க்க வருவோர் கூடி இருக்க ஒரு திறந்த ஓலை மேய்ந்த ஒரு குடில். குடில் என்றதும் ‘அம்புலிமாமா’வில் நீங்கள் பார்த்த குட்டி குடிலை கற்பனையில் இழுத்து வந்து எங்கள் முற்றத்தில் வைக்காதீர்கள். உயர்ந்த கூரையுடன் அறைகள் போல் இரு தடுப்பு சுவர் வேலி போட்டு மேய்ந்த அமைப்பு அது. அப்பு இருக்க கதிரை மேசை வசதிகள் உண்டு. மேசை மேல் இருக்கும் ‘ஒத்த றூள் கொப்பி’ தான் அப்பு மருந்து எழுதும் றெஜிஸ்டர். நோய் என வருவோரை தன் முன் இருக்கும் கதிரையில் அமர்த்தி நாடி பிடித்து, இருமச் சொல்லி, முட்டியை தட்டி மேலும் ஏதோ ஏதோ பரீட்சாத்தங்கள் செய்து பின் மேசைக்கு பின்னே இருந்த அலுமாரியை திறந்து வடகம், தூள்கட்டு என பல உருவங்களில் மருந்துகளை பரிமாறுவார். அவற்றை எப்போது சாப்பிட வேண்டும் என்ற விபரங்களை நான் சொன்ன ‘ஒத்த றூள்’ கொப்பியின் ஒரு பக்கத்தில் எழுதி அடிமட்டம் வைத்து கிழித்து நோயாளிக்கு கையளிப்பார். அப்பு எவருக்கும் ‘தண்ணி மருந்து’ கொடுத்ததை கண்டதில்லை. “இந்த தூளை தேனில கரைச்சு விடியத்தால சாப்பிட வேணும் கண்டியோ..? என்ன.. நான் சொல்லுறது விளங்குதோ?” என்று சொல்லி தன் வார்த்தைகளின் புரிதலை உறுதிப்படுத்திக் கொள்வார். தேனுக்குப் பதிலாய் முலைப்பாலும் வந்து போகும்.

எலும்பு முறிவிற்கு ‘பத்துப் போட’ வருபவர் களைப்பார்க்க எனக்கு ஆர்வம் இல்லை. ஒரு முறை மரத்தால் விழுந்தவனை நாலு பேர் தூக்கிக் கொண்டு வந்து கிடத்தினர். அப்பு அருகில் குந்திக்கொண்டு குசலம் விசாரிப்பது போல் அவனிடம் பேசிக் கொண்டு அவனின் நோய்ப்பட்ட கையை மருந்தெண்ணை தடவி மெதுவாக நீவி விட்டார். அவனும் அப்புவின் கேள்விகளுக்கு அனுகிய குரலில் “ஓம் ஐயா.. ஓம் ஐயா” என்று பதில் சொல்லிக் கொண்டு இருந்தான். அவன் முழங்கையில் விலகிய எலும்பு துருத்திக் கொண்டு முழங்கையில் நீலம் பாவித்து வீங்க வைத்திருந்தது. அப்பு அவன் மேல் கையை பலமாக பற்றியவாறு கேள்விகளை தொடுத்தவாறு இருந்தார். “இந்த முறை விளைச்சல் எப்படி?... இந்த போகத்தில நெல்லு விலை என்னவாம்..?” போன்ற கமம் செய்பவனிடம் கேட்கும் கேள்விகளால் அவன் காதை நிரப்புவார். அவன் கவனம் எல்லாம் அவரின் கேள்விகளுக்கு பதில் தேடுவதிலேயே அப்போது இருந்தது. அதுதான் தருணம் என்று அப்பு உணர்ந்திருக்க வேண்டும். சடாரெண்டு அவன் கையை ஒரு பொம்மையின் கையை திருகுவதைப் போல் திருகி பலமாக இழுத்து விட்டார். “ஐயோ.. எண்ட ஆண்டவனே..” என்ற அவன் கூக்குரல் கூரையை பிய்த்தது! இந்த தருணத்திற்கு காத்திருந்தாற்போல் அப்பு ஒரு புன்சிரிப்புடன் “இனி பத்து ஒண்டு போட்டா சரி, எலும்பு மூட்டுக்குள்ள சரியா கொளுவிற்று .. மூண்டு கிழமையில பத்த கழற்ற ஏலும்” என்று வலியால் துடித்தவனுக்கு ஆறுதல் வார்த்தைகளை கூறி இனி ‘பத்துப்போடு’வதற்கான ஆயத்தங்களில் இறங்கினார்.

அப்புவின் எலும்பு முறிவு வைத்தியத்தை விட பாம்புக்கடி வைத்தியம் பார்க்க சுவாரசிய மாக, ஒரு நாடகத்தன்மையுடன் கூடியதாய், இருக்கும்.



**வேப்பம் கொத்தின் விசையோ அப்புவின் மந்திர ஓதல்களோ... ஏதோ ஒன்று அந்த மாயையை செய்தன. "விஷம் இறங்கிற்று.. இறங்கிற்று.. அம்மாளே தோத்திரம் அம்மா!" என்று பூரண திருப்தியுடன் கூறி தலையை நிமிர்த்தி சூழ்ந்திருந்த கூட்டத்தை பெருமையுடன் பார்த்தார் அப்பு.**

ஒருமுறை எங்கள் 'வயல்காரன்' வேலு மணியை வயல் அறுவடை சீசனில் ஏதோ பாம்பு கடித்துவிட்டது. ஊரார், அவன் வாயில் நுரை தள்ள, தூக்கிக்கொண்டு அப்புவிடம் ஓடி வந்தனர். "புடையன் பாம்பு கடிச்சிப்போட்டாம் ஐயா" என்ற சபையோரின் சாட்சியத்தை காதில் வாங்காமல் கடித்த பாம்பின் உடல் அடையாளங்களை முதலில் கேட்டறிந்து கொண்டார் அப்பு. அந்த விபரணையில் இருந்து கடித்த பாம்பு என்னவென்று கணித்துக் கொண்டு அதற்கான மந்திரங்களை ஓதத் தொடங்கினார். ஏறிய விஷத்தை இறங்கும்படி உருக்கமாய் அம்மாளிடம் வேண்டுவதாகவே அந்த மந்திரங்கள் ஓதப்பட்டன. ஆம், அவை கட்டளைகள் என்பதை விட வேண்டுதல்களே!

அப்பு கையில் ஒரு வேப்பிலைகத்தை எடுத்துக் கொண்டார்.. வேலுமணி அரை பிரக்ஞையுடன் வாயில் நுரை தள்ள தரையில் பாதி உணர்வுடன் கிடந்தான். அப்புவின் ஒரு கையில் வேப்பம் கொத்து - மறு கையில் ஒரு கைப்பிடி மிளகு. வேப்பம் கொத்தால் அவன் கன்னதில் பலமாக மாறி மாறி அறைந்தவாறு மந்திரங்கள் ஓதியவாறு ஒரு மிளகை அவன் பற்களுக்கிடையே திணித்து "மிளக முன் பல்லால கடிச்சி நுனி நாக்கால ருசி பாரு.. என்ன உறைக்குதா சொல்லு?" என்று கேட்க அவன் இல்லை என்பதற்கு அடையாளமாக தலையை பக்கவாட்டில் அசைத்தான். பாம்பின் விஷம் தலைவரைக்கும் ஏறிவிட்டது என்பதை உணர்ந்தார் அப்பு. இல்லையெனில் மிளகு உறைத்திருக்க வேண்டுமே. இனி காலம் தாழ்த்த முடியாது.... செய்வதை விரைவாய் செய்தாக வேண்டும். மீண்டும் வேப்பம் கொத்து கசையடியும் உச்சஸ்தானத்தில் மந்திரங்களும் தொடர்ந்தன. மீண்டும் அதே பரீட்சை... மிளகு அவனுக்கு உறைக்கவில்லை... விஷம் இன்னும் இறங்கவில்லை. மந்திரமும் கசையடியும் தொடர ஒரு கட்டத்தில் "ஐயா.. மிளகு உறைக்கிதையா" என்றான் உரத்த குரலில். வேப்பம் கொத்தின் விசையோ அப்புவின் மந்திர ஓதல்களோ... ஏதோ ஒன்று அந்த மாயையை செய்தன. "விஷம் இறங்கிற்று.. இறங்கிற்று.. அம்மாளே தோத்திரம் அம்மா!" என்று பூரண திருப்தியுடன் கூறி தலையை நிமிர்த்தி சூழ்ந்திருந்த கூட்டத்தை பெருமையுடன் பார்த்தார் அப்பு. சூழ்ந்திருந்த கூட்டமும் வாய் திறந்து நின்றது!

ஊர்க்கோயில் இருந்த திசையில் தலையை திருப்பி இரு கரங்களையும் தலைக்கு மேல் கூப்பி தெய்வானை அம்மானை வணங்கி அந்த சடங்கை முடித்து வைத்தார்.

அப்புவுடனான என் உறவு திவ்வியமானது. அப்பு நல்ல கதை சொல்லி. எனக்கு கம்பராமாயணத்தையும் கீதையையும் ஒரு தொடர்கதையின் சுவாரசியத்துடன் சொல்வார். ராமாயணம் ராமர் கதையை சொல்லும் ஆனால் காட்சியாக காட்டாது என்போர் சிலர். ஆனால் அப்புவின் விவரணங்களுடன் கூடிய ராமர் கதையில் காட்சிகள் அவர் வார்த்தைகளில் ஒரு ரம்யமான காட்சியாய் திரைப்படம் போல் கண் முன்னே விரியும். அவர் வார்த்தைகளில் வனத்தில் சீதை மட்டுமல்ல நானும் வனத்தில் ஒரு கல்லில் உட்கார்ந்து காட்சிகளை ரசிக்கும் ஒரு உணர்வை உருவாக்கித்தருவார்.

கதை கேட்கும் படலம் முடிந்ததும் ஒரு சிறு பரிசளிப்பு. அவர் அறையில் இருந்த பெரிய முதிரை மர அலுமாரியின் மேல் தட்டில் அவரின் வேட்டி சால்வையின் பின்

மறைத்து வைத்திருக்கும் சிறு டப்பாவை திறந்து இரண்டு மூன்று 'மில்க்டொபி' களை பரிசளிப்பார். மூன்றுதான் தினக்கணக்கு. அம்மாவின் கட்டளையை மீறி நடக்கும் ஒரு இரகசிய பரிசளிப்பு இது.

"அப்பு, இவன் சின்னவனுக்கு டொபி, சொக்களட் ஒண்டும் கொடுக்காதேயுங்கோ... பல்லு சூத்தை குத்திப் போடும்" என்ற அம்மாவின் அறிவுரைகளும் புறக்கணிக்கப்படும்.

வாய் நிறைய இனிப்புக்களுடன் நான் அம்மாவிடம் மாட்டிக் கொண்ட தருணங்கள் உண்டு. "அப்பு, இவன்ர வாய்க்குள்ள டொபி போல... நீங்களோ குடுத்த நீங்கள்?" என்ற கேள்விக்கு பலமான மறுப்பு தலையாட்டல் அப்புவின் தரப்பில் இருந்து வரும். அப்பு இப்படி குறும்பு பொய் பேசும் வேளையில் தன் வலது கை விரல்களை மடக்கி பெருவிரலை ஆள்காட்டி விரலூடாக நுழைத்து ஒரு சமிக்கை செய்வார். அவர் கண்கள் குறும்பு சிரிப்புடன் "என் விரலைப் பார்" என்று சொல்லாமல் சொல்லும். இது எங்கள் இருவருக்கும் மட்டுமே புரியும் இரகசிய பரிபாஷை!

❍

நாட்கள் உருண்டோடி ஆண்டுகளுக்குள் அடங்கி அவையும் உருண்டோடி..

அப்புவிற்கு பாரிசவாதம் வந்து உடலின் இடது பக்கத்தை இழுத்துக் கொண்டது. சாமி அறைக்குப் பக்கத்தில்தான் அப்புவின் அறை.

அந்த அறையில் இருந்து இப்போ அவர் வெளியே வருவதில்ல. எங்கள் வயல்காரன் சாமித்தம்பிதான் இப்போ அப்புவுக்கு எல்லாம். அவனுக்கும் அப்படி ஒன்றும் இள வயது இல்லை. காலையில் அவரை அணைத்த வாறு மூச்சுமுட்ட தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு கிணற்றடியில் இருந்த கதிரையில் உட்கார்த்தி ஒரு குளியல். அவனே அப்பு வின் தலையை துவட்டி புது வேட்டி உடுப் பித்து மீண்டும் அவரை வீட்டிற்குள் தூக்கிக் கொண்டு போவான். அப்புவிற்கு சாப்பாடு பிசைந்துதான் ஊட்டிவிட வேண்டும். பற்கள் விடைபெற்றுக்கொண்ட வயது அவருக்கு. அதுவும் சாமித்தம்பியின்ர வேலைதான். ஆனால் அம்மாதான் சோறு கறிகள் எல்லாம் பீங்கானில் பரிமாறி தன் கையால பிசைந்து "சாமித்தம்பி... இத அப்புவிற்கு தீத்தி விடு பாப்பம்.. வேணாம் எண்டு சொன்னாலும் எல்லாத்தையும் தீத்தி விடப்பாரு.. நேத்து மத்தியானமும் நல்லா சாப்பிடயில்ல.. வர வர உடம்பும் சூம்பிக்கொண்டு போகுது!" என்று சொல்லி வேதனையுடன் அங்கலாய்ப்பார். அம்மாவிற்கும் முன்னரைப் போல் ஓடி ஆடி வேலை செய்ய முடியாது. நாடியில் கைவைத்தபடி அப்புவின் குளியலை பார்த்து "எப்படி இருந்த மனுஷன்? வயசுதான் என்னமா அப்புவின்ர சௌந்தரியத்த சிதைச்சுப் போட்டுது?" என்று முணுமுணுப்பார் அம்மா. அப்புவின் தேகசுகம் தேய்பிறையாய் மாறி வருவது அம்மாவின் சோகத்திற்கு முதல் காரணி. வாழ்வின் சோகங்களை வலைக்கரண்டி போட்டா வடித்தெடுக்க முடியும்? வாழ்ந்துதானே கழிக்க வேண்டும். அதுவே உலக நியதி அல்ல?

அம்மாவிற்கும் இது தெரியாததல்ல.

ஒரு நாள் அயல் வீட்டு செல்வி மாமி அப்புவின் நிலையை புரிந்து கொண்டு "இஞ்ச பாரு புள்ள.. எத்தின நாளுக்கு பெரிய ஐயாவ வீட்டோட வச்சு பாக்கப்போறா? சாமித் தம்பியும் நெல்லு மூட்டய தூக்கிற மாதிரி அவர கஸ்டப்பட்டு தூக்கிற்று கிணத்தடியும் வீடும் எண்டு திரியிறான். ஒரு நாளைக்கு தடுக்கி விழுந்தினமோ அவ்வளவுதான். சீவன் போயிடும் கண்டயோ?" என பயம் காட்டினார்.

செல்வி மாமி சொன்னதும் அம்மாவிற்கு சரியாகவே பட்டது.

அப்பாவை மாரடைப்பால் மூன்று வரு டங்களுக்கு முன் இழந்த அம்மா தனியாக அப்புவை பார்ப்பதை ஒரு சுமையாகவே இப் போது கண்டார்.

நானும் மனிசியும் மகனும் குடும்பத் தோட கொழும்பு தெமத்தகொடவில இடம் பெயர்ந்துவிட்டதால் அம்மாவும் தனது கைத் துணையை இழந்து விட்டிருந்தார். தினசரி இரவு கைபேசி அழைப்புகளில் அப்புவின் நிலமை பற்றி அழுது புலம்புவது இப்போ வாடிக்கையாகிவிட்டது.

செல்வி மாமி அம்மாவிடம் "டவுனில இப்ப புதிசா ஒரு வயோதிபர் மடம் திறந்திரிக்கினமாம்.. இப்ப கனடாவில இருக்கிற நம்மட கோயிலடி சண்முகத்தின்ர கொப்பரும் அங்கதானாம் இப்ப இருக்கிறாராம். வேளைக்கு

**அப்பு இல்லாத எங்கள் வீடு களையிழந்து வெறிச்சோடியிருந்தது. அப்பு உட்காந்திருக்கும் ஊஞ்சல் சலனமற்று மௌனமாய்த் தொங்கியது. தான் பிறந்து வளர்ந்த வீட்டை விட்டு தனது சொந்தங்கள் எடுக்கும் முடிவுகளால் நிகழும் இந்த இடப்பெயர்வுகள் கொடியன. தமது விருப்பத்திற்கு மாறாக, சொந்தங்கள் சொல்லும் தேன் பூசிய வார்த்தைகளை நம்புவது போல் பாசாங்கு செய்து, மௌனமே மொழியாகி பெட்டிக்குள் அடங்கும் பாம்பாக எத்தனை ஜென்மங்கள் தம் புளித்துப்போன மீதி வாழ்க்கையை சோகத்தில் வாழ்ந்து கரைக்கின்றன?**

நம்மட ஊர் சாப்பாடு... வருத்தம் வாதை எண்டால் உடனே டாகுத்தர் அங்கேயே வந்து பாப்பினமாம். ஒவ்வொரு நாளும் தியானம், யோகாசானம் எண்டு எல்லாம் இருக்குதாம். ஒருக்கா உன்ர மகனோட கதைச்சிப்போட்டு அப்புவையும் அங்க சேத்து விடலாம்தானே?" என்று ஓதி வைத்தாள். அம்மா தனது தினசரி நச்சரிப்புக்களுடன் இந்த செய்தியையும் என்னுடன் பகிர்ந்தார். அம்மாவின் வார்த்தைகளின் வலிமையை என்றும் உணர்ந்தவன் நான். ஒரு முடிவை எடுத்த பின் அதன் சாரத்தை என்னிடம் கூறி என் அனுமதிக்காய் காத்திராமல் "அதத்தான் செய்வம் மகன்" என்று சம்பாஷணையை முடிப்பார்.

அப்புவின் இடப்பெயர்ச்சி அடுத்த மாதமே நடந்து முடிந்தது. என்னால் வேலை நிமித்தம் கொழும்பில் இருந்து ஊருக்கு உடனே திரும்பி வர முடியவில்லை. ஆனால் அடுத்த மாதமே லீவில் தனியே ஊர் திரும்பி அப்புவின் புதிய வாசஸ்தலத்தை பார்க்க விரைந்தேன்.

அம்மா அப்புவை அந்த வயோதிபர் மடத்தில் சேர்ப்பதற்கு பட்ட கஸ்டங்களை பட்டியல் போட்டார். வயல்காரன் சாமித்தம்பியின் பங்களிப்பை சிலாகித்துப் பேசினர் அம்மா. எனது இடைவெளியை நிரப்பிய அவன் உண்மையில் ஒரு புண்ணியவான்தான்.

அப்பு இல்லாத எங்கள் வீடு களையிழந்து வெறிச்சோடியிருந்தது. அப்பு உட்காந்திருக்கும் ஊஞ்சல் சலனமற்று மௌனமாய்த் தொங்கியது.

தான் பிறந்து வளர்ந்த வீட்டை விட்டு தனது சொந்தங்கள் எடுக்கும் முடிவுகளால் நிகழும் இந்த இடப்பெயர்வுகள் கொடியன.

தமது விருப்பத்திற்கு மாறாக, சொந்தங்கள் சொல்லும் தேன் பூசிய வார்த்தைகளை நம்புவது போல் பாசாங்கு செய்து, மௌனமே மொழியாகி பெட்டிக்குள் அடங்கும் பாம்பாக எத்தனை ஜென்மங்கள் தம் புளித்துப்போன மீதி வாழ்க்கையை சோகத்தில் வாழ்ந்து கரைக்கின்றன?

மண்ணை மீறும் விதைகளாய் வாழ்ந்து காட்டுகிறேன் பார் என்று சமூகத்தை சவாலுக்கு அழைத்த இளமை ஓய்ந்துவிட வேர்கள் வெட்டப்பட்ட மரத்தின் தனிமையுடன் தம் குறுகிய உலகினுள் சுருங்கிக் கொண்ட ஜீவன்களின் பிரதிநிதிதான் அப்பு இன்று.

அப்புவின் காலை உணவு பரிமாறப்பட்டதும் நானும் அம்மாவும் அவரை பார்க்க அந்த வயோதிபர் மடத்திற்கு சென்றிருந்தோம். அப்புவிற்கென ஒரு தனியறை. மேலே மின்விசிறி சுழன்று அறைக்கு ஒரு ஆடம்பரத்தை கொடுத்தது. அப்பு உட்கார்ந்து வாசிக்க நல்ல மரக்கதிரை ஒன்று. மூலையில் ஒரு அரை அலுமாரி. குளியலறைக்கு அழைத்துச்செல்லும் வாசல் கதவு மூடியிருந்தது. கட்டிலின் அருகில் தொங்கிக் கொண்டிருந்த 'காலிங் பெல்'. அடித்தால் உதவிக்கு ஆள் வரும்.

அப்பு என்றும் போலவே வெள்ளை பாலாமணியும் சாரனும் அணிந்து இருந்தார். கட்டிலில் படுத்தவாறு இருந்தவர் எம்மைக் கண்டதும் எழுந்து உட்கார எத்தனித்தார். முடியவில்லை.

"நீங்க படுங்க அப்பு.. நான் கட்டிலில கிட்ட இருக்கிறன்.. எழும்பி கஸ்டப்பட வேணாம்" என்று கூறி அருகில் அமர்ந்து கொண்டேன்.

அம்மாவும் "எப்படி அப்பா, எல்லாம் வசதி தானே... நல்லா பாத்துக் கொள்ளுகினமா?... உங்கட சாப்பாட்டில சீனி சேர்க்க வேண்டாம்

எண்டு சொல்லியிருக்கன்... இண்டைக்கு குளிப்பாட்டினவையளோ?” என்ற கேள்விக்கு அப்பா இல்லை என்று தலையாட்டியே பதிலளித்தார்.

மீண்டும் ஏதோ சொல்ல வேண்டும் போல் அவருக்கு தோன்றியிருக்க வேண்டும். முகத்தில் ஆழ்ந்த சிந்தனையுடன் கூடிய மௌனம்.. பறி போன சொற்களை மீட்டெடுக்கும் மௌனம்.

“மகள்.. நான் வீட்டுக்கு வந்து இருக்கப் போறன் மகள்.. இஞ்ச ஏலாது... இஞ்ச இந்த அறைக்குள்ள தனிச்சிப் போயிட்டன் பிள்ள.. பயமாய் இருக்கு மகள்.. இஞ்ச எனக்கு ஆர் இருக்கா?” என்றபோது அவர் உடல் குலுங்கி அடங்கியது. அப்புவின் கேள்விக்கு பதில் சொல்லத் தெரியாமல் அம்மா என் முகத்தைப் பார்த்தார். அப்புவின் கண்கள் பனித்ததை அம்மாவும் கவனித்தார்.

“பையா.. தனிச்சுப் போயிட்டன் ராசா.. சாப்பாடும் குளிப்பும்தான் வாழ்கையில்ல பையா.. குடும்பமடா.. குடும்பம். அது இஞ்ச இல்ல மகன்” என்று என்னைப் பார்த்து சொன்ன வார்த்தைகள் இடியாய் என்னுள் இறங்கின.

அப்போது அறைக்கதவு திறந்து கொள்ள அந்த வயோதிபர் மடத்தின் ‘மேற்ரன்’ உள்ளே நுழைந்து எம் எல்லோரையும் கண்களால் துலாவி “ஓ.. ஐயாவ பார்க்க எல்லோரும் வந்திருக்காங்க போல” என்று கூறி பின் அப்புவைப் பார்த்து “எப்பிடி ஐயா இருக்கிறீங்கள். எல்லாம் வசதிதானே? ஏதாவது தேவையெண்டால் சொல்லவேணும். என்ன.. சந்தோசம் தானே?” என்ற கேள்விக்கு “ஓம்.. மெத்த சந்தோசம்.. மெத்த சந்தோசம்..” என்று தலையை ஆட்டியவாறு கூறி என் கண்களை ஏறிட்டுப்பார்த்தார் அப்பு. பின் அவர் கண்கள் தன் வலது கை விரல்களில் குத்திட்டு நின்றன. என் பார்வை அப்புவின் அந்த கை விரல்களில் குவிந்தது.

பெருவிரல் ஆள்காட்டி விரலூடாக நுழைந்து எம்மிருவருக்கு மட்டும் தெரிந்த அந்த இரகசிய சமிக்கையை உருவாக்கிக் காட்டிற்று!

○○○

# சுழற்சி

அதிகார முதிர்ச்சி ஆதிக்கம்
ஆதிக்க வளர்ச்சி ஆக்கிரமிப்பு
ஆக்கிரமிப்பு வேட்கையுற்று
அழிவை உருவாக்கும்
அழிவு இன்னோர் ஆக்கத்திற்கு
வழி சமைக்கும்
ஆக்கம் மீண்டுமின்னோர் அழிவிற்கு

ஒன்று அழிகிறதெனின்
இன்னொன்றின் உருவாக்கமென அறி
இன்னொன்றின் உருவாக்கம்
ஏதோவொன்றின் அழிவிலிருந்தெனக்கொள்

– சு. கருணாநிதி

# குடும் சாவும்

போர் இல்லை
சமாதானம் இல்லை
யார் யாரோ?
வருவதும் போவதுமாக!

ஊரில் உள்ளூராட்சி
நேரில் உடைபடும் காட்சி
வாக்கு வேட்டை
வாக்கு வாதம்

கட்சிகளோடும்
சுயேட்சைக் குழுவும்
ஆட்சி பிடிப்பதற்கு
வீடு வீடாக வருகை

வேட்பாளர்களின்
காழ்ப்புணர்ச்சி
நாட்பட்ட பழமாக
அழுகி அசிங்கப்பட்டு

இனந்தெரியாதோரால்
இரக்கமின்றிச் சுடுவதும்
இனந்தெரிந்தே
சாவதுமாக.....

– கலாநிதி செ. ஞானராசா

# ஐயோ பாவம்...!



சிறுகதை



செ. மகேஷ்
(நெடுந்தீவு)

ஆடை குலைந்து கண்கள் குழிவிழுந்து அழகு தொலைந்து அதோ போகிறாள் அவள் தான் தூசண விசரி. வாய் தூசணத்தையே தொடர்ந்து முணுமுணுத்தது. திடீரென யாரையோ ஏசி முன்னெடுக்கும் தூசண வார்த்தைகள் அவள் வாயில் இருந்திருந்து உரத்து மேலெழும்.

இப்பொழுது இவள் இப்பாதையில் ஊரார் பார்த்துச் சிரிக்கும் ஒரு வேடிக்கை விசரி. இவளுக்கு என்ன நடந்தது. வேதனையோடு இவளைப் பார்ப்போரும் விரக்தியோடு இவளைப் பார்ப்போரும் இன்றும் இருக்கிறார்கள் தூசண விசரி இந்திரா எனச் சொல்வோரும் உளர்.

இந்திரா சந்திரா சுந்தரா என்று அடுத்தடுத்துப் பிறக்கிற பெண்பிள்ளைகளுக்கு இந்தக் கந்தப்பிள்ளை ஓசை இனிக்கப் பெயர் வைத்ததென்னவோ உண்மைதான் இத்தனை பெண் பிள்ளைகளுக்கு மத்தியிலே பெயர்ப் பொருத்தம் எவருக்குமே பொருந்தவில்லை.

நாங்களுந்தான் தமிழ்ப் பெயராய் வைக்க வேணும் என்போம் முதலெழுத்து “ட“ வரிசையென்றதும் டைசாயினி என்று வைத்த உலோகன் மகள் கிணற்றுக்குள் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டாள்.

பெயர்ப்பொருத்தம் இப்படி ஆகிவிட்டதோ “டை” என்ற ஆங்கிலமும் ”சா” என்ற மரணமும் ஒன்றித்துத் தற்கொலைக்குத் தூண்டியதோ என்னத்தைச் சொல்ல?

கடவுள் பெயரை வைப்பதாயின் பார்வதி, மீனாட்சி, லட்சுமி என்று வைத்துத் தொலைப்பதும் இங்கு வழக்கம்தானே. எந்தப் பெயரை எப்படி வைத்தாலும் பெயருக்கேற்ப மகாத்மா காந்தியாகவோ கருணாகரனாகவோ வாழ்ந்து போனவர்கள் மிகச்சிலரே.

அப்பு ஆச்சி வைத்த அழகான பெயர் மங்க ஒவ்வொருவரும் செய்யும் அடாவடித்தனத்தோடு கூடிய புதிய பெயர்களே. இன்று ஊரார் வாயில் ஒட்டிக் கொள்கின்றன.

தூசண மணி, காட்டான் கணபதி, திருட்டுச் சூரி, முழியன் சின்னான். இப்படிப் பல பெயர்கள் இவர்களை இனங்காணச் சந்தர்ப்பம் கண்டு சூட்டப்படுகின்றன.

இந்த இந்திராவுக்குத் தந்திரா என்ற பெயர்தான் பொருத்தம் என்போரும் தூசண இந்திரா என அழைப்பதும் தகுமே எனப் பலரும் கூவுவதும் சிலரின் வாயிலிருந்து பிறந்து எங்கள் காதுகளில் கேட்கிறது.

சண்டையொன்று வந்தால் நீதி நியாயம் பேசுவது இந்தச் சூழலில் நியாயமில்லைப் போலும். சண்டை பிறப்பதைத் தொடர்ந்து ஏசித் தாண்டவமாட இந்தக் கெட்ட வார்த்தைகளுக்குண்டாகும் மதிப்பு அதிகந்தான். அந்த

வார்த்தைகள் கொடுக்கும் அர்த்தங்களுக்கும் மேலாக எதிர்நிற்பவரை அவமானப்படுத்துவதில் அந்த வார்த்தைகளுக்கு வலிமை அதிகந்தான்.

இவளுடைய வாயிலிருந்து வாற தூசணத்தைக் கேட்க இயலாமல் பலரும் மௌனமாவது உண்மைதான்! இப்படி ஒரு பெண்ணா!? எடுத்ததற்கெல்லாம் சண்டை போடுவதும். தூசண வார்த்தைகளால் எதிராளியின் வாயை அடைத்துப் போடுவதிலும் இவள் மகா கெட்டிக்காரி.

தனது காணி வேலியை அடுத்த வீட்டான் வேலி எல்லையிலிருந்து அரக்கி, அரக்கி ஆக்கிரமித்தல் முதல் ஏமாந்திருக்கும் வேளை பார்த்து எதிர்வீட்டுக்காரன் தேங்காய், மாங்காய் எல்லாம் காரியமாகக் கண்மூடித் திறக்கு முன்னரே களவாடி விடுவாள். கேட்டால் பொய் சொல்வதோடு வாய்க்கு வந்தபடியெல்லாம் ஏசித் தீர்த்து விடுவாள்.

இவள் செய்வது களவென்றும் சொல்வது பொய்யென்றும் தெரிந்திருந்தாலும் ஊமையாகி விடுபவர்களோ அநேகர். அவளது ஒரேயொரு நீதி வாக்கியம் தூசணமே.

இன்று வந்து சிக்கிக் கொண்ட மரியாதையுள்ள மாஸ்ரருக்கு என்ன நடக்கிறது. தூசண வார்த்தைகளால் தொடரும் அர்ச்சனைகளால் அவர் அதிர்ந்து போனார். அப்படி இவளுக்கு மாஸ்ரர் என்ன தவறிழைத்தார்?

வேடிக்கை பார்க்க வந்தோர் இந்த அருமையான உத்தமமான மாஸ்ரர் அப்படி என்னதான் செய்தார்?! எல்லோருமே வாய் புதைத்து நிற்க அவள் ஏசுவதில் ஏதோ உண்மை இருக்கும் என்ற எண்ணம் சிலருக்கு மேலெழுந்தது

அப்படி என்ன நடந்தது?

பெண்பிள்ளையான இந்திராவைக் கட்டி அணைக்க எட்டிப் பிடித்தார் மாஸ்ரர் என்று. கதை சொன்னாள் இந்திரா. மாஸ்ரர் பெரிதாய் வாய் திறக்கும் வலிமையின்றி உடனேயே "ஐயையோ நான் ஒன்றும் செய்யவில்லை ஒன்றுமே செய்யவில்லை" என்ற வார்த்தைக்கு அப்பால் எதனையும் சொல்லும் திராணியற்றுத் தவித்தார். சற்றே பயந்தும் போனார்.

அவளோ அடங்குவதாக இல்லை. சிறு கூட்டம் கூடியே விட்டது. மாஸ்ரர் திகைத்து நிற்பது தெரிகிறது. தூசண இந்திரா தனது தூசண மந்திரத்தால் மாஸ்ரரைப் பேசுவதும் ஏசுவதும் இப்போது உயர்ந்தே தொனித்தது. கூடி நின்றோரில் சிலர் அவளின் வார்த்தையை நம்பவே செய்தனர்.

மாஸ்ரர் பல பள்ளிகளில் ஆசிரியராகப் படிப்பித்து இன்று ஓய்வு பெற்றிருந்தார் அத்துடன் அரசின் நற்பிரசையாகி ஊரார் மதிக்கும் தேசிய சமாதான நீதவான் பட்டத்தையும் பெற்றிருந்தார். இந்தச் சமாதான நீதவான் பட்டமே இன்று அவரை இந்திராவுக்கு எதிரியாக்கியது அவரிடத்தில் இருந்த உண்மையும் நேர்மையும் எந்த வேளையிலும் நீதி தவறாத அவரது செய்கைகளை என்றும் அலங்கரித்தே வந்தன.

மனைவியை என்றோ இழந்தவர் மறுமணம் செய்யாமல் ஒரேயொரு மகளை வளர்த்துப் படிப்பித்துக் கலியாணமும் செய்து கொடுத்துக் களிப்போடிருப்பவர். உடலின்பத்துக்காக என்றுமே தவறிழைத்ததாக அறியப்படாதவர்.

ஆனால் "உணர்வுகள் உள்ளவர்தானே தூசண இந்திராவைத் தொட்டிழுத்திருக்கலாம்" என்றும் சிலர் நம்பினார்கள். நீதியைப் பேசாது தூசணத்தையே பேசி ஊரார் சொத்துக்களைப் பிடுங்கி விற்றுத் தின்று வருபவள் இந்திரா.

அவளின் தூசண ஆராதனை அடங்க நெடுநேரமானது. அவள் இப்போது போய் விட்டாள் அவள் போன பின்னர்தான் அவளின் பொய் உறுதிக் கதையை மாஸ்ரர் சொன்னார்.

அவ்வாறு பொய் உறுதி எழுதிக் காணி விற்கத் துணிந்தவள் தூசண இந்திரா. அவளுக்குச் சமாதான நீதவானான மாஸ்ரர் சாட்சிக் கையொப்பமிட மறுத்த செய்தி இப்பொழுதுதான் வெளியே வந்தது.

இத்தனை துணிவாக மாஸ்ரர்மீது இத்தகைய பழியைப் போட இவள் ஏன் துணிந்தாள்? கடந்த கால அவலங்களால் ஊரை விட்டு நாடு கடந்தோர் பலரும் இங்கே திரும்பி வரப் போவதில்லை. அவர்களின் சொத்துகளுக்கு உரிமை கொண்டாடி அவற்றை விற்றுப் பணமாக்கும் தந்திரத்தை இவள் எங்கே எவ்வாறு கற்றுக் கொண்டாள்?

எல்லோரும் மூக்கிலே விரல் வைத்திருக்க இவளின் தந்திரம் இதுநாள்வரை வெற்றியை நோக்கியே விரைந்து பயணித்தது. இன்று உண்மைகள் இவளைக் காட்டிக் கொடுக்க வெளிச்சமானபோது இதுவரை ஒத்துழைத்த யாவருமே இவளை ஓரங்கட்டினர்.

மாஸ்ரர் இவளது பொய்யை மெய்யெனக் கூறும் சத்தியக் கூற்றுக்குச் சம்மதம் தெரிவித்து கையொப்பம் வைக்க மறுத்தார்.

ஆத்திரமுற்ற தூசண விசரி மாஸ்ரர் மீது அபாண்டமான பலாத்காரத் தந்திரத்தை முன் வைத்தபோது...? ஒரு சிலர் நம்பவே செய்தனர்.

இது நடந்து காலங்கள் பல ஆனபோதும் இவளின் இன்றைய நிலையில் இந்தச் சம்பவங்களும் இன்றைய இவளின் கோலத்திற்குக் காரணமாயினவோ?

இவள் பாவம்! எனினும் செய்பவை நீதியற்ற செயல் எனத் தெரிந்தும் நாடகமாடிய இந்திரா, தூசண விசரியாக உளப்பூர்வமாகப் பாதிப்புற்று இதோ இந்தப் பாதையிலேயே அடிக்கடி தோன்றுகிறாள். பாவம்..!

---

# மானுடனே உன் வாழ்விதுதானா?

– கவிஞர் **அகளங்கன்**

உயிர்வகை தனிலே நாமே உயர்வென
உவகை கொண்டிட்டாய்
அயர்வினை வென்று அகிலத்தை ஆட்டி
அனைத்தையும் வென்றிட்டாய்.
துயர்தனில் உலகைத் துடித்திட வீழ்த்தித்
துன்புறல் முறைதானோ?
பயிர்களும் உயிர்களும் பாழா கும்படி
போரிடல் அறிவாமோ?

மானுடனே உன் வாழ்விது தானா
மானுடம் இதுதானா?
ஊனுடம் பெடுத்த உயிர்வகை தனிலே
உயர்ந்தவன் நீதானா?
வானுடன் கடலும் வளம்மிகு மண்ணும்
வற்றாஅருவியும் சோலைகளும்
கானுடன் காற்றும் நஞ்சாய் மாறிடக்
காரணம் நீதானே!

அன்பினால் உலகை ஆக்குதல் விடுத்து
அழிவினைச் செய்கின்றாய்.
துன்பினால் உயிர்கள் துடித்திட நீயோ
சுடுகணை எறிகின்றாய்..
என்பினால் ஆன இவ்வுடல் நிலைக்குமா
இதுநீ அறியாயா?
நண்பினால் உலகை மாற்றிட முயல்வாய்
நாளைக்கு யார்இருப்போம்.

மொழியும் கடவுளும் மதமும் மார்க்கமும்
மொழிந்தவை நீமறந்தாய்
அழிவும் துன்பமும் அனைவரும் அடைய
ஆழ்ந்துநீ சிந்தித்தாய்
இழிவாய் இவைகள் உந்தன் அறிவினில்
இடித்திட விலையோசொல்
கழியும் நாட்களை வாழும் நாட்களாய்
கணப்பொழு தெண்ணிப்பார்.

அறிவால் உலகில் அமைதியைத் தந்து
அனைத்தையும் வாழவைப்பாய்
அறிவாள் யுகத்தை அனுமதிக் காது
அகிலத்தை வாழவைப்பாய்
செறிவாய்ப் பல்லுயிர் வாழும் உலகினைச்
சீராய் வாழவைப்பாய்
சிறிதோ பெரிதோ எல்லா உயிர்களும்
சிரித்தே மகிழவைப்பாய்.

உலகத்தை நீயா படைத்தாய் உன்னால்
ஒருயிர் தோன்றிடுமா?
கலகத்தை நீதான் வளர்த்தாய் உன்னால்
கவலைகள் உருவாச்சு!
பலகற்றும் ஏன்தான் அமைதியை நீயிப்
பாருக்குத் தரவில்லை.
உலகத்தை நிமிர்த்த உன்னால் முடியும்
உணர்வாய் மானுடனே!

இதுவா வாழ்க்கை இதுவா மானுடம்
இதுவா உயர்ந்தசெயல்
எதுவாய் இருப்பினும் பொதுவாய் வைத்து
எவரையும் வாழவைப்பாய்.
அது இது அவன் இவன்
பேதங்கள் தேவையில்லை
புதிதாய் உலகைப் போரின்றி ஆக்கப்
புறப்படு அறிவோடு.

ஒருதாய் மக்களாய் உலகோர் வாழ
ஒருவழி பிறக்கட்டும்
ஒருமன தாகக் கற்றோர் சேர்ந்து
உலகைத் திருத்தட்டும்.
வருவது இயற்கை அழிவது மட்டுமே
வேறிலை எனஆக்கு
கருவறை தொடங்கிக் கல்லறை வரைக்கும்
கருணையை நிலைநாட்டு.



# சித்தர் என்னும் சீர்திருத்தச் சிந்தனையாளர்கள்

– வாகரைவாணன்

**சி**த்தம் என்னும் சொல் மனதையும் குறிக்கும். இதன்படி சித்தர் என்போர் மனதைக் கவரும் மாண்புடையோராவார். புலன்களுக்குட்படாத புத்திஜீவிகளாக விளங்கிய இம்மகான்கள் கௌதம புத்தரின் வழித்தோன்றல்கள் என்று சொல்லக்கூடியவர்கள். சாதி சமயங்களுடன் சமர்புரிந்ததோடு கடவுள் தொடர்பான மூட நம்பிக்கைகளையும் முறியடித்தவர்கள். இவ்வறிவாளர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வாழ்ந்திருந்தாலும் கி.பி. 5ம் நூற்றாண்டில் வாழ்ந்த **திருமூலர்** என்னும் ஞானியையே தமிழ்ச் சித்தர் பரம்பரையின் முன்னோடியாக முன்னிறுத்துவர். “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்று முழங்கிய இப்பெருமகன் “என்னை நன்றாக இறைவன் படைத்தான் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே” என்று விளம்பி தனது தழிழ்ப்பற்றைத் தரணி எங்கும் வெளிப்படுத்தியவர், “அன்புதான் சிவம்” என்னும் விழுமிய கருத்தைக் கொண்ட அந்த அறிவாளனின் அருமையான பாடல் இது.

அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமானது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே!

திருமூலர் வழியில் தோற்றம் பெற்ற **சிவவாக்கியர்** என்னும் சித்தர் சிறந்ததொரு சிந்தனையாளர் புரட்சிகரமான கருத்துக் குவியலின் புலமையாளர். உருவ வழிபாடு, கோயில் வழிபாடு, மத, சாதிப்பற்று ஆகியவற்றை உத்வேகத்தோடு எதிர்த்தவர். உதாரணத்திற்கு ஒரு பாடல்.

கோயிலாவது ஏதடா? குளங்களாவது ஏதடா?
கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே
கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே
ஆவதும் அழிவதும் இல்லை, இல்லை, இல்லையே!

சித்தர்களில் பெரிதும் பேசப்படுபவர் **பட்டினத்தார்** என்னும் சிந்தனையாளராவார். ஆரம்பத்தில் பெரும் செல்வந்தராக விளங்கிய இப்பெருமகன் பின்பு அனைத்தையும் தூக்கி எறிந்துவிட்டுப் பிச்சைக்காரனாய்த் தெருத்தெருவாய்ச் சுற்றலானார். அப்போது அவர் மனத்தில் இருந்து

உருவான பாடல்கள் பல மானிட வாழ்க்கை எப்படிப்பட்டதென்பதைத் தெளிவுறத் தெரிவிக்கும். அப்பாடல்களில் ஒன்று இங்கு தரப்படுகின்றது.

அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே, விழியம் பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே, விம்மிவிம்மிஇரு
கைத்தலம் மேல்வைத்து அழும் மைந்தரும்
சுடுகாடுமட்டே
பற்றித்தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே

பட்டினத்தாரின் மேற்படிப் பாடலைக் ***கவியரசு கண்ணதாசன்*** மிகக் கவனமாகப் படித்து விட்டே

வீடுவரை உறவு வீதிவரை மனைவி
காடுவரை பிள்ளை கடைசிவரை யாரோ!

என்று அழகுற ஒரு பாடலைத் தீட்டலானார். அப்பாடல் ஒரு தமிழ்த் திரைப்படத்தில் இடம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

1872ஆம் ஆண்டில் யாழ் மாவட்டத்தின் மாவிட்டபுரத்தில் பிறந்தவர் என்று அறியப்படும் ***யோகசுவாமிகள்***. 'புதுமைகள்' புரிவதிலும் வல்லவர் என்பதை அவரது வாழ்க்கை வரலாற்று நூல் (யோக சுவாமிகள் - வாழ்க்கையும் வழிகாட்டுதலும்) எடுத்துச்சொல்லும்.

அத்தகைய பெரியவர் அருள்வளம் பெற்றமைக்கு அவரது குருவாகத் திகழ்ந்த நல்லூர் ***செல்லப்பா சுவாமிகள்*** ஏது ஆவார். இதனை அக்குருவின் சீடரான யோக சுவாமிகளின்

ஆசானைக்கண்டேன் அருந்தவர் வாழ்நல்லூரிற்
பேசாதன வெல்லாம் பேசினான் – கூசாமல்
நின்றேன் நீ யாரடா வென்றே யதட்டினான்
அன்றே யான் பெற்றே னருள்

எனும் வெண்பா புலப்படுத்தும்

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஒரு மாணவனாகக் கல்வி கற்று பின் அரசு பணியில் *(Minor Employment)* ஈடுபட்டு, வெகுவிரைவில் அதிலிருந்து விலகி முழுமையான ஒரு துறவியாக யாழ் கொழும்புத்துறையில் வாழ்ந்த சமயம் அனைவருக்கும் வழங்கிய அருள் வார்த்தைகள் - ***எப்பவோ முடிந்த காரியம்***, ***முழுதும் உண்மை***, ***ஒரு பொல்லாப்பும் இல்லை***, ***சும்மா இரு*** என்பவை மக்கள் மனதில் மங்காமல் இருக்கக் கூடியவை.

தமிழகத்தின் பல்வேறு காலப்பகுதிகளில் வாழ்ந்த சித்தர்களைப் பதினெண்மர் என்பது பழைய வழக்கு. ஏனெனில் எண்ணிக்கையில் இவர்கள் இதனைவிட அதிகமானவர்கள். நூற்றி நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு எட்டயபுரத்தில் பிறந்து வளர்ந்து ஆக முப்பத்தொன்பது (39) ஆண்டுகள் மட்டுமே ஒப்பற்ற கவிஞனாகவும் பின் எழுத்தாளனாகவும் சுதந்திரப் போராட்ட வீரனாகவும் வாழ்ந்து மறைந்த ***மகாகவி பாரதி*** தன்னையும் ஒரு சித்தனாகக் கருதி

எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தாரப்பா
யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்
(பாரதி அறுபத்தாறு)

என்று கூறுவான். மகாகவி பாரதி மட்டுமன்றி அவன் காலத்தில் வாழ்ந்த ***குள்ளச்சாமி கோவிந்த சாமி***, ***யாழ்ப்பாணத்துச்சாமி***, ***குவளைக்கண்ணன்*** முதலானோரும் சித்தர்களாகச் சிறப்புப் பெற்றவர்களே!

சித்தர்கள் தம் பாடுபொருளாகத் தத்துவத்தை மட்டுமன்றி மருத்துவம், யோகம், மந்திரம், இரசவாதம் என்பனவற்றையும் கொண்டிருந்தனர். தமிழ் மருத்துவக்கலை பிற்காலத்தில் சித்த மருத்துவம் என்னும் சிறப்புப் பெயர் பெற்றமைக்குச் சித்தர்கள் மருத்துவம் தொடர்பாகக் கொண்டிருந்த கூர்ந்த அறிவே காரணமாகும். தமிழ் இலக்கணத்தை ஓரளவு தட்டிக் கழித்துவிட்டு சித்தர்களால் பாடப்பட்ட பாடல்கள் நாட்டார் இலக்கியத்தைவிட நன்கு செழுமை பெற்றவை. பாமர மக்களை நோக்கமாகக் கொண்டு இவ்விலக்கியம் பாடப்பட்ட போதும் இதில் பயன்படுத்தப்பட்டுள்ள முப்பாழ், சாதிக்குதிரை, மாங்காய்ப் பால், தேங்காய்ப்பால் என்பவை குறியீட்டுச் சொற்களாகவே கொள்ளப் படுகின்றன. இது காரணமாகவே சித்தர் இலக்கியம் குறியீட்டு இலக்கியம் எனவும் கொள்ளப்படுகின்றது.

இவ்விலக்கியம் பற்றி டாக்டர். ச. மெய்யப்பன் எடுத்துரைக்கையில் கட்டற்ற வாழ்க்கையும், எல்லையற்ற நோக்கும், எடுத்தெறிந்து பேசும் இயல்பும் இகழ்ச்சி நோக்கும் சித்தர் பாடல்களில் ஒலிக்கின்றன. சித்தர் வாழ்க்கைத் தத்துவங்களின் வேரும் விதையும், ***மாணிக்கவாசகர்***, ***நம்மாழ்வார்*** பாடல்களில் காணக்கிடக்கின்றன. சித்தர்களின் மெய்ஞ்ஞானத்துவமும் விஞ்ஞான உணர்வும்

காலத்தை வென்ற கருத்தும் தமிழுக்கு அழகையும் வலிமையையும் வனப்பையும் தந்துள்ளதை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் என்பார். (சித்தர் பாடல்கள் - பக்கம் IV)

கி.பி. 6ம், 7ம் நூற்றாண்டுகளில் (ஆழ்வார்கள் காலத்தில்) சித்தர் என்னும் சீரிய சிந்தனையாளர்கள் தோற்றம் பெற்றனர் என்று அறிஞர்கள் சிலரால் சொல்லப்பட்டாலும் இச்சிந்தனைப் பரம்பரையின் ஒரு பெரும் சிகரமாகச் சித்தார்த்தர் என்னும் **கௌதம புத்தர்** திகழ்ந்தார் எனலாம். கடவுள் மறுப்பாளராகி அறிவுக்கும் சிந்தனைக்கும் முதலிடம் அளித்த இந்தப் புத்தர் என்னும் மகா புத்திசாலி நீண்ட நெடிய வரலாற்றை உடையவர்.

புத்தர் காலத்திற்குப் பின்பும் சித்தர் பரம்பரை வாழ்ந்தாலும் கி.பி. 14ம் நூற்றாண்டில் டில்லியைச் சேர்ந்த **மாலிக்கபூர்** என்னும் முஸ்லிம் படைத் தலைவன் தமிழ்நாட்டில் உருவாக்கிய மிக மோசமான சூழ்நிலையிலும் தமிழரிடையே தளர்ந்துபோன தமிழ் இலக்கியத்துறைக்குக் கைகொடுத்த பெருமை சித்தர்களையே சாரும்.

சிந்தனையாளர் என்னும் சொல் சித்தர் என்னும் சொல்லின் மறுவடிவமெனினும் "இரக்க உணர்வுமிக்கவர்கள்" என்ற பொருளையும் அச்சொல்லுக்குத் தமிழ் அகராதி தரும். இந்தப் பொருளே அவர்களை மற்றவர்களிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டும். உதாரணத்திற்கு அரச வம்சத்தைச் சேர்ந்த பத்திரகிரியார் என்பவர் புத்தர் பிரான் போன்று பிற்காலத்தில் சித்தர் வடிவம் எடுத்தது போல் பிற மதம் சார்ந்த ஒரு சிலரும் தமது சொத்துச் சுகங்களை முற்றாகத் துறந்து விட்டுத் துறவிகளானதை அறிகின்றோம்.

உண்மையான துறவறம் என்பது தன்னையே துறத்தலாகும். இந்தத் துறத்தலும் சித்தர் ஆனதும் ஒன்றுதான். இன்றைய உலகிலும் அத்தகைய தபசிகள் மூலை முடுக்குகளில் வாழவே செய்வார்கள். இதுவும் ஒருவகை 'வனவாசம்' தான். அத்தகையவர்கள் எந்த இனத்தவர், மதத்தவராக இருந்தாலும் அவர்களையும் சித்தராக நாம் போற்றலாம், வணங்கலாம்.

❍❍❍

# சிதைகின்ற கனவுகள்

மாதர் தம் கனவுகள்
சோலையாய் மலர்ந்திட
சிறகுகள் முளைத்து
விண்ணை சேர விழைந்திட

காற்றில் தான் பறக்குமோ?
கனவுகள் தம் வாழ்வாகுமோ?
கால்கள் நிலம் தொடுவதற்குள்
கனவுகள் தான் சிதறுமோ?

தோன்றியது ஒளியின் விழி
துணிவின் தீபமேற்றி
நிழல்களை நீக்கிடவே
நினைவுகள் மீண்டும் வாழ்ந்திடவே?

மூடிக் கொண்ட கதவுகளுக்குள்
ஒளிந்து கொண்ட கனவுகள்
காலத்தின் கொடூர கைகளில்
நொருங்கி விழுந்து போகின்றன.

கதிரவன் மறையும் முன்பே
காற்றில் கருகி உதிர்கின்றன
பெரிய பயணத்திற்குள்
சிறிய பாதைகள் முடிவது போல்
மாதர் தம் கனவுகள் சிதைகின்றன.

வார்த்தைகளால் ஓவியமிட்ட
வண்ணமய கனவுகள்
தீயிலே சாம்பலாகின்றன.
கடந்துபோன கனவுகளின்
சிதிலங்கள் சேகரித்து
நிழல் சிறகை விரிக்கின்றன.

அசைவற்ற செந்நெல்லாய்
அலைமோதும் கடலாய்
சிதையட்டும் கனவுகள்
மீண்டும் அவை மலரட்டும்.

**– கரவை மகள்**
**(பாலசுப்ரமணியம் கிருபாலினி)**
பேராதனைப் பல்கலைக்கழகம்

எனக்கு என்ன நடக்கின்றது என்பது எனக்கே தெரியாது. என்னைச் சுற்றிப் புத்தகங்கள் பறப்பது போலவும், என்னை நோக்கி வருவது போலவும் உணர்கிறேன். எங்கே போனாலும் என் அருகே ஒரு புத்தகக் கட்டு இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். கூடிக் கும்மாளம் இடுகின்ற மனிதர்களிடம் ஏதாவது நல்ல புதுமை இருக்கிறதா என்பதை தேடுகிறேன். நான் மட்டும் ஏன் இப்படி இருக்கின்றேன்? என்பது என்னுடைய அம்மாவின் கேள்வி. சுற்றிச்சுற்றி வருகின்ற அத்தனை கடதாசியும் எனக்குப் பல செய்திகளை கொண்டு வந்து சேர்ப்பது போல எனக்குப்படுகிறது. அருகே வருகின்ற ஒரு கடதாசியை எடுத்துப் பார்க்கின்றேன். அதில் ஆழமான அறிவியல் கருத்து ஒன்று இருக்கிறது. பேனாக்கள் மைகளை நிரப்பிய வண்ணமே இருக்கின்றன. கடதாசிகள் எழுத்துக்களை நிரப்பிய வண்ணமே இருக்கின்றன. புதிய புதிய கருத்துக்கள் என்று நான் தேடுபவை அத்தனையும் ஏற்கனவே வந்த கருத்துக்கள் போல எனக்கு தென்படுகின்றன. நான் ஏன் இப்படி இருக்கின்றேன்? எனக்குள்ளே நானும் பல தடவை கேட்டுக் கேட்டுப் பார்த்தாயிற்று. கண்களுக்கு மையிடுகின்ற காலத்தில் கண்களுக்கு எழுத்துக்களைத் துளிகளாக விடுகின்றேன்.

அம்மா அடிக்கடி கோயிலுக்கு போய் வருவார். அப்படி என்னதான் வேண்டிக் கேட்கின்றாரோ தெரியவில்லை. யாரோ ஒரு மனிதன் ஆகாயத்தில் இருந்து கொண்டு இவர்கள் எல்லாம் கேட்பது எல்லாம் கொடுத்துக்கொண்டு இருக்கின்றார் என்றுதான் இவர்களெல்லாம்



கௌசி
(ஜேர்மனி)

# வா நே யோ சி



சிறுகதை

நம்புகின்றார்கள். என்னைப் பொறுத்த அளவில் என்னுடைய மூளைதான் கடவுள். எனக்கு மூளை கடவுள்போல் உலகத்தில் பிறந்த அத்தனைக்கும் மூளைதான் கடவுள். கர்ணன் கவச குண்டலத்துடன் பிறந்தது போல நாங்கள் எல்லாம் மூளையான் என்னும் இயந்திரத்துடன் தான் பிறந்திருக்கின்றோம். அதுதான் என்னை வாழவைக்கின்றது. வழி நடத்துகின்றது. அதற்குத் தீனி போட வேண்டும் அல்லவா அது தான் நான் புத்தகங்களைத் தேடுகின்றேன்.

இரவு ஒரு மணி அம்மா கண்ணை விழித்து பார்க்கிறாள். படுக்கையறையில் வெளிச்சம். "இந்த லைட்டை ஆ∴ப் பண்ணாம படுத் திருக்கிறாள். எத்தனை தடவை சொன்னாலும் இவளுக்கு விளங்குவதாயில்லை" என்று கூறியபடி அம்மா என்னுடைய அறைக்குள் வந்தாள். நான் தூங்கவில்லை கையிலே புத்தகத்தை மிக ஆர்வமாக வாசித்துக் கொண் டிருந்தேன்.

"இன்னும் நீ படுக்கலையா? இப்படி நித்திரை முழிச்சு முழிச்சுப் படிச்சு படிச்சு M.A பரீட்சை பாஸ் ஆகியிருந்தாலும் பரவாயில்லை. என்ன செய்யப் போற. மற்ற பிள்ளைகளைப் பார். அது அது பாட்டு, டான்ஸ் என்று சுத்தித் தெரியுதுகள். நீ மட்டும் எந்த நேரமும் ஒரு மூலையில் இருந்தபடி புத்தகத்தோடு வாசிப்பு. வாசிப்பு.. வாசிப்பு"

என்று முணுமுணுத்தபடி அம்மா என் னுடைய புத்தகத்தைப் பறித்தாள்.

"விடுங்கள் அம்மா"

"இப்ப எத்தனை மணி புள்ள. நாளைக்கு வேலை இருக்குதல்லோ. அட இன்னும் இந்தப் புத்தகத்தைத் தானா கையில வைத்திருக்கிறாய்?"

"அம்மா போன போக்கில் பார்த்துட்டுப் போறதுக்கு இது என்ன கதைப் புத்தகமா? நல்லா ஆழமா இரண்டு மூன்று தடவை வாசித் தால் மட்டும்தான் மூளையில் இருக்கும். இது ஆய்வு சம்பந்தமான புத்தகம்."

"மூளையில் பதித்து என்ன செய்யப் போகி றாய்? நாலு பேருக்கு நீ சொன்னால் யார் கேட்கப் போகிறார்கள். அவரவர்க்கு அவரவர் வேலை."

"யாருக்கும் சொல்வதற்கு நான் படிக்க வில்லை நான் தெரிந்து கொள்வதற்குப் படிக் கிறேன் அம்மா"

"அதுதான் தெரிந்து வைத்து என்ன செய்யப் போகிறாய்?"

"உங்களுக்கு அதெல்லாம் விளங்காது"

"சரி.. சரி என்னென்றாலும் செய்" என்று கூறியபடி மீண்டும் வந்து படுக்கையில் படுத்து விட்டாள்.

"இவள் ஏன் இப்படி இருக்கிறாள். புத்தகத்தை தூக்கிக்கொண்டு புத்தகப் புழுவாக இருக்கிறாளே. இவளுடைய வயது பிள்ளைகள் எப்படி எல்லாம் தங்களுடைய பொழுதைக் கழிக்கின்றார்கள். கண்டதையும் படித்துப் படித்து அறிவுதான் வீங்கிப் போய்க் கிடக்கிறது.என்ர பிள்ளை அறிவாளி என்று சொன்னால் யார் கேட்கப் போகிறார்கள். பரிட்சையில் பாஸ் பண்ணி சான்றிதழ் எடுத்தால் மட்டும்தான் அவர்கள் அறிவாளி என்று நினைக்கிற சமு தாயம் ஆயிற்று. இவளுக்கு ஏன் இது இன்னும் விளங்குதில்லை" என்று சத்தமாகத் தனக்குத் தானே பேசியபடி அம்மா படுக்கை யில் விழுந்தாள்.

இப்போது என் கையில் இருப்பது காலம் என்னும் ஸ்டீபன் ஹாக்கிங் புத்தகம். ஒவ்வொரு பக்கங்களையும் மிக ஆழமாக இருட்டிலும் புத்தகத்தில் லைட் பூட்டி வாசிக்கின்றேன்.

இதை எடுத்து நான் ஒன்றும் விரிவுரை நடத்தப் போவதில்லை. ஆனால், என்னுடைய அறிவின் எல்லையை இந்த புத்தகங்கள்தான் தீர்மானிக்கும் என்று முழு நம்பிக்கை என்னிடம் இருந்தது. உழைப்புக்குத் தக்க ஊதியம் தருகின்ற ஒரு தொழிலை வைத்திருக்கின்றேன். நான் செய்கின்ற கணினித் தொழிலில் முன் னேற்றத்தை காண்கின்றேன். ஆனால் பல் கலைக்கழகத்தில் பட்டம் பெற வேண்டும் என்ற எண்ணமோ எனக்குத் தோன்றவில்லை.

அடுத்தவர்களுக்குச் சான்றிதழ் காட்ட வேண்டுமென்ற அவசியம் எனக்கு இல்லை. அன்றும் அப்படித்தான் வீட்டிலிருந்து கணினியில் வேலை பார்ப்பதனால் 5:00 மணிக்கு வேலை முடிந்தபின் கையிலே புத்தகத்தைத் தூக்கிக் கொண்டு வாசிகசாலையில் இருந்து அமைதி யாக புத்தகம் வாசிப்பதற்கு வீட்டை விட்டுக் கிளம்பினேன்.

கதவைத் திறந்து காற்று பேர்ல் வீதிக்கு வந்தேன். வெளியே வந்த என்னை, சித்தி சிவாஜினி அழுத கண்ணீருடன் எதிர்

கொண்டாள். என்னைக் கண்டதும் அவளுடைய அழுகை ஆர்ப்பாட்டமாகியது.

"ஏன் சித்தி அழுகின்றீர்கள்" என்று அவளை அணைத்துக்கொண்டு கேட்டேன். நான் கேட்டபோது அவளுடைய அழுகை மேலும் அதிகரிக்கின்றது. அவளை அழைத்துக் கொண்டு வீட்டுக்குள் உள்ளே வருகின்றேன். தன்னுடைய தங்கையினுடைய நிலைமையைக் கண்ட அம்மா "என்ன நடந்தது என்ன நடந்தது" என்று ஆர்ப்பரிக்கத் தொடங்கி விட்டாள்.

"அம்மா சித்திக்கு குடிக்கிறதுக்கு ஏதாவது கொண்டு வாங்க"

என்று கூறி அம்மாவை அனுப்பிவிட்டு சித்தியின் அருகே அமருகின்றேன்.

"சித்தி! முதலில் கண்ணை துடையுங்கள். அழுகையை நிப்பாட்டுங்கள். நீங்கள் என்ன விடயம் என்று சொன்னால்தான் எதையும் நாங்கள் செய்ய முடியும். இந்த உலகத்தில் முடியாதது என்று எதுவுமே இல்லை. நாம் முயற்சி செய்து பார்க்கின்ற போதுதான் எந்தப் பாரிய விடயத்தையும் சரி செய்ய முடியும். நீங்கள் சொல்லுங்கள் என்னால் முடிந்த எல்லாவற்றையும் உங்களுக்கு நான் செய்வேன்" என்று நான் கூறினேன்.

"கிருத்திகா! உனக்குத் தெரியும்தானே உன்னுடைய தங்கச்சி பிரியா கொஞ்ச நாளாக சுகவீனமாய் இருக்கின்றாள் என்ற விஷயம்"

"ஓம் அதுக்கென்ன சித்தி மருந்து எடுக்குறா தானே. காலையில் டாக்டர்கிட்ட போறதென்று சொன்னீங்களே! அதுக்கு என்ன சித்தி இப்ப?"

"டாக்டர் கைய விரிச்சிட்டார் மகள். இது என்ன வருத்தம் என்று அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லையாம்" என்று தொடர்ந்து கண்ணீர் விடத் தொடங்கினாள். தாய் பிள்ளை பாசம் என்பது விபரிக்க முடியாதது. இதற்கு விலங்கு, பறவை, பூச்சி, புழுக்கள் எதுவுமே விதிவிலக்கல்ல.

தேநீரைக் கொண்டு வந்து கொடுத்த அம்மாவும் சித்தியுடன் இணைந்து விட்டார்.

"கொஞ்சம் ரெண்டு பேரும் நிறுத்துறீங்களா?" சித்தி அழுகையை நிறுத்துங்கள். ரீயைக் குடியுங்கள். வாங்க முதல் வீட்டை போவோம். எனக்கு பிரியாவின் மருந்துகள், டாக்டர் தந்த *Prescription* விபரங்கள், எல்லா விஷயங்களை யும் எடுத்து என்னிடம் தாருங்கள்" என்றேன்.

தேநீரை அவசரமாக அருந்திவிட்டு என் பின்னே தொடர்ந்தாள் சித்தி. கையிலே மடிக் கணினியை எடுத்துக்கொண்டு விரைவாக வாகனத்தைச் சென்றடைந்தேன். சித்தியின் வலியை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. என் இதயத்துக்குள் படபட என்று அடித்துக் கொள்கிறது. ஆனால் அதை நான் வெளியில் காட்டவே இல்லை. என்ன செய்யலாம் என்ற சிந்தனை மட்டும் எனக்குள் ஓடியது.

வாகனத்திலிருந்து சித்தியை இறக்கி சித்தி யின் வீட்டுக்குள் நுழைந்த போது பிரியா கன்னங்கள் ஒட்டியவளாய் குழி விழுந்த கண்களுடன் மெலிந்த தேகத்துடன் கட்டிலில் படுத்திருப்பது தெரிந்தது. அவர்களுடைய வரவேற்பு அறைக் கதிரை கட்டிலாக மாறி இருந்தது. வழமையாக என்னை ஓடிவந்து கட்டியணைத்து "அக்கா..." என்று ஆசையோடு அழைக்கின்ற பிரியா கிழித்துப் போட்ட காகி தம் போல மெத்தையிலே கிடந்தாள். அவ ளருகே சென்று அவளுடைய தலையைத் தடவியபடி "நான் பார்த்துக் கொள்கிறேன் பிரியா" என்று அன்பாக அவளுக்கு ஒரு நம் பிக்கையை கொடுத்தேன். அறைக்குள் ஓடி சென்ற சித்தி கையில் சில பத்திரங்களையும், மாத்திரைகளையும் எடுத்துக்கொண்டு என் னருகே வந்தாள்.

மடிக்கணினியை திறந்தேன். *ChatGpt* க்கு மாத்திரைகள், மருத்துவரின் குறிப்புக்கள், பிரியாவின் உடல் நிலை, பற்றிய சகல விடயங்களையும் விபரமாக எழுதினேன். எழுதி அடுத்த நிமிடத்தில் படபட என்று பல குறிப்புகளும் செய்ய வேண்டிய முறைகளையும் மருந்துகளையும் *ChatGpt* எழுதிக் கொடுத்தது. அவை எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு அவசரமாக சித்தியை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றேன். அவசரமாக மருத்துவரை பார்க்க வேண்டும் என்று தகவல் கொடுத்தேன். காத்திருக்கும்படி முன் பக்கம் இருந்த பணியாளன் கூறினான்.

சில நிமிடங்கள் காப்பியை மிஷினில் இருந்து எடுத்து குடித்துக் கொண்டே காத்திருந்தேன். சித்தியோ பதட்டத்துடன் மூக்கு சிந்தியவாறு இருந்தார். சிறிது நேரத்தில் மருத்துவரின் அழைப்பிற்கேற்ப மருத்துவரின் முன்னே அமர்ந்தேன். டாக்டர். பிரெண்டாதான்

**ChatGPT க்கு மாத்திரைகள், மருத்துவரின் குறிப்புக்கள், பிரியாவின் உடல் நிலை, பற்றிய சகல விடயங்களையும் விபரமாக எழுதினேன். எழுதி அடுத்த நிமிடத்தில் படபட என்று பல குறிப்புகளும் செய்ய வேண்டிய முறைகளையும் மருந்துகளையும் ChatGPT எழுதிக் கொடுத்தது. அவை எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு அவசரமாக சித்தியை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றேன்.**



பிரியாவினுடைய மருத்துவர். டாக்டர் என்ற பெருமையோ கர்வமோ அவரிடம் இருந்ததில்லை. எமது இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் மருத்துவரை சந்திப்பது என்றால் உடனே அனுமதி கிடையாது. அவர்களிடம் எம்முடைய அபிப்பிராயங்களை தெரிவிக்கின்ற போது நீங்கள் என்ன டாக்டரா? என்று கேட்பார்கள். கையிலே கொடுத்த பத்திரங்களை பார்த்த டாக்டர் பிரெண்டா கண்களை உயர்த்தி மெல்லிய சிரிப்புடன் ஒரு முறை கிருத்திகாவைப் பார்த்தாள். "வாட் எ கிரேட்" என்று கிருத்திகாவைப் பார்த்துக் கூறியவாறு பிரியாவை மருத்துவமனையில் சேர்க்கும்படி உத்தரவு தந்தாள்.

பிரியாவினுடைய அம்மாவைப் பார்த்து "கிருத்திகா உங்களுக்குச் செய்திருப்பது சாதாரணமான விடயம் இல்லை. நாங்களே நினைத்துப் பார்க்காத ஒரு மருந்து மருத்துவத்தை எங்களுக்கு கிருத்திகா கொண்டு வந்து தந்திருக்கின்றாள். அவள் காட்டிய இந்த வழியிலே சாதகம் இருக்கின்றதா? பாதகம் இருக்கின்றதா என்பதை மருந்துகளை நான் கவனித்த போதும், பயிற்சிகளை நான் உற்று நோக்கிய போதும் உணர்ந்து கொண்டேன். எத்தனை படித்து பட்டம் பெற்றாலும் சொந்த அறிவு என்ற ஒன்று இருக்க வேண்டும். சந்தர்ப்பத்துக்கு ஏற்றது போல் மூளையைப் பயன்படுத்துகின்ற உத்தி தெரிந்திருக்க வேண்டும். அது எங்களால் முடியவில்லை கிருத்திகாவுக்கு முடிந்திருக்கின்றது. இந்த செயற்கை நுண்ணறிவு சில விடயங்களில் தப்பிதமாக இருந்தாலும் சில விடயங்களில் உயிருக்குக் கை கொடுக்கின்றது என்பதை இதன் மூலம் அறிந்து கொண்டேன். வெல்டன் கிருத்திகா என்று என்னைப் பாராட்டிய டாக்டர் பிரெண்டா, என்னையும் சித்தியையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டு பிரியாவினுடைய சிகிச்சைக்கு ஆயத்தங்கள் செய்வதற்காக எழுந்து சென்றாள்.

வெளியே வந்த சித்தி என்னைக் கட்டி அணைத்து முத்தம் கொடுத்து நன்றி பாராட்டினாள். "உன்னுடைய அம்மா கொடுத்து வைத்தவள். உன்னைப் போல ஒரு பிள்ளை பெற்றெடுப்பதற்குப் பாக்கியம் பெற்றவள். என்னதான் படித்துப் பட்டம் எடுத்தாலும், அடுத்தவர்களுக்காகத் தம்மை இழந்து உதவுகின்ற பக்குவமே மனிதர்களுக்குத் தேவை. அந்த விஷயத்தில் நீ கடவுள் மகள்" என்று கூறினாள்.

"சித்தி அன்புதான் இறக்கை போல உலகத்தைப் பாதுகாக்கும். அது காற்றைவிட அடுத்தவர்களில் வேகமாகப் பரவக்கூடியது" என்று கூறியவண்ணம் இருவருமாக வீட்டிற்கு சென்றோம். வாசலுக்கு ஓடி வந்த அம்மாவிடம்

சித்தியே முழு விடயங்களையும் மகிழ்ச்சி ததும்பக் கூறினாள். ஆச்சரியத்துடன் என்னைப் பார்த்த அம்மா மெல்லிய புன்சிரிப்புடன் “கெட்டிக்காரி” என்றாள்.

என்னுடைய வாசிகசாலைத் திட்டம் இன்று நிறைவேறாத காரணத்தாலே கட்டிலில் அமர்ந்து தலையணையை மடியிலே வைத்து அதன்மேல் *IPAD* ஐத் திறந்தேன். *Moon Reader Pro*வில் நான் சேகரித்து வைத்திருந்த புத்தகங்களில் கலீல் ஜிப்ரான் அவர்களின் தீர்க்கதரிசி என்னும் புத்தகத்தில் எழுதப்பட்டிருந்த வரிகள் முன்னே தென்பட்டன.

“நீங்கள் அன்பு கொண்டால் கடவுள் எம் உள்ளத்தில் இருக்கிறார் என்று கூறாதீர்கள். மாறாக இறைவன் உள்ளத்தில் நாங்கள் உள்ளோம் என்று கூறுங்கள். அன்பின் பாதையை வகுக்க நீங்கள் முயல வேண்டாம். உங்களை ஒரு பொருட்டாக அவ் அன்பு கருது மானால் அதுவே உங்கள் பாதையை வகுக்க வழி காட்டும்.”

வரிகளை எனக்குள் வசமாக்க அம்மா கதவைத் திறந்தாள்.

“உன்னோடு ஒரு நிமிடம் பேசலாமா?”

“அம்மா.. இது என்ன புதிதாக இருக்கிறது” என்று எழுந்து அம்மாவை இறுகக் கட்டி யணைத்தேன்.

“உனக்காக நான் திருமணத்துக்கு பையனை பார்க்க போவதில்லை. உனக்கு பிடித்தவனை உனக்குப் பிடித்தால் நீ திருமணம் செய்து கொள். இல்லையென்றால், அவனோடு வாழ்ந்து உனக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் வருகின்றபோது திருமணம் செய். வாழ்க்கை என்பது வாழ்வதற்குத்தான் அது அவரவர்க்கு எப்படி வாய்க்கின்றதோ அதன்படி வாழ வேண்டியதுதான். இது எங்கள் சமுதாயத்திற்கு பிடிக்காததாக இருந்தாலும், நாம் வாழுகின்ற சிறிது காலப்பகுதிக்குள் என்ன பெரிய சாதிக்க போகின்றோம். மற்றவர்கள் கூறுகின்ற வார்த்தைகளை என் காதுக்குள் போட்டு அதன் வலியை மனத்துக்குள் கொண்டு வந்து, நான் வாழுகின்ற இந்த கொஞ்சக் காலத்துக்குள் என் வாழ்க்கையை நான் அழிக்க விரும்பவில்லை. மகிழ்ச்சி என்பது அவரவர் மனநிலையைப் பொறுத்தது. அவர்களுடைய சுதந்திரத்திற்குள் நாங்கள் புகுந்து விளையாடக் கூடாது. திருமணம் என்பது ஜெனடிக் ஒப்பந்தம். இரண்டு பாலினருடைய மரபணுக்கள் கலந்து ஒரு ஆரோக்கியமான அடுத்த தலைமுறையை உருவாக்க சமுதாயம் ஏற்படுத்திய சடங்கு. ஆரோக்கியமான தலைமுறை உருவாக ஆரோக்கியமான இருவர் இணைய வேண்டும். அதை நான் உனக்குச் சொல்லித் தரத் தேவை இல்லை” என்று சொல்லியபடி எழுந்தாள்.

அம்மாக்கு என்ன நடந்தது? ஸ்தம்பித்து நின்றேன்.

❍❍❍




யாராகவும் இல்லை
யாருக்காகவுமில்லை
புல்லாகிப் பூண்டாகி
உடலம் தின்று செரிக்கும்
மயானம் ஆகி
பொய்யுரைத்த கவிதைக்கு
புகழ் வாங்கி
மெய்யுரைத்துச் சமூகத்தில்
புறந்தள்ளப்பட்ட சருகுமாகி
வழிகள் அடைத்து வலிகள் தருகின்ற
நெற்றிக்கண் பழுதடைந்த
கடவுளுமாகி....!
காலாவதிக் கணக்கெடுப்பில்
திணிக்கப்பட்ட வன்மத்திலிருந்து
உறவுகள் சார்ந்த உரிமையை
மீட்டெடுக்கிறது
கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டு.

**– கனகசபாபதி செல்வநேசன்**
**(அல்வாய்)**

சிறுகதை

# தகிக்கும் உணர்வுகள்





-கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்-

**ப**த்து நாட்களாக அவனிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை. இருந்துவிட்டு ஒருநாள் வந்து கொண்டிருந்த குறுந்தகவல்களும் இல்லை.

"என்னசரி பிரச்சினயோ தெரியா" ஒரு மனம் சொன்னது.

"என்ன பிரச்சினயன்? மனசிருந்தா தானே கோலெடுக்கியதுக்கு!" மறு மனம் சொன்னது. சோர்ந்து போய்க் கிடந்தது மனம்.

குர்ஆன் மதரஸா, பின்னேர வகுப்புகள் எதுவும் இல்லை என்பதனால் பிள்ளைகள் சுதந்திரமாக விளையாடிக் கொண்டிருந்தனர்.

பகல் சாப்பாட்டை முடித்துவிட்டு கொஞ்சம் தூங்க நினைத்துக் கட்டிலில் சாய முற்பட்ட போது டிங் என்ற சத்தம் கேட்டது. அரபிக் கடலோரத்தில் எடுக்கப்பட்ட ஒய்யாரமான அவனது செல்பி வட்ஸ்அப்புக்கு வந்திருந்தது. தவறித்தான் அனுப்பப்பட்டதோ வேண்டுமென்றே அனுப்பியதோ தெரியவில்லை, கழுத்தில் கை போட்டபடி அவளும் இருந்தாள் காது கழுத்து நிறைய நகைகள் மின்னின. சொப்பிங் போய்விட்டு வருகிறார்கள் போலும், கூடவே கையில் பென்னம்பெரு பொதியொன்றும்.

திருமணம் முடித்து இத்தனை வருடங்களாகியும் தான் அவனுடன் சேர்ந்து இப்படியொரு புகைப்படம் எடுக்காததை நினைக்க றிஸானா வுக்கு மனதெரிந்தது. முகநூலில் இது போன்ற அவனது ஜோடிப் புகைப்படமொன்று வைர லாகி வருவதாக, சில நாட்களுக்கு முன்னர் கேள்விப்பட்ட போது ஏற்பட்ட எரிச்சல் இன்னும் அதிகரித்தது.

படத்தை எப்படியோ கண்டுகொண்ட எட்டு வயது மகன் கேட்ட கேள்வி: "இது தாரன் உம்மா வாப்பாங்கூட பொம்பிளயொண்டு?"

ஏற்கனவே எல்லாம் தெரியும் என்பதனால் மூத்தவள் மௌனமாகக் கிடந்தாள்.

வைத்திருக்கவே மனது வரவில்லை. எப்போதாவது ஒருநாள் உதவக்கூடும் என்பதனால் ஸ்கிரீன் சொட் எடுத்துவிட்டு வட்ஸ்அப்பை அழித்துவிட்டாள்.

சிறிது நேரத்தில் அவன் ஐஎம்ஓ எடுத்திருந்தான். வழமை போலவே அளந்து பேசிவிட்டு, "அடுத்த கெழம நான் வரப் போற" என்றான்.

"ஹ்ம்"

"வார கெழம இந்த மட்டுக்கு அங்க"

அதற்கும்"ஹ்ம்".

"அந்த சிங்காரியேம் கூட்டிகொண்டு தானே வார. மறுக போகப் போறதும் அவளுங்கூட தானே" எனக் கேட்க வேண்டும் போலிருந்தது.

மேற்கொண்டு எதுவும் கதைக்காது போனை வைத்துவிட்டு தண்ணீர் அருந்திவிட்டு நேரே போய்க் கட்டிலில் சாய்ந்து கொண்டாள். இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் எல்லாம் திரைப்படம் போல் மனதில் விரியத் தொடங்கின.

❍

றிஸானாவுக்கும் அவனுக்கும் திருமணம் நடந்து சரியாக இருபது ஆண்டுகள். முதல் ஐந் தாண்டுகள் மட்டுமே மகிழ்ச்சியான வாழ்க்கை.

சமவயதுத் தோழியாகிய பஸ்னாவின் இருபதாண்டு "வெடிங் அனிவர்சரி"க்குச் சென்று வந்ததிலிருந்து அவளுக்கு மனதே சரியில்லை. நண்பிகள் பலரும் ஜோடியாக வந்திருந்தனர். இப்படியான நிகழ்வொன்றைத் தனது வாழ்நாளில் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத வெறுமை உணர்வு ஒருபுறம்...... "கொமரொண்டு ஊட்டிலிருச்சியத சாடேம் நெனச்சி பாக்கீல்ல" என்ற மனதை அரிக்கும் மனக்குறை மறுபுறம் ......

குளியலறை வசதியுடன் வீட்டை ஒழுங்குபடுத்திக் கட்டுவது, ஐந்து பிள்ளை களையும் வளர்த்தெடுப்பது, உயர்தரப் பரீட்சை முடிவடைந்ததும் மூத்த மகளுக்குப் பொருத்த மான ஒரு துணையைத் தேடிக் கொடுப்பது...... அவளைப் பொருத்தவரை உள்ளத்து மீற்றரில் அடிக்கடி ஓடிக் கொண்டிருப்பவை இவை.

"மாமட மகள போலயோ, அடுத்தூட்டு பௌஸானாவ போலயோ வாழ்க்கய நாசமாக்கி கொளாம வாரவண்ட மனசுக்கேத்தபடி அஜஸ்ட் பண்ணி வாழோணும்......" - விபரம் தெரிந்த நாள் முதல் தனக்குத் தானே வகுத்துக் கொண்ட இந்த வரையறையின்படியே வாழப் பழகி விட்டவள் அவள். இப்படியான நற் குணங்கள் நிறைந்து காணப்பட்டதனாலேயே அவளை அடையப் பலர் போட்டி போட்டதும், அந்தப் போட்டியில் அவன் வெற்றி பெற்றதும். எத்தனையோ பேரைத் தூதனுப்பி குடும்பத்தில் பலரையும் வளைத்துப் பிடித்து மணமுடித்தது வேறு கதை.

"றிஸானா, எத்தனயோ எடத்திலிருந்து வந்தும் எல்லாதேம் வீசீட்டு ஒங்கள முடிச்சதேம ஒங்கட தங்கமான கொணத்துக்கு தான்....." - பலமுறை அவனே இப்படி அவளிடம் கூறியும் இருக்கிறான்.

றிஸானாவும் இதுவரை அவனுக்கு எந்த விடயத்திலும் ஒருபோதும் குறை வைத்த தில்லை. சராசரிப் பெண்களை விடவும் ஒருபடி மேலானவள் அவள். அவன் எதிர்பார்க்கும் நேரமெல்லாம் ஒருமுறைக்குப் பலமுறை தன்னை அர்ப்பணிக்கத் தவற மாட்டாள். "இன்னமும் கொமரு மாதிரி" அவளைக் காண் போருக்கு இப்படியொரு எண்ணம் நிச்சயம் எழவே செய்யும். இந்த நாற்பது வயதிலும் பத்து வயதைக் குறைத்தே உடலமைப்பு காட்டும்.

நிம்மதியான மனதைக் குழம்பிப் போட்ட அந்த நாட்கள் இன்றும் நன்றாக ஞாபகம். அது பத்து வருடங்களுக்கு முன்னர் நடந்த சம்பவம். "என்தேண்டி ஓண்டாள் கலியாணம் முடிச்ச போறாமே", "திஹாரிக்கு மாப்பிள பெய்த்தாமே" உறவினர்களும் அறிமுகமானவர்களும் விசாரிக் கத் தொடங்கியதன் பின்னரே அவளுக்கு விஷயமே தெரிய வந்தது.

"குடும்பத்த நல்லா பாத்தா சரிதானே! ஆம்பிளக்கு நாலு முடிச்சேலும் தானே!" மாமி யாரே சொல்லிவிட்ட பின்பு ரஸானாவின் ஸ்ட்ரைக் எல்லாம் தோல்வியில்தான் முடி வடைந்தது. எல்லாமே அவனுக்கு வேண்டிய மாதிரியே நடந்துவிட்டன.

ஜித்தாவுக்குச் செல்ல இரண்டு வருடங்கள் இருக்கும் நிலையிலேயே இது நடந்தது. அதன் பின்னர் அவனில் எத்தனையோ மாற்றங்கள். சைக்கிள் மிதித்து பத்து நிமிடத்தில் வரக்கூடிய தூரத்தில் இருந்தும் வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டுமே றஸானாவோடு இருப்பான். காலப்போக்கில் அது கூடக் குறைந்துவிட்டது. முன்பெல்லாம் வீட்டில் கொட்டிக் கொட்டிக் கிடக்கும் பிள்ளைகளுக்கான நொறுக்குத் தீன் பண்டங்கள் வெகுவாகவே குறைந்துவிட்டன. பிள்ளைகள் முன்பு போல் வாப்பாவுடன் ஒட்டிக் கொள்வதுமில்லை. கதைப்பதை முற்றாகவே நிறுத்தி விட்டாள் மூத்தவள்.

கட்டிலில் சாய்ந்தவாறு பலதையும் யோசித் துக் கொண்டிருந்தவளுக்கு கடந்த கால வாழ்க்கை ஒரு கனவு போலிருந்தது. வேலைக் களைப்பினால் கொஞ்சம் தூங்க நினைத்தாலும்

**பிள்ளைகளின் படிப்புச் செலவு, சின்னப் பள்ளியின் மாதாந்த உண்டியல்...... இத்தியாதி செலவுகளை ஒருவேளை சாப்பாட்டைக் குறைத்தாவது ஒருவாறு சமாளித்துக் கொள்ளலாம். அவன் மூலமே தீர்த்துக் கொள்ள வேண்டிய அந்தத் தேவையை எப்படித் தீர்த்துக்கொள்வது?**



கடந்த கால நினைவுகளும் வெக்கையும் அதனைத் தடுத்தன. இயங்காத மின்விசிறியைத் திருத்துவதற்குக் கூட அனுப்பும் பணத்தை மிச்சம் பிடிக்க முடியாத நிலைமை.

திஹாரிக்காரி மூலம் ஜித்தாவில் அவனுக்கு இரண்டு பிள்ளைகள். அங்கு வேலை பார்க்கும் ஒருவர் மூலம், "புள்ள பகுத்துகாரியாம்" என்ற செய்தியும் கிடைத்தது. இந்த நிலையில் சாப் பாட்டுச் செலவு, டிபெண்டன் பீஸ், மற்றும் இன்னோரன்ன செலவுகளைக் காரணம் காட்டி அவனனுப்பும் பணம் படிப்படியாகக் குறைந்து கொண்டு வருவதை நினைக்க எரிச்சலாக இருந்தது.

இளைய மகன் காசு கேட்டு அடம்பிடித் துக் கொண்டிருந்தான். பம்பாய் மிட்டாய் வியாபாரியின் மணியோசை காதில் விழுந் திருக்க வேண்டும். சின்னப் பிள்ளைகள் உள்ள வீடுகளைக் கடந்து செல்கையில் கொஞ்சம் சத்தமாகவே மணியொலிப்பது வழக்கம். இன்னும் சிறிது நேரத்தில் கடலைக்காரர், ஐஸ்கிரீம்காரர் என வரிசையில் வந்து விடுவார்கள்.

மூத்தவள் மாத்திரம் இருந்த காலத்தில் பிள்ளைகளுக்காகக் கைவிரித்துச் செலவழித் தவள்தான் அவளும். வெளிநாட்டிலிருந்து வரும் காசு குறைந்துவிட்ட நிலையில், நாளாந்தச் செலவுகளுடன் மல்லுக் கட்டுவதே சவாலாக உள்ளது. பம்பாய் மிட்டாயில் கைவைத்தால் அதுஇதுவென மற்றப் பிள்ளைகளும் ஆரம் பித்து விடுவார்கள்.

வாப்பாமார் சவூதியிலென்றால் பிள்ளைகள் இங்கே பாதம், பிஸ்தா, சொக்கலட் என எதிர்பார்ப்பது வழக்கமே. இந்தப் பிள்ளைகளோ அதற்கு விதிவிலக்கானவர்கள். எல்லாவற் றுக்கும் உம்மாவையே நாடியிருக்கிறார்கள். தேவைகளைச் சொல்லி வாப்பாவுடன் மனம் திறந்து கதைக்கும் வாய்ப்பு குறைவு. திடீரென வரும் வெளிநாட்டு "கோல்" செக்கன் கணக்கோடு தொடர்பு அறுந்துவிடும்.

உம்மா வாப்பா கட்டித் தந்த வீடு பூச்சு வேலைகூடப் பூர்த்தியாகாத நிலையில். ஒரேயொரு அறை மகளின் தேவைகளுக்கு ஏற்றதாக இல்லை. குளியலறை அப்படி இப்படி. அங்குமிங்கும் கடன் வேறு. இவை ஒன்றைப் பற்றியும் ஒருநாளாவது அவன் மனம் திறந்து கதைக்காததை நினைத்துப் பார்க்கையில் பிரஷர் கூடுவது போலிருந்தது.

"புள்ளேம் வளரிய இன்னம் ரெண்டு மூணு வருஷதில கொமரு. இப்பிடியிருந்து சரி வாரில்ல, வெளிநாட்டுக்கு போனாதான் சரி......" - திஹாரிக்காரியைக் கட்டிக்கொண்ட கோபம் அடிமனதில் இருந்தாலும், குடும்ப

நிலைமைக்காகத் தனது நகைகள் சிலவற்றையும் விற்று கணவன் வெளிநாடு செல்லும் முடிவுக்குத் தான் உடன்பட்டதையும், சென்ற ஆறு மாதத்திலேயே அங்கவளை அழைத்துக் கொண்டதையும் நினைக்க, தான் ஏமாற்றப்பட்டது புரிந்தது. புகைப்படத்தில் அவளது கழுத்தில் மின்னிய நகைகளை எண்ணிப் பார்த்துத் தன் கழுத்தைத் தடவிக் கொண்டாள்.

இவை எல்லாவற்றை விடவும், இரண்டு வருடங்களாகத் தீண்டப்படாத அவள் மேனியில் ஏற்பட்ட அந்த உணர்வு...... சத்தமிட்டு அழ வேண்டும் போலிருந்தது. கேட்டுக் கேட்டு வந்த மாமா மகன் ரஸாக்கை மணமுடித்திருந்தால் ராணி மாதிரி வாழ்க்கை உல்லாசமாக அமைந்திருக்குமே என்ற எண்ணவோட்டமும் இயல்பாகவே எழுந்தது.

இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இலங்கையில் ஒரு மாதம், அதிலும் றிஸானாவுடன் ஒரு சில இரவுகள் மட்டும்....... தூங்காத இரவுகள்...... தாங்காத உணர்வுகள்.......

"எங்களேம் அங்கெடுத்து ஊடெடுத்து வெய்ங்கோ. கலியணம் புடிச்சிய உசிரோட வருஷகணக்கு இத்தா இருச்சியதுகில்ல. அவளும் போதாட்டி இன்னொத்திய முடிச்சி கொளேலும் ஒங்களுக்கு. நான் தாருங்கூட போகவன்....." ♥ அறையை மூடிவிட்டு வந்தவள் ஏங்கி ஏங்கி அழுதேவிட்டாள். இப்படி எத்தனையோ முறை வெட்கத்தை விட்டுச் சொல்லியும் இருக்கிறாள்.

தன் வகுப்புத் தோழிகள் தத்தம் கணவன்மாருடன் அடிக்கடி நுவரெலியா பண்டாரவளை என ரிப் போவதையும், வகுப்பு வட்ஸ்அப் குழுமத்தில் படங்களைப் பகிர்வதையும் நினைக்க மனதில் இனம்புரியாத வெறுமை உணர்வு றிஸானாவுக்கு ஏற்பட்டது.

"மோடச்சி, போகுடாத வெளிநாட்டுக்கு. அவளுங்கூட செபயா இருச்சியுண்டு அவனங்க. எழுதி வெச்சிக்கோ கொஞ்ஜம் கொஞ்ஜமா மறந்தே பெய்த்திடிய" வாழ்க்கையில் அடிபட்டு அனுபவப்பட்டு நொந்து போய்க் கிடக்கும் நஸ்ரினா அன்று சொன்னது காதில் வந்து ஒலிப்பது போலிருந்தது.

சிட்டுக்குருவிகள் இரண்டு ஓடிப்பிடித்து கொஞ்சிக் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தன. ஜன்னலிடுக்கினால் நீண்ட நேரமாக இதனை அவதானித்துக் கொண்டிருந்த றிஸானாவுக்கு சமூகம் மீதும் வெறுப்புணர்வு மேலிட்டது. உறவினர்கள், ஊரவர்கள், அயலவர்கள் எனப் பலரிருந்தும் தன்னைப் போன்றவர்களைப் பற்றி யாரும் சிந்திப்பதில்லையே என்பதை நினைக்கையில் இரட்டிப்பாகியது வெறுப்புணர்வு.

எட்டு வருடங்களாகியும் வெளிநாடு செல்வதற்காக விற்ற நகைகளை இதுவரை மீளவும் வாங்கித் தராததைச் சகித்துக் கொள்ளலாம். பிள்ளைகளின் படிப்புச் செலவு, சின்னப் பள்ளியின் மாதாந்த உண்டியல்...... இத்தியாதி செலவுகளை ஒருவேளை சாப்பாட்டைக் குறைத்தாவது ஒருவாறு சமாளித்துக் கொள்ளலாம். அவன் மூலமே தீர்த்துக் கொள்ள வேண்டிய அந்தத் தேவையை எப்படித் தீர்த்துக் கொள்வது?

❍

ஒரு மாத லீவில் நான்காவது முறையாக இலங்கைக்கு வந்தவன் இம்முறை வெறும் நான்கு நாட்கள் மட்டுமே றிஸானாவுடன் தங்கினான்.

மீண்டும் சவூதி திரும்ப வேண்டிய நாளும் வந்தது. "றிஸானா பெய்த்து வரவோ நான்?"

"போங்கோ போங்கோ என்துகன் வார? அங்கேம நில்லுங்கோ அவளுங்கூட. நீங்க அங்கக்கு பெய்த்து அவளுங்கூட. நான் இங்க.....?" - அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை.

அவனிடமிருந்து பதிலேதுமில்லை. மௌனம் அவளது எரிச்சலை இன்னும் கிளறியிருக்க வேண்டும்!

"போங்கோ, பெய்த்து நல்லா இரீங்கோ அங்கொரு ஆளிருச்சியெலீன், ரெண்டு வருஷத்துக்கொருக்க சும்ம பேருக்கு வராம போங்கோ போங்கோ ......"

வெளியேறிக் கொண்டிருக்கும் வாப்பாவை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் பிள்ளைகள்.

❍❍❍

சிறுகதை



# வெள்ளந்தி

அந்திமாலையின் சூரிய கிரணங்கள் மறையும் நேரம் வானத்தில் பறந்து கொண்டிருந்த கரிச்சான் குருவிகளும் மரங்களில் தங்களின் கூடுகளைத் தேடிப் போகும் பறவையினங்களின் ஒலிகளும் காதுகளில் ரீங்காரமிட்டன. தன்னை மறந்து பின்புறக் கொல்லையில் வந்து இயற்கையை ரசித்துக் கொண்டிருந்த மதுவந்திக்கு, மாலையில் வீசிய தென்றல் காற்றும் சேர்ந்து மனதை மயக்கியது. அந்திமந்தாரைப் பூக்களின் மணமும் அடுக்கு மல்லியின் நறுமணமும் மூக்கைத் துளைத்தன.

மதுவந்தி படித்து முடித்து நல்ல கம்பெனியில் கைநிறையச் சம்பாதிக்கிறாள். படிப்பில் சாதித்து முடித்தவளுக்கு மனித மனங்களைப் படிப்பது சற்று சிரமமாகத்தான் இருந்தது. அதுவும் தன்னுடன் வேலை பார்க்கும் பரமேஸ்வரி அக்காவைப் புரிந்து கொள்வது சற்றுச் சிரமம்தான். அவளிடம் மிகவும் அன்பாகப் பழகும் அவர், திடீரென மூஞ்சியைத் தூக்கி வைத்துக் கொண்டு எரிந்து விழுவார். பின்பு ஒரு வாரத்திற்கு ஏன் என்றே காரணம் தெரியாது. என்னவென்று கேட்டால் ஒண்ணுக்கும் உதவாத காரணத்தைச் சொல்வார்.அந்த நேரம் அவளுக்குப் ப்ரமோசன் வந்து சம்பளம் ஏறியிருக்கும்.

சுந்தரிமணியன்
(புதூர் - இந்தியா)



மற்ற நேரங்களில் வீட்டில் சமைத்த உணவுகளைக் கொண்டு வந்து தருவதும் மாலையில் வடையும் டீயும் வாங்கித் தருவதும் என பணத்தைத் தண்ணியாகச் செலவழிப்பாள். வேண்டாம் என்று மதுவந்தி தடுத்தாலும் விடுவதில்லை. சாப்பிடு, சாப்பிடு என்று தாங்குவார். இது என்ன மாதிரிப் பாசம் என்பதை மதுவந்தியால் புரிந்து கொள்ள முடிவதில்லை. அவரது வேலைகளில் கடினம் என்று நினைப்பதை எல்லாம் அவளிடம் தந்து,

“மது இதைக் கொஞ்சம் செய்து தறியா? எனக்குக் கொஞ்சம் பிடிபட மாட்டேங்குது”

“சரிக்கா. கொண்டாங்க முடிப்போம்” என்று உடனே செய்து கொடுப்பாள் மதுவந்தி. அவள் செய்து முடித்தவுடன் உடனே ஏதாவது வாங்கித் தருவார். வேண்டாம் என்று எவ்வளவு தடுத்தாலும் விடுவதில்லை. மது ஓரிரு சமயங்களில் இவர் வாங்கிக் கொடுப்பதற்காக வேலை பார்ப்பது போல் தோன்ற தவிர்க்கப் பார்ப்பாள். இது அவளுக்குள் குற்ற உணர்வைக் கொடுக்கும். இன்னொன்று எதற்கெடுத்தாலும் எம்.டியைப் பார்த்தால் மிகவும்

குனிந்து அவர் சொன்னதையெல்லாம் ஏற்கும் குணமும் அவருக்குத் தேவைப்படுவதை வாங்கிக் கொடுப்பதிலும் பரமேஸ்வரி அக்கா கில்லாடிதான். எம்.டி இதற்கெல்லாம் மசிகின்ற ரகமில்லை என்பதால் மறுத்துவிடுவார். இதைப் போன்ற பலவற்றில் மகிழ்கின்ற யார் மாட்டினாலும் அவர்களைத் தக்க விதத்தில் கவனித்து தனக்கான பிரமோசனையோ, தனது மகனுக்கு வேலையும் வாங்கித் தருவதில் மும்முரமாய் இருப்பாள் பரமேஸ்வரி.

ஆனால் யார் புதிதாக ஆபிஸிற்கு வந்தாலும் அவர்கள் மேல் அவர் காட்டும் அன்பும் கரிசனமும்,

"பரமேஸ்வரி அக்கா ரொம்ப வெள்ளந்தியா இருக்காங்களே" என்பர். ஆமாம் பரமேஸ்வரி அக்கா உண்மையில் பாவம்தான். அதனால்தான் இருபத்தெட்டு வயதில் தனது குடிகாரக் கணவனைப் பறிகொடுத்துவிட்டு கையில் சின்னக்குழந்தையுடன் தாயின் வீட்டிற்கு வந்தவர் என்பதும், பின்பு டைப் படித்து, ஒரு வழியாக வேலையில் அமர்ந்தவர் என்பதும் அவர் வாயால் கேட்கும்போது பாவமாகத்தான் இருக்கும். இருபத்தெட்டு வயதில் கணவனைப் பறிகொடுப்பது எவ்வளவு கொடுமை என்று நினைத்துக் கொள்வாள் மதுவந்தி. காலம் போகப் போக அவர் மிகவும் சமர்த்தர்தான் இல்லாவிட்டால் மேலதிகாரிகளை காக்கா பிடித்து மகனுக்குத் தனது கம்பெனியிலேயே நல்ல வேலையும் வாங்கிக் கொடுத்திருப்பாரா என்று நினைத்தாள் மது.

ஆனால் கம்பெனியில் யாருக்குப் ப்ரமோசன் வந்தாலும் உயர்வு வந்தாலும் அவருக்குக் கிறுக்குப் பிடித்துவிடும். எவ்வளவு நட்பான தோழிகளாக இருந்தாலும் அவரின் வெறுப்பும் அவ்வப்போது வெளிப்பட ஆரம்பிக்கும். நிறைய நகை போட்டு, நல்ல சேலைகட்டி, அவரின் கீழ் உள்ளவர்கள் வந்தால் அவருக்கு இருப்புக் கொள்ளாது. ஏதாவது ஒரு வழியில் அவர்களுக்குத் தீங்கு செய்வதும், உச்சகட்டமாக கரித்துக் கொட்டுவதும் அவரின் வழக்கமாகிப் போனது.

அன்றொரு நாள் மதுவந்தி தனது அத்தை மகளின் திருமணத்திற்குச் சென்றுவிட்டு அப்படியே ஆபிஸ் வந்தவளைப் பார்த்த பரமேஸ்வரி,

"மது என்ன இன்னைக்கு ரொம்ப அழகாயிருக்க. உனக்கு இந்த சேலை நல்லாயிருக்குப்பா. இங்க வா நகையைப் பார்ப்போம்" என்றார். பக்கத்தில் வந்து நின்ற மதுவந்தியின் கழுத்தில் இருந்த ஆரத்தைத் தொட்டுப் பார்த்தவர்,

"இது எத்தனை பவுன்?" என்று கேட்க,

"ஏழு பவுன்கா" என்ற பதிலில் பொறாமை கொண்டு,

"ம். நல்லாருக்கு" என்றார். மறுநாள் மதுவந்திக்கு உடல்நிலை சரியில்லாமல் ஆபிசே வரமுடியாமல் போனது. மதுவந்தியின் தோழி நிலா சொன்னாள் ,

"இந்த பரமேஸ்வரி அக்கா கண்ணு வச்சுடுச்சுன்னு நினைக்கிறேன். அவங்க ஏதாவது வியந்து சொன்னாலே முடியாமப் போயிடுது. நீ சொன்னால் கிண்டல் பண்ணுவ. அவங்க மனதின் பொறாமை அப்படீ" என்றாள்.

"போடீ அதெல்லாம் ஒண்ணுமில்ல. திருமண வீட்டில் சாப்பிட்டது ஒத்துக்காம போயிருக்கும்" என்றாள் மதுவந்தி.

இப்படிப் பலமுறை நடந்த செயல்களால் ஆபிஸில் பலரும் பலவாறு பேசிக்கொண்டனர். ஆனால் மனித மனங்களின் தேவையில்லாத எண்ணங்கள் தான் இப்படியெல்லாம் எண்ண வைக்கிறதோ என்று நினைத்தாள் மதுவந்தி. இன்னொன்று வாழவேண்டிய வயதில் வாழமுடியாமல் போனதால்தான் மற்றவர்களின் மகிழ்ச்சியைப் பரமேஸ்வரி அக்காவால் தாங்கிக் கொள்ளமுடியவில்லையோ என்று கூடத் தோன்றியது.

அன்றொரு நாள் கம்பெனியில் ஆடிட்டிங் நடந்து கொண்டிருந்தது. எம்.டி மதுவந்தியைக் கூப்பிட்டு ஒரு பைலை எடுத்துவரச் சொன்னார். மது தனது டேபிளுக்குச் சென்று பைலைத் தேடி எடுத்து வைத்துவிட்டு, டீ குடிப்பதற்காக கேண்டீனுக்குச் சென்றாள். டீ குடித்து விட்டு வந்து பார்த்தால் டேபிளில் இருந்த பைல் காணாமல் போய்விட்டிருந்தது. எவ்வளவு தேடியும் பைல் கிடைக்கவில்லை. மதுவந்திக்குக் கண்கள் கலங்க ஆரம்பித்திருந்தது. எம்.டி ஐந்து மணிக்கு வந்து கேட்டால் என்ன பதில் சொல்வது? திட்டுவாரே என மனம் பலவாறு சிந்தித்தது.

ஆபிசில் ஒவ்வொருவரிடமும் தனித் தனியாகச் சென்று கேட்டாள். ஒருவரும் எனக்குத் தெரியாது, நான் பார்க்கவில்லை எனச் சொல்ல, பரமேஸ்வரி அக்காவிடமும் மது போய்க் கேட்க, "எனக்குத் தெரியாதும்மா" என்றார்.



இருந்த பீரோவைத் திறந்தாள். பைல்கள் எல்லாம் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்க, ஒவ்வொரு பைலாக எடுத்துப் பார்த்தவள். பைல்களுக்கு இடையில் சொருகப்பட்டிருந்த ஒரு பைலை எடுத்துப் பார்த்த வள் அதிர்ந்தாள். அதுதான் எடுத்துவைத்திருந்த அதே பைல்தான். அதை எடுத்து தனது பீரோவில் வைத்தவள்,

"அண்ணா பரமேஸ்வரி அக்காட்ட அவங்க பீரோவில் பைல் எடுத்தத சொல்லாதீங்க. கேட்டா எனக்குத் தெரியாதுண்ணு சொல்லுங்க. நான் பார்த்துக்கறேன்" என்றாள். ராமசாமியும் ஆமோதிக்க, எழுந்து நிம்மதியாக வீட்டுக்குக் கிளம்பினாள்.

பரமேஸ்வரி அக்கா ஏன் இப்படி செய் தாங்க? என்று யோசித்துக் கொண்டே வீட் டிற்கு வந்திருந்தாள் மதுவந்தி. மறுநாள் ஏதேச்சையாகக் கேட்பதுபோல் பரமேஸ் வரியிடம் சென்று,

"அக்கா. நேத்து உங்க பீரோல்லதான் பைல் இருந்தது. எப்படிக்கா? நீங்க எடுத்தீங்களா?" என்ற மதுவந்தியைப் பார்த்து,

"டேய் என்னடா இப்படீ சொல்லிட்ட. நான் போய் பைல எடுப்பனா? சத்தியமா நான் எடுக்கல. யார் எடுத்து வச்சாங்கன்னும் தெரியல. எனக்கென்னமோ நம்ம ரெண்டு பேரும் பழகறதப் பார்த்து சண்டை மூட்டிவிடனும்னு யாரோ செஞ்ச வேலையா இருக்குமோ?"

என்று ஒன்றுமறியாத அப்பாவியாய் முகத்தை வைத்துக்கொண்டாள் பரமேஸ்வரி. மதுவந்திக்கு அவளைத் திட்டுவதா, உண்மை யில் அவர் சொல்வதுபோல் மற்றவர்கள் செய்திருக்கலாமோ என நொடிப் பொழுது யோசித்தவள், ச்சே இருக்காது, இந்த அக்காதான் மாட்டக்கூடாது என்பதற்காகப் பொய் சொல்லுகிறாள் என்பது மட்டும் புரிய வெள்ளந்தியாக நடித்த பரமேஸ்வரி அக்கா வின் நிஜரூபம் கொடூரமாக விசுவரூபம் எடுப்பதுபோல் மதுவந்திக்குத் தோன்றியது.

ஐந்து மணிக்கு ஆபிசிற்கு வந்த எம்.டி மதுவைக் கூப்பிட்டனுப்ப,

"சார் பைல டேபிளில் வைத்திருந்தேன் காணல. யார் எடுத்தாங்கன்னும் தெரியல. காலைல எப்படியாவது எடுத்துத்தரேன் சார்" என்றாள். உடனே முகம் மாறிய எம்.டி,

"இது உங்களோட பொறுப்பற்ற தன்மையக் காட்டுது மது. ஒரு பைல உங்களால பத்திரமா வச்சுக்க முடியல. நீங்களெல்லாம் என்ன வேலை செய்யறீங்க" என்று கத்த, கையைப் பிசைந்து நின்று கொண்டு கலங்கிய மதுவந்தியை,

"போங்க. நாளைக்காவது பாத்து எடுத்துட்டு வாங்க" என்றார். எம்.டி அறையை விட்டு வெளியே வந்த மதுவந்தி கலங்கிய மனதுடன் தனது இருப்பிடம் நகர்ந்தாள். ஆபிசில் உள்ள அனைவரும் ஒவ்வொருவராக விடைபெற ஆரம்பித்தனர். இந்த பைல் அப்படி எங்கதான் போயிருக்கும்? யாரோ வேணும்னு எடுத்து வச்சிருப்பாங்களோ, அல்லது பழிவாங்கும் விதமா அப்படிப் பண்ணிருப்பாங்களோ? எனப் பலவாறாக சிந்தனைகள் திக்குத் தெரியாமல் ஓடின.

எதுக்கும் ஆபிசில் இருந்த பியூன் ராமசாமி யைக் கேட்போம் என்று நினைத்த மது,

"அண்ணா. நான் கேண்டின் போகும்போது என் சீட்டுக்கு யாராவது வந்தாங்களா? நீங்க எதுவும் பாத்தீங்களா?" என்றாள்.

"ஆமாம்மா. நீங்க கேண்டின் போனப்ப யாரும் சீட்ல இல்ல. பரமேஸ்வரி மேடம் மட்டும் உங்க சீட்டுக்கு வந்தாங்க" என்றான். உடனே தன்னையும் அறியாமல் வியந்து போன மது, அவசரமாக பரமேஸ்வரி அக்கா வின் டேபிளுக்குச் சென்று பக்கத்தில்

❍❍❍




# புரியாமை

**வெ**ளிநாட்டிலிருந்து ஒரு மாடு தானமாகக் கொடுக்கச் சொல்லி தன்னிடம் தனக்குத் தெரிந்த தன் உறவினர் யாரோ சொன்னதாக அருந்தவண்ணன் என்னிடம் கூற... நான் சிதம்பரபுரத்தில் இருக்கிற வேணி தன்னிடம் விக்கிறதுக்கு மாடுகள் இருக்குமென்று அன்றொரு நாள் சொன்னவள் எதற்கும் அவளிடம் கேட்போமெனக் கூறினேன்.

நாள் காணாது இன்றே போய்க் கேட்டிட்டு... இல்லையென்றால் வேறு யாரிடமாவது கேட்டு வாற திங்கள் கிழமை தகப்பனாரின் நினைவு தினமாம் அன்று கொடுக்கச் சொல்லி காசு ஒரு லச்சம் அனுப்பியுள்ளதாகவும் அவசரப் படுத்தினார்.

சரி வாங்கோ எனக்கு வீடு தெரியுமாம் கூட்டிக்கொண்டு வேணி வீட்டுக்குச் சிதம்பர புரத்துக்குப் போனோம்.

சொல்லாமல் கொள்ளாமல் போன போதும் நல்ல வேளையாக வேணி வீட்டில் நின்றாள்.

அவள் எப்ப பார்த்தாலும் ஒரே மோட்டச் சைக்கிள் ஓட்டந்தான் அவளுக்கு...



ந. பார்த்தீபன்
(வவுனியா)

ஒருவேளை சிதம்பர புரத்தில் குறைந்த விலைக்கு வாங்கி விற்கிறார்...? என நான், எண்ணியதுமுண்டு.

ஏனெனில் சிதம்பர புரம் எங்கள் வீட்டிலிருந்து பதினைந்து கிலோ மீற்றர் தூர மிருக்கும்.

இன்று எங்கள் வீட்டுக்குத் தந்தால் நாளை பக்கத்து வீட்டுச் சூர்யாவுக்கு, அடுத்த நாள் முன் வீட்டுப் பிரியாவுக்கு அல்லது எங்கள் ஒழுங்கையிலுள்ள சுபாவுக்கோ கலையரசிக்கோ...

அதனால் நான் அவளைக் காணும் போதெல்லாம் றேசோட்டக்காரி போல ஒரே மோட்டச் சைக்கிள் ஓட்டந்தான். ஒருநாள் வாணி என்ன ஒரே இந்தப் பக்கம்... என்று கேட்டேன்.

அதண்ணை... என்ரை ரெண்டு பொடியங்களும் இங்கைதான் ரியூசனுக்கு வாறவங்கள். அவங்களை மாறி மாறி மோட்டச் சைக்கிளில இறக்கி ஏத்திற வேலையால... என்று கூறுகிறாள்.

பிள்ளையள் எங்கெங்கே ரியூசன் படிக்கிறாங்க...? அவள் மாறி மாறி ஏத்தி இறக்குகிறேன் எனச் சொல்வதில் ஒரு சலிப்பும் களைப்பும் தெரிந்ததால் நான் கேட்கிறேன்.

மூத்தவன் இந்த முறை ஓ.எல் எடுக்கப் போகிறான். அதால சயன்ஸுக்கு அகிலன் சேரட்டும் மட்சுக்கு பாமா ரீச்ரிட்டையும் கொமர்ஸுக்கு மேகலா ரீச்சரிட்டையும் இங்கிலீசுக்கு விமல்ராஜ் சேரிட்டையும்...

பிறகு கொஞ்சம் யோசிக்கிறாள்.

இளையவன் இப்பதான் ஒன்பது. அவனும் என்று லிஸ்ற்றை ஒப்படைக்க முன்...

உங்கடை வீடு சிதம்பரபுரத்தில். அங்கேயிருந்து ஒவ்வொரு நாளும்...

ஓ என்னண்ணை செய்யிறது...? பிள்ளைகளுக்குப் படிப்பு முக்கியமல்லோ...? என்று கூறிப் பெருமிதமாக என்னைப் பார்க்கிறாள்.

அவர்கள் எந்தப் பாடசாலையில் படிக்கிறார்கள்?

வவுனியா மத்திய மகா வித்தியாலயத்தில

நீங்க இருப்பது சிதம்பரபுரம். அங்கை சிதம்பரபுரம் சிறி நாகராஜா தமிழ் வித்தியாலயம் இருக்கு... இங்கால பெரிய காமராசர் மகா வித்தியாலயம் இருக்கு. அடுத்து சமயங்குளம் வித்தியாலயம், பிறகு கோவில் குளம் இந்துக் கல்லூரி... இவ்வளத்தையும் கடந்து வவுனியா மகா வித்தியாலயம்...? கிட்டத்தட்ட பதினைந்து கிலோ மீற்றர் தாண்டி.. ஏன் வவுனியா மத்திய மகா வித்தியாலயத்துக்கு...?

அண்ணை அங்கை படிப்பு நல்லது...?

அப்ப படிப்பு நல்லதென்று சொன்னால் பிறகேன் இவ்வளவு ரியூசன்...?

வாணி என்னை ஆச்சரியமாகப் பார்க்கிறாள்.

இல்லைப் பிள்ளை... இப்ப நீங்க உங்கடை வீட்டுக்குக்கிட்ட உள்ள சிதம்பரபுரம் தமிழ் வித்தியாலயத்திலோ இல்லை கோமராசன் குளம் மகா வித்தியாலயத்தில் சேர்த்துப் போட்டு... அவை கிராமப்புறம், படிப்புக் காணாது என்று சொல்லி ரியூசனுக்கு விட்டா... அதிலொரு நியாயமிருக்கு... இது படிப்புத் திறமென்று ரவுணுக்குள்ளை இருக்கிற வவுனியா மத்திய மகா வித்தியாலயத்தில் சேர்த்துப் போட்டு...பிறகேன் உவ்வளவு ரியூசன்கள்...?

வாதிக்கு நான் கேட்பது விளங்குவது போலவும் விளங்காதது போலவும் இருக்கிறது.

அவளுக்கு விளங்காவிட்டால் பரவாயில்லை. ஆனால் ஏனிந்த ஆசிரியர்களுக்கு விளங்கவில்லை என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

உங்களுக்கேதும் புரிகிறதா...?

❍❍❍

# மேலிருந்து வரும் மினுமினுக்கள்

காலமானது சிறைப்பிடிக்கமுடியாததொரு எதிரி
அக்கறையற்று இருப்பதே
நீங்கள் ஓய்வாக இருக்க மிகச் சிறப்பானது
அக்கறையற்ற நிலை
உங்களிடம்
அருமையான கனவுகளைக்
கொண்டு வருகிறது

அந்த வார்த்தையே
உண்மையென நான் நம்பினேன்
ஆனால் அது
உண்மையில்லை
அதுவே சுற்றி நிற்கும் பாதை
அது சுற்றிச்சுற்றி வந்தது
அழிவுக்கு அது இட்டுச் சென்றது

வருடக்கணக்காகப்பாலை
வனங்களையும்
காடுகளையும்
நான் கடந்து சென்றேன்
நம்பிக்கைகளைக் கொன்றும்பூரண
ஐயப்பாடுகளோடும் அச்சங்களோடும்

உள்ளத்தில் குடியிருந்த
பொய்மைகளை அடித்துத்துரத்தி
மேலே வானத்தில் இருந்து
நட்சத்திரங்கள்
பூரண ஒளியுடன் மின்னின
அந்த மினுமினுப்புகள்
சுகமளிக்கும்
பாடங்களை எனக்குப் போதித்தன
அவைதான்புத்திமதியும்
உண்மையும் நிறைந்த வார்த்தைகள்
ஒரு புதிய சூரிய உதயத்துக்கு
அவை எனை இட்டுச் சென்றன
அது எனது வாழ்க்கையை
புத்தியுள்ள தாகவும்
சரியான தாகவும்
ஆக்கி நின்றது

**ஆங்கில மூலம் : பீஸாபதி சந்திரசேஹரா**
(இந்தியா)

**தமிழ் வடிவம்:**
**அன்னலட்சுமி இராஜதுரை**

சிறுகதை





**கீத்தா பரமானந்தன்**
(ஜேர்மனி)

# அவளுக்கென்றோர் மனம்

**ப**றவைகளின் ஒலி பூட்டிய யன்னற் கம்பி களைத் தாண்டி ஒலித்தது, இளவேனில் வருகையின் ஆரவாரம் ஆரம்பித்துவிட்டது. மனிதர்களைப்போலவே குளிருக்குள் முடங்கிக் கிடந்த பறவைகள் பாடத்தொடங்கிவிட்டன. அவைகளின் கீச்சுக்குரலை உற்றுக்கேட்கும்போது அவை ஏதோ ஒன்றை உருப்போடுவது போல வும் பேசுவது போலவும் இருக்கும். இதை நான் எப்போதுமே இரசிப்பேன். இன்றும் அவற்றின் ஆரவாரக்கொண்டாட்டத்தில் தூக்கம் கலைந்து விட்டது. இனிப்படுத்திருக்க ஏலாது. கையை நீட்டி கைத்தொலைபேசியை எடுத்து நேரம் பார்த்தேன், நேரம் காலை ஐந்தரை மணி. கட்டிலை விட்டெழுந்து, பூனைபோல் அடிமேல் அடிவைத்து அறையைவிட்டு வெளியே வந்து காலைக் கடமைகளை சத்த மின்றி முடித்துக் கீழே வந்தேன். எப்படியும் இன்றைக்கு போட்டிக்கான சிறுகதையை எழுதி முடித்துவிடவேண்டும். சித்திரைப் புத்தாண்டிற்காக ஒரு சஞ்சிகை நடத்தும் போட்டியிது. முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்குப் பணப் பரிசு என்றும் அறிவித்திருந்தார்கள்.

இந்த வாரமே அதற்கான இறுதித் திகதி என்பதால் இன்று எழுதி முடித்திவிடவேண்டும். என் மனத்தில் இப்பரிசு கிடைத்தால் தாயகத்தில் ஆதரவற்ற குழந்தைகள், முதியோர் பராமரிப்பு நிலையங்களுக்கு உதவவேண்டும் என்பது என் ஆசை. வீட்டில் இருந்து அவ்வப்போது இவர்களுக்கு உதவி செய்தாலும். இப்படி ஒருவழி மூலம் பணம் கிடைத்தால் இதை அவர்களுக்காய் அனுப்பவேண்டும் என என் மனத்தில் திட்டமிட்டிருந்தேன்.

எல்லோரும் தூங்கும் நேரத்திலே நான் எழுந்தால்தான் அமைதியா இந்த வேலையை முடிக்கலாம். இதை முடித்துவிட்டுப் பாட சாலை போகும் பிள்ளைகளினதும், வேலைக் குச்செல்லும் கணவனதும் சாப்பாட்டு வேலை களையும் முடித்துவிடலாம். அவர்கள் போனபின் மத்தியானச் சமையலும் விரைந்து முடித்தால் தான் நான் வேலைக்குச் சரியான நேரத்துக்குப் போகமுடியும். அதற்காக எப்போதும் இப்படி அதிகாலையில் எழுந்தால்தான் எனக்கான நேரத்தை ஒதுக்கமுடியும்.

மனதுள் கதைக்கான அத்திவாரத்தை கடந்த வாரமே உருப்போட்டு வைத்திருந்தாலும், எல்லோரும் ஈஸ்ரர் விடுமுறையில் வீட்டில் நிற்பதால், சிற்றுண்டிகள் செய்தல், விசேச சாப்பாடு, பின் அவர்களுடன் சேர்ந்து வெளியே போய்வருதல் என இருந்ததால் எழுத முடியாமல் இருந்தது. இன்றைக்கு என் எண்ணத்தை நிறைவேற்றக் கணினியைத் திறந்து ஆரம்பிக்கையில், இருக்கையின் பின்னாலிருந்து சட்டையைப்பிடித்து இழுத்தது எங்கள் செல்லப் பூனைகுட்டி மணி, இனி இவர் விடமாட்டார், அவருக்கான சாப்பாடு கொடுத்துவிட்டுத்தான் நான் இருக்க முடியும். எழுந்து மணியின் சாப்பட்டைப் போட்டுவிட்டு வந்து அமர்ந்து எழுதத் தொடங்கினேன். கதை ஆரம்பித்து இருபந்தி முடிக்கவில்லை, பக்கத்துக் கதிரையில் மகன் வந்தமர்ந்தான். அம்மா எனக்குத்தூக்கம் போய்விட்டது, கனவு வந்து விழித்து விட்டேன். கனவைக் கேட்டால் சிரிப்பீங்கள், என்றவாறு ஆரம்பித்தான். எழுதுவதை நிறுத்திவிட்டு அவனைப் பார்த்து அவன் கூறுவதைக் கவனித்தேன். இல்லாவிட்டால், அவனுக்கு முகம் சுருங்கிவிடும். பிள்ளைகள் இப்ப பெற்றோரோட பேசுவதில்லை என்பீர்கள், ஆனா நாங்கள் பேசும் போது நீங்கள் உங்கடை வேலை பாப்பீங்கள் என்பான். தம்பி நான் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறன் எண்றாலும் முகத்தைப் பார்த்துக் கேக்காட்டி நான் ஏன் பேசவேண்டும் என்பான். அதனால் அவனைப் பார்த்து அவனின் கதையைக் கேட்டு அவனோடு பேசிவிட்டு, அவனுக்குத் தேநீர் போட்டுக் கொடுத்துவிட்டுப், போ! போய்ப் பாடசாலை அலுவலைப் பார், கொஞ்சநேரம் புத்தகத்தை எடுத்துப் படியென அவனை அனுப்பிவிட்டு, விட்ட இடத்திலிருந்து ஆரம்பித்தேன் .

கீழே பேச்சுக்குரல் கேட்டதென கணவனும் வந்தார். சரி இனிவைத்து விட்டு வேலையைப் பார்ப்பம். இவர்களை அனுப்பிவிட்டு, நான் வேலைக்கு வெளிக்கிடமுன் மிகுதியை எப்படியும் முடித்துவிட வேண்டுமென கணினியை மூடிவிட்டு, கணவனுக்குக் கோப்பி போட்டுக் கொடுத்துவிட்டுக், காலைச் சாப் பாட்டுக்காக பாணும், கோண்பிலேக்ஸும் எடுத்து, வைத்துவிட்டு, எல்லோர் சாப்பாட்டுப் பெட்டிகளிலும் மதிய உணவையும் எடுத்து வைத்துவிட்டேன். அவர்கள் எல்லோரும் ஏழரைக்கு வெளியேறிய பின் மீண்டும் மதிய உணவுச் சமையல். தொலைபேசி அழைப்பு, நேரம் ஓடியதே தெரியவில்லை. இனி நான்வேலைக்கு வெளிக்கிடத்தான் நேரம் சரியா இருக்கும். மாலை வந்து பார்ப்போம். வீட்டை பூட்டிவிட்டு கிளம்பினேன். வேலைத் தலத்தில் மற்றவர்கள் பேசியது எதுவும் மனதில் பதியாமல் கதையின் கருவே சுற்றிச் சுற்றிவந்தது.

பாடசாலைக் காலத்தில் இருந்தே மனதின் ஆசை, கதை, கவிதை, கட்டுரைகள் எழுதிப் பரிசு வாங்கவேண்டுமென்பது பெரும் அவா! திருமணத்திற்கு முன் ஓரிரண்டு பரிசுகளையும் பெற்றிருக்கிறேன். திருமணமாகிப் புலப் பெயர்வு வாழ்க்கை, குழந்தைகள், வேலை எனக்காலம் ஓடியது. இப்போது முகநூலின் வருகையால் எல்லாவற்றையும் அறியக் கூடியதாய் இருப்பதும், பிள்ளைகள் வளர்ந்து தங்கள் காரியங்களைத் தாங்களே பார்ப்பதும் மீண்டும் தடைப்பட்டிருந்த ஆசை துளிவிட்டது, நேரமின்மை தான் விரட்டுகிறது. வேலை முடிந்து வீடு வந்து மீண்டும் இரவு உணவு உண்டபின் எல்லாவற்றையும் முடித்துக் கணினி முன் இருக்கையில் நேரம் ஒன்பது

**சாப்பாடு, வேலை, நல்ல குடும்பம். ஓரளவு வசதியுடன் நிறைவாய்த்தொடரும்போது உமக்கென்ன பிரச்சனை? குறை? என்பார். எப்போது பெண்ணாய்ப் பிறப்பெடுத்தேனோ அன்றே என் உணர்வுகளும் அறியப்படாமலே புதைபட்டுவிட்டன.**



**நான் நோய் எனக் கூறினால், வீட்டில் நிம்மதி போகும். அதனால் நான் நேரத்துக்கு உண்டு, உறங்கி ஆரோக்கியமாய் இருந்தால் போதும் என்பதே அவர் மனக் கணக்கு. எனக்கும் ஒரு மனம், அதிலும் ஆசைகள், அவை புரியப்படாத தேவையில்லாத, பக்கமாகவே அவர் மட்டில்.**

மணியைக் காட்டியது. சரி எப்படியும் பத்திற்குள் முடித்துவிடுவோம் என நினைத்தபடி விட்ட இடத்தில் இருந்து எழுத ஆரம்பிக்கிறேன்.

கணவர் சீமானின் அதிரடிப் பேச்சை கைத்தொலைபேசியில் சத்தமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். "கொஞ்சம் சத்தத்தைக் குறைச்சுக் கேளுங்கோவன் என்றேன்" கணவர் பாலன் ஆரம்பிக்கிறார். "ஏனப்பா இதுகளை பகலில செய்து முடிக்கக் கூடாதோ? இப்பிடி இரவில கண்ணைக் கூர்ந்து, கூர்ந்து கணினியில இருந்திட்டு, தலையிடிக்குது, கண் குத்துது எண்டு சொல்லாம மூடிப்போட்டு பகலில பாரும்" என்றார் கரிசனையாய். பகலில் எங்கே அமைதியாக நேரம் கிடைக்குது, மனதில் சொல்லியபடி, கதையை வளர்க்காமல் இருந்தேன். இனித் தொடர்ந்து ஒருமணித்தியாலம் இதில இருக்க தொடர்ந்து சொல்லுவார். அவருக்கு என் கண்ணும், தலையிடி மட்டுமே கவனத்தில். நான் நோய் எனக் கூறினால், வீட்டில் நிம்மதி போகும், அதனால் நான் நேரத்துக்கு உண்டு, உறங்கி ஆரோக்கியமாய் இருந்தால் போதும் என்பதே அவர் மனக் கணக்கு. எனக்கும் ஒரு மனம், அதிலும் ஆசைகள், அவை புரியப்படாத தேவையில்லாத, பக்கமாகவே அவர் மட்டில்.

சாப்பாடு, வேலை, நல்ல குடும்பம். ஓரளவு வசதியுடன் நிறைவாய்த் தொடரும்போது உமக்கென்ன பிரச்சனை? குறை? என்பார்.

எப்போது பெண்ணாய்ப் பிறப்பெடுத்தேனோ அன்றே என் உணர்வுகளும் அறியப்படாமலே புதைபட்டுவிட்டன. நான் அறியாப் பருவத்திலேயே என் அம்மாவின் அண்ணாவின் மகன் சுரேந்தர்தான் எனக்கு மாப்பிள்ளையென, சொந்தம் விட்டுப் போகக்கூடாதென அம்மாவும் மாமாவும் உறுதியெடுத்திருந்தார்களாம். நான் வளர்ந்தபின் அறிந்துகொண்டேன். மாமியும் அதைச் சொல்லிச் சொல்லியே கட்டுப்பாடுகளை அடுக்குவா. எனக்கு ஆத்திரமா வரும். அம்மா அப்பா போடாத கட்டுப்பாடு இவ போடுறா என்று. அப்பிடியே பேசிப்பேசி சுரேந்தரே வாழ்க்கைத் துணையென நம்பிக் கற்பனைகளை வளர்த்தேன்.

அதன்பின் மாமாவுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் சொத்துப் பங்கீட்டுப் பிரச்சனைக்களால் பேச்சுவார்த்தை இல்லாமல் போய்விட்டது. ஆனாலும் அம்மா அப்பா எனக்குத் திருமண வயது வந்ததும், மாமாவிடம் உறவுக்காரர்கள் மூலம் பேசிப்பார்த்தார்கள். மாமா உறவையே முடித்துக் கொண்டோம் என்றாராம். என்னைக் கேட்காமலேயே என் வாழ்க்கையை முடிவு செய்து, பேசிப் பேசிக் கனவுகளை வளர்த்தார்கள். பின் பெரியவர்களாகவே புதைத்தார்கள். ஆரம்பிக்கும் போதும் என் உணர்வை, விருப்பத்தை, யாரும் பொருட்படுத்தவில்லை, அதே போல, சுரேந்தரின் உருவத்தை நெஞ்சில் இருந்து அழித்து, பாலனை மாப்பிள்ளையாகத் தெரிவாக்கியபோதும் யாரும் என்விருப்பத்தைப் பொருட்படுத்தவில்லை. எழுதப்படாத சட்டமாகவே எல்லாம் தொடர்கிறது. பெண்ணுக்கும் இதயம் இருக்கும். அதில் உணர்வுகள் இருக்கும் என்பது அறியப்படாமலே அவளுக்கு நல்லது செய்கிறோம் எனத் தொடர்கிறார்கள். அவளுக்கென்றோர் மனம் இருப்பதும், அதிலும் தனிப்பட்ட உணர்வுகள் இருக்கும் என்பதும் எப்போது உணரப்படப்போகிறது?

○○○



# இளங்கவிதாயினி எஸ்.மிதூர்ஷிகாவின்




# 'என் பேனையின் பிரசவங்கள்'

**எஸ்**. மிதூர்ஷிகாவின் 'என் பேனையின் பிரசவங்கள்' கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் நுவரெலியாவின் பரிசுத்த திரித்துவக் கல்லூரியின் அதிபர் திரு எஸ்.ரவிச்சந்திரன் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. மாணவர்களின் புறக் கிருத்திய செயற்பாடுகளை ஊக்குவிக்கும் இப்பாடசாலையில் கவிதை, கட்டுரை, சிறுகதை போன்ற படைப்பாளிகளும் இனம் காணப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

வளரும் இளம் கவிதாயினி எஸ்.மிதூர்ஷிகா அதே பாடசாலையின் தரம் 11 (பதினொன்று) இல் கல்வி பயின்று வருகின்றமையும், அதிபர் எஸ்.ரவிச்சந்திரன், வகுப்பாசிரியை திருமதி வி.பிரியதர்சினி, ஆசிரியை திருமதி ப.நர்மதா திருமதி பி.ரினோசா மேரி, திருமதி எஸ்.செல்வராணி திரு எஸ்.கார்த்திக், திரு வி.சுதர்சன், திருமதி கே.அமுத கீர்த்தனா, பத்மநாதன், நர்மதா போன்றோர்கள் இக் கவிதாயினியின் கவிதை ஊற்றுக்கும் வளர்ச்சிக்கும் ஊக்குவிப்பாளர்களாக இருந்துள்ளனர்.

இறாகலை உயர்கல்லூரி அதிபர் கவிஞர் மை. பன்னீர்செல்வத்தின் அணிந்துரை, கலாபூஷணம் மொழிவரதன் ஊ.மகாலிங்கம் அவர்களின் முகவுரை, பிரதிக்கல்விப் பணிப்பாளர் தமிழ்க்கல்வி மாகாண கல்வித் திணைக்களம் கண்டி திரு பெ. விக்னேஸ்வரனின் வாழ்த்துச்செய்தி, நுவரெலியா வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.பீ. பிகில்லகெதர அவர்களின் ஆசி உரை, நுவரெலியா கல்வி வலயம் கோட்டம் ஒன்றின் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. கந்தையா காந்தரூபனின் வாழ்த்துச்செய்தி, அதிபரின் ஆசியுரை, நூலாசிரியரின் நன்றியுரை போன்றவைகளுடன் 57 பக்கங்களில் 39 கவிதைகளை உள்ளடக்கியதாக அழகான அட்டைப் படத்துடன் இந்நூல் வெளிவந்துள்ளது.



**'மொழிவரதன்' ஊ.மகாலிங்கம்**

இன்றைய இளம் சமூகம் கைப்பேசிகளுடனும், ஐபோன், கணினி என்பவைகளுடன் பயணிக்கும் இக்காலத்தில் மிதூர்ஷிகா ஒரு கவிதை படைப்பாளியாக துளிர்த்தெழுந்துள்ளமை குளிர்மையும் பசுமையும் குளிர் மேகங்களும் சூழ்ந்த கந்தப்பளை எனும் ஊர் தந்த பொக்கிஷமாகும்.

"ஈன்ற பொழுதினினும் பெரிதுவக்கும் தன் மகனை(ளை) சான்றோன் எனக் கேட்ட தாய்"

என்ற குறட்பாவுக்கு நடைமுறை உதாரணமாக

"தந்தை மகற்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என் நோற்றான் கொல்லெனுஞ் சொல்

என்பதாய் உள்ளது.

பதின்ம இவ்வயதுக்கே உரிய பல எண்ண அலைகள் வண்ண வண்ண பட்டாம்பூச்சிகளாய் ஆங்காங்கே சிறகடித்தாலும் சத்தான கவிக் கருக்கள் கவிதைகளாய் மிளிரத் தவறவில்லை.

சிட்டுக்குருவிகள் தினம் அவைகளுள் ஒன்று

"அழிந்து கொண்டே போகின்றாய் அறிவற்ற
மனிதனால் மனம் நொந்து கொண்டே
போகின்றாய் அறிவற்ற மனிதனால்"
மனம் நொந்து ஏக்கத்துடன் பார்க்கின்றேன்.
சிட்டுக்குருவிகள் பறந்திடுமா என்று?

என்று எழுதும் இக்கவிதாயினி பெண் நடனம் கவிதையில்,

"உன் இதழ்கள் கண்டு
மலர்களோ இதழ்களை விரிக்க
மறந்து விட்டன – காலைப்பொழுதில்"

என்பது நல்லதோர் கற்பனை எனலாம். மழலை கவிதையில்,

"மார்கழி பனி பூவின் இலைமேல்
விழுவதைப் போல..
புன்னகை செய்யுதே மழலை முகம்"

அப்பா கவிதையில்,

காலம் காற்றாகி
போகையிலே
நீங்களும் முதுமைப்பருவத்தை
எட்டயிலே...
"அப்பா" எனும் சொல் ஏனோ
தேனாய் இனிக்கிறதே...
வாழ்க்கையின் ஒளி
கவிதையின் மொழி
அது என் அப்பா...

என அவரது கவிதைகள் நல்ல சொல்லாட்சி, கற்பனை, பொருள் உள்ளடக்கம் எனத் தெளிவான சிக்கலின்றி தொடர்கின்றன. உவமை, உவமேயம், உருவகம் என பெரிதாக அலட்டிக்கொள்ளாமல் மிக எளிமையான நடையால் அவரது கவிதை ஊமையாய் ஓடும் ஆறு போல் செல்கின்றது எனலாம். மயக்கங்கள் ஏதுமில்லாதே அவரது எடுப்பும் முடிப்பும் உள்ளது.

அவரது கவிதைகளில் பல உதாரணங்களை காட்டிட இயலும். தரம் 11 இல் பயிலும் இப்பிள்ளைக்கு எப்படி இப்படியான கற்பனைகள் வருகின்றன என்பது ஒரு வினா அவள் இன்றைய புதிய சந்ததியினரில் சிலரைப்போல் வெறும் "காதலை" பெரிய கருவாக கொள்ளவில்லை. ஆங்காங்கே வெளிப்படும் சில அவ்வகையான உணர்வுத் தூண்டல்களுக்கு மாறாக மாற்றுப்பொருளையும் பல கவிதைகளில் அவர் வெளிப்படுத்தி உள்ளமையை "என் பேனையின் பிரசவங்கள்" பறைசாற்றும்,

"கூட்டுப்புழுவாய் இருந்த எம்மை
பட்டாம்பூச்சிகளாய் பதமாய் வளர்த்து
கல்லாய் இருந்த எம்மை சிலையாய்
செதுக்குகின்றார்கள்"

என்றமிதூர்ஷிகாவின் கவி வரிகளோடு அவர் மேலும் நிறைய எழுதிட வேண்டி வாழ்த்துகிறேன்.

❍❍❍

சிறுகதை





சமரபாகு
சீனா உதயகுமார்

# அகலமாகிப்போகும் உறவுகள்...

இப்ப கொஞ்சக்காலமாக நான் வீட்டுக்குப் போவதில்லை. கடற்கரையில பண்ணையார் கந்தசாமியால் போடப்பட்டிருந்த அந்த கிடுகுக்கொட்டில்ல இருக்கப் பழகிவிட்டன். அதுக்குள்ளதான் படுத்து உறங்குவன். அதிலயிருந்து பண்ணையாரின் வேலையாக்கள் கொண்டுவந்து போடுகின்ற வலையில சிக்கிக்கிடக்கின்ற மீன்களையோ, நண்டுகளையோ பிரித்தெடுத்துக் கொடுப்பேன். ஒரு நாளைக்கு ஐந்நூறு ரூபாய்க்கும் குறையாமல் இப்ப நான் உழைக்கிறன்.

கடலில மீன் பிடிப்பதென்றால் எனக்கும் கொள்ளை விருப்பமாக இருக்கும். அந்தக் காலத்தில அப்பா மீன்பிடிக்கப் போகும்போது அவரோடு சேர்ந்து அண்ணாவும் நானும் போயிருக்கிறம். பிடித்து வந்த மீன்களை வலையிலிருந்து பிரித்து, மீன்களின் வகையறாக்களுக்கு ஏற்ப சின்னமீன்கள், பெரியமீன்கள், நண்டு, இறால் என்று குவியலாக்குவோம்.

இதற்கு பிறகுதான் வீட்டுக்குப்போய் குளித்து வெளிக்குடுத்தி, சாப்பிட்டுவிட்டு பாடசாலைக்கு போவம்.

இந்த மாதிரியான கஸ்டங்களை சின்ன வயதிலயே உணர்ந்த போதுதான், எதிர்காலத்தில கஸ்ரப்பட கூடாதென்று நினைத்துப் படித்தோம். இந்தக்கால பெற்றோர்கள் அப்படியொன்றும் நினைப்பதில்லை.

“பிள்ளைகள் கஸ்ரப்படக்கூடாது” என்று மட்டுந்தான் நினைக்கிறார்கள்.

தங்கட பிள்ளைக்கான எல்லா வசதிகளையும் சின்னவயதிலே உடனேயே செய்து கொடுக்கிறார்கள். பிள்ளைகள் கேட்பதையெல்லாம் வாங்கிக்கொடுக்கிறார்கள். அந்த நேரங்களில், பிள்ளை என்ன நினைக்கிது தெரியுமோ?

“எங்களுக்கு கஸ்ரமில்லைத்தானே..! அப்ப, நான் ஏன் படிக்கவேணும்?” என்று.

அப்படி நினைத்துத்தான் விடுகாலி காவாலி பழக்கங்கள் பழகி கெட்டுப்போகுதுகள். அதுக்குரிய விபரீதங்களை பிறகுதான் இந்த பெற்றோரும் அனுபவிக்கின்றனர். கடுமையான துன்பத்துக்குள் அகப்பட்டு மாண்டு போகின்றனர்.

தூக்குப்போட்டு சாவதும், மருந்து குடித்து சாவதும், வாகனத்துடன் அடிபட்டு சாவதும் அல்லது போனால், ஒருவருக்கொருவர் சண்டை செய்து அல்லது குழுவாக சண்டை செய்து இறந்து போவதும் இங்கே சாதாரணமான சம்பவங்களாய் மாறிவிட்டன. யாரும் யாரையும் திருத்த முடியாத சூழல் ஏற்பட்டிருக்கிறது. நீ திருந்து ஊருலகம் தானாக திருந்தும் என்பார்கள். இப்ப அப்படி இருக்கிறது ஊரின் நிலைமை. இப்பவெல்லாம் படித்தவர்கள்தான் அளவுக்கு அதிகமாய் மதுபானங்களை அருந்து

கின்றனர். அதை நாகரிகம் என்றும் சொல்லிக் கொண்டு திரிகின்றனர்.

கல்யாணப்பார்ட்டி, புதுசா மோட்டர்சைக்கிள் எடுத்தால் அதுக்கொரு பார்ட்டி, பர்சிலர் பிறேக் பார்ட்டி, புதிதாக ஒரு பட்டப்படிப்பு முடித்திருந்தால் அதுக்கொரு பார்ட்டி மற்றும் பள்ளிக்கூடத்தில் விளையாட்டுப்போட்டி, பரிசளிப்புவிழா, அலுவலகங்களில் கலைவிழா, அலுவலகர்களின் பிரியாவிடை இப்படி எது நடந்தாலும் அவற்றுக்கொல்லாம் ஒரு பார்ட்டி என்ற போர்வையில் குடித்து கும்மாளம் அடிக்கின்றனர்.

இப்படித்தான் ஒருமுறை, அலுவலர் ஒருவரின் வீட்டிலே, தன்னுடைய மகனின் முதலாவது பிறந்தநாள் அன்று குடித்துவிட்டு, பாட்டுப்பெட்டியை சத்தமாய்விட்டு ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தனர். அங்கே, தூசணங்களால் ஒருவரை ஒருவர் அழைத்து சம்பாசனை செய்தனர். இப்பவெல்லாம் தூசணம் ஒருவரை ஒருவர் அழைக்கின்ற பொதுமொழியாக மாறியிருந்தது.

யுத்தகாலத்தில் பொடியள் தரவளியள் ரொம்பப்பேர் மரணித்தார்கள். அதிலயொரு ஞாயமிருந்தது. அதிலே வீரமிருந்தது. அதிலே ஒழுக்கமிருந்தது. அவர்களை மாவீரர்கள் என்றுதான் அழைத்தோம். அப்படியானவர்களை இன்று கடவுள் என்று கும்பிடுகிறோம். ஆனால், இன்றைய இளைய சமுதாயம் திடீர்த்திடீரென அகாலமாய் மரணித்து போகிறார்களே!

இப்படித்தான், என்னுடைய ஆதங்கங்களை எனக்குள்ளே தீப்பிழம்பாய் வளர்த்து என்னை நானே நெருடிக்கொள்வேன். எனக்குள்ளே இப்படி நிறைய ஏக்கங்கள் குவிந்து கிடக்கின்றன. ஆனால், எதையும் வெளியே சொல்ல முடியாத அபத்தநிலையில இருந்தேன். நல்ல துக்கு காலம் இல்லையென்ற ஒரு சூழலில் வாழ்ந்து கொண்டிருந்தேன் என்பதை மட்டும் உணர்கிறேன்.

இந்த மாதிரியான இப்போதய இளைய சமுதாயம் பற்றிய நல்லதுக்கான என்னுடைய எண்ணமெல்லாம், எங்கெங்கோ போய் வந்தன. அவற்றுக்கான தீர்வுகளை எப்படிக் காணலாம் என்பதிலும் அவை தீவிரம் காட்டி நின்றன. பிறகு அவை எனக்குள்ளேயே அசைந்து விளையாடி ஓய்ந்து போயின.

இப்ப என்னை யாரோ, "பேரம்பலம் சேர்.." என்று கூப்பிடுவதை உணர்ந்து குரல் கேட்ட திசையிலே தலையைத் திருப்பி அவர் யார்? எவரென? பார்க்கிறேன்.

பரமிலிங்கம் நின்றுகொண்டிருந்தான். என்னிடம் ஆங்கிலம் படித்தவன். வகுப்பிலே என்னோடு ஆங்கிலத்தில் பேச ஆசைப் படுபவன். அவனுடைய ஆசைக்கு அவனுடன் ஆங்கிலத்தில் பேசுவேன். நல்ல கெட்டிக்காரன். பிறகு ஆசிரியராக வந்து, நான் அதிபராக இருந்த பாடசாலைக்கே முதல் நியமனம் பெற்று வந்தவன். எனக்குக்கீழே ஆசிரியப்பணி செய்தவன். நான் ரிட்டெயர் ஆகும்வரை என்னோடுதான் பணியாற்றியவன்.

"வாடா, பரமன்...! என்ன இந்தப்பக்கம்? கன நாளாக உன்னை இந்தப்பக்கம் காணேல்ல. இப்ப என்ன விசயமாக வந்திருக்கிறாய்? எப்படி சுகமாய் இருக்கிறியோ..?"

என்று எல்லா கேள்விகளையும் ஒரே தடவையில் மூச்சுவிடாமல் கேட்டுக்கொண்டே கையை நிலத்தில ஊண்டி எழும்பினேன்.

"வாடா பரமன்" என்று பரமனை அழைத்தேன். அந்தக் கிடுகுக்கொட்டிலுக்குள்ளே அவனைக் கூட்டிச்சென்றேன்.

கொட்டிலுக்குள்ளே இரண்டுபேர் இருக்கக் கூடிய பெரிய முருகைக்கல் ஒன்றிருந்தது. அதிலே இருந்துகொண்டு, அதற்கு முன்னாலிருந்த சின்ன கைவாங்கில் பரமனை இருத்திக் கதைக்க தொடங்கினேன்.

"சொல்லு என்ன.. இந்தப்பக்கம் வந்திருக்கிறாய்..." என்று திரும்பவும் பரமனிடம் கேட்டேன்.

"கருவாடு வாங்கலாமென்று வந்தன்... அதுதான் சேர்..."

என்று இழுத்தான். பிறகு, என்னையும் அந்தக்கொட்டிலையும் பார்த்தான். அப்படிப் பார்த்து விட்டு, அவனுக்குள்ளே ஏக்கம் ஒன்று துளிர்விடுவதையும் என்னால் உணரமுடிந்தது. அந்த ஊரிலே என்னுடைய வீடுதான் பெரிய கல்வீடு. அந்த ஊரின் மாளிகை என்றும் அதை சொல்லுவார்கள்.

"ஏன் சேர், இங்கை இருக்கிறியள். உங்களுக்கு என்ன நடந்தது...?"

என்று பரமன் நேரடியாகவே என்னிடம் கேட்டான்.

பரமன் அனுபவமுள்ள ஆசிரியன் என்பதை நிரூபித்தான். அவனுடைய சுபாவமே அதுதான். எதுவென்றாலும் என்னிடம் நேரடியாக கேட்டுவிடுவான். என்னுடைய இரகசியங்கள் பலதையும் அவனிடம்தான் பரிமாறுவேன். அவனும் அப்படித்தான். அப்படி உரையாடுகின்ற நேரங்களில் குரு-மாணவன் என்ற மனப்பாங்கினை மறந்து விடுவோம். நல்ல நண்பர்கள் போல உரையாடுவோம். அவனுக்கு நானும், எனக்கு அவனுமாக மன ஆறுதல்களை வழங்குவோம். இப்ப, என்னுடைய மௌனநிலை பார்த்து திரும்பவும் "சேர்..." என்று அழைத்தான். விரிந்து போன என்னுடைய மன எண்ணங்களை குவியப் படுத்திக்கொண்டு திரும்பவும் அந்த இடத்திற்கு வந்தேன்.

"தம்பி பரமன் அது கனக்கக் கதையடா. கதைச்சால் பாரதக்கதை போல தொடர்ந்து கதைச்சுக்கொண்டிருக்கலாம்." என்று நான் சொன்னேன்.

அவன் என் வார்த்தைகளை இடைமறித்து, "எதுவென்றாலும் என்னிடம் சொல்லுங்க சேர்" என்றான்.

"................................."

"பள்ளிக்கூடத்தில ஆசியர்களாலும், மேலதிகாரிகளாலும் உங்களுக்கு வருகின்ற எத்தனையோ மன நெருடல் சம்பவங்களை என்னிடம் மட்டுந்தானே சொல்லி ஆறுதல் பெறுவீர்கள். இப்பவும் எதுவென்றாலும் என்னிடம் சொல்லுங்க சேர். உங்களை இந்த கோலத்திலே பார்க்க என்ர மனசுக்கு சங்கட மாய் இருக்கிறது, சேர்" என்று சொல்லி முடித்தான்.

"நான் இப்ப ஏலாவாளியாய் போனேனெடா, பரமன். இப்ப வீட்டில என்னை ஆருமே மதிப்பது கிடையாது. வீட்டிலே என்னை கேவலமாய் பார்க்கிறார்கள். ஒரு நாய்க்கு இருக்கிற மரியாதைகூட எனக்கில்லையெடா" என்று சொன்னேன்.

பிறகும், என்னுடைய நிலைப்பாட்டை பரமனிடம் சொல்லுவம் என்று நினைத்து நான் சொல்ல தொடங்கிய கதைதான், இது. எல்லாமே என்ர வீட்டில நடந்த சம்பவம்தான்.

"உதில இருக்கிறனி கடைக்குப்போய் மரக் கறியள் வாங்கி வரலாம்தானே..! மத்தியானம் சமைக்கிற நேரமுமாச்சு."

என்னுடைய மனைவி என்னை இப்படி நச்சரித்தபடி இருந்தாள். இப்ப அவள் என்னை ஒருமையிலதான் கூப்பிடுவாள். கொஞ்சம்கூட மரியாதை தரமாட்டாள்.

அவள் கூப்பிடுவதை பார்த்துத்தான் பிள்ளைகளும் கூப்பிடுகிறார்கள். இனி இவர்கள் கூப்பிடுவதை பார்த்துத்தான் பேரப் பொடியளும் கூப்பிடப் போகுதுகள். அதுவும் கிட்டடியில் நடக்கத்தான் போகுது. என்ன செய்யுறது? எல்லாத்தையும் தாங்கி தரிச்சு நடக்க வேண்டி கிடக்கு. அதுக்கெல்லாம் காரணம் வயசு மூப்பினால வந்த என்ர ஏலாத நிலமைதான். நிலத்தில இருந்துவிட்டு எழும்பி நிற்கிறதென்றால் அதுவொரு சாதனைதான். இரண்டு கைகளையும் நிலத்தில ஊன்றித்தான் எழும்புவேன்.

தான் சொன்னவுடன் நான் உடனே எழும்பிவரவில்லை என்பதை பார்த்து என்ர மனைவி நச்சரிப்பை விடாது தொடர்ந்து கொண்டிருந்தாள்.

மற்றவர் அரியண்டம் படும்படியாக அவள் புறுபுறுப்பு இருந்தது. இனி அந்த இடத்தில் இருப்பதில் அர்த்தமில்லை. அவள் என்ன புறுபறுப்பாள்? என்னசொல்லி நச்சரிப்பாள்? என்பதெல்லாம் எனக்கொரு வாய்ப்பாடுபோல மனப்பாடமாகி இருந்தது. இந்த வீட்டில

**கல்யாணப் பார்ட்டி, புதுசா மோட்டர்சைக்கிள் எடுத்தால் அதுக்கொரு பார்ட்டி, பர்சிலர் பிறேக் பார்ட்டி, புதிதாக ஒரு பட்டப்படிப்பு முடித்திருந்தால் அதுக்கொரு பார்ட்டி மற்றும் பள்ளிக்கூடத்தில் விளையாட்டுப்போட்டி, பரிசளிப்புவிழா, அலுவலகங்களில் கலைவிழா, அலுவலகர்களின் பிரியாவிடை இப்படி எது நடந்தாலும் அவற்றுக்கொல்லாம் ஒரு பார்ட்டி என்ற போர்வையில் குடித்து கும்மாளம் அடிக்கின்றனர்.**

தினமும் நடக்கிற ஒரு சம்பவமாக அவை மாறியிருந்தன. என்ன செய்வது? ஒருசாண் வயிற்று பசிக்காக வீட்டில் ஒவ்வொருத்தரிடமும் திட்டு வாங்க வேண்டியிருந்தது.

இளையவன் அந்தக்கதிரையில் கனநேர மாக இருந்து போனில எதையோ நோண்டி கொண்டிருந்தான். அவன் சும்மாதானே அதில் உட்கார்ந்திருக்கிறான். எந்த அலுவல லென்றாலும் அவனையும் கேட்கலாம் தானே..! சும்மா இருக்கிற அவனிடம் வேலை வாங்குவது அவனுக்கொரு பயிற்சியாகவும் இருக்குமில்லையா? அவன் இங்கையிருந்து வீட்டுவேலை ஏதாவது செய்கிறானா? அவனை கொண்டு வீட்டு அலுவல் பார்க்காமல் வயதுபோன என்னைக்கொண்டு வேலை வாங்க நினைக்கிறாளே, இவள்..! கடைக்கு போட்டுவா..! சந்தைக்கு போட்டு வா..! பக்கத்து வீட்டில இதை ஒருக்கால் குடுத்திட்டு வா..! இதற்காகத்தானா நான் இங்கே இருக்கிறன்..? என்ன வாழ்க்கையெடா, இது?

இப்படி, என்னுடைய மனசுக்குள்ள ஆவேசம் கொண்டு கோபங்களை வெளியில கொப்பளிக்க நினைப்பேன். இருந்தாலும், அடுத்த நிமிடத்தில அவற்றையெல்லாம் அடக்கி வைத்திடுவேன். அந்தளவுக்கு ஒரு பயபிராந்தியுடன் அந்த வீட்டில் நான் வாழ்ந்து கொண்டிருந்தேன்.

இளைய மகனுக்கு இருபத்தினான்கு வயதாகிவிட்டது. எந்தவொரு தொழில் முயற்சியும் இப்பவரை அவனிடமில்லை. அவன், தானொரு தொழில் செய்வோம் என்று முயற்சித்தால்கூட, அதுக்கும் அவள் சம்மதிக்கமாட்டாள். நான் அவள் என்று சுட்டிக்காட்டுவது என்னுடைய மனைவியைத்தான்.

அவன் எங்களுடைய வீட்டில் ஒரு செல்லப்பிள்ளையாக இருக்கட்டும் என்றுதான் அடிக்கடி பிதற்றுவாள். அந்தநேரம் எனக்கு பொல்லாத கோபம் வந்துவிடும். இவளொரு விசரி. அவனுடைய எதிர்காலத்தையல்லவா பாழாக்கிக்கொண்டு திரியுறாள். உது அவளுக்கு எங்கே விளங்கப்போகுது? அவனும் வாய் நிறய வெத்தில போட்டுக் குதப்பி சப்பித் துப்பிக்கொண்டு திரியுறான். பியர் குடிக் கிறான் என்பதையும் எவரோ சொல்ல கேட் டிருக்கிறன்.

இவற்றையெல்லாம் நான் அறிந்து வைத்திருந்து என்ன பிரயோசனம்? இந்தக் காதாலே கேட்டு அந்த காதாலே விட்டுவிட வேண்டியதுதான். இந்த எழுபத்திரண்டு வயதிலயும் வெத்திலையென்பதை ஒருக்காலும் போட்டறியேன். கள்ளு சாராயத்துக்கு கிட்ட போயிருக்கமாட்டன். அப்படித்தான் என்னை வளர்த்தார்கள். அப்படித்தான் நான் வளர்ந்தேன். இப்பவரை அப்படித்தான் வாழ்கிறேன். அந்த நல்ல குணங்களாலும் ஊரிலே எனக்கொரு மரியாதை இருந்தது. ஆனால், இப்ப இங்கே இவன் மட்டுமா குடிக்கிறான்? இவனுடைய கூட்டாளிமாரும்தான் குடித்துக்கொண்டு திரியுறார்கள்.

அவன் வெற்றிலை மட்டுமா போடுறான்? போதை தருகின்ற வேறு என்னவோ எல்லாம் வாயிலே போட்டுக்கொண்டு திரியுறான் என்று தான் நானும் அறிகிறேன். நான் அறிந்ததை எல்லாம் வீட்டில சொன்னால் என்னுடைய சொல்லை அவர்கள் கேட்கவா போகிறார்கள்? தாய் பிள்ளைகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து என்னிலைதான் குறை கண்டுபிடித்து என்னை திட்டித்தீர்த்து விடுவார்கள்.

குடிக்கிறதும் வெத்திலை சப்பிக்கொண்டு, அடி நாக்குக்கு கீழே போயிலை துண் டென்றை அமத்தி வைத்து கண்டகண்ட இடங்களிலும் துப்பிக்கொண்டு திரிவதும் இப்பவொரு ∴பாசனாக மாறியிருந்தது. இப்ப இவற்றையெல்லாம் யாரும் கண்டிக் கிறதுமில்லை. ஊர்க்கடைகாரரும் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, போயிலை விற்பதால்தான் தங்களுக்கு கொள்ளைலாபம் என்றும் சொல்லுகினம்.

இப்பவரை அவள் புறுபுறுத்துக்கொண்டே இருந்தாள். இப்ப நான், எழும்பி நடந்து போனேன். அவளிடம் காசும், மரக்கறிகள் வாங்க பையும் வாங்கிக்கொண்டு வீதிக்கு இறங்கி மார்க்கண்டு கடைப்பக்கமாக நடக்கத் தொடங்கினேன்.

கொஞ்ச மாசத்துக்கு முதல்தான் சைக்கிள் ஓடுவதையும் விட்டிருந்தேன். சைக்கிள் ஓடுகின்ற தெம்பிருக்கும்போது அடிக்கடி கோயிலுக்கும், சொந்தக்காரர் வீடுகளுக்கும் போய்வருவேன். இப்ப அப்படியெல்லாம் என்னால போக முடி யாமல் இருந்தது. சைக்கிள் ஓடுவதைவிட நடந்துபோவது கொஞ்சம் பரவாயில்லை

போல. அதனாலே, நடந்துதான் கடைக்கு போய்வர தொடங்கினேன்.

என்னுடைய வீட்டில மனைவி பிள்ளைகள் என்னை இப்படித்தான் ஒரு வேலைக்காரனாக பாக்கிறார்கள். என்னை வேலைக்காரனாக பாவிப்பது மட்டுமில்லை, வீட்டுக்காவல் நாயாகவும் பாவிக்கத் தொடங்கி இருக்கிறார்கள்.

ஊரிலே நடக்கின்ற கல்யாணவீடுகள், சாமத்தியவீடுகள், கோயில் திருவிழாக்கள் எதுவென்றாலும் இவர்களுக்குத்தான் கொண்டாட்டம். வீட்டு வராந்தாவிலே என்னை இரு என்று சொல்லிட்டு வெளியே போய்விடுவார்கள். வீட்டுக்கதவுகளும், தெருக் கேற்றும் பூட்டிவிட்டுத்தான் போவார்கள். வீட்டை காவல் காக்கும் நன்றியுள்ள சீவனாக இருக்க நானும் பழகியிருந்தேன்.

எனக்கு பசி வருகின்ற போதெல்லாம் “பசி என்றோ..!” தாகம் எடுக்கின்ற போதெல்லாம் “ஏலாமல் கிடக்கு ஒரு சில்வர் தேத்தண்ணி வைச்சுத் தாங்கோ” என்றோ ஆரையும் நான் கேட்க முடியாது. அப்படி பல தடவை கேட்டு அவமானப்பட்டிருக்கிறேன். அந்த அவமானங் களால் நெஞ்சு உரமாகி நாளடைவில அதுவே எனக்கு பழக்கமாகியும் போனது.

இந்தமாதிரியான அவமான நினைவுகள் ஞாபகத்துக்கு வரும்போது உண்ண உணவோ, குடிக்கத் தேத்தண்ணியோ அவர்களிடம் கேட் பதை நானும் மறந்துவிடுவேன். அவர்களுக்கு பசிக்கிறபோதுதான் எனக்கும் சாப்பாடு கிடைக்கிறது. அவர்களுக்கு தாகமெடுக்கின்ற போதுதான் எனக்குமொரு தேத்தண்ணி கிடைக்கிறது. சில பொழுதுகளில் தினேஸ்கடை கொத்துரொட்டியும், முனியாண்டி விலாஸ் பிறைற்ரைசும் வாங்கி வந்து சாப்பிடுவார்கள். அந்தநேரம், என்னை “ஒரு வாய் சாப்பிட்டுப்பார்” என்று யாருமே என்னிடம் கேட்கமாட்டார்கள்.

இந்தமாதிரியான இரவுப்பொழுதில் அன் றைய மத்தியானம் சமைத்த சோறும் கறியும்தான் தருவார்கள். இதாவது கிடைக்கிறதே என்று நினைத்துவிட்டு, தருவதை வாங்கிச் சாப்பிட்டு விட்டு உறங்கிவிடுவேன். ஒரு நாயிலும் கேவலமாக என்னைப் பராமரித்தார்கள்.

இந்த உடலுக்க உயிரொன்று இருக்கும் வரை பசியொன்று இருக்கத்தான் செய் யும். மனசொன்று இருக்கின்றவரை அங் கலாய்ப்பொன்று இருக்கத்தான் செய்யும். இவையெல்லாம் என்னுடைய பசி வயிற்றுக்கு எங்கே தெரியப்போகிறது? என்னுடைய மன சுக்கு எங்கே ரோசமிருக்கப் போகிறது?

வீட்டிலே எது கிடைக்கிறதோ அதை வாங்கி தின்றுவிட்டு வயிற்றை நிறைக்க வேண்டியதுதான். இப்ப என்னுடைய மன நிலைப்பாடு எதையும் சமாளித்து போவோம் என்றுதானிருந்தது.

அநேக இரவுகளில் அடுக்களையில் சாப்பிடக்கூடிய எதுவும் மீதியாக இருந்தால் அதையும் எனக்குத்தான் தருவார்கள். என்னுடைய மனசை அவர்கள் என்னமாதிரி துன்புறுத்தினாலும், இளையவனை நினைத்தால் இரவு முழுக்க எனக்கு நித்திரை வருவதில்லை. அவனின் எதிர்காலத்தை நினைத்து அவனுக்காக ஏங்கி அழுவேன். மனசெல்லாம் முட்டறுக்க அப்படி அழும்போது என் இதயம் வெடிப்பது போலவும் உணர்வேன்.

கன்னவோரமாக பெரும்கண்ணீர் சிந்தி யோடும். கன்னங்கள் தொடுகின்ற அந்த கண்ணீர் கீற்றுகள் எனக்கொரு ஆறுதலாய் இருந்துவிட்டு போகும். மனதிலுள்ள அருவருப்பான உள்ள கிடக்கைகளை அகற்ற அழுவது நல்லதொரு மருந்துபோல தோன்றும். சில நேரங்களில் அழுகையை நேசிப்பவனாகவும் நான் மாறியிருந்தேன். என்னுடைய மனவேதனைக்கு அழுகை அதிகமாக தேவைப்பட்டது. நொந்து போகின்ற மனசுக்கு அழுகை நல்லதொரு மருந்துதான் போலும்.

“கண்டறியாத கேடுகெட்ட நாகரிகமொன்று வந்து பொடிபொட்டையள் எல்லாரையுமல்லோ அது பழுதாக்கி விட்டிருக்குது. நல்லது எதுவென்றாலும் அதை ஏற்பதுதான் இயற்கை. ஒரு கூடாததை எல்லாரும் ஏற்கினம் எண்டதுக்காக அதை நாகரிகமெண்டு நினைத்து, அதை ஏற்பதும் அதனால் தானும் அழிந்து சமூகத்தையும் அழிக்க நினைப்பதை எல்லாம் எப்படி ஏற்கமுடியும்...?”

இப்படி நினைத்து நினைத்து நீண்டதொரு பேச்சுரையை எனக்குள்ளே முடித்து விடு வேன். அவற்றையெல்லாம் பொதுமக்கள் அரங்கமொன்றில் பேச வெளிக்கிட்டால், “இவனொரு விசரன்..! இவனொரு லூசன்..! இவனொரு பைத்தியம்..!” என்று ஊரே சபித்து கொட்டிவிடும். வீட்டில் உள்ளவர்களே என்னை அப்படி பார்க்கும்போது வெளியே உள்ளவர்கள் கறிசோறு விருந்து வைத்தா பாராட்டுவார்கள்?

**இந்த உடலுக்க உயிரொன்று இருக்கும் வரை பசியொன்று இருக்கத்தான் செய்யும். மனசொன்று இருக்கின்றவரை அங்கலாய்ப்பொன்று இருக்கத்தான் செய்யும்.**



இளையவனை அவனுடைய போக்கிற்கு விட்டிட்டு, அவனை நாசமாக்கி வைத்திருக்கிறார்களே..! என்று நினைத்து வீட்டில் உள்ளவர்களை எனக்குள்ளே திட்டித்தீர்ப்பேன். அவனுடைய நல்ல எதிர்காலத்துக்காக அவனுக்கு நான் சொல்லுகின்ற நல்லவற்றை எல்லாம் அவர்கள் தட்டிக்கழிப்பார்கள். என்னுடைய வாயை பொத்த வைத்துவிடுவார்கள். "இது எனக்குத் தேவையில்லாத வேலை" என்றமாதிரி சொல்லி என்னை மௌனியாக்கி விடுவார்கள். இவைதான் இளையவன் தான் கெட்டுப்போக வாசியாக போயின.

அவனுடைய எதிர்கால நன்மைக்காக ஏங்குகிற என்னை அவனும் எதிரியாக பார்த்தான். அவனுக்காக நான் எது சொன்னாலும் என்னை மரியாதை இல்லாமல் திட்டினான். தன்னுடைய அறியாத பருவத்தில் தன் எண்ணப்போக்கில் நடக்க அனுமதி தருகின்ற தன்னுடைய அம்மாவையும், சகோதரர்களையும் நம்புவதில் சந்தோசமாக தெரிந்தான். இப்பவென்ன இப்ப, ஒரு காலத்திலே அவன் உணருவான், "அப்பாதான் தன்மீது சரியான அக்கறையில் இருந்திருக்கிறார். நான்தான் அதை உதாசினப்படுத்திவிட்டேன்." என்று. கட்டாயம் அவன் இதை நினைப்பான்.

இப்படி என்னை நானே ஆறுதல்படுத்தினேன்.

இப்படியாக எனக்கு நடந்த கொடுமைகளை எல்லாம் பரமனிடம் சொல்லி முடித்தேன்.

"நீங்கள் வீட்டில இருந்திருக்கலாம்தானே சேர். எதுக்காக இங்கை வந்து இப்படி கஸ்ரப்படோணும். உங்களுக்கு பென்சன் வருகுதானே..! பிறகேன், இதுக்கை இருந்து. மாயோணும்?"

என்று என் மீதுள்ள பாசம் காரணமாக பரமன் தன் மன ஆதங்கமாய் சொன்னான். பரமன் என் மீது எந்தளவு பாசம் வைத்துள்ளான் என்பதை நினைகிறபோது, மனதுக்கு ஆறுதலாயிருந்தது.

"என்னுடைய பென்சன் என்னுடைய வீட்டுக்குப்போகும். அதில நான் கை வைக்கிறதில்லை. ஒவ்வொரு மாதமும் ஒன்பதாம் திகதியோ அல்லது பத்தாம் திகதியோ பென்சன் சீற்றில கையெழுத்து வைத்து குடுக்கிறதோடு எனக்கும் அவர்களுக்குமான தொடர்பு இல்லாமல் போய்விடும். இங்கே நான் உழைத்து என்னுடைய சீவியப்பாட்டை போக்கிறன். மற்றது பேரப்பிள்ளைகள் இந்த தெருவாலைதான் பள்ளிக்கூடத்துக்கு போய் வருவார்கள். அவர்களுக்கும் கொஞ்சத்தை கொடுப்பேன். அதில் எனக்கொரு சந்தோசம்." என்று சொல்லி முடித்தேன்.

"சரி சேர், இரவாவது வீட்டுக்கு போகலாம்தானே..! இந்த கடற்கரை குளிரில படுக்க நித்திரை வருமோ..?" என்று பரமன்

சொல்லும்போதே என் கண்கள் பனித்து வந்தன.

என்னுடைய மனைவி பிள்ளைகளுக்கு இல்லாத அக்கறை என்னுடைய மாணவர்களிடம் காணும்போதுதான் மகிழ்ச்சி அடைகிறேன். அவை என் மன ஒத்தணமாக நினைத்து ஆறுதல் பெறுவேன். பரமன், அன்றுள்ள மாதிரியே இன்றும் என் மீது பாசமாக இருந்தான். இது எனக்கு ஓரளவு மகிழ்ச்சியாக இருந்தது.

"இல்லை பரமன், இனி நான் அந்த வீட்டுக்கு போகக்கூடாது. போகவும்மாட்டேன்." என்று பிடிவாதமாக சொன்னேன்.

",.......,..,..............."

"ஏன் சேர், இண்டைக்கு நான் இந்த வயசிலையும் குடிக்காமல் இருக்கிறன் என்றால் காரணம் நீங்கள்தானே சேர்..! பிறகெப்படி...?" என்று பரமன் என்னிடம் கேட்டான்.

"நான் ஊருக்குத்தான் பாடம் சொல்லிக் கொடுக்கிற வாத்தியார். வீட்டில அப்படியொன்றும் இல்லையெடா! வீட்டின்ர மானம், மரியாதை, குடும்ப அந்தஸ்த்து, கௌரவம் இதுகளுக்காகத்தான் இத்தனை காலமாக அங்கை பொறுமையாக இருந்தன்.

"...................................."

"அண்டைக்கொரு நாள் உவன் இளையவன் விடுகாலிகளுடன் சேர்ந்து குடித்துப் போட்டு மோட்டர் சைக்கிள்ல வேகமாய் போயிருக்கிறான். பள்ளிக்கூட போஸ்ற் கம்பத்தோடு மோதி அதிலேயே இறந்தும் போனான்." என்று நான் சொன்னேன்.

பரமன் திடுக்குற்று போய் நின்றான்.

இளையவனின் நினைவுகள் என்னை சாகடிக்கின்றன. செத்துவிடலாமோ என்றுகூட ஏங்குவேன். அந்த செயல் சமூகத்துக்கு முன் மாதிரி இல்லை என்றுவிட்டு அந்த எண்ணத்தையும் மறந்து போவேன். ஒரு தொழில் செய்வதை வெளியே காட்டிக்கொண்டு இந்த கொட்டில்ல நானுமிருக்கிறன். இளையவனை இப்ப நினைக்கவும் அழுகை முட்டறுத்துக்கொண்டு வந்தது. பரமனின் கண்களும் கலங்குகின்றன. என் கண்ணீர் வெளிச்சிந்தி என் கன்னங்களில் விழுகின்றன. என்னை ஆறுதல்படுத்தவோ என்னமோ பரமன் என்னுடனேயே நீண்ட நேரமாக இருந்தான்.

○○○

# எங்களுக்கு வேண்டாம்

வேண்டாம் எங்களுக்கு வேண்டவே
வேண்டாம்...!
பார் போற்றி புகழ் முழங்கும்
இந்த கவனிப்புக்கள் எல்லாம் – எங்களுக்கு
வேண்டவே வேண்டாம்...!

வருடத்தில் ஒரு தினத்தை
எங்கள் நாளாக்கி
நீங்கள் கொண்டாட.. – அன்றுகூட
எச்சிலையே உணவாகக்
கொண்டோம்...!

உடலை இயந்திரமாக்கி
வியர்வையை உரமாக்கி
உழைத்துக் கொட்டியும்
வெறுமையிலும் வறுமையிலும்
வாழும் எங்களுக்கு – நீங்கள்
தூவும் வாழ்த்துக்கள்
எங்கள் பருக்கையில்லா
வயிற்றை நிரப்புமா...?

எண்சாண் உடம்பில் – எங்கள்
ஒருசாண் வயிற்றை நிரப்ப
ஆலையிலே மடியும் கரும்பைப் போல்
எங்கள் ஆவியை தினந்தினம்
இழக்கின்றோம் – ஆகவே
என் அருமைத் தோழர்களே!
வேண்டாம் எங்களுக்கு
இந்த புகழ் மாலை
வேண்டவே வேண்டாம்..!

**சிவநாயகம் சிசிதா**
**(தற்காலிக உதவி விரிவுரையாளர்,
கிழக்கு பல்கலைகழகம், மட்டக்களப்பு)**

சிறுகதை

# கவினா





**கே. எஸ். சுதாகர்**
**(அவுஸ்திரேலியா)**

கவினாவுக்குக் கல்யாணம்.

மண்டபம் ஒரே வெளிச்சக்காடாக இருந்தது. பார்த்திபன் தேவிகா தம்பதியினருக்கு மண வறைக்கு மிக அருகாமையில் இருக்கை போட் டிருந்தார்கள். அந்த அளவுக்கு அவர்களுக்கும் பெண் வீட்டாருக்கும் நெருக்கம் இருந்தது. ஏறக்குறைய இருபது வருட நட்பு அது.

பார்த்திபன் ஆணியடித்தாற்போல் அசை யாது இருந்தான். ஒரு பெரு வெளிக்குள் இருட்டுப் பந்தொன்றிற்குள் இருப்பது போன்ற உணர்வு அவனுக்கு.

இது எப்படி நடந்தது?

பொதுவாக தமிழர் மரபில் பெண்ணைப் பெற்றவர்கள்தானே மாப்பிள்ளை கேட்டு வரவேண்டும். ஆனால் கவினாவின் பெற் றோர்கள் ஒருபோதும் தங்களிடம் அப்படிக் கேட்டு வரவில்லயே!

'இளங்கோவிற்கு அகந்தை. தான்தான் பெரியவன் என்ற மாயச் செருக்கு.'

பார்த்திபனின் மனம் பழையனவற்றுக்கும் நடப்புக்கும் இடையே கிடந்து அல்லாடுகின்றது.

❍

ஸ்கில் மைகிறேசனில் அவுஸ்திரேலியா விற்குப் புலம்பெயர்ந்த பார்த்திபன், மெல்பேர்ணில் ஒரு சிறு கிராமத்தில் குடி யிருந்தான். பிறை போன்ற தெருவின் ஒரு அந்தலையில் அவர்களது வீடு இருந்தது. ராகவ், பிறையின் ஒரு நுனியில் இருந்து மறு நுனிவரை சைக்கிளில் ஓடித் திரிவான். அவனை ஓடவிட்டு, பார்த்திபன் முன்னுக்கும் பின்னுக்கும் கலைத்துத் திரிவான்.

அப்படிப்பட்ட ஒரு நாளில்தான், அவர்கள் வீட்டிலிருந்து நான்காவது வீட்டிற்கு, புதிதாக ஒரு குடும்பம் குடிவந்தது. பெரிய வாகனம் ஒன்றிலிருந்து இருந்து கட்டில், மேசை, ரீவி போன்ற பல பொருட்கள் இறங்கிக் கொண் டிருந்தன. அவர்கள் வீட்டுப் படிக்கட்டில் முயல் குட்டி போலக் குந்திக்கொண்டு, நாடிக்குக் கையூன்றியபடி ஒரு சுட்டிப்பெண் எல்லா வற்றையும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"கவினா வீட்டுக்குள்ளை வா" அவளின் அம்மாவின் குரல் கேட்டதும், ராகவ் சைக்கி ளுடன் அப்படியே ஸ்தம்பித்து நின்று கொண் டான்.

"அப்பா.. தமிழ்க்குடும்பம்" என்றான் ராகவ்.

பார்த்திபன் உள்ளே சென்று தன்னை அவர்களுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டான். இளங்கோவும் புவனாவும் அவுஸ்திரேலியாவின் இன்னொரு மாநிலமான பிறிஸ்பேர்ணில் இருந்து வந்திருந்தார்கள்.

அதன் பிறகு இரண்டு குடும்பங்களும் பழகத் தொடங்கிவிட்டார்கள்.

பிள்ளைகள் சிறியவர்களாக இருந்ததால், தேவிகாவும் புவனாவும் வேலைக்குப் போவதில்லை. இருவரும் சமைப்பதும், உணவைப் பரிமாறுவதும் - பிள்ளைகளைப் பராமரிப்பதுமாக இருந்தார்கள்.

ராகவ் பள்ளி விட்டு வந்ததும், கவினா அவர்கள் வீட்டிற்கு விளையாடுவதற்காக

வந்துவிடுவாள். அவள் வாய் திறந்து எதையுமே கேட்க மாட்டாள். பேதை. சும்மா பொம்மிக் கொண்டிருப்பாள். “சொக்கிளேற் வேணுமா?” - மேலும் கீழும் தலையாட்டுவாள். “ரீ வேணுமா?” - பக்கப்பாட்டுக்கு ஆட்டுவாள். பார்க்கச் சிரிப்பாக இருக்கும்.

ஒருநாள் பார்த்திபனும் தேவிகாவும் கட்டிலில் இருந்தபடி கதைத்துக் கொண்டிருந்தார்கள். ராகவ் திடீரென்று துள்ளிப்பாய்ந்து அவர்கள் இருவருக்குமிடையே புகுந்து கொண்டான். கவினா தயங்கியபடியே கதவருகில் நின்று எட்டிப் பார்த்தாள்.

“நீயும் வாடீ.. வா வந்து ஏறு.” என்றாள் தேவிகா. கவினாவுக்குக் கட்டில் எட்டவில்லை. தவழ்ந்து தவழ்ந்து ஏறினாள். கவினாவை அப்படியே வாரி அணைத்துத் தூக்கி, கன்னத்தில் ஒரு முத்தம் குடுத்து தனக்கும் மகனுக்குமிடையே அவளை இருத்தினாள் தேவிகா. இதைப் பார்த்துக்கொண்டிருந்த ராகவ், தானும் தன் பங்குக்கு கவினாவுக்கு ஒரு உம்மா குடுத்தான். கவினா வெட்கத்தினால் நெளிந்து கொண்டாள்.

“எங்களுக்கும் கவினா போல ஒரு பெண் குழந்தை இருந்தா...” விம்மினாள் தேவிகா.

‘அதுக்குத்தானே நாங்கள் கொடுத்து வைக்கவில்லையே!’ தேற்றினான் பார்த்திபன்.

தேவிகாவுக்கு முதல் பிரசவத்தின் பின்னர் கர்ப்பப்பை இறக்கம் ஏற்பட்டு, அதை அகற்றியிருந்ததுதான் அவர்கள் இருவரினதும் ஏக்கத்துக்குக் காரணம்.

“இவள்தான் எங்கட மகள்.” கவினாவைக் கட்டி அணைத்தாள் தேவிகா.

“அப்ப நான்” என்றான் ராகவ். “நீ மகன்.”

தேவிகா பார்த்திபனைப் பார்த்தாள். அவன் சிரிக்க தானும் சிரித்துக் கொண்டாள். அவர்களையே பார்த்துக் கொண்டிருந்த குழந்தைகள் இருவரும், ஒன்றுமே புரியாமல் தாங்களும் சிரித்துக் கொண்டார்கள்.

பார்த்திபன் அவர்கள் இருவருக்குமாக ஒரு ‘ஹப்பி ஹவுஸ்’ கட்டிக் குடுத்திருந்தான். சின்ன மரத்தில், ஏணி வைத்து ஏறக்கூடியவாறு அது இருந்தது. ராகவ்வும் கவினாவும் அனேகமாக அதற்குள் இருந்து கிசுகிசுத்துக் கதைத்தபடி இருப்பார்கள். கவினா எப்பொழுதும் ராகவ்வின் முகத்துக்குள் தன்னுடைய முகத்தையும் ஒட்ட வைச்சுக் கொண்டிருப்பாள்.

ஒருநாள் ஹப்பி ஹவுசிற்குள் இருவருக்குமிடையே சண்டை வந்துவிட்டது. “உனக்குப் பெரிய வாய்” கவினாவைப் பார்த்து ராகவ் சொன்னான். கவினா மூக்கைத் துடைத்து அவன் மேல் பூசிவிட்டு, விறுவிறெண்டு கீழ் இறங்கி ஏணியையையும் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டாள். ராகவ் ஹப்பி ஹவுசிற்குள் நின்றபடி கத்தினான்.

“கவினா லடரைக் கெதியிலை வை.”

சத்தம் கேட்டு ஜன்னலைத் திறந்து பார்த்தான் பார்த்திபன். அதற்கிடையில் மரத்திலிருந்து குதித்த ராகவ், கவினாவைத் துரத்திப் பிடித்து அடித்துவிட்டான். இருவரையும் சமாதானம் செய்ய பார்த்திபனுக்கு போதும் போதுமென்றாகிவிட்டது. மூக்கெல்லாம் வடிய கண்களைக் கசக்கியபடியே வந்து படிக்கட்டில் அமர்ந்தாள் கவினா. பார்த்திபன் ராகவ்வை உள்ளே கூட்டிச்சென்று, போதனைகள் செய்து கொஞ்ச ரிசூக்களை அவனிடம் குடுத்தான்.

“இந்தா பிடி.. தங்கைச்சியின்ரை முகத்தைத் துடைச்சுவிடு.”

வெளியே வந்த ராகவ், கவினாவின் வாய், மூக்கு எல்லாவற்றையும் ரிசூவினால் துடைத்து சுத்தம் செய்துவிட்டு அவளைக் கட்டிப் பிடித்துக் கொஞ்சினான்.

ராகவ் அடித்ததை கவினா வீட்டில் போய் முறையிடுவாள், அதனால் ஏதும் பிரச்சினைகள் வரலாம் என எதிர்பார்த்த பார்த்திபனுக்கு ஏமாற்றம்தான் கிட்டியது. கவினா எதையுமே வீட்டில் போய் சொல்லவில்லை. ஒன்றுமே நடவாதது போல மறுநாளும் வந்து விளையாடி விட்டுப் போனாள்.

❍

மணமேடையில் மாப்பிள்ளை அமர்ந்திருக்கின்றான்.

“மாப்பிள்ளையா உவன்? கவினாவுக்கு எந்தவிதத்திலும் பொருத்தமே இல்லை. எனக்குப் பாக்கப் பாக்க கோபம் பொத்துக் கொண்டு வருது. இந்தக் ‘கோக்’ போத்தலைத் தூக்கி அவன் மீது எறிந்தால் என்ன!” பார்த்திபன் பொருமுகின்றான்.

“கொஞ்சம் பேசாமல் இருங்கோ. ஆக்களுக்குக் கேட்கப்போகுது.”

“எங்கையிருந்து உவனைக் கண்டுபிடிச்சாள்? பாழாய்ப்போன காதலா? ஒட்டகம் போல மூச்சை இழுத்து இழுத்து விடுறான்.”

“ஆரோ மசிடோனியாக்காரனாம்.. எங்கட ராகவ் எவ்வளவு வடிவு. அவனுக்குக் கிட்டவும் வரமாட்டான் உவன்” தேவிகா ஒத்தூதினாள்.

“உப்பிடியே மசிடோனியா பிலிப்பைன்ஸ் சீனா வியட்நாம் எண்டு போனா எங்கடை கலாசாரம் பண்பாடு எல்லாம் என்னவாகும்?” பெருமூச்செறிந்தான் பார்த்திபன்.

ராகவ் நான்காவது படிக்கும்போது, கவினா பள்ளிக்குப் போக ஆரம்பித்தாள். ராகவ் பள்ளிக்குப் போகும்போது கவினாவையும் கூட்டிச் சென்று, வரும்போது பத்திரமாகக் கூட்டியும் வருவான். இடையிடையே அவளின் வகுப்புக்குச் சென்று, தான்தான் அவளின் பாதுகாவலன் என்பதுமாப்போல் கவனித்தும் வருவான்.

கவினாவின் அப்பா இளங்கோ பேராசை பிடித்தவன். வேலை வேலை என்று அலைந்து திரிவான். நேரகாலத்திற்கு வீட்டுக்கும் வரமாட்டான். தான் செய்யும் வேலையிலும் திருப்தி காண்பவன் அல்ல. அடிக்கடி வேலை மாறிக் கொண்டிருப்பான். சுடுகுது மடியைப் பிடி ரகம். மனைவி புவனாவும் படித்தவள் தான். ஆனா அவள் ஹவுஸ் வைப்ஃ. ஆக இருந்தால் போதும் என்பது அவன் நினைப்பு. அதனால் அவனுக்கும் மனைவிக்குமிடையே அடிக்கடி சண்டை வரும்.

இளங்கோவுக்கு சிட்னியில் வேலை கிடைத்து மாற்றலாகிப் போகும்போது, பிள்ளைகளிடையே பெரிய போர்க்களமே நடக்கலாம் என எதிர்பார்த்தார்கள். ஆனால், அப்படி ஒன்றும் நடக்கவில்லை.

“கவினா... அண்ணாவைக் கட்டிப் பிடிச்சுக் கொஞ்சிவிடு.”

ராகவ்வின் கன்னங்களில் பளிச் பளிச் என முத்தம் பதித்த கவினா, அவனின் காதிற்குள் ஏதோ கிசுகிசுத்தாள்.

“அன்ரிக்கு ஒண்டு குடு...”

“நோ... !”

“அங்கிளுக்கு...”

எச்சில் ஒழுக பார்த்திபனின் கன்னங்கள் நனைந்தன.

“அங்கிள் அவளுக்கு கே எவ் சி, மைக்டொனால்ஸ் அது இது எண்டு எல்லாம் வாங்கிக் குடுத்து மருட்டி வைச்சிருக்கிறார். அதாலை கவினா அங்கிளோட நல்ல வாரப்பாடு...” தேவிகாவின் ஏக்கம் அப்படி வெளிப்பட்டது.

அவர்கள் சிட்னி போனபின், கவினா காதிற்குள் சொன்ன ரகசியம் வெளித்தது. டிசெம்பர் ஸ்கூல் கொலிடேக்கை வீட்டை வந்து நிக்கச் சொன்னவள்” என்றான் ராகவ்.

கவினா சிட்னி போவதற்கு முதல் நாள் ராகவ்வுடன் ‘நைற் அவுற்’ செய்தாள். மறுநாள் புறப்படும் அவசரத்தில் தனது ‘பிங்’ நிற குளிருடுப்பை மறந்து போய் விட்டுவிட்டாள். அப்படித்தான் எல்லாரும் நினைத்தார்கள். ஆனால் நடந்தது அதுவல்ல.

சிட்னிக்கு தொலைபேசி எடுத்து தேவிகா சொன்னபோது, “அது அண்ணாவுக்கு” என்றாள் கவினா.

“அது பெட்டைச் சட்டையடி” என்றான் இளங்கோ.

“இல்லை.. அது குளிருடுப்பு. ஆரும் போடலாம்” என்றாள் கவினா.

அதுக்குப் பிறகு வந்த ஒவ்வொரு மார்கழி விடுமுறைக்கும் பார்த்திபன் குடும்பத்தினர் சிட்னி போய்விடுவார்கள். மார்கழி வரும் பள்ளி விடுமுறை நீண்டது. கிறிஸ்மஸ் அலங்காரங்கள் வேறு பார்ப்பதற்கு அழகாக இருக்கும். வீட்டிற்கு முன்னால் மின் விளக்குகளால் சோடித்திருப்பார்கள். இரண்டு குடும்பத்தினரும் காலாற நடந்து சென்று அவற்றை எல்லாம் பார்த்து இரசிப்பார்கள். ராகவ்வும் கவினாவும் ஒருவர் கையை மற்றவர் பிடித்தபடி துள்ளித்துள்ளி வருவார்கள்.

**ஒரு பெண்ணுக்கு ஒரு ஆணைப் பிடிச்சிருந்தா, பிடிச்சிருக்கு எண்டு சொல்லுவாள். இல்லாட்டி இல்லை எண்டு சொல்லுவாள். அதுதான் லவ். அதுக்குப் போய் உன்னை ஏன் அவள் கேக்க வேணும்?**

இரண்டாவது தடவை சிட்னி சென்றபோது கவினாவுக்கு ஒரு தம்பிப் பாப்பா பிறந்திருந்தான். கவினாவுக்கும், தம்பி சாத்விக்கிற்கும் இவர்கள் உடுப்புகள் வாங்கிச் சென்றார்கள்.

"பெம்பிளப் பிள்ளையளுக்குத்தான் கடையளிலை நல்ல வடிவு வடிவான சட்டையள் இருக்கு." கவினாவின் உடுப்பை தேவிகா அவளுக்குப் போட்டு அழகு பார்த்தாள்.

அவர்களின் பின்வளவிற்குள் இருக்கும் நீண்ட வாங்கொன்றின் நுனியில் இருந்தபடி நேரம் போவது தெரியாமல் ராகவ்வும் கவினாவும் கதைத்துக் கொண்டிருப்பார்கள். சில வேளைகளில் ராகவ்வினது மடியில் தலை வைத்து, கால்களை வாங்கின் மீது நீட்டி வைத்திருப்பாள் கவினா.

கவினா பெரியவளானபோது நடந்த சடங்கிற்கு பார்த்திபன் குடும்பத்தினரால் போக முடியவில்லை. அதற்கடுத்த வருடம் சிட்னி போனபோது கவினாவின் நடவடிக்கைகளில் பெரும் மாறுதல் இருந்தது. கவினா பெரும் பாலும் தனது அறைக்குள்ளேயே ஒளிந்து இருந்தாள். தன்னுடைய அறைக்குள் யாரும் வருவதையும் விரும்பவில்லை. அவளின் நடவடிக்கைகள் ராகவ்விற்கு பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது.

"அவள் இப்பிடித்தான்... பெரிசானதிலிருந்து ஒரே வெட்கம். நீங்கள் பாருங்கோ.. கொஞ்ச நேரத்திலை அவள் ராகவ்வுடன் ஒட்டிவிடுவாள்" சமாதானம் சொன்னாள் புவனா. புவனா சொன்னது போல மறுநாள் அவள் ராகவ்வுடன் ஒட்டிவிட்டாள்.

இரண்டு வருடங்கள் கழிந்து போனபோது கவினா இன்னும் பெரிதாக வளர்ந்து ஒரு மங்கையாகிவிட்டாள். சாத்விக் நடக்கத் தொடங்கியிருந்தான். அந்தத் தடவை எல்லாரும் கடற்கரை சென்று நீரில் கால் நனைத்து விளையாடினார்கள். கடற்கரை பெஞ்சில் இளங்கோவும் புவனாவும் இருக்க, பார்த்திபனும் தேவிகாவும் கலங்கரை விளக்கம் பார்க்கச் சென்றார்கள்.

ராகவ்வும் கவினாவும் குட்டிக்குட்டிப் பாறைகளின் மீது தாவி, அதன் இடுக்குகளில் நண்டு தேடினார்கள். மணலிற்குள் குழி பறித்து, கவினாவை அதற்குள் இருத்தி, அவளின் கழுத்துவரை ராகவ்வும் சாத்விக்கும் மணலால் மூடினார்கள். கவினா அவர்கள் இருவரினதும் சேஷ்டைகளுக்கெல்லாம் இடம் குடுத்தபடி சிரித்துக் கொண்டிருந்தாள்.

இளங்கோவும் புவனாவும் வந்த நேரம் தொடக்கம் வாக்குவாதப்பட்டுக் கொண்டிருந்தார்கள். திடீரென்று ஏதோ சத்தம் கேட்டு கவினாவும் ராகவ்வும் பார்த்தபோது, இளங்கோ புவனாவுக்கு கன்னத்தில் அறையும் காட்சி தெரிந்தது. சாத்விக் எதிர்த் திசையில் இருந்தபடியால் அவன் அதைக் கவனிக்கவில்லை. பொது இடத்தில் வைத்து, அப்பா அம்மாவை அடித்தது கவினாவின் மனதைப் பாதித்தது. அவளின் மனநிலை மாறி அன்று முழுவதும் மௌனமாக இருந்தாள்.

அந்த சம்பவத்திலிருந்து ராகவ்விற்கும் கவினாவின் அப்பாவைப் பிடிக்கவில்லை.

இதெல்லாம் நடந்து சில மாதங்களில், இளங்கோ குடும்பத்தினர் திடீரென்று சிட்னியை விட்டுப் புறப்பட்டு பேர்த் என்ற மாநிலத்திற்குப் போய்விட்டார்கள். பேர்த்திற்கு மெல்பேர்ணில் இருந்து காரில் போக முடியாது. விமானம் என்றாலும் நான்கரை மணி நேரம் செல்லும். இரு குடும்பத்தினரும் ரெலிபோன் மூலமே உரையாடினார்கள்.

ஒருமுறை மெல்பேர்ணில் நடந்த திருமணம் ஒன்றிற்காக, இளங்கோ குடும்பத்தினர் பேர்த்திலிருந்து வந்து நாலு நாட்கள் தங்கி நின்றார்கள். அப்போது ராகவ் பல்கலைக்கழகத்தில் இரண்டாம் ஆண்டில் படித்துக் கொண்டிருந்தான். கவினா பதினொராம் வகுப்பில் இருந்தாள். நீண்ட நாட்களின் பின்னர் சந்தித்துக் கொண்டதில், மூன்று பிள்ளைகளுக்கும் ஒரே கொண்டாட்டம்தான்.

ராகவ் தான் படிக்கும் பல்கலைக்கழகத்தை, பொறுமையாக எல்லாருக்கும் சுற்றிக் காண்பித்தான். சிறு வயதில் வீரதீரச் செயல்கள் புரியும் ராகவ், வளர்ந்து பெரியவனானதும் பொறுப்புடன் நடந்து கொண்டதை எண்ணிப் புவனா வியந்தாள்.

இரவுச் சமையலின் போது, "அன்ரி.. சமையலுக்கு ஏதாவது உதவி செய்து தரட்டுமா?" என்று தேவிகாவைக் கேட்டு, அவள் தலையில் பெரியதொரு ஐஸ் கட்டியை வைத்தாள் கவினா.

இரவு சாப்பாட்டின் பின்னர் ஒரு அதிசயம் நிகழ்ந்தது.

“சத்தம் போடாம ராகவ்வின்ரை றூமை ஒருக்கா எட்டிப் பாருங்கோ..” தேவிகா பார்த்திபனின் காதிற்குள் இரகசியம் பேசினாள்.

பார்த்திபன் பதுங்கிப் பதுங்கிப் போனான். ராகவ்வின் ‘சிங்கிள் பெட்’டில் மூன்றுபேரும் தங்களைப் போர்வை ஒன்றினால் போர்த்தியபடி சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். ராகவ் மத்தியிலும் அக்காவும் தம்பியும் இடமும் வலதுமாகவும் இருந்தார்கள்.

“யாருக்காவது ரீ கோப்பி வேணுமா?” பார்த்திபன் கேட்டபோது ‘நோ’ என்று மூன்று பேரும் ஏக காலத்தில் கத்தினார்கள். கத்தியபின் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்தார்கள்.

இட நெருக்கடியினால், கவினா இரவு தேவிகாவுடன் உறங்குவதாக ஏற்பாடாகியிருந்தது. எங்கே அவர்கள் மூவரும் அந்த ‘சிங்கிள் பெட்’டிலேயே உறங்கிவிடுவார்களோ என்ற பயம் தேவிகாவிடம் புகுந்து கொண்டது.

“என்ன ராகவ்வும் கவினாவும் லவ்வேர்ஸ் போல.. ” பார்த்திபன் சொல்ல, “அதுகளுக்கிடையிலை அப்பிடி ஒண்டுமில்லை. நீங்கள் தான் சும்மா சும்மா கற்பனை பண்ணிக் கொண்டிருக்கிறியள்” என்றாள் தேவிகா.

“இரண்டு பேரும் நல்ல சோடிப் பொருத்தம். கவினா எங்களுக்கு மருமகளாக வந்தால் நல்லது” பார்த்திபன் சொல்ல தேவிகா சிரித்தாள்.

“இனி அதுகள் மனத்திலை என்ன இருக்கோ?”

நெடுநேரமாக அவர்கள் மூவரும் கதைத்துக் கொண்டே இருந்தார்கள்.

இளங்கோ அறைக்குள் நுழைந்து, கவினாவிற்கு கன்னத்தில் அறைந்து வெளியே இழுத்துக் கொண்டு போய்விடுவானோ என பார்த்திபனும் தேவிகாவும் பயந்தபடி இருந்தார்கள்.

“கவினா.. போய் தேவிகா அன்ரியோடை படு” புவனா அறைக்குள் சென்று கவினாவுடன் இரகசியம் பேசினாள். கவினா ஒன்றும் பேசாது மௌனம் சாதித்தாள். அதன் பின்னர், தேவிகா சென்று “வாம்மா.. வா.. வந்து என்னோடை படு” என்று கவினாவைக் கூட்டிச் சென்றாள். அன்று பார்த்திபன் தனது இடத்தை கவினாவுக்கு விட்டுக் குடுத்துவிட்டு, சுவாமி அறைக்குள் தஞ்சமடைந்தான்.

ராகவ் பல்கலைக்கழகப் படிப்பு முடிந்து வேலை செய்யத் தொடங்கியவுடன் அவனுக்கு கவினாவைத் திருமணம் செய்து வைக்கும் முயற்சி தொடங்கியது.

“ராகவ்.. உனக்கு கவினாவைக் கலியாணம் பேசலாம் எண்டு யோசிக்கிறம்..”

“உங்களுக்கென்ன விசரா? கவினா எனக்குத் தங்கைச்சி மாதிரி..” ஒரே சொல்லில் முற்றுப்புள்ளி வைத்தான் ராகவ்.

“கவினாவைப் போல ஒரு தமிழ்ப்பிள்ளை எடுக்கிறது கஸ்டம். எங்களுக்கும் ஒத்தாசையாக இருப்பாள்” என்றாள் தேவிகா.

“அதுக்கு நான் என்ன செய்யிறது? கவினா நல்லவள் தான். ஆனா அவளின்ரை அப்பாவை எனக்குப் பிடிக்காது. அந்தாளோடை என்னாலை காலம் தள்ளேலாது. எனக்குரிய பெண்ணை நானே தெரிவு செய்கின்றேன்” முடிந்த முடிவாக ராகவ் சொல்லிக் கொண்டான்.

அவனது அந்தப் பதில் தேவிகாவைச் சிந்திக்க வைத்தது. ஒருவேளை கவினா கேட்டால், ராகவ் அவளைத் திருமணம் செய்யக்கூடும்.

பிறகும் ஒருநாள் அதே பேச்சைத் தொடங்கியபோது, “கவினாவுக்கு யூனியிலை ஒரு போய் ஃபிரண்ட் இருக்கின்றான்” என்று ராகவ் குண்டைத் தூக்கிப் போட்டான். பார்த்திபனும் தேவிகாவும் ஆடிப் போய்விட்டார்கள்.

இப்பொழுது அதே பையனுக்கும் கவினாவுக்கும் திருமணம்.

❍

“பெம்பிள வாறாள்... பாருங்கோ..”

தலையை மேசைக்குள் குத்தி வைத்துக் கொண்டிருந்த பார்த்திபனைச் சுரண்டினாள் தேவிகா.

மணப்பெண் வருகின்றாள். அழகான ஒரு பாடல் நாதஸ்வரமாக ஒலிக்கின்றது.

“கவினா வாறாள்.. பாருங்கோ. நல்ல சுப்பர் சாறி..”

கவினா கையில் ஒரு மாலையுடன் பூனை போல அடியெடுத்து வருகின்றாள். அப்படியே மாலையைக் கொண்டு போய் ராகவ் கழுத்தில் போடமாட்டாளா என்ற ஏக்கம் பார்த்திபன் மனதில் பிறக்கின்றது.

அவன் திரும்பி மகன் இருக்கும் மேசையைப் பார்க்கின்றேன். ராகவ் அருகில் இருக்கும் தன் வயதொத்தவர்களுடன் சிரித்துக் கதைத்துக் கொண்டிருக்கின்றான்.



ஒரு இளம் பெண் திருமண சடங்கு முறைகள் பற்றி ஆங்கிலத்தில் விளக்கம் குடுத்துக் கொண்டிருந்தாள். பார்த்திபனுக்கு ஐயரின் சடங்குகள் ஒன்றிலும் மனம் ஒன்ற வில்லை.

மரபுச் சடங்கிற்கு மாப்பிள்ளை மதிப்புக் குடுக்கவில்லை. தாலி கட்டியவுடன் தனது பாஷையில் 'தான் அவளுக்குத் தாலி கட்டிவிட்டேன்.. ஹே' என்று சத்தமிட்டான். கணையாழி எடுக்கும் நிகழ்வில், கவினா முதல் தடவையாக மஞ்சள் நீர் நிறைந்த பாத்திரத்தில் இருந்து மோதிரத்தை எடுத்துவிட்டாள். அடுத்த தடவை ஐயர் மோதிரத்தைப் போட்டவுடன், எங்கே கவினா விட்டுக் கொடுத்துவிடமாட்டாளோ என்ற பயத்தில், மாப்பிள்ளை பாத்திரத்தைத் தூக்கிக் கொண்டு மேடையை விட்டு இறங்கி ஓடிவிட்டான். மாப்பிள்ளையின் நடவடிக்கைகள் பார்த்திபனுக்கு எரிச்சலை உண்டுபண்ணியது.

அன்று மாலை திருமண வரவேற்பு நடந்தது. மாப்பிள்ளை 'றிசெப்ஷன்' நிகழ்வில் கவினாவைத் தூக்கித் தூக்கி எறிகின்றான். இரண்டொரு தடவைகள் நிலத்திலே போட்டும் விட்டான். பார்த்திபனுக்குப் பொறுக்கவில்லை. இருக்கையை விட்டு எழுந்து 'டான்ஸ்' நடக்குமிடம் போகின்றான். மணமக்களை நெருங்கவிடாமல் இளவட்டங்கள் ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். பின்னாலே வந்த தேவிகா பார்த்திபனின் தோளைப் பற்றினாள்.

"எங்கை போறியள்? டான்ஸ் ஆடி விழப் போறியளே?"

"மாப்பிள்ளைக்கு தான் பெரிய அலெக்ஷாண்டர் எண்ட நினைப்பு. பாவம் கவினா.. அவளைத் தூக்கித் தூக்கிப் போடுறான். அவனுக்கு உறைக்கிற மாதிரி கொஞ்சம் சொல்ல வேணும்."

"நீங்களும் அப்ப என்னைத் தூக்கித் தூக்கி எறிஞ்சனியள் தானே! வாங்கோ இஞ்சாலை.." தேவிகாவின் உரப்பில் மெல்லப் பின் வாங்குகின்றான் பார்த்திபன்.

நடன நிகழ்வுகள் நிறுத்தப்பட்டு, அவர்கள் இளைப்பாற பாட்டுக்கச்சேரி ஆரம்பமானது. தமிழ்ப்பாடல்களும் மசிடோனியாப் பாடல்களுமென மாறிமாறிப் பாடத் தொடங்கினார்கள்.

"அவங்கட பாட்டுகளும் நல்லாத்தான் இருக்கு." பார்த்திபன் பாடல்களில் லயித்திருக்க,

"பின்னாலே ஆர் வந்து நிக்கிறதெண்டு பாருங்கோ.." என்றாள் தேவிகா.

முத்துக்களினாலும் பவளங்களினாலும் இழைக்கப்பட்ட ஆடையில் ஒரு தேவதை போல கவினா நின்றாள். பார்த்திபன் கவினாவை நிமிர்ந்து பார்த்துவிட்டு, வீறாப்புடன் தலையைக் குனிந்து கொண்டான். தேவிகா இருக்கையை

விட்டு எழுந்து கவினாவைக் கட்டிப் பிடித்துக் கொஞ்சினாள்.

"மாப்பிள்ள எங்கை?"

"அவர் தங்கட பக்க ஆக்களைச் சந்திக்கப் போட்டார்."

கலியாணத்தின் போது இரண்டு வீட்டாரினதும் மேசைகளைக் கலந்து போட்டிருந்தவர்கள், றிசெப்ஷனில் இடமும் வலதுமாகப் பிரித்திருந்ததை அப்போதுதான் அவதானித்தாள் தேவிகா. சிறிது நேரம் கவினாவுடன் கதைத்துவிட்டு இருக்கையில் அமர்ந்த தேவிகா, பார்த்திபனையே பார்த்தபடி இருந்தாள்.

"கவினா உங்களையே பாத்துக்கொண்டு நிக்கிறாள். அவளை ஒருக்கா வாழ்த்தி விடுங்கோ.."

பார்த்திபன் இருக்கையில் இருந்து எழுந்து கவினாவை இறுக அணைத்தான்.

"நல்ல அழகா இருக்கிறீர். உமக்கு உடுப்பு நல்ல வடிவா இருக்கு."

"ஒரே பாரமா இருக்கு அங்கிள். ஐஞ்சு கிலோ. தூக்கிக் கொண்டு நடக்க கஸ்டமா இருக்கு."

"ஒரு நாளைக்குத்தானே பிள்ளை.."

"ஓம் அங்கிள்."

"நான் உம்மை எங்கடை வீட்டோடை வைச்சிருக்கவல்லே விரும்பினான்." பார்த்திபனின் திடீர்ப் பேச்சினால் கவினா திகைத்துப் போனாள். தனது முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்ட அவள், "அதை உங்கடை மகனிட்டைக் கேளுங்கோ" என்று சொல்லிவிட்டு விறுவிறெண்டு போய்விட்டாள்.

"கவினா எங்களிட்டை முதல் பிளெசிங் வாங்கவேணுமெண்டு எல்லா ரேபிளையும் தாண்டி வந்திருக்கின்றாள். பாருங்கோ அங்கை.. இப்ப முதலிலையிருந்து ஒவ்வொரு ரேபிளா வாறாள்" தேவிகா சொல்ல பார்த்திபன் கவினாவைப் பார்த்தான்.

கவினாவின் கண்களிலிருந்து கோடாக இறங்கிய கண்ணீர், ஒப்பனையைக் கலைத்துக் கொண்டு, மூக்கின் ஓரங்களின் வழியே படர்ந்து, மேலுதட்டில் விளிம்பு கட்டி நின்றது.

பார்த்திபனின் மனது திக்கென்றது. குற்றவுணர்வில் ஒடுங்கிப் போக, "வீட்டை போவமா?" என தேவிகாவிடம் கேட்டான்.

இப்போது பார்த்திபன் குடும்பத்தினர் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

"ராகவ்.. உனக்கு கவினாவின்ரை மாப் பிள்ளையை முதலிலேயே தெரியுமா?" காரை ஓட்டியபடி பார்த்திபன் கேட்டான்.

"படத்திலை பாத்திருக்கிறன்."

"எப்பிடி?" பின்னாலே திரும்பி தேவிகா கேட்டாள்.

"கவினா யூனியிலை படிக்கேக்கை, அவன்ரை போட்டோவை எனக்கு அனுப்பி, பின்னாலையும் முன்னாலையும் துரத்துறான் அவனுக்கு நான் என்ன சொல்லுறது எண்டு ரெக்ஸ்ற் பண்ணியிருந்தவள்."

"உனக்கு முன்பின் தெரியாத ஒருத்தன்ரை போட்டோவை அனுப்பி, அவனுக்கு என்ன சொல்லுறது எண்டு கேட்டா அதுக்கு என்ன அர்த்தம்? அவள் உன்னை விரும்புகின்றாள் எண்டதுதான் அதுன்ரை விளக்கம்." பிரேக் அடித்து நடு வழியில் காரை நிற்பாட்டினான் பார்த்திபன்.

"அப்பா.. முதலிலை காரை எடுங்கோ.. அல்லது கரையிலை ஓரங் கட்டுங்கோ. நல்ல காலம். பின்னாலை ஒரு காரும் வரேல்லை."

பார்த்திபன் காரை ஓரமாக நிப்பாட்டினான். ராகவ் நிறையவே ஒளிக்கின்றான் என்பதை இருவரும் புரிந்து கொண்டார்கள்.

"கவினாவின்ரை ரெக்ஸ்ற் மெசேஜ்சிற்கு நீ என்ன போட்டாய்" தேவிகா அவனை விடுவதாக இல்லை.

"உனக்குப் பிடிச்சிருந்தா ஓமெண்டு சொல்லு - என்று போட்டனான்."

"ஒரு பெண்ணுக்கு ஒரு ஆணைப் பிடிச்சிருந்தா பிடிச்சிருக்கு எண்டு சொல்லுவாள். இல்லாட்டி இல்லை எண்டு சொல்லுவாள். அதுதான் லவ். அதுக்குப் போய் உன்னை ஏன் அவள் கேக்க வேணும்? வா வந்து முன்னுக்கு ஏறு. என்னாலை கார் ஓடேலாமல் கிடக்கு." சொல்லிவிட்டு பார்த்திபன் காரிலிருந்து இறங்கிப் பின் சீற்றில் ஏறிக் கொண்டான்.

பார்த்திபனுக்கு உலகமே இருண்டது போல் இருந்தது. அதில் கண்ணீரில் கரைந்த கவினாவின் முகம் தான் முன்னே தெரிந்தது.

# குடியிருந்த நிலம்

சிறுகதை





சி. ரஞ்சிதா

மணி பத்து ஆகிவிட்டது. "டாங்.. டாங்.." மருதனார் மடம் ஆஞ்சநேயர் கோயில் மணியோசை பக்தர்களை பூஜைக்கு அழைப்பு விடுத்துக்கொண்டிருந்தது. இன்று சனிக்கிழமை - சனநெரிசல் அதிகமாகவே இடைஞ்சலை ஏற்படுத்தியது. ஆஞ்சநேயர் கோயிலில் ஒவ்வொரு சனிக்கிழமையும் அன்னதானம் வழங்குவதால் பக்தர்கள் மட்டுமல்ல, பிச்சைக்காரர்கள், கை விடப்பட்ட அங்கவீனர்கள், முதியோர்கள் இன்று கோயிலைச் சூழ்ந்துக்கொண்டனர்.

வானளவு உயர்ந்து நிற்கும் ஆஞ்சநேயரை வான்நோக்கி அண்ணார்ந்து பார்க்கமுடியாமல் சூரியன் கண்களைச் சிறைவைத்தான். "இண்டைக்கு ஒரு வெற்றிலை மாலையை போட்டுவிட்டுத்தான் போகவேணும். இல்லாட்டி அம்மா கோவிச்சுப்போடுவா.." நினைத்துக்கொண்டு கோயிலின் பக்கத்தில் உள்ள சந்தைக்குள் புகுந்துக்கொண்டேன். ஒரே சத்தம். "தம்பி... இஞ்சை வாங்கோ நல்ல மாம்பழம் நாலு நூறு ரூபா.. தம்பி இஞ்சாலை வந்து கரும்பு வாங்குங்கோ ஒரு கட்டு அம்பது ரூபா.. குறைச்சுப் போடலாம் வாங்கோ.." இந்த இரைச்சலுக்கு மத்தியில் என்னை விடுவித்துக்கொண்டு வெற்றிலைகள் விற்கப்படும் இடத்திற்குள் நுழைந்துக்கொண்டேன். ஒருவாறு சனநெரிசல்களை வெற்றிகொண்டு நூற்றியெட்டு வெற்றிலைகள் கோர்க்கப்பட்ட மாலையுடன் சந்தையிலிருந்து விடுதலையடைந்தேன்.

பூஜை முடிய பன்னிரண்டு மணி ஆகிவிட்டது. சந்தைக்கு 'ஒப்பசீட்டாக' இருந்த 'பஸ் ஹோல்'டில் வந்து அமர்ந்துக்கொண்டேன். ஒரே களைப்பு. வெயில் கொளுத்திக்கொண்டிருந்தது. யாழ்ப்பாண வெயில் என்றால் சொல்லவா வேண்டும். அப்பர் சுவாமிகள் "மூசு வண்டறை பொய்கையைப் போன்றது.." பாடிய தேவார வரிகளே என் நினைவை உரசிச் சென்றன. சுண்ணாம்பு அறைக்குள் இருந்த வெப்பம்கூட இறைவனை நினைக்க குளிர்ச்சியான பொய்கையில் இருந்தது போல அப்பரைக் குளிர்வித்தது. எனக்கும் அப்படியே என என்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டேன்.

யாழ்ப்பாணம் போகும் பஸ் வந்தவுடன் ‘ டவுனுக்குச் சென்று பின்னர் பளைக்குச் செல்ல வேண்டும். போனால்தான் திங்கட்கிழமை அந்தக் காரியத்தை முடிக்கலாம். இன்றுகூட கோயிலுக்கு வந்ததன் நோக்கம் அந்தக் காரியம் வெற்றியளிக்க வேண்டும் என்பதற்கான கோரிக்கையை இறைவனிடம் முன்வைப்பதற்காகவே’

“என்னப்பா ராசு... பெரிய யோசனைப் போல கிடக்கு...” என்னுடைய முதுகைத் தட்டியவாறு எனக்குப் பின்னால் தம்பியண்ணை நின்றுக்கொண்டிருந்தார்.

“என்ன அண்ணை இந்தப் பக்கம் செய்யிறீயள்...! எப்ப ஊராலை இருந்து வந்தியள்..?”

“நேத்துத்தானப்பா வந்தனான். அம்மாவுக்கு உடம்பு இப்ப கொஞ்சம் தேரிட்டு. மனுசிக்கு வயசும் ஏறிப்போச்சு... அதுதான் எண்ட மனுசிய விட்டுப்போட்டு வந்தனான்... இண்டைக்கு பனங்கிழங்கு அம்பது கட்டு கொண்டு வந்தன். சந்தைக்குப் போடவேணும்... அதை விடு உன்ட சோளி என்ன ஆச்சு..!? உங்கட பனங்காணிக்கு அரசாங்கத்திலை என்ன சொல்லிறீனம்..?”

“அதுதான் அண்ணை... திங்கட்கிழமை ஒருக்கா ‘மீட்டிங்’ இருக்காம். அது முடிஞ்சா பிறகு காணிகளை விடுவிக்கிறதைப் பற்றி சொல்லுவினம்... பல வருஷ போராட்டம்... ம்.. என்ன தீர்வுன்னுதான் தெரியேல்லை...” கூறும்போதே என்னுடைய தொண்டை ஒரு நிமிடம் அடைத்துக்கொண்டது வார்த்தைகள் வெளிவர மறுத்தன.

“எங்களின்ரை நாட்டிலை அரசாங்கம் ஒழுங்கில்லை. பொருளாதாரமும் தலைகீழா போச்சுது. எங்களிட்டை இருந்த காணி பூமி எல்லாம் இராணுவம் எடுத்துப்போட்டுது. மரங்களை எல்லாம் வெட்டி நாற்காலி, மேசை எண்டு அலங்காரப்பொருட்களையும் செய்து வைச்சிருக்கினம்... எப்பதான் காணிகளை விடுவிக்கப் போயினமே..!” தம்பியண்ணை தன் ஆதங்கத்தை அவிழ்த்தார்.

தம்பியண்ணை எங்கள் அப்பாவின் நெருங்கிய நண்பர். ஒரு காலத்தில் எங்கள் பனங்காணியைக் குத்தகை வாங்கி ஆறு மாதம் பனை உற்பத்திகளைச் செய்தவர். அவருடைய இரண்டு குமருகளையும் கரை சேர்த்தது எங்கள் பனங்கூடல் காணிதான் என்பது ஊருக்கே தெரியும். தற்பொழுது பத்து பனை மரங்களை வைத்து சீவியம் நடத்துகின்றார்.

இருவரும் சம்பாசித்துக் கொண்டிருக்கும் போதே யாழ்ப்பாணம் போகும் ‘மினி பஸ்’ ஒன்று சனத் திரளுடன் சரிந்து விழப்போகுமாறு வந்து நின்றது. அடிப்பட்டும், மிதிப்பட்டும் இருவரும் ஆளுக்கொரு ‘சீட்டில்’ அமர்ந்துக் கொண்டோம். வியர்வை மணமும், டீசல் மணமும் குடலைப் பிரட்டிக்கொண்டு வந்தன. ஒருவாறு ஜன்னல் பக்கம் திரும்பவே காற்று மெதுவாக வியர்வையை விசிறிவிட்டு உடம்பை ஸ்பரிசித்தது. “ஞாபகம் வருதே, ஞாபகம் வருதே, பொக்கிஷமாக நெஞ்சில் புதைந்த நினைவுகள் எல்லாம் ஞாபகம் வருதே...” பாடல் ‘பஸ்ஸி’ல் பொருத்தப்பட்டிருந்த ‘ரேடியோ’வில் பாடிக்கொண்டிருக்க மனமும் அமைதி கொண்டது. எனது எண்ண அலைகளும் பஸ் வண்டியின் சில்லுகளைப் போல கடந்த காலத்தை நோக்கி ஓடத்தொடங்கின.

பளை எங்கள் ஊர். யுத்த வடுக்களும் வரட்சியும், இணைந்து காடாகக் காட்சியளித்தாலும் ஆங்காங்கு இருந்த பனை மரங்களே ஊருக்கு வாழ்வாதாரமாகியது, ஆறுதலும் அளித்தது. விழுந்து கிடக்கும் பனங்காய்களில் அணில்கள் வந்து விளையாடுவதும், காகங்கள் அவற்றை விரட்டி பனம் பாணிகளை உண்பதுமாக காட்சியளிக்கும், எங்கள் முற்றம். என்னுடைய அப்பப்பாவிற்கு நாற்பது ஏக்கர் பனங்கூடல் காணியொன்று இருந்தது. அந்தக் காணி ஒன்றுமட்டுமே உயிர்ப்பாகவும், முதுசொமாகவும் எங்களிடம் அடைக்கலம் கொண்டிருந்தது. நான், என்னுடைய தங்கை, அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா எல்லோரும் அந்தக் காணியிலேயே குடியிருந்து சீவியம் நடத்தி வந்தோம். வீட்டிற்குப் பனையோலைகளே காவல் மதிலாகவும், படலையாகவும் அமைக்கப்பட்டிருந்தன. ஊரில் உள்ள அனைவரின் வீடுகளிலும் பனையோலைகளே பாதுகாப்பு அரண்களாக அமைக்கப்பட்டிருந்தன.

எனக்கு அப்பொழுது பதினைந்து வயது இருக்கும். எங்கள் அப்பப்பா சீவல் தொழிலுக்காக பனைமரம் ஏறும் அழகை பனங்கூடல்களுக்கு இடையில் நின்று

பார்த்துக்கொண்டிருப்பேன். கால்களில் தளை நார் மாட்டி, நெஞ்சை மரத்துடன் அணைத்து, இரு கைகளாலும் பனையைத் தழுவி முழத் துக்கு முழம் மேல்நோக்கிப் போகும்போது சில கணங்கள் அச்சத்தால் மனம் அடைபடுவதும் உண்டு. "விழுந்து விடக் கூடாது முருகா.. காப்பாற்று.. காப்பாற்று.." நல்லூர் முருகனிடம் வேண்டுதல்களும் தொடங்கிவிடுவதுண்டு.

அப்பப்பா காலையிலும், மாலையிலும் பானையை இடுக்கியும், வரிந்துகட்டியும், சீவியும், தட்டியும் சாறு எடுப்பார். மண்முட்டி களில் சாறு எடுக்கும் முன்னர் பானையின் உட்புறத்தில் சுண்ணாம்பு பூசுவார்.

"ஏன் அப்பப்பா பானைக்குள்ள சுண்ணாம்பு பூசுறியள்..? கள் குடிக்கேக்க வாய் வெந்து போடும். உங்களுக்கு அறிவில்லையே..?"

"அடேய் முட்டிக்குள்ள சுண்ணாம்பு பூசி னால்தான் புளிப்பு ஏறாமல் இருக்கும். வாயை மூடிக்கொண்டு பேசாமல் இரு.."

அப்பப்பா புத்திசாலிதான். நான்தான் பெரிய 'இன்டலிஜன்ட்' எண்டு நினைச்சுக்கொண்டு வாய்விட்டுப்போட்டன்...

நானும் எனது சக நண்பர்களும் விடுமுறை நாட்களில் விளையாடச் செல்லும்போது பனை யோலைகளையே துணைக்கு எடுத்துச் செல் வோம். அதில் சிறிய பைகளை பின்னுவோம். பனங்கருப்பட்டி ஊற்றுவதற்காக அவற்றை ஒரு சதம் என விற்று உள்ளோம். 'பார்ட் டைம் ஜொப்' ஆக இதனை செய்வது எங்களுக்கு அலாதியான இன்பத்தை அள்ளித் தந்தது.



பனையுடன் தொடர்புடைய வேலைகளுக்கு அம்மம்மாவும், அம்மாவும் எங்கள் ஊரில் பெயர் பெற்றவர்கள். கடகம் பின்னுவதற்கு இருவரும் பருத்தித்துறைக்குச் சென்று வருவது வழக்கம். இன்றும் அம்மம்மாவால் பின்னப்பட்ட இரண்டு கடகங்கள் முதுசொமாக அம்மாவால் பேணி காக்கப்பட்டு வருகின்றன. அந்தக் கடகங்கள் இரண்டு மட்டும்தான் "நாங்கள் பனை பற்றாளர்கள் எங்களிடமும் பனங் காணி இருந்தது" என்பதற்கான ஆதாரம்.

அதிகாலை நான்கு மணிக்கு நானும் எனது தங்கை கனகாம்பியும் பனங்காய்களை பொறுக்குவதற்காக போட்டிபோட்டுக்கொண்டு ஆளுக்கொரு கூடையுடன் தோட்டத்திற்குள் செல்வோம். என்னைவிட பனங்காய்களை வேகமாகப் பொறுக்குவதில் அவளே திறமைசாலி. போட்டியில் தோற்றுவிடக்கூடாது என்பதற்காக திருட்டுத்தனமாக அவளுடைய கூடையில் இருக்கும் பனங்காய்களை எடுத்து என்னுடைய கூடையை நிரப்பிவிட்டு அமைதி காப்பவன், நான்.

திடீரென நினைவுகளைக் கலைத்த வண்ணம் கண்டக்டர் "புங்கன்குளம் சந்தி இறக்கம் இருக்கா..? அக்கா பின்னாலை நிற்காமல் முன்னாலை வாங்கோ.. வாங்கோ.. ஐயா.. வாங்கோ.."

'டவுண்' வந்தவுடன் நானும் தம்பியண்ணையும் இறங்கி பளை ஊடாக போகும் கொடிகாமம் பஸ்ஸில் ஏறிக்கொண்டோம். இருவருக்கும் தோதாக இரு இருக்கைகள் அருகருகே காத்திருந்தன அமர்ந்துகொண்டோம். தம்பி யண்ணை பழையபடி ஆரம்பித்தார்.

**வட பகுதி மக்களின்ரை பண்பாட்டிலை வேர்விட்டது பனைதானடா.. பனங்காய், பனாட்டு, பனங்கற்கண்டு, கடகம், பாய், கூடை, கொட்டப்பெட்டின்னு எங்களின்ரை வீட்டிலை இருக்கிற எல்லாம் பனைதானடா**

"ஏன் ராசு உனக்குத் தெரியுமே பனங் கிழங்கு, ஒடியல் எல்லாம் விலையேறிப் போச்சுது.. கிலோ முந்நூறு ரூபா தேறும்.. ஒரு துண்டு கிழங்கு சாப்பிடனும்னா காசுதானப்பா வேணும்.. முன்ன எல்லாம் கிழங்குகள் எங்களிடம் ஏராளம் இருந்துச்சுது எங்களின்ரை வாழ்க்கை நல்லாய் ஓடிச்சுது.. கனக்க ஆட்கள் எங்களிட்டை வந்து சாப்பிட்டினம்.. ம்.. ம்.. இப்ப..?! பார்த்தியா அப்பு நிலைமையை..!"

தம்பியண்ணை சொல்வது வாஸ்தவம்தான். என்ன செய்வதென்று எனக்கும் ஒன்றும் புரியவில்லை. நான் ஒரு பட்டதாரி. பட்டம் பெற்று முடித்தவுடன் வேலை கிடைப்பது சுலபம் அல்ல. சுயதொழில் முயற்சியில் ஈடுபடலாம் என நினைத்தாலும் பண கஷ்டம் வீட்டில் தலைவிரித்தாடியது. அம்மாவின் உதவியுடனேயே பல்கலைக்கழக கல்வியை முடித்தேன். பக்கத்துவீட்டு கலா அக்காவின் காணியில் கச்சான் விதைப்பதற்கும், வெங் காயம் வெட்டுவதற்கும் அம்மா சென்று அதன் மூலம் கிடைத்த வருமானத்திலும், மகாபொல புலமைப்பரிசிலில் கிடைத்த சிறுதொகையிலும், விடுமுறை நாட்களில் பிரத்தியேக வகுப்புக்கள் நடத்தியும் பெறப்பட்ட பணம் எனது கல்வி நடவடிக்கைகளுக்கு துணைபுரிந்தது. அடுத்த வருடம் எனது தங்கை கனகாம்பியும் ஆசிரியர் கலாசாலைக்குச் சென்றுவிடுவாள். அவளது கல்வி பொறுப்பை அம்மாவிடமிருந்து பெற்றுக்கொண்டு நானே சுமக்கவேண்டும் என நினைக்கிறேன். எனது அம்மாவிற்கு விவசாயம் செய்வதில் மிகவும் விருப்பம். எங்களுடைய பனங்காணி இருந் திருந்தால் அதை வைத்து பிழைப்பு நடத்தி யிருக்கலாம்.. அம்மா அடிக்கடி கவலை துதி பாடுவாள். இதற்கு விடிவு பிறக்க வேண்டும் என்பது எங்களுக்கு மட்டுமல்ல ஊரில் உள்ள அனைவரின் அபிலாஷையுமாகும்.

பனங்கிழங்குகளை உருவாக்குவது எப்படி என்பதை முதன் முதல் எங்கள் அம்மம்மாவிடம் இருந்தே கற்றுக்கொண்டேன். தம்பியண்ணை பனங்கிழங்குகள் பற்றி கூறும்போது அம்மம்மாவின் நினைவுகள் என்னை ஆக்கிர மித்துக்கொண்டன. பள்ளிப்பாடம் படித்ததைவிட பனை பாடம் படித்ததுதான் அதிகம். அன்று ஒருநாள் பாடசாலையில் கமலா 'ரீச்சர்' எங்களிடம் "பிள்ளையள் எங்களுடைய பிரதேசப் பண்பாட்டை வெளிப்படுத்துவன எவையெவை எங்கே ஒராள் சொல்லுங்கோ..?"

"ரீச்சர் யாழ்ப்பாண டவுன்தானே...?" ராமு கூறினான். எல்லோரும் "கொல்லென" சிரித்த னர். ரீச்சருக்கு கோபம் வந்துவிட்டது. பாடம் முடிந்துவிட்டதை மணியோசை அறிவித்த போது ரீச்சரும் சென்றுவிட்டார்.

வீட்டிற்கு வந்தவுடன் அம்மம்மாவிடம் ரீச்சர் வினவிய வினாவிற்கான விடையைக் கேட்டேன். பதிலுக்கு அம்மம்மா, "அட முட்டாப் பயல ஏன் உனக்கு இதுகூடவா தெரியாமல் போச்சுது..? எங்களின்ரைப் பனங்கூடலை சொல்லி யிருக்கலாம்தானே..? வட பகுதி மக்களின்ரை பண்பாட்டிலை வேர்விட்டது பனைதானடா.. பனங்காய், பனாட்டு, பனங்கற்கண்டு, கடகம், பாய், கூடை, கொட்டப்பெட்டின்னு எங்களின்ரை வீட்டிலை இருக்கிற எல்லாம் பனைதானடா"

"ஆமாம்... ஆமாம்... அம்மம்மா சரியா சொல்லிப் போட்டியள் 'ஆன்சரை..' 'ஓகே ரைட்' நாளைக்கு முதல் ஆளா 'ரீச்சர்'ட்ட இதைச் சொல்லிப்போட வேணும். ஏன் அம்மம்மா எனக்கு ஒரு 'டவுட்' சொல்லுறியள்...?"

"அப்பு உன்ட 'இங்கிலிஷ்', 'இந்தி' எல்லாம் அம்மம்மாவுக்குத் தெரியாது. கேள்விய தெளிவா கேளு சொல்லுறன்.." அம்மம்மா கிண்டலாகச் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டு மனதிற்குள் சிரித்துக்கொண்டேன். மீண்டும் அம்மம்மாவிடம் "பனங்கிழங்கு எப்பிடி செய்யிறது..? சொல்லுங்கோ கேப்பம்.." வார்த்தைகளை உதிர்த்தேன்.

"அதுவா அப்பு.. ம்...ம்.. பனங்கிழங்கு பாத்திப்போட்டு கிழங்கு எடுக்கவேணும் எண்டால் முதலிலை பனம் விதைகளை தனியாகப் பிரிச்சு எடுக்கவேணும். பேந்து ஒரு வாரம் அதை நிழலிலைக் காயப்போட வேணும்.. நிலத்திலை ஆறு அடி நீளமும் மூண்டு அடி அகலமும் கொண்ட பாத்திகள் பிடிச்சு அதிலை விதையின்ரை மேல்புறம் வானத்தை பார்த்து இருக்கிற மாதிரி நெருக்கமாய் விதைக்க வேணும். குழிகளில் செம்மண்ணையும் மண லையும் கலந்து அதனோடை எரு கலந்து போட்டால் கிழங்கு பெரியதாக கிடைக்கும். விதைத்தாலும் தண்ணீர் தெளிக்கவேணும். வாரம் ஒரு முறை தண்ணீர் தெளிக்க வேணும்.

எழுபது நாட்களிலை கிழங்கு வளர்ந்து போடும்.”

“ஏன் அம்மம்மா பாத்தியைச் சுற்றி அப்பப்பா முள் போடுறவர்..?”

“அதுவா..? கோழிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளுறதுக்குத்தான் அப்பிடி செய்யிறவர்..”

எங்களுடைய பனங்கூடலின் பிறப்புக்கும் ஒரு வரலாறு படைக்கப்பட்டுள்ளது. வெறும் இரண்டு பனை மரங்கள் இருந்த காணியில் நூறு மரங்கள் பெருகின. பனங்காய்கள் பழுத்து கீழே விழுவதும் அவை உருண்டு சென்று வேறிடத்தில் வளர்வதும் விலங்குகளும் பனம் பாணியை சாப்பிட்டுவிட்டு பனங்கொட்டைகளை போட்டுவிட்டு போவதும் பின் அவை மரங்களாக வளர்வதும் என நடைபெற்ற செயற்பாடுகளின் விளைவே எங்கள் பனங்கூடல். இயற்கையாக வளர்ந்த பனங்கூடல்களில் பெற்ற பயன் ஏராளம்.

‘பஸ்’ உருண்டு உருண்டு தற்பொழுது சாவகச்சேரியை வந்தடைந்தது. தம்பியண்ணை ஆழ்ந்த நித்திரையில் இருக்கின்றார். “ஐயா பேப்பர் வேணுமா…? அண்ணா பேப்பர் வேணுமா..? வலம்புரி, உதயன் இருக்கு.. ஒன்று இருபத்தைந்து ரூபா வாங்குங்கோ..” ஒரு பொடியன் விற்றுக்கொண்டிருந்தான். நானும் ஒரு பேப்பரை வாங்கி படிக்கத்தொடங்கினேன்.

‘பேப்பரின்’ முகப்புச் செய்தியில் பெரிய தலைப்பில் “வட பகுதியில் இராணுவத்தினால் கைப்பற்றப்பட்ட ஆயிரத்திற்கும் அதிகமான பரப்புக் கொண்ட காணிகளை மீண்டும் காணிக்குச் சொந்தமான மக்களிடம் கையளிக்க முடியாமை….??......??....”

பஸ்ஸின் யன்னல்களினூடாக தொலைவில் ஆங்காங்கு தெரியும் பனை மரங்கள்… என்னை விட்டு இன்னும் பத்து அடி தூரம் சென்று மறைகின்றன. கையில் வைத்திருந்த ஆஞ்சநேயர் கோயில் பிரசாதம் ஜன்னல் காற்றிற்கு இசைந்து சங்கமமாகியது.

○○○

# ஹைக்கூ கவிதைகள்

முற்றத்து மாமரம்
சிதறிக்கிடக்கும்
மதியச் சூரியன்

தாயின் திசையை அறிய
கற்றுக் கொடுத்தது யாரோ?
பசித்த குழந்தைக்கு

கூழாங்கற்களை உரசுகிறேன்
கொளுந்து விட்டெரிகிறது
வற்றிய நதி

மின்மினிப் பூச்சிகள்
வல்லமை தந்ததார்?
விண்மீன்களைக் கருக்கொள்ள

புதிது புதிதாக
மலரும் கவிதைகள்
வாடிய காதலில்

முடிச்சிட்டுக்கொள்வதில்லை
தங்களுக்குள்ளே
இரவு பகல் நூல்கள்

இரவின் கருமை
மினுங்கிக் கொண்டிருக்கிறது
நதி நீர்

”உஷ்” சொல்லும் குழந்தை
அம்மாவிடம் கண்டிப்புடன்
பொம்மையை உறங்க வைத்ததும்

நள்ளிரவு நேரம்
நடைபாதையில் துரத்துகின்றன
பேய்க்கதைகள்

Dr **ஜலீலா முஸம்மில்**
(ஏறாவூர்)




# மனித இயந்திரம்

**பாலரத்னம் சரண்யா**
முதுகலைமாணி மாணவி,
பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை.

**இ**ன்று தீர்ப்பு நாள்.

இருவரின் போட்டிக் குணத்தால் கிணறு மீண்டும் காவு கொண்டது. நெடுங்காலமாக விவசாயம் பார்த்த பூமி. ஆற்றுநீர் வற்றியதாலும், காலம் தவறி பெய்கின்ற மழையாலும் விவசாயத்தை கைவிட்டு தொழிற்சாலைகளில் வேலைக்குச் சேர்ந்தனர் அண்ணசாலையூர் மக்கள். அல்லும் பகலும் நிலத்தோடு போராடினாலும் விவசாயிக்கு நிமிர்ந்து வானத்தைப் பார்க்க நேரமிருந்தது. இன்று தொழிற்சாலையில் நவீன இயந்திரங்களுடன் வேலைப்பார்ப்பவர்களுக்கு இரவு பகல் தெரியாதளவிற்கு காலம் நகர்கின்றது.

அவனுக்கென குடும்ப சுமைகளோ, பொறுப்புக்களோ எதுவும் இல்லை. காலம் போனபோக்கில் ஒரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தான் ராயன். அவனுடைய பெற்றோர்கள் அவன் சிறுவனாக இருக்கும் போதே இறந்துவிட்டனர். சிறுவயதிலிருந்தே கிளை ஆடைத் தொழிற்சாலையொன்றில் வேலை செய்துக் கொண்டிருந்தவன், தன்னுடைய கடுமையான உழைப்பால் அதன் பிரதான தொழிற்சாலைக்கு லயின் சுப்பவைஸராக பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டான்.

தன் வாழ்வில் சந்திக்கப் போகும் எதிர் பாராத திருப்புமுனைகளை அறியாதவனாய் ராயன் அண்ணசாலையில் காலடி எடுத்து வைக்கின்றான். பெயருக்கு ஏற்றாற் போல முன்னைய காலங்களில் ஏர், காளைகள் ஓய்வின்றி உழைத்த பூமி. நெல் மூடை மூடையாய் சந்தைக்குச் செல்லும். பக்கத்து நாட்டு வியாபாரிகள் கூட வாங்கிச் செல்வதுண்டு. பல வழிகளில் அந்த ஊர் வசதி மிக்கது. நீர்வளம், நிலவளம் பெற்றது. பக்கத்தில் உள்ள ஏனைய ஊர்களுக்கு செல்பவர்கள் கூட அண்ணசாலையில் வயிறாற உணவருந்தி, தங்கிச் செல்வதுண்டு. சிலநேரங்களில் எமது அதீத நிறை குணமே நம் வாழ்வில் நடக்கும் விபரீதங்களுக்கும் காரணமாகிப் போகின்றது. அவ்வூரின் செழுமையை பார்த்த காப்பரேட் கம்பனிகளும் சூழ்நிலையை பயன்படுத்தி சதி திட்டங்களால் அங்குள்ள விவசாய நிலங்களை ஏமாற்றி பறித்துக் கொண்டதோடு விவசாய சந்ததியினரை தொழிற்சாலை ஊழியர்களாகவும் ஆக்கியது.

ராயன் லயின் சுபவைஸராக முதல் நாள் பணியில் சேர்கின்றான். அந்த ஆடைத் தொழிற்சாலையில் ‘கட்டிங்’, புரடெக்‘ன்’ என்ற இரு பகுதிகளும் மிக முக்கியமானவை. இப்பகுதிகளுக்கு கட்டிங் மெனேஜர், புரடெக்ஷன் மெனேஜர் என இரு பகுதித் தலை

வர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இரு வருக்கும் இடையில் எப்போதும் பெக்ட்றி மெனேஜரின் அதீத விருப்பினை பெற்றவராக யார் இருக்கப் போகின்றோம் என்பதில் பெரும் போட்டி இருந்தது.

புதிதாக வேலைக்குச் சேர்ந்த ராயன் புர டெக்ஷன் பகுதியில் 28 வது லயின் சுபவைஸ ராக வேலைக்கமர்த்தப்பட்டான். புதிய இடம், புதிய வேலைமுறைகளைக் கற்றுக் கொள்ள சில காலமெடுத்தது. அந்த லயினின் கொல்டி சுபவைஸர் மாலினி ராயனுக்கு உதவியாய் இருந்தாள். அங்குள்ள நடைமுறைகளையும், உள்ளுக்குள் அரங்கேறும் நாடகங்களையும் அவ்வப்போது சொல்லி வைப்பதுண்டு.

வருகின்ற சித்திரை மாதத்தையொட்டி தொழிற்சாலைக்கு அதிகமான ஓடர்கள் வந்துகொண்டிருந்தன. வருகின்ற ஓடர்களை திறம்பட செய்து முடிக்க வேண்டும். இருக்கும் ஊழியர்கள் போதாது என்றபடியால் இரு மாதங்களுக்கு மாத்திரம் தற்காலிக ஊழியர் களை உள்ளெடுத்து பகல், இரவு என சிப்ட் போட்டு வேலை செய்ய நிர்வாகம் முடிவெடுத் திருந்தது.

மாலினி குடும்ப பொறுப்புள்ள பெண். தங்கைகளின் கல்விக்காக தன்னுடைய படிப்பை இடை நிறுத்திவிட்டு 18 வயதிலேயே இங்கு தொழிலுக்கு சேர்ந்து விட்டாள். பெக்ட்றி மெனேஜரிடம் நற்பெயர் பெறவேண்டியும் அடுத்த உயர் பதவிகளுக்காகவும் டாக்கட் என்ற பெயரில் ஒரு நாளுக்கான உற்பத்தி அளவைக் காட்டிலும் அதிகமான வேலைகளை பெற்றுக் கொள்வதற்காக ஊழியர்களை மனிதபிமானமற்ற முறையில் கடிந்துக் கொள்ளுதல், அவமானப்படுத்தல் என்பது உயர் அதிகாரிகளுக்கு சகஜமாகி போயிருந்தது.

ஞாயிறு விடுமுறையன்றி மேலதிக தேவைக் காக ஒரு நாள் விடுமுறையை கூட போராடிப் பெற வேண்டியிருக்கும். ஊழியர்களை அங்குள்ள இயந்திரங்களாகவே பார்த்தனர். அவர்களை சக்கையாய் பிழிந்து மேலதிக வேலைகளை பெற்றுக்கொள்வதிலேயே குறி யாக இருந்தனர். இரவு பகலென இயந்திரமாய் சுற்றும் அவர்களின் உடல் நிலை குறித்தோ, வாழ்க்கையைப் பற்றியோ பெரிதாகக் கரிசனை இருந்ததாக தெரியவில்லை. அந்த ஊரில் வேறு தொழில் வாய்ப்புகளும் பெரிதாக இல்லை. குடும்பசுமை, மனைவி குழந்தைகளை காப்பாற்ற வேண்டும், குழந்தைகளின் படிப்பு செலவு, பெற்றோரின் மருத்துவ செலவு என தலை மீதிருந்த கடமை எனும் சுமைகளை நினைத்து நரகத்துள் வாழ பழகிக்கொண்டனர்.

மாலினியிடமிருந்தே தைக்கப்பட்ட ஆடைகள் தரம் பரிசோதிக்கப்பட்டு பெகிங் பகுதிக்குச் செல்லும். ஓடர் முடியும் தினங்களில் அதிக மான வேலைகள் இருக்கும். அவ்வாறான நாட் களில் மாலினியும் ராயனும் மேலதிக நேரம் எடுத்து வேலை செய்வதுண்டு. அதன்போது அவர்களுக்குள் ஏற்பட்ட நெருக்கம் அவர் களுக்குள் அழகான நட்பினை ஏற்படுத்தியது.

குடும்பத்தைப் பற்றியும், ஊரைப் பற்றியும், தொழிற்சாலையைப் பற்றியும் அடிக்கடி கதைத்துக் கொள்வார்கள். மாலினி அவளது ஊரை தவிர்த்து வேறு எங்கும் பெரிதாக சென்றதில்லை. அவளுக்கு வெளியுலக அனு பவம் கிடையாது. அது பற்றி ராயன் விளை யாட்டாய் கேட்டபோது

'எங்க போறது……. (சலித்த பெருமூச்சுடன்) ஞாயிறு ஒருநாள்தான் லீவு. காலையில போன 5.30 மணிவரைக்கு லயன்லயே டைம் பொயிடுது, இதுல கிழமைக்கு ரெண்டு நாளு ஓட்டினு 10 மணிவரைக்கு நிக்கனும், எப்படா….. ஞாயித்துக்கிழம வரும்னு இருக்கு, அன்னைக்கு வீட்டுல இருக்க வேலையெல்லா செஞ்சிட்டு அசதில தூங்கியெழும்பதா நாள் சரியா இருக்கு, இதுல நா எங்கனு போரது, இதுல எங்கனு எனக்காக நேரத்த தேடுரது, நடக்குறத பேசுவியா…' என்று மாலினி சிரித்துக் கொண்டே கூறியதைக் கேட்டு மனம் வருந்தினான்.

இந்த வருடம் புரடெக்ஷன் பகுதியில் அதிவிரைவாக ஓடர்களை டெமெஜ் இல்லாமல் தரமாக உற்பத்தி செய்யும் லயினாக 28 வது லயின் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப் பட்டது. மேலும் அன்றைய நாளில் அங்குள்ள 50 க்கும் மேற்பட்ட லயின்களில் உள்ள சுபவைஸர்களையும், கொலிடி சுபவைஸர் களையும் அழைத்து சிறு கூட்டமொன்றையும் ஏற்பாடு செய்திருந்தார் பெக்ட்றி மெனேஜர்.

கூட்டத்தில் வருகின்ற சித்திரை மாதத்தை யொட்டி அதிகமான ஓடர்கள் வந்திருப்பதாகவும், அதனை திறம்படச் செய்து உரிமையாளரின் பாராட்டைப் பெற வேண்டுமென்றும் அதற்காக நாளையிலிருந்து சித்திரை பண்டிகை விடு முறைக்கான முதல்நாள்வரை வழமையான வேலை நேரத்தோடு மேலதிகமாக பத்து மணிவரை தினமும் ஓட்டி செய்ய வேண்டும்.



**எதற்காக உழைக்கின்றோம்? வாழ்கின்றோம் என்பதை தாண்டி அனுபவித்து வாழ்கின்றோமா, வாழும் வாழ்க்கையில் மகிழ்ச்சி எங்கே, ஏன் யாரும் அதனை எண்ணுவதில்லை.**

சில நேரங்களில் எட்டு மணிவரைக்குமாக நேரத்தைக் குறைத்துக் கொள்ளலாம் என்றும் அது கட்டாயம் என்பதையும் கூட்டத்தில் தெரிவித்தார்.

மேலும் அவர்களுடைய லயினில் உள்ளவர்களுக்கு தெரியப்படுத்தி, அனைவரும் ஒன்றிணைந்து முழுமூச்சாய் செயற்பட வேண்டும் என்றும் அவசரக் காரணமெனின் என்னுடைய அனுமதியோடு முழுநாள் அல்லது பகுதிநேர விடுமுறை வழங்கப்படும் என்றும் கூறினார். எனினும் அது அரிய புத்தகத்தை தேடுவது போன்றது இலகுவில் கைகளுக்கு கிடைத்துவிடாது.

மாலினிக்கு கடந்த இரு மாதங்களாக உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்தது. வைத்தியரை அணுகியபோது தொடர்ந்து நின்றுக் கொண்டே வேலை செய்வதால் 'வெரிக்கோஸ்' பாதிப்பு கால்களுக்கு ஏற்பட்டுள்ளதை அறிந்து மனம் வருந்தினாள். வைத்தியர் ஓய்வு மிக அவசியம் என வலியுறுத்திய போதும் விடுமுறைக்கு பயந்தும் வீட்டு நிலைமைக்காகவும் தொடர்ந்து வேலைக்கு ஓடி விடுவாள். அவளது சூழ்நிலையை மனமேற்கும், உடலேற்குமா? ஓய்வின்றிய உழைப்பு அவளது உடல்நிலையை பாதித்துக் கொண்டே வந்தது. இந்த நிலையில் புதிய ஓடர்களுடன் ஓட முடியுமா என்ற குழப்பத்தோடு ராயனைப் பார்த்தாள். ராயனும் பார்த்துக் கொள்ளலாம் என கண்களால் சைகைக் காட்டினான்.

அந்த லைனின் சுபவைஸர் ராயன் என்பதால் நாளைய நாளின் எந்தவித பயமுமின்றி மாலினியும் தொடர்ந்து உடல் நலக் குறைவோடு வேலை செய்துக் கொண்டிருந்தாள். குறித்த நாளுக்கான வேலைப்பதிவுகள் எந்தப்பகுதியில் அதிகமாக உள்ளன என்பதில் கட்டிங் மெனேஜர், புரடெக்ஷன் மெனேஜர் இருவரும் மும்முரமாக இருந்தனர். கட்டிங் பகுதியிலிருந்து மிக வேகமாக துணிகள் வெட்டப்பட்டு புரடெக்ஷன் பகுதிக்கு வந்து குவிந்துக் கொண்டிருந்தன. புரடெக்ஷன் மெனேஜருக்கு குவியலைப் பார்க்க பார்க்க பிரஸர் தலைக்கேறியது.

புரடெக்ஷன் பகுதியின் ஒவ்வொரு லயினுக்கும் சென்று ஊழியர்களை அவசரப்படுத்துவதும் தவறுதலாக டெமெஜ் அனுப்புபவர்களைத் திட்டித் தீர்ப்பதும் என மூர்க்கத்தனமாக நடந்துக் கொண்டார். வருடாந்த பண்டிகை ஓடர்கள் வருகின்றது என்றாலே வழக்கமைக்கு அதிகமாக இப்படி நடந்துக் கொள்வது அவர்களுக்கு வழக்கமாயிருந்தது. மாலினியும் இப்படி பலமுறை திட்டு வாங்கி அவமானப்பட்டதுண்டு.

இயந்திரத்தோடு இயந்திரமாய் கட்டிங்கிலிருந்து வந்த துணிதுண்டுகளை எடுத்து முதலாவதாக இருப்பவர் உடல்பகுதியைச் சேர்க்க, இரண்டாவதாக இருப்பவர் கைகளை சேர்க்க, மூன்றாவதாக இருப்பவர் கால்களை சேர்க்க, அப்படியே கழுத்தை தைப்பது, சிப்பர் போடுவது, பொத்தானிடுவது, லேபிள் பிடிப்பது, அயன் பண்ணுவது, கொல்டி செக் பண்ணுவது என லயின்கள் வேகமாக இயங்கிக் கொண்டிருந்தன.

மூன்று வாரங்களாக கால்வலியோடு நின்று தொடர்ந்து வேலைச் செய்துக்கொண்டிருந்ததால், அவளது கால்கள் மரத்துக் கொண்டன. காலை மாற்றி மாற்றித் தேய்த்துப் பார்க்கிறாள். மருத்துவர் தந்த களிம்புகளைப் பூசிப் பார்க்கின்றாள் ஒன்றும் கைகொடுக்கவில்லை. எங்கே துஷ்டன் திட்டிவிடுவானோ என்ற பயத்திலும் படபடப்பிலும் மக்கர் செய்யும் இயந்திரம் போல அவளது கால்கள் மறுத்து மறுத்து செயல்படுகின்றன.

இந்த போராட்டத்தில் அவளுடைய மேசையில் கொல்டி செக்கப்க்கு வந்த தைக்கப்பட்ட

ஆடைகள் நிறைந்துக் கொண்டிருந்தன. மாலினி பதற்றத்தில் கதிகலங்கி போயிருந்தாள். செருப்பு சத்தம் கேட்கிறது. பயத்தோடு திரும்பி பார்க்கிறாள். 'என்ன ஆச்சு..?' என்று கேட்ட வாறே உள்ளே நுழைந்த ராயன் மாலினியை ஓய்வெடுக்க சொல்லிவிட்டு அவளுக்குப் பதிலாக கொல்டி செக் செய்ய ஆரம்பித்தான். உடைகளை தைப்பதோடு அந்த லயின் மெல்ல ராயனையும் மாலினியையும் சேர்த்து கதை பேச ஆரம்பித்தது.

இப்படி அவ்வப்போது அவன் உதவி செய்வதால் மாலினி புரடெக்ஷன் மெனேஜ ரிடமிருந்து தப்பித்திருந்தாள். இந்த செய்தி எப்படியோ மெனேஜரின் காதுகளுக்குச் செல்ல, விசாரணையின்றி ராயன் அடுத்த நாளே கீழ் தட்டில் அதே ஓடர்களை செய்யும் இன்னொரு லயினுக்கு இடமாற்றப்படுகின்றான்.

இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் அவள் கால்கள் விறைத்து, வதைக்க ஆரம்பித்தன. சிற்றூமில் அவ்வப்போது சிறிது நேரம் ஓய்வெடுத்துதான் தொடர்ந்து வேலை செய்துக் கொண்டிருந்தாள். அந்நேரங்களில் அவள் லயினில் இல்லாததை கவனித்துக் கொண்டுதான் இருந்தான் புரடெக்ஷன் மெனேஜர். மீண்டும் அவளிடம் தைக்கப்பட்ட துணிகள் செக் செய்ய நிறைந்து கொண்டிருந்தன. இம்முறை ராயனும் உதவிக்கில்லை. கொல்டி செக்கப்பில் துணிகள் நிறைந்து ஸ்டொக்காக லயனிலிருந்த ஒவ்வொருவரிடமும் துணிகள் நிறைந்து நிற்கின்றன. நிறைந்த குவியலால் தைப்பது சில நொடிகளுக்கு நின்றுப் போனது. லயினில் ஒரே பதற்றம். வந்து நின்றான் துஷ்டன்.

மாலினியை தன்னுடைய வார்த்தைகளா லேயே குத்திக் கிழித்துவிட்டான். அனைவரின் முன்னிலையிலும் இதற்கு முன் ராயன் உதவியதை தவறான கண்ணோட்டத்தில் சித்திரித்து, திட்டித் தீர்த்து அவமானப்படுத்தி விட்டான். அவற்றை கேட்டுப் பொறுக்க முடியாதவளாய் அழுது வடிந்த கண்களோடு தன் நிலையை எடுத்துக் கூறி புரியவைக்க முயற்சி செய்தாள். அவன் அதைக் காது கொடுத்தும் கேட்கவில்லை. அனைவரும் மாலினியையே பார்த்துக் கொண்டிருந்தனர். இவளால் யார் முகத்தையும் பார்க்க முடியவில்லை. ஸிப்ட் முடிந்து எல்லோரும் செல்லத் தயாராகின்றனர். ராயன் விஷயத்தை அறிந்து மாலினியை தேடி வருகின்றான். அவளை ஆறுதல்படுத்த முயற்சி செய்கின்றான். ஆனால் மாலினி அவமானத்தில் கூனிக்குறுகி சுய நினைவற்றிருந்தாள். ராயனின் வார்த்தைகள் அவளது காதுகளை எட்டவில்லை.

ராயன் கோபத்தில் விரைந்து புரடெக்ஷன் மெனேஜர் அறைக்குச் சென்றான். அவன் செய்த அநியாயங்களை எல்லாம் அவன் முன் அடுக்கி கோபத்தில் கத்திக் கூச்சலிட்டான். 'ஒங்க அதிகார திமிருக்கு ஒருநாள் நீங்க அனுபவிப்பிங்க, எங்களுக்கு நீங்க பதில் சொல்லியே ஆகனும்' என்று அனைவர் முன்னிலையிலும் சூழுரைத்தான். எனக்கு கீழிருந்து நான் சொல்வதை செய்யும் ஒருவன் என் முன் குரல் உயர்த்தி பேசுகின்றானே என்ற கோபம் தலைக்கேறி செகுருடிகளை வரவழைத்து, அவனை பிடித்து வெளியில் தள்ளி, 'இனி ஒனக்கு இங்க வேல இல்ல, வெளிய போ' என்று அவனை அங்கிருந்து துரத்தி அடித்தான் புரடெக்ஷன் மெனேஜர்.

இரவு முழுவதும் அவமானத்தால் ஏற்பட்ட மன உழைச்சலில் தூங்க முடியாது தவிக்கின்றாள் மாலினி. லயினில் உள்ள அனைவரும் தன்னையே பார்ப்பதாக உணர்கின்றாள். தன்னைப் பார்த்து சிரிப்பதகாவும் தவறாக பேசுவதாகவும் தனக்குள்ளே நினைத்து புலம்பி தவிக்கிறாள். யார் கண்ணிலும் படாமல் தலைமுடிகளை பிய்த்துக் கொண்டு எங்காவது ஓடிவிடுவோமா, என்று யோசிக்கின்றாள். எங்கு சென்று ஒழிந்துக் கொள்வது? அவளால் அவளுக்கு நடந்த அவமானத்தை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

இதற்கு முன் பல தடவைகள் திட்டி அவமானப்படுத்தியதுண்டு. ஆனால் இன்று அவளுடைய நடத்தை குறித்த விமர்சனங்களை ஏற்க முடியாதவளாய் மனம் வெதும்புகின்றாள். அவளால் துயரிலிருந்து மீள முடியவில்லை. விடியற்காலை ஐந்து மணியளவில் மெல்ல எழுந்து வீட்டுப் பின்புறத்திலுள்ள கிணற்றுக்குச் செல்கின்றாள். வீட்டிலிருந்து கிணற்றுக்குமான ஒவ்வொரு அடிகளிலும் அதுவரை அவள் அனுபவித்த கஷ்டங்கள் எல்லாம் கண்முன்னே தோன்றுகின்றது. இந்த நரக வாழ்க்கை வேண்டாம் என்று கிணற்றில் குதித்து விட்டாள்.

முடிந்தது. மீண்டும் கிணறு காவுக் கொண்டு விட்டது. அவளது தந்தை கடன் வாங்கி விதைத்து, கடின உழைப்பால் செழித்த பயிர்கள் கடும் வெயிலில் நீரின்றியும் காலம் தவறி பெய்த மழையாலும் தொடர்ந்தழிந்து

பயனற்றுப் போகவே கடன் தொல்லையின் மன வுளைச்சலால் குடிப்பழக்கத்திற்கு அடிமை யாகினார். ஒருநாள் குடிவெறியில் தவறி கிணற்றில் விழுந்து மாண்டு போனார். யாறறிவார் உண்மையில் அவரும் வாழ்வை வெறுத்து விழுந்தாரோ என்னவோ?

'இல்லை, இல்லை மூச்சிருக்கின்றது...' அம்புலன்ஸ் விரைந்து வைத்தியசாலைக்குச் சென்றது. பல போராட்டங்களுக்கு மத்தியில் கண்விழித்தாள் மாலினி. தான் செய்தது பெரும் கோழைத்தனம் என்பதை உணர்கின்றாள். வழமைபோல உடல்தேறி வந்தாள். இம்முறை மீண்டு வந்தது அவள் மட்டுமல்ல. மரணத்தோடு போராடி அவளுக்குள் தைரிய மும் போராட்ட உணர்வும் எழுந்து கொண்டது. வைத்தியசாலையில் இருந்து மீண்டு வரும் வரை அவளது குடும்பத்தின் பொறுப்பை ராயன் ஏற்றுக் கொண்டான். இன்று அவனுக்கென்று ஒரு குடும்பம். உற்ற தோழனாய் மாலினியின் இடத்திலிருந்து அவளது குடும்பத்தையும் மாலினியையும் பார்த்துக் கொண்டான். தாங்கள் அனுபவித்த அவமானத்திற்கு நிர்வாகம் தகுந்த பதில் தர வேண்டும் என்று முடிவு செய்தனர்.

வீட்டிற்கு திரும்பியதும் தைரியமாக நீதிமன்றத்தில் மானநஷ்ட வழக்கு தொடுத்தனர். பணமும் அதிகாரமும் படைத்த பெரிய முதலைகள் சிறிய முதலைகளை கைக்குள் போட்டுக் கொண்டு வழக்கை இழுத்தடித்து பல மாதங்களாய் விசாரிக்க ஆரம்பித்தனர். அவற்றில் சற்றேனும் மனம் தளராதவளாய் போராடினாள். ராயனும் அவளுக்கு பின் நின்று உதவி செய்தான். பல நாள் வழக்கு விசாரணைகளை கடந்து இன்று வழக்கு தீர்ப்பு நாளுக்கு வந்தது.

பண மோகத்தில் பல அதர்மங்கள் அரங்கேறும் உலகில் அவற்றுக்கெல்லாம் துணை போகாத வர்களும் உள்ளனர். மாலினியின் பக்கமிருந்த நியாயங்களை நடுநிலையிலிருந்து விசாரித்த நீதிபதி அவளுக்கு நிர்வாகத்திடமிருந்து மன்னிப்பையும் நஷ்ட்டத் தொகையையும் பெற்றுத் தந்தார். இவற்றில் அவளுக்கு திருப்தியில்லை. நீதிபதியிடம் தயவாக, தான் பேச அனுமதி வேண்டினாள்.

'மனிதனாக பிறந்த நாம் சுதந்திரமாக வாழ்வதற்கு முழு உரிமையை பெற்றவர் களாகின்றோம். வாழ்வதற்கு தொழில் என்ற நிலைமாறி தொழிலுக்காக வாழுகின்ற நிலை ஏற்பட்டு விட்டது. வயிறார உண்டு, தேக ஆரோக்கியத்தோடு, மகிழ்ச்சியான வாழ்வை வாழவே அனைவரும் விரும்புகின்றோம். அதற்கான வருவாய் வேண்டும் என்றபடியால் தொழில் செய்கின்றோம். சிலருக்கு அதற்கேற் றாற் போல விருப்பமான தொழில் அமைந்து விடும்.

ஆனால் எல்லோருக்கும் அப்படியாக அமைந்து விடாது. வாழ்வதற்கு தொழில் செய் கின்றோமா அல்லது இந்த தொழிற்சாலை களில் சக்கைப் பிழியப்பட்டு சாகுவதற்காக வாழ்ந்துக் கொண்டிருக்கின்றோமா என்று எண்ணுமளவிற்கு பலரது வாழ்க்கை நகர்ந்துக் கொண்டிருக்கின்றது. தோளின் சுமைகளால் இயந்திரத்தோடு இயந்திரமாய் பிணைத்து வதைக்கப்படுகின்றனர். அடிப்படை மனிதநேயம் செத்துக் கொண்டிருக்கின்றது. யாருக்கும் யார் மீதும் அக்கறையோ கரிசனையோ கடுகளவும் இல்லை. போட்டி உணர்விலும் போலி பாராட்டுக்களிலும் மனம் மயங்கிக் கிடக்கின்றது.

எதற்காக உழைக்கின்றோம்? வாழ்கின்றோம் என்பதை தாண்டி அனுபவித்து வாழ்கின்றோமா, வாழும் வாழ்க்கையில் மகிழ்ச்சி எங்கே, ஏன் யாரும் அதனை எண்ணுவதில்லை. விழித் துக் கொள்ளுங்கள்! இல்லையென்றால், நவீன இயந்திர வாழ்க்கையில் சிக்கி மனித நிலையை இழந்து மனித இயந்திரமாய் வாழ் வதற்கு பழகி விடுவீர்கள். உங்களுக்கென உரிமைகள், சலுகைகள், சட்டங்கள் வகுக்கப்பட் டிருக்கின்றன. அவற்றை நீங்கள் உருவாக்க வேண்டியதில்லை. உள்ளதை அனுபவியுங்கள், கிடைக்காத போது கேட்டுப் பெற்றுக் கொள் ளுங்கள்.

முதலில் உங்களை கவனியுங்கள். இங்கு இருப்பவர்களின் தாயோ, சகோதரியோ என்னைப் போல ஆடைத் தொழிற்சாலையில் கஷ்டப்படலாம். அவர்களின் கஷ்டங்களைப் புரிந்து கொள்ளுங்கள். தோள் கொடுங்கள். பாவம்! நாங்களும் உங்களைப் போன்ற உணர்வுள்ள உயிர்கள்தான். எங்களுக்கும் உடம்பு வலிக்கும்' என்று கண்ணீர் மல்க சொல்லி முடித்தாள்.

நீதிமன்றமே மௌனித்துப் போனது.

❍❍❍

# உயர்தர வகுப்பறைச் (A/L) செயற்பாட்டில் தமிழ் இலக்கண வளநூல்கள் குறித்த ஒப்பீடு

## (பு / சென்.மேரிஸ் பாடசாலையை அடிப்படையாகக் கொண்டது)




E.A.G. மிலானி,
தமிழ் முதுகலை மாணவி
பேராதனைப் பல்கலைக்கழகம்.


பாடசாலைக் கற்றல், கற்பித்தல் செயன் முறைகளிலே கலைத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டி, இலக்கண ஆசிரியரால் எழுதப்பட்ட இலக்கண நூல் ஆகிய **வளநூல்கள்** முக்கியமானவையாக அமைகின்றன. இவை மூன்றுமே பாடசாலைக் கற்றல், கற்பித்தலிற்கு உதவுகின்றன. இம் மூன்றிலும் கலைத்திட்டத்திற்கு பிரதான இடம் உண்டு. **இலக்கணம் கற்பிக்கும் ஆசிரியரிடத்தே கலைத் திட்டம் பற்றிய அறிகையானது அனேகமானோரிடத்திலே முழுமையானதாகவே காணப்படுகின்றது**. இதனைக் கீழ்க்காணும் வரைபடத்தின் மூலம் அறியலாம். (நேர்காணல் மூலம் பெறப்பட்டது)




கலைத்திட்டத்திற்கு அடுத்ததாக ஆசிரியர் வழிகாட்டி பிரதான இடம் வகிக்கின்றது. ஆசிரியர்கள், ஆசிரியர் வழிகாட்டியினை மாணவர்களிற்கு இலக்கணம் கற்பிப்பதற்கு அதிகளவு பயன்படுத்துகின்றனர்.

(நேர்காணல் மூலம் பெறப்பட்டது)




அடுத்து இலக்கண ஆசிரியர்களுள் ஒருவ ரான **எம்.ஏ. நு:்மானுடைய அடிப்படைத் தமிழிலக் கணம்** என்ற நூலினை தங்களது உசாத் துணையாகக் கொள்கின்றனர். அதற்கான காரணம், இலக்கணங்களிற்குரிய விளக்கங்கள் அதிகமானதாகவும், இந்நூலினைச் சார்ந்தே பரீட்சையில் வினாக்கள் வருவதாகவும், இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடிய மொழி நடையினை உடையதாகவும், தற்காலம் பற்றிய விடயங்கள் இருப்பதாகவும் அமைந் துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதனைக் கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட தகவலினை அடிப்படையாகக் கொண்டு அவதானிக்க முடிகின்றது. (நேர்காணல் மூலம் பெறப்பட்டது)




இருப்பினும் கலைத்திட்ட ஆவணம், ஏனைய வளநூல்களிற்கு இடையிலும் வேறு பாடுகள் காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாகக் கலைத்திட்டங்கள் பரிந்துரை செய்யும் இலக்கணங்களிற்கும் ஆசிரியர் வழிகாட்டியிற்கும் இலக்கண நூலிற் கும் இடையே வேறுபாடுகள் நிலவுகின்றன. அவற்றினை விரிவாக நோக்கலாம்.

எழுத்தியலிலே கலைத்திட்டங்கள் பரிந்து ரைக்கும் இலக்கணங்கள் போலவே ஆசிரியர் வழிகாட்டியும் அதே உள்ளடக்கங்களினைக் கொண்டுள்ளது. ஆயினும் அடிப்படைத் தமிழ் இலக்கண நூலிலே சில இலக்கணப் பகுதிகள், இவ் இரண்டிலும் குறிப்பிடப்படாத

நவீன மொழியியற் பகுதிகள் குறித்துப் பேசப் பட்டுள்ளன. உதாரணமாக, ஒரே வகையாக உச்சரிக்கப்படும் மெய்யெழுத்துக்கள், தற் காலப் பயன்பாட்டிலுள்ள முதல் நிலை எழுத் துக்கள், இடைநிலை எழுத்துக்கள் போன்றன அதிகமாகத் தரப்பட்டுள்ளன. பதவியல் தொடர் பாகப் பார்க்கும்பொழுது மூன்று வளநூல்களி லும் வேறுபாடு கிடையாது.

சொல்லியலிலே கலைத்திட்டத்திற்கும் ஆசிரியர் வழிகாட்டிக்கும் இடையிலே வேறு பாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக கலைத்திட்டத்தில் தரப்பட்டுள்ள சொல்லியல் பகுதிகள் ஆசிரியர் வழிகாட்டி மற்றும் இலக்கண நூலிலே மிகையாகவும் சில பகுதிகள் இல்லாமலும் காணப்படுகின்றன. ஆசிரியர் வழிகாட்டியிலே சொல்லின் இயல்பும் வகையும், பெயரிடப்படும் அடிப்படையிலான வகையீடு (இடுகுறி, காரணம், காரண இடுகுறி), சிறப்புப் பெயர், பொதுப் பெயர், பெயர்ச்சொல்லாக்கம், பெயர்கள் வேற்றுமை உருபை ஏற்கும் போது சாரியை பெறுதல், வேற்றுமை மயக்கம் என்பனவும் இடைச் சொல் வகைகள், மட்டும், கூட, ஆவது எனும் இடைச்சொற்கள் என்பனவும் இலக்கண நூலிலே மூவிடப் பெயர் அல்லாத மாற்றுப் பெயர்( படர்க்கை தற்சுட்டுப் பெயர், வினாப் பெயர், வினாப் பெயர் அடியாகப் பிறக்கும் மாற்றுப் பெயர், அளவுப் பெயர்கள்), வேற்றுமையில் தற்கால வழக்கு, முற்று வினை (நிகழ்கால வினை, இறந்தகால வினை, தொடர்கால வினை, வியங்கோள் வினைமுற்று, எச்ச வினை (பெயரெச்சம், வினையெச்சம், வினை எச்சங்களின் அமைப்புப் பயன்பாடு), காரண வினை, இடைச் சொற்கள் (வேற்றுமை உருபுகள், பன்மை விகுதிகள், திணை, பால் விகுதிகள், கால இடைநிலைகள், பெயரெச்ச வினையெச்ச விகுதிகள், எதிர்மறை இடை நிலைகள், ஆக்கப்பெயர் விகுதிகள், தொழிற் பெயர் விகுதிகள், ஏவல், வியங்கோள் விகுதிகள், சாரியைகள், உவமை உருபுகள், சொல்லுருபுகள் போன்றன மிகையாகக் காணப்படுகின்றன.

கலைத்திட்டத்தில் கூறப்பட்டுள்ள தனி வினை, கூட்டு வினை, முதல் வினை, துணை வினை, வினைச்சொற்கள் காலம் காட்டுதல், இடைச் சொல்லின் பயன்பாடு, உரிச்சொல்லிலே ஒருபொருள் குறித்த பல சொல், பல பொருள் குறித்த ஒரு சொல் என்பன ஆசிரியர் வழிகாட்டியிலே இல்லை. அதுபோல இயல்பு, தகுதி வழக்கு, இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல், ஆகுபெயர், தொகைகள், தொழிற்பெயர், வினையில் அளவுப் பெயர், வினைச்சொற்கள் காலம் காட்டுதல், உரிச்சொல், இடைச் சொல்லின் பயன்பாடு, உரிச்சொல்லின் பயன்பாடு, ஏவல் வினை, கூட்டு வினை என்பன இலக்கண நூலிலும் தரப்படவில்லை.

தொடரியலிலே கலைத்திட்டங்கள் பரிந் துரைக்கும் இலக்கணங்களினையே ஆசிரியர் வழிகாட்டியும் பரிந்துரை செய்வதனை அவதானிக்க முடிகின்றது. ஆனால், இலக்கண நூலுடன் ஒப்பிடும்போது வேறுபாடுகள் காணப் படுகின்றன. தொகைநிலை, தொகாநிலை. வாக்கியம், வழுநிலை, வழாநிலை, வழு வமைதி (சொல், வாக்கியம்), நிறுத்தக் குறியீடுகள் போன்ற கலைத்திட்டத்தில் தரப்பட்ட இலக்கணங்களை விடுத்து வினைப் பயனிலை கொண்ட வாக்கியங்கள், எழுவாய் அற்ற வாக்கியங்கள், வினா வாக்கியம் (வினாச் சொற்கள், ஆகார வினா வாக்கியம்), எதிர்மறை வாக்கியம், நிரப்பித் தொடர் போன்றவற்றினை மிகையாகப் பேசுகின்றது.

புணரியலிலே ஆசிரியர் வழிகாட்டியானது

இலங்கை உயர்தர (A/L) தமிழ் இலக்கணப் பாடத்திட்டத்தினைக் கற்பிப்பதற்கு இலங்கைத் தேசிய கல்வி நிறுவகத்தால் வெளியிடப்படும் **கலைத்திட்டம்**, **ஆசிரியர் வழிகாட்டி** என்பவற்றுடன் உயர்தர வகுப்பில் தமிழ் இலக்கணக் கற்றல் – கற்பித்தல் செயற்பாட்டிற்கு **உசாத்துணை**யாகக் கொள்ளப்படும் **பேராசிரியர் எம்.ஏ. நு.ஃமான்** அவர்களின் **அடிப்படைத் தமிழ் இலக்கண நூல்** போன்றவற்றிற்கிடையே வேறுபாடுகள் நிலவுகின்றன. கலைத்திட்டம் பரிந்துரைக்கும் இலக்கணப் பகுதிகளைப் பார்க்கிலும் அனேகமான பகுதிகள் ஆசிரியர் வழிகாட்டியிலும் அடிப்படைத் தமிழ் இலக்கண நூலிலும் காணப்படுகின்றன. இவை மாணவர்களின் வயது மட்டத்தினைவிட கனதியானதாகவே காணப்படுகின்றன என்பதனை விளக்குவதாக கள ஆய்விலே திரட்டப்பட்ட தரவுகள் முன்னிறுத்துகின்றன.

மிகையான பாடத்திட்டத்தினைக் கொண்டுள்ள தனை அவதானிக்க முடிகின்றது. கலைத் திட்டத்திலே பேசப்பட்டுள்ள இலக்கணங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. ஆனால், ஆசிரியர் வழிகாட்டியிலே கலைத்திட்டத்திலே தரப்படாத இலக்கண வகைப்பாடுகள் தரப் பட்டுள்ளன. உதாரணம்: உயிரீற்றுப் புணர்ச்சி, மெய்யீற்றுப் புணர்ச்சி, உடன்படு புணர்ச்சி, குற்றியலுகரப் புணர்ச்சி, லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி, னகர, ணகர புணர்ச்சி, மகர, யகர, ழகர புணர்ச்சி, வல்லினம் மிகுதல், மிகாமை, சிறப்பு விதிப் புணர்ச்சிகள் என்பவற்றினைக் கூறலாம். இலக்கண நூலிலே உயிர் ஈற்றுப் புணர்ச்சி, மெய் ஈற்றுப் புணர்ச்சி என்பன மிகையாகப் பேசப்பட்டுள்ளன.

எழுத்தியல், பதவியல், சொல்லியல், தொடரியல் என்பவற்றுடன் அணியியலிலும் வேறுபாடுகள் காணப்படுவதனை அவ தானிக்கலாம். கலைத்திட்டம் குறிப்பிடும் அணிகளினைவிட ஆசிரியர் வழிகாட்டி பின் வரும் அணிகளினைப் பற்றிக் கூறுகின்றது. அவையாவன: எதுகை, மோனை, தன்மை நவிற்சி, யமகம், திரிபு போன்றனவாகும். மேலும் கலைத்திட்டத்தில் கூறப்பட்ட அணியான ஒட்டணி பற்றிய விளக்கங்கள் கிடையாது. மேலும் கலைத்திட்டம் பரிந்துரை செய்யும் அணிகள் பற்றி, இலக்கண நூலான அடிப்படைத் தமிழ் இலக்கணத்திலே பேசப்படவில்லை. அணியியற் பகுதியே இவ் இலக்கண நூலிலே கிடையாது.

தொகுத்து நோக்கின், கலைத்திட்டம் - ஆசிரியர் வழிகாட்டி போன்ற வள நூல்களில் குறிப்பிடப்படும் எழுத்தியல், பத வியல், சொல்லியல் பகுதிக்குள்ளே வேறு பாடுகள் கிடையாது. ஆனால் இலக்கண நூலிலே கலைத்திட்டம் பரிந்துரைக்கும் பாடத்திட்டத்தினைவிட சில மிகையாகவும் சில இல்லாத இலக்கணங்களினையும் பேசுகின்றது. சொல்லியல் மற்றும் தொடரியலினை நோக்கு மிடத்து, அதிகமான பகுதிகளையே கலைத்திட்டம் பரிந்துரை செய்கின்றது. இதனைவிட ஏனைய வளநூல்களிலே மேற்குறிப்பிட்ட பகுதிகள் மிகையாகவும், கலைத்திட்டத்தில் பேசாத இலக்கணப் பகுதிகளினையும் பேசுவதனை அவதானிக்க முடிகின்றது. அணி தொடர்பாக நோக்கின், ஆசிரியர் வழிகாட்டியானது கலைத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளவற்றினைவிட மேலும்சில அணிகளினைக் கொண்டுள்ளது.

இவ் இலக்கணப் பகுதிகள் யாவற்றுள்ளும் எழுத்தியல், சொல்லியல், புணரியல் மற்றும் அணிப் பகுதி போன்றவற்றில் மாற்றங்கள் கொணரப்படுதல் வேண்டும். புணரியற் பகுதி மாணவர்களிற்கு மேலதிகமாகவே காணப்படுவதுடன் அந்தப் பாடப்பரப்பினைக் குறைத்தல் வேண்டும் (கள ஆய்விலே பெறப்பட்ட தகவல்). குறிப்பாக ஏனைய பகுதிகளைவிட அணிப்பகுதியினுள் மாற்றங்கள் கொண்டுவரல் வேண்டும். இப் பகுதியிலே பொருளணிகள் தொடர்பாக மேலதிக விளக் கங்கள் கொடுக்கப்படல் வேண்டும் அப்போதே மாணவர்களிற்கு இலகுவாகக் கற்பிக்க முடியும் என்பதோடு பரீட்சை வினாத்தாளிலே பகுதி 1இல் காணப்படும் செய்யுள்களினை அடிப்படையாகக் கொண்டே இவ் அணியியற் பகுதி அமைதல் வேண்டும் (தகவல்கள் : கள ஆய்வின் அடிப்படையில் பெறப்பட்டது).




(நேர்காணல் மூலம் பெறப்பட்டது)

கலைத்திட்ட ஆவணத்தினையும் ஏனைய இரண்டு வளநூல்களினையும் ஒப்பிட்டு நோக்கின் அவை கலைத்திட்டத்திலே குறிப் பிடப்பட்டுள்ள இலக்கணங்களை விடக் கனதியானதாகவே காணப்படுவதனை மேலே குறிப்பிட்ட ஒப்பீடு மூலம் நோக்க முடிவதுடன் கள-ஆய்விலே நேர்காணல் மூலம் பெற்றுக் கொண்ட தகவல்களின் பகுப்பாய்வினை நோக்கின், அதிகமானோர் கலைத்திட்டத்தினை விட ஆசிரியர் வழிகாட்டி மற்றும் இலக்கண நூல் என்பன ஓரளவு கனதியானதாகவே காணப்படுகின்றன என்ப தனை முன்வைத்துள்ளனர். இதனைக் கீழ்க் காணும் நேர்கோட்டு வரைபடம் மூலம் அவ தானிக்கலாம். (நேர்காணல் மூலம் பெறப்பட்டது)

ஆக கலைத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டி, இலக்கண நூல் ஆகியவற்றிற்கிடையே வேறு பாடுகள் நிலவுவதுடன் கலைத்திட்டம் பரிந் துரைக்கின்ற இலக்கணங்கள் ஏனைய இரு







வளநூல்களிலே சில பகுதிகள் மிகையாகவும் கலைத்திட்டத்திலே பேசப்படாத இலக்கணங் களாகவும் விளங்குவதுடன் இவை மாண வர்களிடத்தே வயது மட்டத்திற்கேற்ப அதிக மானவையாகவே விளங்குவதனை நோக்க முடிகின்றது.

தொகுத்து நோக்கின், பாடசாலைக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளிலே கலைத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டி, இலக்கண ஆசிரியரால் எழுதப்பட்ட இலக்கண நூல் என்பவை முக்கியமானவை. இவற்றில் ஆசிரியர் வழி காட்டியானது ஒவ்வொரு இலக்கணப் பகுதி யும் ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்தினை மாணவர் அடையவேண்டும் எனும் நோக்கோடு தேசிய கல்வி நிறுவகத்தினால் உருவாக்கப்பட்ட தாகும். அதேபோல இலக்கண ஆசிரியரால் எழுதப்பட்ட இலக்கண நூலும் மரபுத் தமிழோடு சேர்த்து நவீன தமிழையும் கற்க வேண்டும் என்பதற்காக எழுதப்பட்டுள்ளது. அந்தவகையில், கலைத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டி, இலக்கண ஆசிரியரால் எழுதப்பட்ட இலக்கண நூல் ஆகியன குறித்து ஒப்பிடும் பொழுது இவற் றிற்கிடையே வேறுபாடுகளும் நிலவுகின்றன.

○○○

# இன்னும் அங்கேதான் இருக்கிறேன்

கனவுகள் ஒழிந்தன,
காற்று திசை மாறியது
நேற்று நாமிருந்து கதைத்த பெரிய மரங்களை
புயல் வீழ்த்தியது.
விழுந்த சருகொன்றின் உலர்ந்த பழப்பிசினை
இழுத்துச்செல்கின்றன சிவப்பெறும்புகள்.

நான் இன்னும் அங்கேதான் இருக்கிறேன்,
முதுமரத்தின் வெடித்த பட்டைகளில் மலரும்
காளான் குடைகளைப் போல் மீண்டும் மீண்டும்
உடைப்பெடுத்துப் பெருகும் நினைவு நதியில்
கால் நனைத்துக் கொண்டிருக்கிறேன்

நான் இன்னும் அங்கேதான் இருக்கிறேன்,

இலையுதிர் காலத்தில் மொட்டையாகிப்போன
ரெபரேசியா மரங்கள் சிவப்பும் மஞ்சளுமாய்
மீண்டும் மீண்டும் வர்ணம் பூசுகின்றன.
இளசுகளின் கேலரிகளை நிறைத்த திருப்தியில்
நிமிர்வுகொள்கின்றன மஞ்சட்பூக்கொடிகள்.

நான் இன்னும் அங்கேதான் காத்திருக்கிறேன்.

இப்பொழுது
எனது இளவேனிலுக்காக
எனது மலர்தலுக்காக

**- வில்வரசன்**
(தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்)

சிறுகதை



# ஒரு வகையில் இதுவும் ஒரு கொலைதான்

நிலவூர்ச் சித்திரவேல்
(திருகோணமலை)

அந்தக் கிராமத்தில் சுற்றி வளைப்பு தீவிரப்படுத்தப்பட்டது. வீடுவீடாகப் புகுந்த சீருடையாளர்கள் சுந்தரியின் வீட்டுக்கும் போய் பெட்டி பாய் படுக்கைகள் எல்லாம் தட்டிக் கொட்டிக் கட்டில்களுக்குக் கீழும் அலுமாரிகளுக்குப் பின்புறமும் குனிந்து புகுந்து துழாவித் துழாவிப், "பொடியன்கள் எங்கே? பொடியன்கள் எங்கே? கூப்பிடுங்க வெளிய வரச் சொல்லுங்க" என்று குடும்பத் தலைவி சுந்தரியிடம் காட்டுக் கூச்சல் போட்டாங்க. "இங்க பொடியங்கள் இல்ல. பார்த்தனீங்கதானே?" என்று பதில்சொன்ன சுந்தரி "நல்லவேளை என் இளந்தாரிப் பிள்ளைகள் மூன்று பேரும் இன்று தகப்பனோட தோட்டத்துக்குப் போய் விட்டாங்க. இல்லாட்டிக்கு இண்டைக்கு இந்தச் சண்டாளனுகளிட்ட மாட்டியிருப்பாங்க" என்று தன் மனதுக்குள் சொலித் திருப்திப்பட்டுக்கொண்டாள்.

விடிந்தும் விடியாத காலைப் பொழுதோட வெறுந்தேத்தண்ணியோட போன தகப்பனும் மக்களும் ஒன்பது மணியாகியும் காலைச் சாப்பாட்டுக்கு இன்னும் வீட்டுக்கு வராதது சுந்தரிக்குக் கவலையைக் கொடுத்தாலும் வீட்டுக்கு வாற வழியில இவங்களிட்ட மாட்டுப்படாம தோட்டத்தில பாதுகாப்பாக நின்று பார்த்து வாறதுதான் புத்திசாலித்தனம் என்று எண்ணியவளாய், நான் இந்தச் சண்டாளனுக ளோட மினக்கெட்டதில காலைச் சாப்பாடும் செய்யேல்ல. மனுசனுக்கும் பிள்ளைகளுக்கும் புட்டும் அவித்து முட்டையும் பொரித்துச் சம்பலும் இடிக்கவேணும் என்று அவசரமாக அடுக்களைக்குள் போய் வேலையைத் தொடங்கிவிட்டாள்.

தகப்பனும் பிள்ளைகளும் நல்ல பசி யோட வருவாங்க என்ற துடிப்பில துரித கதியில சமையலை முடித்துவிட்டு சுவர்க்

கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள் சுந்தரி. கடிகார முட்களும் சுற்றிச் சுற்றி நேரம் ஒன்பதரை, பத்து, பத்தரையாகியும் விடச் சுந்தரி மனதில் பயம் குடியேறத் தொடங்கி விட்டது. அப்படியிருக்க சின்னத்தம்பியர் தோளில போட்டுப் போன துவாயைத் தலைப் பாகையாய்க் கட்டிக்கொண்டு ஓட்டமும் நடையுமாக வீட்டுக்குள்ள வந்து புகுந்தார். மேய்ச்சல் தலத்துக்குப் போன மாடுகள் வெருட்சி கண்டு காட்டைவிட்டு வீட்டுக்கு வெருண்டு வந்தது போல சின்னத்தம்பியரும் கத்தரித்தோட்டத்திலிருந்து வந்து வாயடைத்து நின்றார். சந்தேகம் கொண்ட சுந்தரி "என்னப்பா நீங்க மட்டும் தனியா வந்திருக்கிறியள். நம்மட பிள்ளைகள் எங்கப்பா?" என்றதும் சின்னத் தம்பியர் சின்னப்பிள்ளையைப்போல விம்மத் தொடங்கிவிட்டார் விஷயத்தை விளங்கிக் கொண்ட சுந்தரி, "ஐயோ என்ர பிள்ளைகளைச் சண்டாளனுகள் அள்ளிக்கொண்டு போட் டாங்களே! காலைச் சாப்பாடும் செய்து காத்திருக்க தாம் உண்டு தங்கட தோட்டம் உண்டு என்று கூட்டாளிகள் கும்மாளங்கள் ஒன்றும் தெரி யாமல் தகப்பனோட பிரயாசிகளாகத் திரிந்த பிள்ளைகளை எங்க கொண்டுபோய் முட்டி தட்டப் போறாங்களோ அதுக்கும் மேலாலயும் என்னாச்சும் செய்துபோடுவாங்களோ! ஐயோ மாரியாச்சி அப்படி ஏதுவும் நடக்கக்கூடாது. என்ர செல்வங்கள் என்னட்ட சுகமா வந்து சேர்ந்திடவேணும்" என்று தெய்வங்களை வேண்டிக்கொண்டாள்.

"என்னப்பா நடந்தது. தோட்டத்திலிருந்து நீங்களும் பிள்ளையளும் வரேக்க அந்தக் குறுக்கால போவானுகள் வந்து அள்ளிக்கொண்டு போட்டாங்களோ? நீங்கள் ஒன்றும் கதைச்சுப் பார்த்துக் காப்பாத்தேலாமல் போச்சுதோ?" சுந்தரி நடந்ததை விசாரிச்சாள். "இல்லையப்பா, உவனுகள் தங்கட யூனிபோமோட தோட்டா மாலையும் தோள்பையும் துவக்குமாக தொடர் அணியாக வந்ததை நான் தூரத்தில கண்டிட்டே தம்பியவை, விசயம் பிழை. நீங்கள் மூணுபேரும் வளர்ந்த கத்தரிச்செடி மறைவுக்குள்ள பதுங்கிக் குந்தியிருங்கடா, நான் தோட்டத்துக் கேற் வாசலில் தோளில மண்வெட்டியோட நின்று அவங்களுக்குக் கதை சொல்லி அனுப்பிப் போடுவன். அவங்கள் போனாப்பிறகு நான் கூப்பிடுவன் அதுக்குப் பிறகு நீங்கள் எழும்பி வெளியால வாங்க. அவங்கள் சுற்றிவளைச்சுத் துளாவிப்போட்டுவந்த வளவுகளுக்கால நாங்கள் வீட்டுக்குப் போய்விடலாம்" என்று சொல்ல ஓம் என்று பதுங்கினவங்கள். இவன் இளையவன் உனக்குத் தெரியும்தானே அவனைப்பற்றி. கத்தரிச்செடிச் சுணை தாங்கேலாமல் கையைக் காலை ஆட்டிச் சொறிஞ்சிருக்கிறான். செடிகள் ஆடி அசைந்ததைக் கண்ட அவங்கள். "ஆரு உள்ள நிக்கிறது?. 'வம்பட்டு' மரம் ஆடுறது? (கத்தரி) ஏன்று கேட்டுக்கொண்டே கேற்றடி யில நின்ற என்னை இடிச்சு விலத்திக் கொண்டு உள்ளே போய்விட்டான். வரும்போது மூன்று பேரையும் 'சாய்ச்சுக்கொண்டு' வந்தான். "மல்லி - புத்தா", என்று மாறிமாறி அவங் களை விளித்து, "இவங்க ஒரு குத்தமும் செய்யேல்ல. தோட்டத்தில என்னோடதான் வேலை செய்யிறவங்க. விட்டிடுங்க" என்று கெஞ்சினேன். "குத்தம் செய்யாதவங்க ஏன் பத்தைக்குள்ள ஒளிச்சுக் குந்தியிருந்தவங்க. உங்களோடயே நிக்கலாம்தானே? என்று கூட்டிக்கொண்டு போய்விட்டாங்க. நான் என்ன செய்யிறது" என்று தேம்பி அழத் தொடங்கி விட்டார்.

பகல் மூன்று மணியளவில் கிராமத்து வீதிகளால் ஒலிபெருக்கி அறிவித்தல். "எல் லாறும் இஸ்கோலுக்குப் போங்க. ஒருத்தரும் வீட்டில நிக்கக்கூடா. வீற்றில நிண்டது கண்டா சுடுவம். சுறுக்கா இஸ்கூலுக்குப் போங்க ஒங்கட கிராம நிலதாறி வந்து பதிஞ்சு ஒங்களுக்குச் சாப்பாடு தருவான். சுறுக்காப் போங்க, சுறுக்காப் போங்க" என்று அறி விக்கச் சனத்துக்கு என்ன செய்யிறதென்று தெரியாமல் அக்கம் பக்கம் வீட்டாக்களோட கதைச்சுப் பேசி அவதி அவதியாக எடுத்துப் போகவேண்டிய அத்தியாவசிய சாமான்களை பிரயாணப்பைகளிலும் உரப்பைகளிலும் அடைஞ்சு அடைஞ்சு எடுத்தார்கள் குழந்தைப் பிள்ளைக்காரர் பால்மா சீனி சுடுநீர்ப்போத்தல்கள் மறக்காமல் எடுத்தார்கள். நகைகளைப் போட்டுக் கொண்டு போறதும் பயம் என்று வீட்டில் ஒளிச்சு வைக்கக்கூடிய இடங்களில் ஒளிச்சு வைத்தார்கள். பொழுதுபடமுன் அவன் வந்து வீடுகளுக்க நுழைஞ்சு விரட்டிக் கலைக்கமுதல் புறப்படவேணும் என்று குறியாயிருந்து வெளிக் கிட்டுவிட்டார்கள்.

சின்னத்தம்பியரும் சுந்தரியும் விதிவிலக்கில்லை. ஆனாலும் மூன்று பெடியன்களையும் அவங்கள் கூட்டிப்போன கவலையில் விரக்தியில் எதை எடுப்பது எதைப் பத்திரப் படுத்தி வைத்துவிட்டுப் போவது என்று ஆறுதலாகச் சிந்திக்கும் மன நிலையில் அவர்கள் இருவரும் இல்லை. அது ஒரு புறம். சின்னத்தம்பியர் ஒரு பெரும் விவசாயி. மூன்று நான்கு வெவ்வேறு வெளிகளில் தகப்பனும் மக்களும் சேர்ந்து சுமார் நூறு ஏக்கர் வரையில் கோடை மாரி என்று மாறி மாறி விதைக்கிறவங்கள் அதுக்குத்தக்க உழவு இயந்திரம், இரட்டை மாட்டு வண்டில், இரசாயன தெளிகருவி, யூறியா போன்ற உரவகைகள் இருப்பில். தன்னுடையதும் அடுத்த ஊரில் வசிக்கும் சம்பந்தியினதுமான அறுபது விதைநெல் மூடைகள் புதிதாகக் கட்டிமுடித்து இன்னமும் குடிபுகாமல் அத்தினத்தைப் பார்த்திருக்கும் அந்தப் புதிய வீட்டுக்குள்ளே ‘அட்டி’ போட்டு அழகாக அடுக்கி வைக்கப்பட்ட நிலையில். அதைவிட விலை சந்திக்காதபடியால் ஆறுதலாகக் கொடுக்கலாம் எனப் பேரம் பேசி வைத்திருக்கிற் பதப்படுத்தின இரண்டு பாடம் புகையிலை. இதுகளையெல்லாம் முகாமுக்குக் காவிக்கொண்டு போகேலுமா அல்லது வீட்டில ஒளிச்சுவைச்சிற்று வரேலுமா? சின்னத்தம்பியரும் சுந்தரியும் இரண்டு சோடி மாற்று உடுப்புகளோடும் பாய் தலையணையோடு மட்டும்தான் பாடசாலை முகாமில் தஞ்சம் புகுந்தனர்.

பகுதிக் கிராம சேவையாளர் வந்து ஒவ்வொரு குடும்பமாகப் பதிவு செய்யத்தொடங்கிவிட்டார். “நாளை காலையிலிருந்துதான் தேநீர் சாப்பாடு வழங்கப்படும். இன்று இரவைக்கு ஏதும் கொண்டுவந்திருப்பீர்கள்தானே?” என்று கேட்டதும் சாப்பாடு கொண்டுவந்தவர்களோடு சேர்ந்து கொண்டுவராதவர்களும் “ஓம் ஓம்” என்று தத்தம் கௌரவங்களைக் காப்பாற்றிக் கொண்டார்கள்.

பொழுதுபடும் வரையிலும் பள்ளிக்கூடம் கறிக்கடை போலத்தான் இருந்நது. பல நாட்களுக்குப் பிறகு கண்ட சில உறவுகள் நண்பர்கள் அகதி முகாம் வாழ்க்கையின் முதல் நாள் ஆரம்பித்துவிட்டதே என்பதையும் மறந்து ஏதோ உல்லாசப் பயணம் வந்தவர்கள் போல நடந்துகொண்டார்கள். அதுவும் குறிப்பாக அன்று உழைத்து அன்று உண்டவர்கள், “மடியில் கனமில்லாதவர்கள்..”. குடும்ப உறுப்பினர்களின் பொறுப்புகளைத் துறந்தவர்கள்தான் பெரும்பாலும் அப்படி அலட்சியமாக நடந்து கொண்டார்கள்.

முழுக் கிராமும் இருளில் மூழ்க மூழ்க, முகாம் சத்தங்களும் அடங்கிவிட இடையிடை துப்பாக்கி வேட்டுகள் கேட்டன. “எல்லாரும் இஸ்கோலுக்குப்.. போங்க. ஒறுத்தறும் வீற்றில நிக்கக்கூடா. வீற்றில நிண்டது கண்டா சுடுவம்.” ஏன்ற அறிவித்தலைச் சிலர் மீட்டுப் பார்க்கிறார்கள். சில பெற்றோர் தாங்கள் முகாமுக்குப் போகும்போது தங்களுடைய வயது வந்த ஆண்பிள்ளைகளையும் வாங்கடா போக என்று கூப்பிட்டதற்கு, “நீஙக போஙக நான் கூட்டாளிப் பொடியன்களோட பிறகு வருவன்தானே” என்று கூறிவிட்டு அவர்களோடு வராமல் நின்ற அடங்காப் பிடாரிகள் சிலர் இன்னும் முகாமுக்கு வந்து சேராததை அறிந்த பெற்றோர்கள் இப்போ துப்பாக்கி வேட்டுச்



**“குத்தம் செய்யாதவங்க ஏன் பத்தைக்குள்ள ஒளிச்சுக் குந்தியிருந்தவங்க. உங்களோடயே நிக்கலாம்தானே? என்று கூட்டிக்கொண்டு போய்விட்டாங்க. நான் என்ன செய்யிறது” என்று தேம்பி அழத் தொடங்கிவிட்டார்.**

சத்தங்கள் கேட்கக் கேட்கக் கலக்கம் அடைந்து விட்டார்கள்.

நள்ளிரவாகிவிட்டது. நாய்கள் ஊளையிடும் சத்தமும் தெருத்தெருவாய்ப் பரந்து கேட்கத் தொடங்கிவிட்டது. எசமானர்கள் இல்லாத வீட்டு நாய்கள்தான் அவர்களைத் தேடிக் குரல் கொடுத்தனபோலும். வீதிரோந்தில் வீறுநடைபோட்டுச் செல்லும் சீருடைத் துப்பாக்கிதாரிகளின் பூட்ஸ் சத்தங்கள் கேட்டு குரைக்கும் காவல் நாய்களின் சத்தம் மறுபுறம். தூக்கம் வராமல் விழித்தேயிருந்தவர்களின் பயத்தை மேலும் கூட்டியது. திடீரென ஒரு திசையில் ஒரு வீட்டில் தீப்பற்றிக் கொழுந்து விட்டெரிந்துகொண்டிருந்ததை யாரோ ஒருவர் பார்த்துப் பிறருக்கும் காட்ட, முகாமில் அநேகமாக எல்லோரும் முழுமையாக விழித் தெழுந்தபடியும் இன்னும் சிலர் அதுபற்றி அக்கறையில்லாமல் அரைகுறைத் தூக்கத்திலும் இருந்தார்கள். எந்த வீடு இப்படி எரிகிறது என்று சரிவர இனங்காணமுடியாத நிலையிலும் சிலர் தங்கட வீடுதானோ என்று தடுமாறிப் பயந்து கொண்டிருந்தார்களேயொழிய அந்த நள்ளிரவில் முகாமை விட்டு வெளியேறி வீதியால் போகப் பயந்துகொண்டிருந்தார்கள்.

இப்படியிருக்க அடுத்த பாடசாலை முகாமில் பொறுப்பதிகாரியாகப் பணிக்கப்பட்டிருந்த அப்பகுதிக்குரிய கிராம உத்தியோகத்தர் அப்துல் காதர் இந்த முகாமிலுள்ள அதிகாரியிடம் சில படிவங்கள் வாங்குவதற்காகச் சீருடையினரின் அனுமதியுடன் வந்திருந்தார். அவரிடம் சிலர் போய் எரிகிற வீட்டைப் பற்றிக் கேட்டார்கள். அது நம்மட சின்னத்தம்பிப் போடியாரிட வீடுபோலத்தான் எனக்கு விளங்கிச்சுது. அவர்ற புதுவீட்டுக் கோப்பிசம் எரிந்து விழ விழ வீட்டுக்க கிடந்த நெல்லு மூடைகள் எரியிது. பொயிலைப் பாடமும் எரிந்து காரம் பரவுது. நான் நிக்கேலாமல் வந்திட்டன் அங்க ஒரு மனித நடமாட்டமும் இல்லை. பயமாக் கிடந்தது. வந்திட்டன். போடியார் .... முகாமில.... இல்லையோ...... என்று இழுக்கச் சுந்தரி அது கேட்டு ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிட்டாள்.

ஐயோ என்ர மூணு பொடியங்கள், இரண்டு பொயிலைப் பாடம். அறுபது மூடை நெல்லு. எல்லாம் போச்சு ! எல்லாம் போச்சு.. என்று கதறியபடி நெஞ்சைப் பொத்திக் கொண்டு பள்ளிக்கூட பெஞ்ச் ஒன்றில் சாய்ந்துவிட்டார். சின்னத்தம்பியர் இது விஷயம் ஏற்கனவே வேறு ஒருவர் மூலம் அறிந்து ஊர்ஜிதப் படுத்திக்கொண்டு சுந்தரியைத் தவிர்ப்பதற்காக எட்டத்தில் நின்றவர் இப்ப அவள் மயங்கிய சங்கதி அறிந்து ஓடோடி வந்தார். பார்த்தார் திகைத்தார். பதைத்தார். மண்டபப் பொறுப்பதிகாரியுடன் கதைத்து அந்தக் கிராமிய வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார். அங்கு பார்வையிட்ட வைத்தியர் முகத்தைச் சுளித்துக்கொண்டு தனது அம்புலன்சிலேயே நகரத்துப் பொதுவைத்தியசாலைக்குக் கொண்டுபோக ஒழுங்கு செய்து கொடுத்தார். அறிவு மயங்கிய நிலையில் சுந்தரி தனது நெஞ்சைப் பொத்திய கையை எடுக்காமலேயே பொதுவைத்திய சாலைக்கும் வந்து சேர்ந்து விட்டாள். அங்குள்ள சீருடை அணிந்த சிப்பந்திகள் மற்றும் தாதியர் துரித கதியில் இயங்கிச் சுந்தரியை அம்புலன்ஸ் வண்டியிலிருந்து மிகப் பக்குவமாக இறக்கி வைத்தியசாலைக் கட்டிலில் மாற்றிப் படுக்க வைக்கத் தகவல் அனுப்பப்பட்ட வைத்தியரும் உடன் வந்து சேர்ந்து நோயாளியின் உள்ளங் கைகளைத் தட்டிக் கன்னத்தில் தட்டி, “அம்மா, இஞ்ச பாருங்க, உங்களுக்கு என்ன செய்யுது, சொல்லுங்க சொல்லுங்க” என்று அவளைச் சுயநினைவுக்குக் கொண்டுவர முயன்றார்.

சிறிது சிறிதாகக் கண்ணைத் திறந்து பார்த்த சுந்தரி, “என்ர மூன்று பிள்ளைகள்,

இரண்டு பாடம் பொயிலை, அறுபது மூடை நெல், ஐயோ என்ர மூன்று பிள்ளைகள், இரண்டு பாடம் பொயிலை, அறுபது மூடை நெல்” இப்படித் தொடர்ந்து கத்தி அழுவதும் மீண்டும் மயங்கிச் சோர்வதுமாக இருந்தார். விடயம் புரியாத வைத்தியர் நோயாளியைக் கூட்டி வந்த சின்னத்தம்பியரிடம் விபரம் கேட்டறிந்தார். இரவிரவாக இப்படியே புலம்பி அழுவதும் பின்னர் அடங்கி உறங்குவதுமாக இருந்த சுந்தரி அடுத்த நாள் காலை கண்களை மூடியவள் மூடியவள்தான். கிராமத்து வைத்தியசாலை அம்புலன்ஸில் நகரத்துப் பொது வைத்தியசாலைக்கு வந்த சுந்தரி ஊருக்குச் சடலமாகப் போய்ச் சேர்ந்தாள். இறுதிச் சடங்குகளுக்கான ஆயத்தங்களைச் சின்னத் தம்பியருடன் சேர்ந்து உற்றார் உறவினர்

கவனித்தனர். பூசா முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட மூன்று பிள்ளைகளையும் பெற்ற தாயின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள விடுவார்களா தெரியாது. சின்னத்தம்பியர் அதுபற்றியும் சிந்திக்கவில்லை. நெல்மூடையில விழுந்த நெருப்பு நெல்லை உமிக்கரியாக்கிக் கொண்டிருப்பதையும் இரண்டு பாடம் புகையிலையும் எரிந்து சாம்பலாகிக் கொண்டிருப்பதையும் பார்த்து ஏக்கப் பெருமூச்சு விட்டபடியே இந்தப் பொருள்கள் போன தொன்றும் எனக்குப் பெரிதில்லை. அடுத்து வரும் ஆண்டுகளில் இவற்றைத் தேடிக் கொள்ளுவன். ஆனால் இந்த எரிபாட்டைக் கேள்விப்பட்டுத் தன் மார்பில கையை வைத்தபடி தன் உயிரை மாய்த்துக்கொண்ட என் மனைவியை இனி எத்தனை ஆண்டுகள் தாண்டினாலும் தேடிக்கொள்ளமுடியுமா.. என்று வாய்விட்டு வான் அதிரக் கத்தித் தன் தலையில் அடித்துக்கொண்டார்.

இதற்கிடையில் யாரோ வந்து அவர் கையில் மனைவியின் மரண சான்றிதழைக் கையளித்தார்கள். அதனை வாங்கியவர் என்ன யோசித்தாரோ தெரியாது. “மரணத்துக்கான காரணம்” என்று அச்சிடப்பட்ட கூட்டுக்கு எதிரே விடையாக என்ன எழுதப்பட்டிருக்கிறது என்றுபார்த்தார். “திடீர் என்று ஏற்பட்ட மார்பு வலி” என்று எழுதப்பட்டிருந்தது. அதற்குக் கீழ்க் கூட்டில் “மார்பு வலிக்கான காரணம்” என்று படிவத்தில் அச்சிடப் பட்டிருக்கிறதா என்று பார்த்தார். அப்படி ஒன்றும் இல்லை. தானே அந்தச் சான்றிதழின் இடப்பக்கக் கூட்டில் “மார்பு வலிக்கான காரணம்” என்று எழுதிக்கொண்டார். அந்தக் கூட்டுக்கு எதிரே விடையாக, “அராஜகம்” என்று எழுதி “இதுவும் ஒரு வகையில் ஒரு கொலைதான்” என்று தன் ஆதங்கத்தைத் தீர்த்துக்கொண்டு இனி ஆகவேண்டியதைக் கவனிக்கத் தொடங்கினார் சின்னத்தம்பியர்.

❍❍❍

# களவாடிய பொழுதுகள்

சூரியக் குழம்பில் கொதிக்கிறது நண்பகல்
காலம் கருக்கிய உடலோடு உச்சி
வெயிலில் அம்மணமாய்
பூங்கொண்டல்..

வெடித்துப் பிளந்த பட்டைச்
செதில்களுக்குள் செமித்துப்போயிருக்கும்
எம் பள்ளிக்கதைகள்

இது போன்ற சுடுவெயிலில்
மைதானமாடிய குழந்தைகளைக்
கரம் தட்டி வரவளைக்கும்..
இளைப்பாறுவதற்கு..

தண்டெல்லாம் பொறித்திருக்கும்
பெயர்களில் மட்டுமே வாழ்ந்த
காதல்கள் ஏராளம்..

காலைப் பிரார்த்தனையென்றால்
அத்தனை பிரியம் அதற்கு..
கணக்கிலா நற்சிந்தனைகளைச்
சுவைத்த செவியில்
பொருத்தமாகத் தொங்குகிறது..

“கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு”

பட்ட மரம் சிரிக்கிறது
எனக்குள் துளிர்க்கிறது பூங்கொண்டல்..

**- எஸ். சுடர்நிலா**

**(விடுகை வருடம், பேராதனைப் பல்கலைக்கழகம்)**

சிறுகதை



# பாசவேர்கள்

## இவர்கள் இரண்டாம் தலைமுறை

**மதிவதனி**
(சுவிற்சலாந்து)

**கோ**டைவிடுமுறைக்கு எங்க போறீங்க? ஊருக்குத்தானே என்றாள் பாரதி.

அங்க போய் என்ன செய்றது? ஓடி ஓடி உழைச்ச காசை ஒவ்வொருவருக்கும் பிரிச்சுக் கொடுக்கத்தான் முடியும். அதைவிட அவங்கட திமிர்க்கதைகள் வேற சுவிசில் இருந்து வந்து எங்களுக்கு பிச்ச தாறார் என்று. இதைவிட இந்தக் காசுக்கு செவன் ஸ்டார் ஹோட்டலில் வடிவாகத் தங்கி எந்தவித தொல்லையும் இல்லாமல் வெள்ளைகளோடு வெள்ளைகளாக சூப்பராக அனுபவிக்கலாம்.

நான் துருக்கி போகப்போறன் ஊருக்கு இனிப்போறதாக இல்லையென்று மூச்சவிடாமல் சொல்லி முடித்தாள் மதுமிதா. ஏய்.. ஏய்.. ஒரேயொரு கேள்விதான் கேட்டேன் இதற்கு எதற்கு இத்தனை விளக்கமென்று கலகலத்தாள் பாரதி. அவளின் கலகலப்பில் உணவு விடுதியில் இறுக்கமான முகங்களோடு உணவை உண்டு கொண்டிருந்த பல முகங்களில் சற்றென ஒரு இளம் புன்னகை பூர்த்து மறைந்தது.

இந்த இடத்தில் மற்றவர்களின் கலகலப்பும் உற்சாகமும் முகமறியா மனிதர்களைக் கூட மலரவைக்கலாம் என்றே தோன்றியது. 2002ஆம் ஆண்டு இருவரும் கலைமகள் தமிழ்பள்ளியில் பிள்ளைகளின் தாய்மார்களாக அறிமுகமாகிக் கொண்டார்கள். அந்த அறிமுகம் இன்று ஆருயிர்த்தோழிகளாக இணைத்துவிடுமென நினைத்துப்பார்த்தது இல்லை.

பாரதியின் மகன் கவின் இன்று இருபத் திரண்டு வயது இளைஞனாக மிடுக்கோடு தலைநிமிர்ந்து நிற்கின்றான்.

கணினித்துறையில் தொழில் புரியும் அவனுக்கு தன் தாயைப்போலவே மதுமிதாவும். இதனால் மதுமிதாவின் இருமகள்மாருடனும் கவினைக்காணும் எல்லோரும் மூன்றுபிள்ளை களும் வளர்ந்துவிட்டார்கள் என்பார்கள்.

ஓம்.. ஓம்.. இந்தா பெத்தது போல இருக்கு இன்றைக்கு இவங்களை நிமிர்ந்து பார்க்க வேண்டியிருப்பது உயரத்தில மட்டுமல்ல கதைக்கிற கதையிலும் என கேலியாக சொல் லிச் சிரிப்பாள்.. மதுமிதா.

ஆனால் கவின் என் மகன் இல்லையென்று இதுவரை யாரிடமும் அவள் சொன்னதில்லை. ஆரம்பத்தில் இதனை அலட்டிக்கொள்ளாத கவின் வளரவளர அவனுக்குள் ஆயிரம் கேள்விகள் ஏன் மதுமிதா அத்தை யாரிடமும் என்னை மகன் இல்லையென்று சொல்வதில்லை?

அம்மா அம்மா என்று கத்தியவாறே தாயிடம் வந்தவன் ஏன் அம்மா மதுமிதா அத்தை என்னை தன் மகன் இல்லையென்று

சொல்வதில்லை என்றான்? அலுமாரியில் உடுப்புகளை அடுக்கிகொண்டிருந்த பாரதி மகனை விருட்டெனத் திரும்பி பார்த்தாள்.

தம்பி நீ எப்படிக் கூப்பிடுகிறாய்? அத்தை.. என்று... உனக்குத்தெரியும் அவங்க உன்ர சொந்த அத்தை இல்லையென்று. ஆனாலும் சின்ன வயதில, இருந்து நீங்கள் மூவரும் ஒத்த வயதினராக இருந்ததால் ஒன்றாகவே படித்தீர்கள் விளையாடினீர்கள்.

உங்கள் மூவரினதும் ஒற்றுமையும், அன்புமே எங்களை உற்ற நட்புகளாக மாற்றியது. அதனால் இரத்த உறவே இல்லாத எங்கள் நட்பை நாங்கள் இரத்த உறவுகளுக்கு மேலாக மதித்தோம்.

அத்தை, மாமா என மகிழினியும் தமிழினியும் என்னையும் அப்பாவையும் கூப்பிட நீ அவங்க அப்பா அம்மாவை அத்தை மாமா எனக் கூப்பிடத்தொடங்கினாய். உறவுகளுக்குத் தேவை முறையல்ல அன்பு மட்டுமே கவின். அந்த அன்புதான் உன்னை அவள் மகன் இல்லையென்று சொல்லவிடுதில்லை என்றாள் பாரதி...

அப்போது கவினுக்கு 15 வயது ஓரளவு தெளிவாகப்புரிந்தது. அதிலும் அம்மா சொல்லி உறவுகளுக்கு தேவை முறையல்ல அன்பு மட்டுமே.. என்ற வார்த்தை ஆழமாக பதிந்தது. இங்க பாரு மது நீ ஊருக்குப் போய் காசு கொடுக்கத்தான் வேண்டுமென்று யார் கட்டாயப்படுத்தியது? என்றாள் பாரதி. என்னடி உனக்கு லூசா கட்டாயப்படுத்தியா? கேட்கிறாங்க..

பிள்ளைக்கு படிக்க, கடைபோட, ஆட்டோ வாங்க இப்படி ஒவ்வொரு நிமிடமும் நூறாயிரம் விண்ணப்ப படிவம். சாப்பிட வாங்க.. சாப்பிட வாங்க... என்று கையைப்பிடிச்சு இழுத்திட்டு போவாங்க கையை கழுவினப்பிறகு இப்படி முடிப்பாங்க.

பாரதி நாங்க இந்தக்குளிர்ல படுற பாடு அவங்களுக்குத் தெரியுமா? சமைச்சு சாப்பிட நேரமில்லை அப்படிச்சமைச்சாலும் ஒன்றாக எல்லோரும் இருந்து சாப்பிட அந்த ஒருநாளுக்காக காத்திருக்கிறோம்.

அந்த ஒரு ஞாயிறு தானேடி நமக்கு எல்லாமே என்றாள் மதுமிதா. உண்மைதான் 'நமக்கு எல்லாமே' என்ற அர்த்தம் உணர்ந்த தோழி பாரதிக்கும் மனசு வலிக்காமல் இல்லை. தேவைகளைச் சுருக்கி வாழத்தெரியாத பெண்களாக இருவரும் இல்லை.

வெள்ளையர் தனியாக சேமிக்கிறார்கள் கணக்குப்பார்த்து செலவழிக்கிறார்கள். ஆனால் நாம் சொந்தப்பிள்ளையின் படிப்பு, எதிர்காலம் குறித்தும் அவர்களுக்கு பயமில்லை.

திறமை இருந்தால் முன்னுக்கு வருவான் இல்லாட்டி அவர்கள் திறமைக்கு ஏற்ப ஒன்றை தேர்வு செய்வார்கள். கண்டபடி செலவழித்து ஏற்றி இறக்கி கட்டாயப்படுத்தி திணித்து படிப்பிக்க வெள்ளக்காரன்கள் தயாராக இல்லை.

அதற்கு காரணம் கேட்டால் இப்படித்தான் எங்களைப் பெற்றோர் வளர்த்தார்கள் என்பார்கள். நான் பகுதிநேர வேலை செய்தேன் படித்தேன், கார் பழகினேன் உடுப்பு வாங்கினேன் ஊர்சுற்றப்போனேன் என்று அடுக்குவார்கள். அவர்களிடத்தில் குடும்ப அமைப்பு வளைச்சிக்கல் இல்லை. சுதந்திரமான கருத்துச் சுதந்திரத்துடன் கூடி ஒரு உறவமைப்பு.

அவரவர் தேவைக்காக அவரவரே உழைக்க முன் வரவேண்டும்.பிள்ளைகளாக இருந்தாலும் அதற்குத் தயாராக இருப்பதை உணர்த்த வேண்டும். அதன் பின்பு இருக்கவைத்து தயார் படுத்தலுக்கான உரையாடலைத் தொடங்குவார்கள்.

அதற்காக எவ்வளவு நேரம், சக்தி, விடா முயற்சி வேண்டுமென்று விளங்கவைப்பதுடன் அதில் வரக்கூடிய சிக்கல்களையும் சொல்லிவிடுவார்கள். இந்த இடத்தில் பணத்தின் பெறுமதி விளங்கவைக்கப்படுகிறது. அதன்பின் தொடர்ச்சியாக இயங்க முடியாதபோது இழப்புகளையும் புரியவைக்கிறார்கள்.

மாற்று வழிகள்கூட பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்கப்படுகிறது. நம்மவர்கள் இப்படியெல்லாம் பேசிய வரலாறு இல்லை. எப்போது சுதந்திரக்காற்று உள் நுழையவில்லையோ அன்றே தனித்தனியாக பிரிந்து விடுவார்கள்.

நம்மவர்களில் பலர் இப்போதெல்லாம் அவர்களைப்போல வாழமுனைகிறார்கள் ஆனால் இழுத்துப்பிடிக்க முடியவில்லை... பாசம் என்ற உணர்வுக்குள் வேறூன்றி வளர்ந்துவிட்ட உறவமைப்பு நாம்.

வெளிமரத்தின் கிளைகளை சுவிற்சர்லாந்துக்கு ஏற்ப கத்தரிக்கப் பழகி வந்தாலும் ஊர் மண்ணுக்குள் வேரோடி புதையுண்டுள்ள

வேர்குடும்பங்களை யாராலும் கத்தரிக்க முடியவில்லை.

வெளிமரத்தின் தோற்றத்தை எப்படி வேண்டுமானாலும் மாற்ற முயலலாம்.

ஆனால் தன்னுடைய மண்ணின் இயல்புக்கு ஏற்ப ஊடுருவி பின்னிப்பிணைந்து வலுவாகி வைரமாகி தன்னை வெளிப்படுத்தாது மரத்தின் தோற்ற மூலம் அடையாளப்படுத்த முனையும் வேர்குடும்பங்களை யாருமே உணர்வதில்லை. அதுபோலவே புலம்பெயர் நாட்டுக்குள் வந்து பல தலைமுறை மாறினாலும் காலம் காலமாக மண்ணின் இயல்புக்கு ஏற்ப தம்மை யறியாது ஒவ்வொரு தமிழனின் மனதுக்குள் ஊடுருவியுள்ள ஈழமண்ணின் வாழ்வியல் பண்பு களை பலரும் அதற்கான சூழல் வரும்வரை உணர்வதில்லை.



தங்களது குடும்பம் என்ற அமைப்பிற்குள் புருஷன் குடும்பம் பொண்டாட்டி குடும்பம் என்ற அமைப்பும் கூட்டுச்சேர்ந்து மொத்த குடும்பமாகியதால் ஒன்றுக்கு பதிலாக மூன்று வேலை செய்யவேண்டிய கட்டாயம் பலருக்கு. அதனைவிட கல்விதான் நம் மூலதனம் அதுவே கௌரவம், அடையாளம் இப்படி கருதியதால் பணத்தை பணமென்று பாராமல் அறியாத மொழிக்குப் பயப்பட்டு பிள்ளைகளேனும் நம்மைப்போல எடுபிடி வேலை செய்யாமல் கௌரவமாக மானமரியாதையோடு நிம்மதியாக வாழட்டும் என்ற எண்ணத்தில் ரீயூசனுக்கு கொட்டிக்கொடுத்து படிக்க வைத்து பிள்ளை களை முன்னே தள்ளிவிடுகின்றனர்.

இவற்றுக்கெல்லாம் தியாகமாக, அர்ப்பணிப் பாக இருப்பது கணவன் மனைவியின் மகிழ்ச்சி. கணவன் மனைவி பேசுவதே கணக்கு வழக்கும் காய்கறி வாங்குவதுக்குமாக பல குடும்பங்கள். பாரதியின் கண்கள் லேசாக கலங்கத்தொடங்கியது.

தனது தட்டிலுள்ள றுக்கலா சலாட்டையும் *(Rucola Salad)* முட்டைத்துண்டுகளையும் சேர்த்து உண்பதுக்காக கத்தி கரண்டியோடு போராடிக் கொண்டிருந்த மதுக்கு பாரதியின் மௌனம் அதனுள் அமுந்திப்போன சிந்தனை அதனால் திரண்ட கண்ணீர் புரியவில்லை.

மது என்றாள் பாரதி. சொல்லடி என்றாள் பன் துண்டை கைகளினால் பிய்த்தபடி மது. எனக்கென்னவோ நாமதன் ஊர்சனங்களை கெடுத்து விட்டமோ.. என்று தோன்றுகிறது டி என்றாள் பாரதி. ஏனடி நாங்க இங்க இருந்து கஷ்டப்பட்டு ஊருக்கு போய் அவையளை என்று கோபத்தில் அழகான கண்களை உருட்டிய மதுவை பார்த்தவுடன் பாரதிக்கு சிரிப்புத்தான் வந்தது.

வாயுக்குள் திணிபட்ட பன்னும் உருண்ட கண்களும் அழகாகத்தான் இருந்தது..... என்னடி சிரிக்கிறாய்? என்றாள்.. பண்ணை விழுங்கி கொண்டே மது.

**வெளிமரத்தின் கிளைகளை சுவிற்சர்லாந்துக்கு ஏற்ப கத்தரிக்கப்பழகி வந்தாலும் ஊர் மண்ணுக்குள் வேரோடி புதையிண்டுள்ள வேர்குடும்பங்களை யாராலும் கத்தரிக்க முடியவில்லை. வெளிமரத்தின் தோற்றத்தை எப்படி வேண்டுமானாலும் மாற்ற முயலலாம்.**

**ஆனால் தன்னுடைய மண்ணின் இயல்புக்கு ஏற்ப ஊடுருவி பின்னிப்பிணைந்து வலுவாகி வைரமாகி தன்னை வெளிப்படுத்தாது மரத்தின் தோற்ற மூலம் அடையாளப்படுத்த முனையும் வேர்குடும்பங்களை யாருமே உணர்வதில்லை.**

ஒன்றுமில்லடி என்றபடி இங்க இருந்து போறவங்க காட்டிற அலப்பறை, கொஞ்ச நஞ்சமா சொல் என்றாள் பாரதி. ஊரில போய் இறங்கி காசை மாத்தி அள்ளி இறைக்கிறது. அதுமட்டுமா? வீடு வாங்கிட்டன் மகன் பெரிய வேலை இந்த ஊருக்காசுக்கு பல கோடி அது இது என அளந்துவிடுகிறது. அதுகளும் வாயைப்பிளந்து அதில ஒரு சில இலட்சங் களை கேட்குது என்று சிரித்தாள் பாரதி.

நான் ஒன்றும் அப்படிச்சொல்லவில்லை காலையில நேஸ் (தாதி)மாலையில ஆயிரம் பிராங்குக்காக கக்கூஸ் கழுவப்போறன் என்று தான் சொல்றன் என்றாள் வெடுக்கென மது.

அடியே உன்னைப்போல யாரு நண்பா.. என்றாள் அதே வேடிக்கையோடு பாரதி. உன்னை.. என்று கலகலத்துக்கொண்டே 'பில்' என்றாள் மது.

என்னடி மாதமொரு மணிநேர சுதந்திரக்காற்று சுருக்கென்று போய்விட்டதென்றாள் பாரதி சலிப்போடு. மறந்திட்டீயா நம்ம வாலுகளோடு அஜித்தின்ர விடாமுயற்சி படம் பார்க்க வாறோம் என்று சொன்னோம்

இப்பவே இரண்டாயிற்று நாலுக்கு தொடங் குது படம் இதுகள் வந்து மனுஷன்மாரை எழுப்பி தேத்தண்ணி ஊற்றிக்கொடுத்து கூட்டிப்போக கையும் கணக்கும் சரி என்றாள் மது. ..ம்ஹூம் என்றாள் பாரதி.பாரதியும் ரம்மியாவும் சுவிசுக்கு வந்து இருபத்தைந்து வருடமாகிவிட்டது. தமிழ்பள்ளியில் பாவாடை சட்டையோடு இலங்கைப்பெண்களாக அறிமுகமானார்கள்.

ஊரில எவடம்? என்றாள் ரம்மியா

திருகோணமலை.

பள்ளிக்கூடம்..?

சென்மேரிஸ்

நீங்க? நானும் திருகோணமலைதான் அன்புவழிபுரம் கலைமகள்

ஓ... எந்த ஆண்டு ? என்றாள் பாரதி

92

நீங்க? என்றாள் ரம்மியா

நான் 94

சிறு வருத்தம் ரம்மியா முகத்தில் படர்வதை உணர்ந்தாள் பாரதி.

தான் இரண்டுவயது பெரியவள் என்ற வருத்தம்.

பில் கொண்டுவந்த பெண் மலர்ந்த வெண்தாமரையாக Also - (டொச்சு மொழியில் இனி உங்களுடைய தர்ணம் என்பது போல .. அர்த்தம் பெறும்) என்றாள்.

இந்த முறை என் கணக்கென பாரதி தன் பையிலிருந்த கைத்தொலைபேசியை எடுத்து டுவின்ற் (Twint) என்றாள்.

தய.. தய.. (ஆம்.. ஆம்) எனச் சிரித்த வெண்தாமரை மகளால் பணம் வந்து சேர்ந் ததை உறுதி செய்துகொண்டு பில்லை கையில் திணித்துவிட்டு schöne nachmittag (இனிமை யான பிற்பகல்) என்று சொல்லியவாறு அதே புன்னகை மாறால் பக்கத்து மேசையை நோக்கி நகர்ந்தாள்.

அடியே ஓடிப்போய் வாரன் என்றவாறு ரம்மியா 'பெண் உருவ கதவை' நோக்கி நகர்ந்தாள். மீண்டும் முதல் நாள் சந்திப்புக்குள் பாரதியின் நினைவலைகள்..

இங்க யாரும் அக்கா, தங்கை என்பது பெயர் சொல்லிக் கூப்பிடுறது இல்லை என்றாள் பாரதி.

ரம்மியாக்கு எல்லையற்ற மகிழ்ச்சி அதனைத் தொடர்ந்து வாரம் தோறும் சனிக்கிழமைகளில் பிள்ளைகள் மூவரும் தமிழ்பள்ளிக்குப போக அந்த மூன்று மணிநேரத்தை இருவரும் தமிழ் கடைக்கு போறது, நடக்கப்போறது என்று செல வழிக்கத்தொடங்கினர்.

நீங்க 'வாங்க' என்ற அடைமொழி நாளடை வில் 'நீயாக' சுருங்கியது... இருவீட்டுப் பிள்ளை களும் அத்தை, மாமா உறவுப்பந்தத்தில் கைகோர்த்தனர்.

ஒருநாள் ஏன்டி பாரதி நமக்கு டொச்சு தெரியாது என்று எப்படி கையைக் கண்ணை உருட்டி அந்த பொம்பள விளக்கினாள் பார்த்தீயா?

இந்த கிரீம்மை வாங்கத்தானே போனோம்.

அதற்காக அவளிடம் 'சைகை' மொழியா? படிக்கப்போனோம்.

சீ... அவமானமாக இருக்கிறது என்றாள் ரம்மியா.

உண்மைதான் ரம்மியா! வந்து ஆறுவருடத் தில் பிள்ள குட்டி புருஷன் என்று வாழ்கிறோம். ஆனால் மொழிதெரியாதலால் putzen (சுத்தி கரிப்பாளர்) வேலைதான் தேடுகிறோம்.

ஏன்டி இதுகள் தமிழ்பள்ளிக்குப்போகும் போது நாம் டொச்சு படிக்கப்போனால் என்ன? என்றாள் பாரதி - பிள்ளைகள் இரண்டாம் வகுப்பு படிக்கும் போது தொடங்கிய

டொச்சு படிப்பு பிள்ளைகள் எட்டாம் வகுப்பு படிக்கும் போது ஒரு தொழில்கல்வியை கற்க வாய்ப்பை கொடுத்தது இருதோழிகளுக்கும். பிள்ளைகள் பன்னிரண்டுக்கு வரும்போது இருவருமே தாதியாக பதவியமர்ந்தனர்.

அன்றிலிருந்து இன்றுவரை மாதம் ஒரு ஞாயிறு ஒரு உணவு விடுதியில் மதிய உணவோடு இவர்கள் உலகம். என்னடி.. இவ்வளவு நேரம் குத்தகை எடுத்திட்டீயா? என்றாள் பாரதி. லூசு இந்த சனியன் பிடிச்ச பீரியட் நிற்கப்போகுது போல மனுசனை பாடாய்ப்படுத்துகிறது.

இன்றைக்கு டேட்டே இல்ல வந்திட்டு..அத னான் என்றாள் ரம்மியா. 45 வயது வந்தாலே இது ஒரு கொடுமை. கொஞ்சம் உடம்பை கவனி என்றவள் கமிலன் தேநீர் (kamillentee) ஆர்டர் சொல்லவா? என்றாள் பாரதி.

வீட்டுக்கு போய் இஞ்சிபிளேன்ரி குடிச்சா சரி என்றாள் ரம்மியா.எங்கடி இந்த மூன்றும் என்று முடிக்கும் முன் மகள் மகிழினி அழைப்பு ரம்மியா கைத்தொலைபேசியில் அம்மா.. அம்மா.. ஆருயிரே என்று பாடலடியோடு இசைத்தது.

அம்மா வாங்க வெளியில நிற்கிறோம் என்றாள் மகிழினி.... என்ன அத்தை? இன்றைக்கு உங்கள் வாய்களில் யார் அகப்பட்டது என்றான் கவின் வேடிக்கையாக..

ஊர்கதை கதைக்கவா? போறோம் என்றாள் எரிச்சலாக ரம்மியா. ஊரைப்பற்றியல்லவா கதைக்கப் போனோம் என்றாள் பாரதி கேலியோடு....அடியே நீயும் இதுகளோடு சேர்ந்துகொண்டு என்று அழுத்துக்கொண்டாள் ரம்மியா. ஊரைப்பற்றியா? என்றாள் தமிழினி..

உங்கட அம்மா இனி ஊருக்கு போகமாட்டாளாம்.. துருக்கி போய் அதுவும் ஏழு ஸ்டார் ஹோட்டலிலென்று சிரித்துக்கொண்டே பாரதி இழுக்க.. ஐயோ கோடிக்கணக்கில கட்டின வீடு அப்பா போய் இருக்கவா ? என்று சிரித்தாள் மகிழினி.

யாரும் இனிக் கொஞ்சகாலம் ஊருக்குப் போறது இல்லை.. மாமாட்டச் சொல்லி வாடகைக்கு விடுவோம் என்றாள் ரம்மியா. ஏன் அம்மா? ஊர் சூப்பர் என்றாள் தமிழினி..... உனக்கென்ன?

எல்லாத்தையும் பார்த்து வாவ் வாவ் (wow) என்று திரிவாய் சனங்கள் வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி கொண்டுபோனதை செல வழிச்சு சந்தோஷமாக இருக்க விடாதுகள். எவ்வளவு கொடுத்தாலும் திருப்தி இல்லை.

புறணி பேசுவது வேறு என்றாள் ரம்மியா முகத்தை பலகோணங்களாக நெளித்து.அம்மா அவங்க உங்களுக்கு அது பிடிக்கும் இது பிடிக்கும் என்று எத்தனை செய்து தாறாங்க.. எவ்வளவு அன்பாக உங்களைப்பார்க்கிறாங்க

துருக்கியில காசு கொடுத்தால் ஏழு ஸ்டார் ஹோட்டல் கிடைக்கும்.. இந்தப்பாசம், அக்கறை எதுவும் கிடைக்காது அம்மா என்றாள் மகிழினி. எல்லோரும் பணத்துக்காக இதைச் செய்யலம்மா.. முடிஞ்சா உதவி செய்யுங்க என்று கேட்பது தப்பில்லையே..!

எந்தக்கட்டாயமும் இல்லாமல் கிடைக்கும் பாசம், சாப்பாடு மதிப்பற்றுவிட்டது.

ஆனால் கட்டாயக்கணக்கோடு பாசமற்று போலிச்சிரிப்பில் கவனிக்கும் ஏழுமாடி ஹோட்டல்.. என்று மகிழினி முடிக்க முன் குறுக்கிட்ட தமிழினி, இல்ல செவன் ஸடார் ஹோட்டல் சூப்பர் எங்கள் அம்மாக்கு என் றாள் பலத்த சிரிப்போடு..

கவின் அவர்கள் உரையாடலில் தானும் இருப்பதுக்கு அடையாளமாக அத்தை புளுக் கொடியல் துருக்கியில இருக்கா? என்றான் சிரிப்போடு.

பாரதியும் ரம்மியாவும் கண்களால் ஒரு வரையொருவர் பார்த்துக்கொண்டனர். இந்தப் பிள்ளைகள் வெளிநாட்டில் பிறந்ததுகள் ஆனால் பாசத்துக்கு விலையேது..? என்று பாடம் நடத்துமளவுக்கு பகுத்தறிவும் சமூக அறிவும் இருக்கிறது.

ஆனால் ஊரில பிறந்து அக்கம்பக்கம்,ஊர் உறவு பாசத்திலும் அக்கறையிலும் ஏன் சாப்பாட்டிலும் வளர்ந்த நாம் வாழ்வியல் மாற்றத்தில் பாசத்தை பணத்தோடு ஒப்பிட்டு விட்டோமே..! என்கின்ற குற்ற உணர்வில் கலங்கிய விழிகளோடு இருந்த தோழியைப் பார்த்தாள் பாரதி.

உடனே ரம்மியாவின் கைகளைப் பிடித்து ஆதரவாக அமர்த்தி நம்முடைய பிள்ளைகளை நல்லா வளர்த்திருக்றோம் என்றாள் பாரதி.

அதன் அர்த்தம் மட்டுமல்ல ஊரின் அர்த்தமும் புரிந்தது ரம்மியாக்கு.

❍❍❍

சிறுகதை



ஷெல்லிதாசன்



# தூக்கம் உன் கண்களை...

"ஹலோ....நான்தான்.. தயா கதைக்கிறன். நடா.... எப்பிடி மச்சான்... சுகமா இருக்கிறியே?"

வவுனியாவிலிருக்கும் தயா என்ற தயாபரன் கனடாவிலிருக்கும் நண்பனான நடா என்ற நடேசனுக்கு திடீரென ஒரு ஆசை மேலிட அழைப்பை எடுத்திருந்தார்.

"ஆர் தயாவே, என்னடா மச்சான் இருந்தாற் போலை இந்த நேரம் கோலெடுக்கிறாய்... என்ரை சுகமோ.... பறவாயில்லை மச்சான்.... ஒருமாதிரி மருந்துங் கையுமா காலம் போகுது." என கனடாவில் வசிக்கும் நடா பதில்கொடுக்க அவர்கள் இருவரதும் தொலைபேசி உரையாடல்களும் தொடர்ந்தன..

"தயா... உன்ரைபாடு எப்பிடி மச்சான்.?"

"வீட்டுக்கு வீடு வாசல் படிதான்... நேற்று திடீரெண்டு உடம்புக்கு ஏலாமல் போச்சுது. உடனை டொக்ரர் சரவணனிட்டை ஓட்டோ புடிச்சுக் கொண்டு போனன். நல்ல காலத்துக்கு மகன் தற்செயலா வீட்டை வந்திருந்ததாலை... உடனடியா டொக்டரிட்டை கூட்டிக் கொண்டு போட்டார்."

"அப்பிடியே... அப்ப உங்கடை மகன் உங்களோடை இல்லையே..?"

"நானும் மனிசியும், மகன் குடும்பத்தோடை தான் இருந்தனாங்கள். போனமாதம் மகன் குடும்பம் வேறை இடத்துக்கு வீடெடுத்து தனிய போட்டாங்கள். இப்ப நாங்கள் ரண்டுபேரும் தனியத்தான் இருக்கிறம். என்ரை மனிசிக்கும், மருமகளுக்கும் ஒத்துவரேல்லை. என்ன செய்யிறது" என தயாபரன் அலுத்துக் கொண்டார்.

அப்படி அலுத்துக்கொண்ட தயாபரனிடம் நடா, "நாங்கள் மகளின்ரை குடும்பத்தோடைதான் கனடாவிலை இருக்கிறம். மகளும் மருமகனும் இரவு பகல் வேலை. ஞாயிற்றுக் கிழமை மாத்திரம் நிப்பாங்கள். மற்ற நாளையிலை பேரப்பிள்ளையளை நாங்கள்தான் பாக்கிறம். ஊரோடைதான் இருந்தனாங்கள். கனடாவுக்கு வாங்கோ வாங்கோ எண்டு மகள் ஒரே கரைச்சல் குடுத்ததாலை. போன மாதந்தான் கனடா வந்தம். இப்ப பேரப்பிள்ளையளோடைதான் காலம் போகுது. ஆனா ஊரிலை இருந்தா கோயில் குளமெண்டு போய்வரலாம். நாங்கள் நினைச்ச சாப்பாட்டைச் சாப்பிடலாம். நாலுபேர் வீட்டை வருவாங்கள். இஞ்சை அஞ்சாவது மாடியிலை குடியிருக்கிறம். குளிர் ஒருபக்கம் வாட்டியெடுக்குது.

வெளியிலை வெளிக்கிடுறதெண்டா நரி பிறையைக் கண்டமாதிரி. கனடா வரேக்கை மனிசி, மகளிட்டைப் போறம் எண்டு வலுத்த ஆசையோடை வந்து, இப்ப ஏனடா வந்தமென அழாமல் அழுதபடி."

"உண்மைதான் நடா. வெளிநாடு வெளிநாடு எண்டு சொல்லுறதெல்லாம் திறந்த வெளிச் சிறைச்சாலைதான். நல்ல காலத்துக்கு என்ரை மகனின்ரை குடும்பம் இங்கை இருக்கிறபடியாலை எங்களுக்கு இந்தத் தொல்லை இல்லை. ஆனால்....?"

"என்ன ஆனா போடுறாய் தயா..?"

"அது ஒண்டுமில்லை நடா....வெளிநாட்டிலை எல்லாரும் நல்லா உழைச்சு கார், வீடுகள் வாங்கிறதோடை, ஊரிலை கலியாண மண்டபம், றெஸ்ரோறன்ற், பூட் சிற்றி எண்டு வைச்சு நல்லா சம்பாதிக்கிறாங்கள். அதாலை உங்கடை ஆக்கள் கனபேர் வெளிநாட்டிலை இருக்கினைதானே.. அவங்கள் உங்களுக்கு உதவி செய்தா குறைஞ்சா போயிடும். இப்ப எத்தினைபேர் கனடாவுக்கு குடும்பத்தோடை போட்டாங்கள். நாங்கள் உந்த பிச்சைச் சம்பளத் தோடை வானத்தைப்பாத்துக்கொண்டு இருக்க வேண்டியிருக்கு.. எண்டு என்ரை மகனைப்போட்டு இரவு பகலாய் மருமகள் பாடாய் படுத்திறாள் பாவி" என சூடாகப் பேசிய தயாவிடம் நடா,

"கூல்.. கூல்... தயா... இக்கரைக்கு அக்கரை பச்சை...என்ன செய்யிறது. உப்பிடி கனபேர் ஊரிலை உள்ள வீடு காணியளை வித்தும், கோடிக்கணக்காய் வட்டிக்கு கடன் வாங்கியும் இங்கை வந்து ஒரு ஆமான வேலைவெட்டி இல்லாமல் அலையுதுகள். அப்பிடியிருந்தும் ஆசை ஆரை விட்டது மச்சான். உன்ரை மகனிட்டை மாத்திரம் சொல்லிப்போடு, மனிசியின்ரை பேராசைக்காக இருக்கிற நல்ல வேலையையும் விட்டிட்டு எல்லாத்தையும் வித்துச்சுட்டு இங்கை வந்து அலைய வேண்டாமெண்டு. என்ன செய்யிறது மச்சான்.. இந்த வயதுபோன காலத்திலை இப்படியெல்லாம் அனுபவிக்க வேண்டுமெண்ட தலைவிதி. பிள்ளையள் இல்லையெண்டாலும் குறை, இருந்தாலும் தொல்லையிலும் தொல்லையா இருக்குது"

"தயா, நீ கனக்க நாளைக்குப்பிறகு கதைச்சது எனக்கும் கொஞ்சம் ஆறுதலாயிருக்கு. அது சரி மச்சான் உனக்கு இப்ப எத்தினை வயது...? என்னை விட உனக்கு ரண்டுமூண்டு வயது குறைவா இருக்குமெண்டு நினைக்கிறன்."!

"எனக்கோ.... இப்ப எழுவத்தைஞ்சு பிளஸ் சாகிறது நடா"

"பிறகென்ன உன்னை விட நான் ஒரு வயது கூடத்தான்..... எழுவத்தாறு பிளஸ். எப்பிடி யெல்லாம் காலமும் போய், வயசும் போய், வாழ்க்கையும் நாங்கள் நினைக்க முடியாதபடி மாறியும் போச்சுது. உப்பிடியெல்லாம் வந்து தொலையுமெண்டா பிறக்காமலே இருந்திருக்க லாம்." என பெருமூச்செறிந்தபடி கதைத்த நடா,

"என்ன மச்சான் செய்யிறது எல்லாம் தலைவிதி. சரி... சரி தயா... அதையெல்லாம் விட்டுத் தொலை. நீ ஊரிலேயே பேரப் பிள்ளையளின்ரை தொல்லை இல்லாமல் தனிய இருக்கிறபடியாலை ஏதாவது சிறு கதை, கவிதையெண்டு முன்னைப்போலை எழுதிறனியோ?"

"இப்ப பெரிசா எதுவும் எழுதிறேல்லை நடா. அப்பிடி எழுதிறேண்டா... மீள் வாசிப்பு, கட்டுடைப்பு எண்டும், நவீனம், பின்நவீனம் எண்டும் கவிதை, சிறுகதை எழுதச்சொல்லுறாங்கள். எனக்கு சனத்துக்கு விளங்காதமாதிரி எழுத வராது... எண்டதாலை எழுதிறதை அநேகமா குறைச்சு, இடைசுகம் கவிதை, சிறுகதை எண்டு ஒண்டிரண்டு எழுதிவாறன்.. ஆனா... மச்சான்... புத்தகங்கள் வாசிக்கிறனான். அதை மாத்திரம் இன்னும் விடேல்ல. புத்தகத்தை கையிலெடுத்தால் முழுவதுமாய் வாசிக்காமல் விடமாட்டன்...... நித்திரையும் வராது. இண்டைக்கும் "வேள்பாரி" எண்ட நாவலை நூல்நிலையத்திலை கண்டு எடுத்திட்டு வந்தனான். முந்தி ஆனந்தவிகடனிலை தொடரா வந்த நாவல். அப்ப வாசிக்கக் கிடைக்கேல்லை. அதைத்தான் ஆசையாசையா வாசிச்சுக் கொண்டிருந்தனான். கிட்டத்தட்ட ஆயிரம் பக்கங்களுக்கு மேலையுள்ள பெரிய நாவல் மச்சான். அந்த அருமையான நாவலை நீயும் எங்கையெண்டாலும் கண்டா கட்டாயம் எடுத்து வாசி மச்சான்."

"இண்டைக்கு எப்பிடியும் இரவு பன்னிரண் டானாலும் அரைவாசியையாவது வாசிச்சு முடிச்சாத்தான் எனக்கு நித்திரை வரும். இப்பவும் அதை வாசிச்சபடி, உனக்கும் இந்த நாவலை வாசிக்கச் சொல்லவேணுமெண்ட ஒரு ஆசையிலையுந்தான் கோலெடுத்தனான்"



"உண்மையேடா மச்சான்..?, அப்பிடி நல்ல நாவலே..? நீ சொல்லிறதைப் பாத்தா.. எனக்கும் அதை படிக்க ஆசை தான் இருக்கு. ஆனா உன்னைப் போலத்தான் நானெண்டு சொல்லேலாது. எழுதிறதையும் விட்டிட்டன். ஆசையா...வாசிக்க புத்தகத்தை கையிலை எடுத்து சில வரியளை படிச்சுக் கொண்டிருக்கேக்கையிலே நித்திரை வந்து இருந்த இடத்திலேயே நித்திரை கொண்டிடுவன். நித்திரைக் குளிசையளைப்போல இப்ப புத்தங்கள் எனக்கு கைகொடுக்குது எண்டா பாரன். அதுக்காகத்தான் இப்ப இரவிலை நான் புத்தகத்தை கையிலை எடுக்கிறனான். என்ரை வாசிப்பின்ரை சீத்துவக்கேட்டை உனக்குச் சொல்ல வெக்கமாயிருக்கு மச்சான்."

"ஆனால்....நீ கொடுத்து வைச்சவன் மச்சான். நித்திரை கொள்ளாமல் இரவு பகலா புத்தகம் வாசிக்கிறியே. எனக்கு பகலிலை வாற தூக்கம், இரவிலை வந்து தொலைச்சால் நல்லா இருக்கும். உனக்கு அந்தத் தொல்லையெல்லாம் இல்லை. நல்லா வாசிக்கிறாய். எல்லாம் ஒரு கொடுப்பனவுதான்" என பெருமூச்செறிந்தபடி நடா,

"எப்பிடி மச்சான் வேள்பாரி ..? நானும் கேள்விப்பட்டனான் நல்ல நாவலெண்டு. ஆர் மச்சான் எழுதினது?" எனக் கேட்டபடி தயா பரனின் பதிலுக்காக காத்திருந்த நடா,

"அட இவனுக்கு இடையிலை என்னதான் நடந்தது... ஒரு கதையையும் காணேல்லை"? என தொடர்ந்து தயாவுக்கு, "ஹலோ..ஹலோ" என அழைப்பை எடுத்துக்கொண்டிருந்தார் நடா.

"இஞ்சேருங்கோப்பா தேத்தண்ணி கேட்டனீங்களல்லே... இதை குடிச்சுப்போட்டு கதையுங்கோ" என தொலைபேசியில் கதைத்துக்கொண்டிருந்த கணவனுக்காக தேனீரோடு வந்த மனைவி "இப்பத்தான் ஆரோடையோ வலு பம்பலா கதைச்சுக்கொண்டிருந்த மனிசன் அதுக்குள்ளை குறட்டை விடுறதைப்பார்.. இந்தாளுக்கு எதுக்குப் பஞ்சமெண்டாலும் நித்திரைக்குப் பஞ்சமில்லாத மனிசன்" என தனக்குள் கதைத்துக்கொண்டவள், இயங்கு நிலையில் இருந்த வண்ணமே தயாவின் கைகளிலிருந்து நழுவி படாரென கீழே விழுந்த கைத்தொலைபேசியை கண்ணுற்று, தான் கொண்டுவந்த தேனீர்கோப்பையை மேசையில் வைத்துவிட்டு, நிலத்தில் வீழ்ந்து கிடந்த கைத் தொலைபேசியை கையில் எடுத்தபடி கணவனை பார்த்தாள், அங்கு நடந்தவைகள் எதையுமே அறியாத தயாபரன், சாய்மனைக் கதிரையில் இருந்தபடி பலத்த கொறட்டை விட்டபடி சயனத்தில் மிதந்துகொண்டிருக்க, மேசையில் கிடந்தபடி அவர் வாசித்த "வேள்பாரி", காற்றில் படபடத்து அவருக்கு சாமரம் வீசிக்கொண்டிருந்தது.



**பொ. கருணாகரமூர்த்தி**
**(ஜேர்மனி)**

சிறுகதை

# துளிர்விடும் சொந்தங்கள்

அந்திநேரத்துச் செவ்வானம் நிர்மலமாக இருக்கிறது. உறைவிடந்தேடி மரங்களை வட்டமிடும் பறவைகளின் கூட்டுக்கீச்சல்களும், எப்போதாவது ஒருதரம் சாலையில் விரையும் பாரவுந்துகளின் இரைச்சலும் இக்கிராமத்தின் அமைதியைக் குலைக்கின்றன. இதுவரை என்னுடன் பேசிக்கொண்டிருந்த எங்கள் குடும்ப நண்பரான நல்லையாப்பத்தர் சால்வையை உதறித்தோளில் போட்டுக்கொண்டு எழுந்துபோகையில் "உனது வாழ்க்கை, உனது இஷ்டம், ஏதோ நல்லபடி யோசித்து நல்ல முடிவுக்குவா மகன்" என்பதில் நல்ல நல்லவென்பதை அழுத்திப்பலுக்கிவிட்டு மென்னிருளில் கலந்துபோனார். மேற்குத் திசையிலிருந்து சோகம் சுமந்த மாங்குயிலின் கூவலொன்று விட்டுவிட்டு மிதந்து வந்து கொண்டிருக்கிறது. குயிலின் கூவலோடு பத்தர் சொல்லிவிட்டுப்போன 'விஷயம்' என் மனதைக் கலைத்துப்போடவும் அது ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பதான முன்நிகழ்வுகளுக்கு நடைபோடுகிறது. மனதைக் குழப்பங்கௌவ என்னால் எதுவித முடிவுக்கும் வரமுடியவில்லை.

பல்கலைக்கழகம் புகுமுக வகுப்புவரைதான் படித்திருந்தேன், பல்கலையினுள் புக முடியவில்லை. பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில் விற்பனையாளர் போன்ற சிற்றூழியங்களைக்கூட என்னால் பெற்றுக்கொள்ள முடியாமலிருந்தது. தந்தையும் அகாலமாகச் சென்று மறைந்து விட்டார், வாழ்ந்த காலத்தும் பொருண்மிய மேலாண்மையறியாத வெள்ளந்தியாக வாழ்ந்தாரே தவிர குடி, அபினியன்னலாகிரிப் பழக்கங்கள் எதுவுமில்லை, என்ன உழைத்த செல்வங்கள்

எதையும் சேமித்துவைக்கத்தெரியவில்லை. தன் நட்புவட்டத்தில் நம்பிக்கையானவர்கள் என்றெண்ணிச் சிலரோடு சில சீட்டுக்களையும் கட்டியிருந்தார். அப்பா மறைந்துவிடவும் சீட்டுப் பிடித்தவர்கள், அதைவிட வேகத்தில் காணாமலாயினர்.

சுற்றுவட்டாரத்திலுள்ள தென்னந்தோப்பு களில் மரங்களுக்கு இயற்கைப் பசளை பதித்தல், தொட்டிகளில் ஊறப்போட்ட தென்னை - தேங்காய்மட்டைகளை அடித்துத் தும்பாக்குதலன்ன என் உடலுழைப்பிலான ஊதியத்தில் எனதும், அம்மா, தங்கை தேன்மொழியின் வயிறுகள் கழுவப்படும். அப்போது என் மடியில் கனமில்லை, என்னுடைய உடமையென்று துருவேறிய ஒரு மிதியுந்தும் இரண்டு நாலுமுழம் கதர் வேட்டி, ஷேர்ட்டுகளும் மட்டுமே இருந்தன. டீ-ஷேர்ட், ஜீன்ஸ் எல்லாம் யாரும் வசதியான வீட்டுப் பையன்கள் அணிவதைப் பார்ப்பதோடு சரி.

எங்களுக்கு நெருங்கிய உறவென்று இருப்பவர் எம் தாய்மாமன். அவரது முழுப்பெயர் மட்டும் தீனதயாளன் முத்துக்குமாரு. ஊரவர் அவரை "முத்துக்கும்மாறு" என்பர். அத்தை கோதுமை நிறத்தில் அழகாக இருப்பார் மாமா முதல்த்தர எழுதுவினையராகத்தான் அரச பணியிலிருந்தவர். அத்தை நயினாதீவெனும் சிறு தீவகத்திலிருந்து மருத்துவர்கள், பொறியாளர்கள் கோரும் அளவுக்கு, ஏராளம் சீதனம் கொண்டுவந்து மாமா குடும்பத்தில் சங்கமமாகியவரென்பதைத் தவிர அத்தையைப்பற்றி மேலதிகமாக எதுவும் எங்களுக்குத் தெரியாது. இந்த முத்துக்குமாறான மாமாவின் தங்கையை எங்கள் அப்பா காந்தர்வமணம்புரியப்போன காலத்திலிருந்தே இரண்டு குடும்பங்களுக்குமான ஒட்டுறவில் விரிசல் ஏற்பட்டுவிட்டது. எங்கள் மாமாவைப்போல அல்லாமல் எங்கள் தாத்தாவை ஊருக்கே நியாயஞ்சொல்லக்கூடிய ஒரு நியாயவான் என்பார்களாம்.

இருந்தும் இவ்விரிசல் எப்படி ஆழ மாயிற்றென்பது இற்றைவரை எமக்குப் புரிவது மில்லை. நாங்கள் சிறுவர்களாக இருந்த போதே தாத்தாவும் பாட்டியும் காலகதி அடைந்துவிட்டதால் அவர்களின் மடியில் தவழ்ந்து ஒட்டி விளையாடும் பாக்கியமும் நமக்கிருக்கவில்லை. விரிசலும் வெளியும் மட்டும் வியாபித்து வாழ்ந்திருந்தன.

மாமா பொதுவேலைகள் திணைக்களத்தில் முப்பது ஆண்டுகள் எழுதுவினையராகக் கதிரையைத் தேய்த்து ஓய்ந்த வயதில் இப்போதுதான் தலைமை எழுதுவினைய ராகியுள்ளார். அவரது பணி ஓய்வுக்கு இன்னும் நாலைந்து ஆண்டுகளே உள்ளன. அவர்களின் மூத்தமகன் மாதவன் கொழும் பில் "ஆர்பிகோ" எனும் இறப்பர், தும்பு மெத்தைகள் ஏற்றுமதிக்குழுமத்தின் ஆலோ சனை அலுவலராகப் பணியாற்றுகிறான். அக்குழுமமே வழங்கியுள்ள வளமனை, சீருந்தென வசதியான வாழ்வு அவனது.

அடுத்தவள் கோசலையை தீவுமுழுவதுக்கும், நீரிறைக்கும் இயந்திரங்கள், மிதியுந்துகள், உழவு இயந்திர உதிரிப்பாகங்கள் விநியோகிக்கும் ஒரு குழுமத்தின் சொந்தக்காரனின் குடும்பத்தில் திருமணஞ்செய்து கொடுத்திருந்தனர்.

அடுத்தவள்தான் அருவி தாயின் கோதுமை நிறத்தைக் கொண்டிருக்கும் அழகி, எங்காவது எம் வழிதெருக்களில் குறுக்கிட்டாலோ, எங்கள் செங்காரிப்பசு அறுத்துக்கொண்டு அவர்களது தோட்டத்துக்குள் புகுந்துகொண்டு அதை நான் பிடித்துவரப்போகும் வேளைகளிலோ ஒளிந்துகொள்வாள், வெட்கமாம். எனக்கும் அவள்மீது ஒரு ஈர்ப்பிருந்தும், மாமாவை வழிக்குக் கொண்டுவருவது வல்லையாக இருக்குமென்பதால் "சாய்க் அப்படி யொன்றுமில்லை"யென்று என்னைத் தேற்றிக் கொண்டிருந்து விட்டேன்.

அடுத்தது அயன், கவின் என்று அங்குலவித்தியாசத்தில் இரண்டு பையன்கள் ஐந்தும், ஆறும் வாசிக்கிறார்கள்.

நல்லையாப்பத்தர் எங்கள் வீட்டுக்கு வரும் ஒவ்வொருதடவையும் தேநீரோ, கோப்பியோ குடித்துத் தாகசாந்தியானதும் ஏதோ ஆலாபனை செய்யப்போவதைப்போலத் தொண்டையைச்செருமிச் சரிசெய்துகொண்டு "எதுக்கும் நீங்கள் மாதவனைக் கைநழுவ விட்டிடப் படாது, எப்பிடியும் ஆளை மடக்கித் தேன்மொழி கழுத்தில மாட்டிவிடவேணும்" என்பார். அப்பாவின் இறுதிச்சடங்குகளில் மாமா செலவுசெய்த ஆயிரத்தைநூறு ரூபா பணத்தைக்கூட நான் முப்பத்தோராம் நாட் காரியங்கள் கழித்துக் கொண்டுபோய்க் கொடுத்தபோது வாங்கி உள்மடியில் சொருகிக்கொண்ட மாமாவின் சுயரூபம் பத்தருக்கு இன்னும் சரியாகப் பிடிபடாததில்

ஒருநாள் போய் மாமாவிடம் லேசாகக் கதை விட்டுப்பார்த்திருக்கிறார்.

"இதென்ன விசர்க்கதை காணும் நீர் பறையிறது.. அவன் வெளிநாட்டுக்காரங்களோட பிஸினெஸ் செய்யிற, அவங்கள் வந்துபோற பெரீய கொம்பனியில டிறெக்டேஸ்ர்ஸ் றேஞ்ஜில வேலை பார்க்கிறான். இவள் பத்தாவதே அரும்பொட்டில பாஸ்பண்ணியிருக்கிற கிராமத்துப்பெட்டை இங்கிலிஸும் வராது, இவள் கொழும்புக்குப் போய் அவன்ட ஸ்டேட்டஸுக்குச் சமாளிப்பளே."

"ஒரு தாய்மாமனே இப்படி ஸ்டேட்டஸ் பாத்து சுற்றத்துக்குள்ள ஒரு தகப்பன் இல்லாத பிள்ளையைக் கைகழுவிவிடுறது அறமில் லைத் தம்பி."

"சீதனங்கூட எங்களுக்கு இரண்டாம்பட்சந் தான் மாமா, ஆனால் அவனுக்கு அந்த இடத்தில சமாளிச்சுவாழக்கூடிய ஒரு படிச்ச பிள்ளையைத்தான் நாங்கள் கட்டி வைக் கோணும். எப்படி விளங்கப்படுத்தினாலும் நிலமையைப் புரிஞ்சுகொள்ளிறியளில்லையே."

என்னதான் எனக்குநானே சமாதானங்கள் கூறிக்கொண்டிருந்தாலும் அதலபாதாளத்தி லிருக்கும் என் பொருண்மியசோகம் என்னை அரித்துக்கொண்டிருந்தது. நிரந்தர வருமானத்தோட ஒரு வேலையைத்தேடி அலைந்துகொண்டிருந்தேன். ஒருநாள் மதியம் நல்லையாப்பத்தர் தன் மிதியுந்தில் வீட்டுக்கு வந்திருந்தார். நடப்பில் அவர் எங்கள் வீட்டுக்கு மாலையிலோ இரவிலோவந்து பேசிக்கொண் டிருந்துவிட்டு வீடு திரும்புவதுதான் வழமை. அன்று முகத்திலொரு பிரத்தியேக விகசிப்பு பூசியிருந்தது, அவர் தன்வியாபார விடயங்களுக்கோ, திருமணங்களுக்கோ போகும்போது விசிறிக்கொள்ளும் குனேகா மருக்கொழுந்து வாசமும் அவர்கூட வந் திருந்தது. என்மனதுக்குத் ஏதோ நல்லசெய்தி தான் கொண்டுவந்திருக்கிறார் என்ற சமிக்ஞைகள். அம்மாவோ தங்கையோ கொடுத்த பால்க்கோப்பியை ரசித்துக்குடித்தபின் "இந்தக்காலத்தில் என்னால்க்கூட ஒருவருக்கு ஒரு வேலையை வாங்கிக்கொடுக்க முடியு தென்பதை நம்பமுடியாமலிருக்கு" என்றார். மேலே என்னதான் சொல்லப்போகிறார் என்கிற ஆவலில் நானும் அம்மாவும் அவரது முகத்தைப் பார்க்கவும், அவர் தொடர்ந்தார்.

"நித்தியகல்யாணி ஜுவெல்லேர்ஸ்காரர் என்று நான் ஓடருக்கு வேலைகள் செய்து கொடுக்கிற குடும்பமொன்று கன்னாதிட்டியில இருக்கு. அவர்களுக்கு எக்கவுண்ட் செக்ஸனில வேலை செய்ய ஒரு நேர்மையான கணக்காளர் தேவையாம், அதுதான் நான் தம்பியின்ர பெயரோட, குடும்பப்பின்னணியெல்லாம் எடுத்துச்சொல்லி உரக்கப் பரிந்துரைத்திருக் கிறேன், அந்த முதலாளிக்கு வேணு கோபாலென்று பெயர், பூர்வீகம் திருச்சி மாவட்டம், நம்ப, தியாகராஜாபாகவதர் தனக் கொரு சித்தப்பாவாம். தங்கமான மனுஷன், இன்றைக்குப் பின்னேரமே உம்மைக் கூட்டிவரச்சொல்லியிருக்கிறார், அதுதான் சமாசாரம்" என்றுவிட்டுச் சிரித்தார்.

அன்றே சுணக்காமல் வெள்ளைக்குட்டி என்பவருடைய வாடகைவண்டியை அமர்த்திக் கொண்டு வேணுகோபாலாச்சாரியின் வளமனையை அடைந்தோம். அவரே எழுந்து வாசலுக்குவந்து முகமன்சொல்லி எங்களை உள்ளே அழைத்துப்போனார். முதற் பார்வையிலேயே என்னை அவருக்கும், எனக்கு அவரையும் பிடித்துப்போய்விட்டது. அடுத்த திங்களே வேலையில் சேரச்சொல்லிவிட்டார், "அன்று அமாவாசையாயிற்றே" என்று நல்லையாப் பத்தர் முனகவும், "எவன் சொன்னான் அமாவாசை ஆகாதென்று, பூஜ்ஜியத்திலிருந்து தொடங்குவதுதான் காணும் தழைத்தோங்கும்" என்று முதலாளி மறுக்கவும் மூடிக்கொண்டுவிட்டார் இவர்.

நான் கல்லூரியில் படித்திருந்த கணக்கியல் அவர்கள் வணிகத்தின் நிதி முகாமைத் துவத்தைக் கற்றுக்கொள்ள உதவியது. நடைமுறையில் கணக்கியல் அறிவை எப்படிப் பிரயோகிப்பதென்ற யுக்திகளையும் கணக்குப்பதிவேடுகளைப் பயன்செய்யும் விதங்களையும் இரண்டுமூன்று மாதங்களிலேயே அவர்களிடம் கற்றுக்கொண்டுவிட்டேன். தங்கநகைகள், சவரின்கள், பிஸ்கெட்டுகள் அவற்றின் விலை எப்போது ஏறும் எப்போது இறங்கும் என்பதுபோன்ற நுணுக்கங்கள், நகைத்தொழிலாளருக்கு தங்கத்தை நிறுத்துக் கொடுப்பது, தயாரிப்புகளான பின் நிறைகளை சேதாரங்கள்தள்ளி மீளச்சரிபார்த்துப் பெற்றுக்கொள்வதென நகைவியாபாரத்தின் சூக்குமங்கள் எல்லாம் எனக்கு மெல்லமெல்ல அத்துபடியாயின.

காலவோட்டத்தில் வேணுகோபாலாச் சாரியாருக்கும் எனக்குமான உறவு முதலாளி, ஊழியன் என்ற நிலையிலிருந்துமாறி ஒரு தந்தைக்கும் மகனுக்குமான உறவைப் போலாகியது. என்னை மனசு நிறைந்து 'அப்பன்' என்றுதான் அழைப்பார். நாம் ஒரே மேசையில் எதிரெதிரே இருந்து சாப்பிடுவதிலிருந்து, ஊர்ப்பாடுகள், உலகப்பாடுகள் அரசியல் அரட்டைகள், பத்திரிகைகளில் படித்த கடி வகையான அங்கதங்கள் பகிர்தல் என்றாகி, எங்கள் குடும்பத்துக்கும், அவர்களது குடும்பத்துக்குமான உறவும் நெருக்கமும் வளர்ந்து அத்தியந்த பந்துக்களைப்போலானோம். ஆசாரியார் கடைச்சிப்பந்திகளுடனோ, தொழிலாளர்களுடனோ ஏதும் முரண்பாடென்றால் முகத்துக்குநேரேயே உச்சியால் இரத்தங்கசிய வைதுவிட்டு மாலையில் அவர்களிடம் அப்படி ஒன்றும் நிகழாததுபோல் ஹ வீட்ல ஒண்ணும் விஷேசமில்லையாப்பா... பொண்ணு, மருமோள் எல்லாரும் இன்னும் முழுகிட்டுத்தான் இருக்காளவையா.. என்பார். அவர்கள் வீட்டில் காலை ஆகாரமாக இட்லியோ தோசையோ வார்த்தால் அவர்கள் வீட்டுப்பணிப்பெண்ணிடம் தனியாக எனக்குக் கடைக்கே கொடுத்து அனுப்புவார் முதலாளிவீட்டு மங்களம்மாமி. ஊழியம் ஆரம்பமாகிய ஆறுமாதகாலத்தில் 750ம் இலக்கத் தடத்தின் பேருந்தைத் தவறவிட்ட சிலநாட்களில் நான் தாமதமாகப் பணிக்கு வந்ததைக் கவனித்தவர் தங்கள் வீட்டுத்தாழ்வாரத்தில் பாவிப்பின்றி நின்றிருந்த *BSA 250 CC* ரக உந்துருளியை என்னை எடுத்துக்கொள்ளச் சொன்னார். அதுவரையில் நான் எவருடைய உந்துருளியின் பின்னிருக்கையில்கூட அமர்ந்ததில்லை. கதர் வேட்டிசட்டை அணியும் என்முதலாளி காந்தீயத்தில் மட்டுமல்லாது நேரம் கிடைத்த வேளைகளிலெல்லாம் சிவஞானபோதத்திலும், திருவருட்பயனிலும், சிக்கெடுத்து, தம்ம பதத்திலும், ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியிலும் தோய்ந்திருப்பார். அதீதமான தமிழறிவோடு அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்திருந்த அதிமானிடர்களில் ஆச்சாரியாரும் ஒருவர் என்பது மிகையல்ல.

நித்தியகல்யாணி நகைமாளிகையின் பின்னான வளவில் அவர்களது வீடும் நகை வேலைகள் செய்யும் பட்டறையும் இருந்தன. மக்களுக்கு நகைக்கான தேவைகள்கூடி வியாபாரம் சூடாகும் தை பங்குனி வைகாசி ஆவணி மாதங்களில் நல்லையாப் பத்தரும் அவ்வப்போ அங்கே வந்து அவர்களுடன் சேர்ந்து பட்டறையில் பணிசெய்வார். பதக்கங்கள், மோதிரங்களுக்கு எனாமல் மருவுதல், அட்டிகை, நெக்கிலஸ "களுக்குக் கற்கள் பதித்தலில் வித்தகர் அவர். பட்டறைக்குள் பணிசெய்யும் ஆசாரிமார்களின் 'டொக்குடொக்குடொக்கு' என்ற தட்டல் தறைச்சல்ச் சத்தங்களும் விதூஷகப் பேச்சுக்களும் வெடிச்சிரிப்புகளுமாக எந்நேரமும் கலகலப்பாகப் பட்டறை இருக்கும்.

நல்லையாப் பத்தர் வேலைசெய்து கொண்டிருந்த ஒரு சக ஊழியரிடம் --

"காணும் சுந்தரி.... நானெல்லாம் எளந்தாரியா வேலை பழகிற காலத்தில பவுண் என்ன விலை போயிருக்குமெங்கிறீரு"

சுந்தரம் நாடகீயமாக போலிப்பௌவியத் தோட வாய்பொத்தி

"திருமனசே நவின்றாக்க.... நாம தெரிஞ்சுப்போம்ல"

"பர்மா, சிங்கப்பூரிலிருந்துவாற ஒவ்வொரு கப்பல்லயும் பிஸ்கெட்டாயும் சவரனாயும் தங்கம்வந்து கொட்டினப்போ, ஒரு சவரன் பத்துரூபாய்தான் காணும், மிஞ்சிப்போனால் இருபத்தைஞ்சு சதம் மேல கீழ இருக்கும். அதுதான் இப்பவும் சில பழசுகள் பத்து ரூபாயைப் பவுண் எங்கிறது"

சுந்தரம் வாயைப்பிளந்திருக்க "அப்போ நீரு நெனைக்கப்படா நல்லையா அம்மான் பத்து விரலுக்கும் மோதிரங்கொளுவி, பத்துப் பிடிசங்கிலியும் சூடிப் பகுமானமாய்த் திரிஞ் சிருப்பாரெண்டு.."

"திரிஞ்சிருக்க மாட்டீகளா பின்னே..."

"என்ர வயசுக்கு இதுவரை ஒரு இலக்ஷம் மோதிரங்களாவது இணக்கியிருப்பன் காணும்"

"நமக்கென்றொரு மோதிரம் அப்பவுமில்லை, இப்பவுமில்லை, நமக்குப் பகவான் அப்பிடி எழுதிவிட்டிருக்கான்"

என்று சலித்தவர் சற்று யோசித்தவர்போல் இடைவெளிவிட்டு -

"மூத்தக்காவுக்குத் திருமணமானபோது அத்தான் ஒண்ணேகால் வீசத்தில தோழன் மோதிரமொன்று எனக்கு இணக்கு வித்துப் போட்டவர்தான், அதுவுமெங்கேயோ காத்தாடியேத்த நான் விரசா ஓடினனா... அது கழன்று காத்தில பறந்திட்டிதுகா" என்றுவிட்டு



**"அன்று அமாவாசையாயிற்றே" என்று நல்லையாப் பத்தர் முனகவும், "எவன் சொன்னான் அமாவாசை ஆகாதென்று, பூஜ்ஜியத்திலிருந்து தொடங்குவதுதான் காணும் தழைத்தோங்கும்" என்று முதலாளி மறுத்தார்.**

மௌனித்து இருக்கவும் முழுப்பட்டறையும் சிரிப்பால் குலுங்கி ஓய்ந்தது.

நான் வேணுகோபாலாச்சாரியாரின் நகை மாளிகையில் பணிக்குச்சேர்ந்த ஐந்துவருட காலத்தில் அவர்களின் வியாபாரம் ஓங்கி வளர்ந்திருந்த காலத்தில் சென்னையில் தாத்தா பாட்டியோடிருந்து படித்துக்கொண்டிருந்த அவரது ஒரே மகள் அகிம்ஷாசொவுக்குத் அரச உயர் அலுவலர் ஒருவருடன் திருமணமாகிப் பெயரன் பெயர்த்திகளைப் பெற்றுக்கொண்டனர். மகளின் திருமணத்துக்குச்சென்று ஒரு மாதத்தில் திரும்பிவிடுவதாகத் தாயகஞ்சென்றவர்கள் யாழ்ப்பாணம் திரும்ப நாலைந்து மாதங்களாகின. அவர் இங்கேயே இருந்தமாதிரிக்கு நான் வியாபாரத்தைச் செவ்வனே நிர்வகித்து, கணக்குகளையும் பணத்தையும் செம்மையாகக் கையாண்டதில் அவர்களுக்குப் பரிபூரண திருப்தி.

சொத்துக்களையும் ஆஸ்த்திகளையும் ஆயுள்பூராவும் சேர்த்துக்கொண்டிருப்பது வேணுகோபாலாசாரியாரின் நோக்கமல்ல. இன்னும் "எதுக்கப்பா நாங்கள் சொத்தும் சுகமும் தேடவேணும்" என்று அகிம்ஷாவும், மருமகனும், இன்னும் மீதமிருந்த சொந்த பந்துக்களும் "சீக்கிரம் ஊருக்கே வந்திடுங்க" என்று அழுத்தத்தொடங்கவும், நாளடைவில் அவர்கள் வியாபாரத்தில் ஆர்வமும் ஊக்க முங்குன்றி மனதளவில் தாயகத்துக்குத் திரும்பத் தயாராகுவதை அவரின் செயல் சாங்கியங்கள் பிரதிபலித்தன.

1970 இல் நடந்த பொதுத்தேர்தலின் பின் ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவின் தலைமையிலான எஸ். எல். எ.ஃப். பி கட்சி, சமசமாஜ - கொம்மியூனிஸ்ட் கட்சி களுடன் கூட்டணி அமைத்துக்கொண்டு ஆட்சிக்கு வந்தது. வந்த ஆறே மாதத்தில் செலவாகும் அந்நியச்செலவாணியைக் கட்டுப்படுத்துவதாகக் கருதிக்கொண்டு பம்பா வெங்காயம், மசூர்பருப்புத்தொடங்கி, உள்ளி, கொத்துமல்லி, சீரகம், வெந்தயம் வரை உபவுணவுப்பண்டங்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தியது. அடுத்ததாக வாகனங்களின் இறக்குமதியையும் நிறுத்தவும், எனக்குள் ஒரு பட்சி 'அடுத்தது தங்கந்தான்' என்று தினமும் என் காதில்வந்து கீசத்தொடங்கிற்று.

தங்கம், வெள்ளியின் சந்தைவிலை சுபகாரியங்கள் அருகலாயிருக்கும் தமிழ் மாசி, சித்திரை ஆடி புரட்டாதி ஆகிய மாதங்களில் சில ரூபாய்கள் இறங்கினாலும் இறங்குமே தவிர பெரிதாகச் சரிந்து முதலீட்டாளர்கள் எவருக்கும் நட்டமேற்படுத்தாது. தங்கநகை வாணிபத்தின் அனுகூலம் அது.

வேணுகோபாலாச்சாரியாரும் தன் வியா பாரம் முதலீடுகள் விடயத்தில் எவரதும் ஆலோசனைகளைக் கேட்பவராக நானும் அறிந்திருக்கவில்லை.

என் கணிப்பை மிகுந்த தயக்கத்துடன் ஆசாரியாரிடம் பக்குவமாக எடுத்துச் சொல்லலா மென்று காத்திருந்தேன். அவர் காப்பிகுடித்துத் தாம்பூலம் தரித்து முகம் விகசிப்போடிருந்த ஒரு பொழுதில் அவரை அணுகி,

"சமூகம்.. கோவிச்சுக்கலேன்னா சிறியவன் ஒண்ணு சொல்லலாமா.."

"விஷயம்... சின்னதா பெரீஸா...."

"அது நீங்க எடுத்துக்கிற விதத்தில இருக்கு"

"பெரிஸாய்ப் பீடிகை போட்டிட்டு என்

பொண்ணைக் கேட்கலேன்னாச் சரிதான்.... அவளுக்கு எப்போதோ ஊர்ல கல்யாணம் ஆயிடிச்சுப்பா உனக்குத்தெரியாதா”

வழக்கம்போல் என்னைக்கலாய்த்து அங்கதம் பண்ணினார். அதன்திசையைத் திருப்பி சந்தைநிலவரத்தின் போக்கையும், தர்க்கரீதியாகத் தங்கம் விலையேறப்போவதுபற்றிய என் அனுமானத்தையும் எடுத்துச்சொன்னேன்.

என் அனுமானத்தை ஒத்துக்கொண்டார். சுணங்காது தொலைவரிகள் சிங்கப்பூருக்கும் ரங்கூனுக்கும், பாங்கொக்கும் அனுப்பி பிஸ்கெட்டும், சவரினுமாக ஐந்துகிலோ தங்கம் இறக்குமதிசெய்விக்க ஊக்குவித்தேன். நாம் அனுமானித்ததைப்போல் அரசு தங்கத்தில் கையைவைக்க, அதே மாதத்தில் 180, 190 ரூபாய்களிடையில் துடித்துக்கொண்டிருந்த தங்கம் திடுப்பென 400 ரூபாய்க்கு எகிறவும் நான் ஒரு தேவதூதனைப்போல ஆசாரியார் குடும்பத்தால் ஆகர்ஷிக்கப்பட்டேன்.

அவர்களின் தாயகத்துக்குத் திரும்புவதான தயாரிப்புகள் மெல்ல மெல்ல ஆரம்பித்துவிட்ட ஒரு நாளில் நாம் சம்பாஷித்துக்கொண்டிருந்தபோது வேணுகோபாலாச்சாரியார், நாடு திரும்பும் தமக்குக்கூட எடுத்துச்செல்லும் சொத்துக்களின் அளவுக்கு எல்லைவரம்புகள் உள்ளவிஷயத்தை எனக்கு ஒரு தகவலாகச்சொன்னார். பின்னர் “வயதில் சின்னப்பிள்ளையாக இருந்தாலும் உனது வாய்மூர்த்தமும் ஆலோசனையும், எனக்கு அனுகூலாமாயமைந்ததும். அதைக் கொண்டு நான் ஐம்பது லட்சம்வரையில் சம்பாஷிக்க நீதான் கருவியாக இருந்தாய், இந்த மண்ணில் தேடியவை இந்த மண்ணுக்குத்தான் என்று என் அந்தராத்துமா சொல்லுது, ஆக உன் ஊழியத்தால் அமைந்தநிதி உனக்கான சம்பாவனை” என்றார், அவரது தத்துவார்த்த பூடகப் பேச்சு எனக்கு உடனடியாக விளங்கவில்லை. நானும் வேறுவிதமாக அர்த் தம் கற்பித்துக்கொண்டு நானுண்டு என் பாடுண்டென்று என் ஊழியத்தில் ஊன்றி உழன்றுகொண்டிருந்தேன். ஒரு சனியன்று திடீரென்று--

“இன்றைக்கு மாலை வக்கீலை வரச் சொல்லி ஏற்பாடு பண்ணியிருக்கேன், அம்மாவையும் தங்கையையும் அழைச்சிண்டு வீட்டுக்கு வந்திடுங்க அப்பன்” என்றொரு ஆக்ஞைத்தொனியில் சொன்னார்.

“என்னையா சொல்றீங்க..” என்று தலையைச் சொறிந்தேன்.

“ஆமா.. கண்ணா இந்தக்கடையை உனக்கே எழுதித்தந்திடறதா இருக்கோம்” என்றார்.

“சும்மா.. கலாய்க்காதீங்கையா என்னால தாங்கேலா....” என்றேன்.

“சொல்றதைக்கேள். எல்லாமே சத்தியம், உன் நாணயத்துக்கும் ஒழுக்கத்துக்கும் என் காரையும் எங்க பரிசாகத் தந்திடறோம் எடுத்துக்கோ”

என் நினைவுப்புலத்தில் முன் எப்போதும் நிகழ்ந்திராதபடிக்கு என்னவெல்லாமோ செய்தது. உள்ளுக்குள் சத்தமில்லாதவொரு நிலவதிர்வு ஏற்பட்டதைப்போலிருந்தது. இதெல்லாம் என் வாழ்க்கையில் நேரும் நிகழ்வுகள்தானா... அவரைத் தொழுவதைத்தவிர எனக்கு வேறொன்றுஞ் செய்யத்தெரியவில்லை.

“உன்னை என் பெற்றுக்கொள்ளாத மகனாக என்றைக்கோ நானும் மங்களமும் வரித்துக்கொண்டுவிட்டோம்..”

**எங்களுக்கு எடுத்துச்செல்ல முடியாமலிருக்கிற சொத்தை, ஆதனத்தை விற்று வேணுமின்னா இங்கே சின்னதாயொரு கோவில் கட்டலாம், குளதைவெட்டலாம். மிஞ்சிப்போனா ஏலவே இருக்கிற கோயில் ஒண்ணுக்குக் கோபுரம் கட்டலாம், அதனால சமூகத்துக்குப் பெரிசா ஒண்ணும் நன்மை கொழித்திடப்போவதில்லை. தேவையிருக்கிற ஒரு குடும்பத்துக்கே கையளித்தோம்னா சந்ததிக்கும் அது கஞ்சி குடிச்சிட்டிருக்கும்.**



"நான் அதை உணராமல் இருக்கிறேனா.."

எனக்கு அழுகை முட்டித்தொண்டையை அடைக்கப்பேசவரவில்லை.

"எங்களுக்கு எடுத்துச்செல்ல முடியாம லிருக்கிற சொத்தை ஆதனத்தை விற்று வேணுமின்னா இங்கே சின்னதாயொரு கோவில் கட்டலாம், குளத்தை வெட்டலாம். மிஞ்சிப்போனா ஏலவே இருக்கிற கோயில் ஒண்ணுக்குக் கோபுரம் கட்டலாம், அதனால சமூகத்துக்குப் பெரிசா ஒண்ணும் நன்மை கொழித்திடப்போவதில்லை. தேவையிருக்கிற ஒரு குடும்பத்துக்கே கையளித்தோம்னா சந்ததிக்கும் அது கஞ்சி குடிச்சிட்டிருக்கும். எனக்குத்தெரிஞ்ச வட்டத்தில அதைப்பெறக்கூடிய தகுதி ஆனந்தவர்த்தன் குடும்பத்தைத்தவிர இன்னொன்று இருப்பதாக எமக்குத்தெரியவில்லை."

'அப்பன்' என்பதை விடுத்து அன்று இரண்டாவது தடவையாக என் பெயரை முழுமையாகச் சொன்னார்.

நல்லதொரு மிதியுந்தேயில்லாமல் நலிந் திருந்தவன் நித்தியகல்யாணி நகை மாளிகையின் உரிமையாளனாகிய கதைச்சுருக்கம் இதுதான். எங்களைவிடவும் கற்பனைவளம் செறிந்த வேறுசில உத்தமர்கள் 'ஆனந்தவர்த்தன் சாத்வீகியான வேணுகோபாலாச்சரியாரை மயக்கி அவரது வியாபாரஸ்தலத்தையே முழுதாக விழுங்கிக்கொண்டுவிட்டான்' எனவும் கதைகளைப்பன்னிக் காற்றில் மிதக்கவிட்டனர்.

❍

விதி, பகவான், அறம், மறம், பாவம், புண்ணியம் இதுகள் எல்லாவற்றிலும் நம்பிக்கை வைத்திருக்கும் நல்லையா ஆசாரியார்: "இந்த வணிகஸ்தலத்தை உனக்கென்றே பகவான் நமோவெனப் படைச்சிருக்கார் இடையில கொஞ்சநாள் வேணுகோபாலாச்சாரியாரும் அனுபவிக்கட்டுமேயென்று அந்தாள் கையில கொடுத்து வைச்சிருந்திருக்கார் தெரியுமோ.. எல்லாம் அவன் சித்தமும் விளையாட்டும் கண்ணா" என்பார். என் வாழ்க்கையின் திருப் பத்துக்குக் கால்கோளாயமந்தவர் அவர்தான். நடக்கவிருக்கும் அவரது மகளது திரு மணத்துக்கு, நகைநட்டுகளோடு, சேர்ந்தான இதர செலவுசித்தாயங்களையும் நானே செய்வ தாக உள்ளேன்.

இப்போ எனக்கு 'மங்களயோசனை' ஒன்று சொல்கிறேனென்று வந்திருக்கிறார். 'உறவுகள் அறுந்துபோகப்படாதாம்', அது சந்தேகமில்லாமல் மாமன்விட்ட தூதாகத் தானிருக்கும்

"மாமன்மேல இருக்கிற தனிப்பட்ட காய்ச்சல்ல உன்னையே நம்பியிருக்கிற அருவியை ஒதுக்கிவிட்டு நீ இனிப்புதிதாக ஒரு ஒருத்தியைக் கொணாந்து அந்த இடத்தில உன் குடும்பத்துக்குள்ள வைக்கிறது, அறஞ்சார்ந்த காரியமல்ல, தேன்மொழியைக்கூட மாத வனுக்கு எடுக்க அவர்கள் தயாராகிட்டார்கள் தெரியுமோ..... மனுசனுக்கு வாழ்க்கையின் அநித்தியம் லேசில புரிஞ்சிடறதில்ல, அதனாலதான் அவன் அகம்பாவங்கூடி ஆடறதும், செல்வசுகத்தால லோகத்தையே புரட்டிடுவேங்கிறதும், சமயத்தில அவனே தப்பு - வஞ்சனை- இகழ்ச்சி - ஏன் ஆராதனை பண்ணிக்கறதுகூட.. நீ படிச்ச பையன், சாமானியனல்ல, என்னடா மாமா எங்கிட்டயே காலட்ஷேபம் பண்றாரேன்னு நெனைச்சுடப்படாது. லோகத்தில தப்பு, தவறு என்று இருக்கிறதாலதான் தர்மத்தைப்பற்றின பேச்சே வருது.... எல்லாத்தையும் எல்லாரையும் மன்னிக்கத் தெரிஞ்சவந்தான் அதிமானுஷன். எல்லாத்தையும் நல்லாய்ப்புரிஞ்சுப்பே ஏதோ நல்லமுடிவுக்குவா மகன்" என்றுவிட்டு மறுபடியும் சூதானமாகத் தட்டத்துள் நல்ல சீவலாகத்தேடி, வெற்றிலைச்சுருளுள் வைத்து வாய்க்குள் திணித்துக்கொண்டு, சால்வையை உதறித்தோளில் போட்டபடி கிளம்புகிறார் நல்லையா ஆசாரியார்.

மாமா குடும்பத்துக்கு அருவிக்கு நான் பொருத்தமானவன்தான் என்கிற நினைப்பையும், ஆங்கிலந்தெரியாத தேன்மொழி மாதவன்கூடக் கொழும்பில் குடும்பம் நடத்துவாள் என்கிற நம்பிக்கையையும் தந்த மாயாவி எவன்? உலர்ந்துகொண்டிருந்த சொந்தங்களின் வேரில்பரவித் துளிர்விடவைக்கும் அந்த உயிர்ப்பூக்கி எது.... என் சிந்தனை குழம்பு கிறது. நான் கயிற்றுக் கட்டிலில் சாய்ந்து படுத்துக்கொள்கிறேன். அந்திச் செவ்வானத்தில் அப்போதுதான் பிறந்த தாரகைகள் சில துள்ளித்துள்ளி மின்னத் தொடங்குகின்றன.

❍❍❍

சிறுகதை

# வாடைக்காற்று



J.A றஜீவ் (நெடுந்தீவு)

நான்காம் வருட மாணவன், தமிழ் சிறப்புக் கற்கை, கிழக்குப் பல்கலைக்கழகம்.

அம்மா அத்தான் போண் பண்ணினார். கூளர் விடியவே குறிகட்டுவான் வந்திற்றாம், றோளர் றாலும் வந்திற்றாம் ஐஸ் இல்லையாம், கொண்டுபோகணும குய்க்கா வரட்டாம் நான் போறன்.. என்றுவிட்டு, ரெண்டுபிடி புட்டை அவசர அவசரமாக வாயில் போட்டுக்கொண்டு தன் லுமாலா வார் சைக்கிலை வேகமாக மிதிக்கிறான். மெஜன் மெயின் றோட்டில் இருந்து கொம்பனிச் சந்திக்கு திரும்பும் சந்தர்பத்தில், றாயு தான் வேலை செய்யும் கடையிலிருந்து வெளியே ஓடி வந்து 'டேய் மெஜன் இங்க வந்துட்டு போடா..' எனக்கூப்பிட, மெஜன் பதிலாக, டேய் ஒரு மணித்தியாலத்தில வந்திடுவன், போட்ல சாமான் ஏத்தியாச்சாம் நான் போறதும் வாறதும்தான், வந்து பேசுறன் என்று கூறிக்கொண்டே கொம்பனி ஒழுங்கைக்குள் நுழைகிறான். கொம்பனிக் கடற்கரையை அடைந்ததும், ரெண்டு பெட்டி கிளி மீனும், மூன்று கூள் பொக்ஸ் றாழும் ஏத்தியாச்சு, மண்ணெண்ணையும் விட்டாச்சு, பெருநண்டு ஏத்தினா சரி, என்று கூறிக்கொண்டே போட்டிலிருந்து துசி வருகிறான். ஆ... சரிடா அண்ணாச்சி, அப்பா வந்தவரா எனக்கேட்டுக் கொண்டே மெஜனும் கொம்பனிக்குள் நுழைய, அப்பா மாவலி அடிக்கு றோளர் கொண்டு போக போயிற்றார் என்று கூறிக் கொண்டே ரான்ஸ்போர்ட்டுக்கான 150 ரூபாயை நீட்டுகிறாள் அமலி. என்ர காசையும் மெஜனட்டயே குடு நான் குறிகட்டுவானில வைச்சு வேண்டுறேன் என்று கூறிக் கொண்டே கையில் பெருநண்டுக் கூடையுடனும் றமேஸ் போட்டை நோக்கி நடக்கிறான். அவனுடன் நடந்து கொண்டே மெஜனும்.. 'என்ன றமேஸ் அண்ணா காத்தும் அடங்கீற்று, உவட்டும் இல்ல, கடலும் சீராக் கிடக்கு இண்டைக்கு சன்னம் பறக்கும் 40 கோஸ்....' என்று கூறிக்கொண்டு போட்டை தள்ள, றமேஸ் அவனைப் பார்த்து கச்சானால இருட்டிக் கிடக்கு பெரிய காத்தொண்டு



**ஒரு பக்கத்தை மட்டும் பார்த்தவர்களுக்கு தெரியவில்லை, வாடைகாற்றின் மறுபக்கம்**

வரப்போகுது குய்க்கா போய்ற்று வருவோம்டா என்று கூறி புறப்படுகிறார்கள். எதற்கும் தயங்காத 20 வயது தொட்ட மெஜன் 40 கோஸ் எஞ்சினை ஸ்டார்ட் பண்ணி ஓட.. பச்சை டொல்பின் போட்டு வேகம் எடுக்க ஆரம்பிக்கிறது.

மெஜனின் தந்தையான றஞ்சனும் நெடுந் தீவு மாவலி துறையில் நிண்டு கொம்பனி போட்டு அதிவேகத்தில் சிற்றலைகளை மிதித்து ஓடுவதைக் கண்டு கொண்டே றோளரை ஸ்டார்ட பண்ணுவதற்கான ஆயத்தம் செய்கிறார். றஞ்சனுடன் றோளரில் செல்கின்ற காந்தன் அவரிடம் 'மெஜனுக்கு நீங்க எல்லாம் பழக்கினது நல்லதா போச்சு, ஏனெண்டு றஞ்சன் கேட்க, நீங்க மாறி மற்ற வேலையள் செய்யும்போது உங்கட வேலை எல்லாம் அவன் பார்க்கிறான்' என்றான். காந்தனை நோக்கி சலித்த முகத்துடன் 'மூண்டு பெட்டயளுக்கு அவன் ஒருத்தன்தானே பொடியன் அதனால பயம், என்னவும் நடந்திருமோ எண்டு... அவன்ர தாய்க்காறியும் அவன் மாறி போட்டுக்கு போறேண்டா எனக்குத்தான் பேசுவாள்... என்ன செய்யுறது இருந்த நண்டு வலையமும் முழுசா களவு போச்சு அதனால இந்த மீன் கொம்பனியையே நம்பி இருக்க வேண்டி இருக்கு.' காந்தன் றஞ்சனை பார்த்து சிரித்துக்கொண்டே அவன் இப்ப உங்கள விட நல்லா போட்டு ஓடுறான் றஞ்சண்ண என்றான், ரஞ்சன் மறுமொழியாக 'ஆனாலும் அனுபவம் இல்லத்தானேடா அதான் பயம்...' என்று கூறிக்கொண்டிருக்கையில் வடக்கு மேற்கு வானில் கருமேகங்கள் கூடி காற்றும் மழையும் வருவதை றஞ்சன் உற்று நோக்குகிறான், காந்தனை பார்த்து 'கச்சானால இருட்டிக்கொண்டு, காத்தும் மழையும் வருது இப்ப போகத்தேவேல்ல, மழையும் காத்தும் தாண்டினதும் போவோம்' என்று கூறி மழையில் நனையாமல் இருக்க றோளருக்குள் நுழைய செல்கின்றனர்.

இது நடந்து கொண்டிருக்கும் அதே சமயத்தில் மெயனின் போட்டும் குறிகட்டு வானை சேர்கிறது. குறிகட்டுவானை சேர்ந்த தும் மெஜன் றமேஸைப் பார்த்து, 'எப்படி அண்ணா இண்டைக்கு ஓட்டம்.. 23 நிமிசத்தில குறிகட்டுவான் வந்திற்றம்' என்று கூறி போட்டை மண்ணில் முட்டவிட்டு ஏத்தி, மீன் பெட்டிகளையும் றால் பெட்டிகளையும் இறக்கு கிறார்கள்.

றமேஸ் மேஜனை பார்த்து 'காத்தும் மழையும் வருகுதடா, நிண்டு காத்தும் மழையும் கழிய போவோம்' என்கிறான். மெஜன் இல்ல றமேஸ் அண்ணா வெளிக்கிட்டம்னா இப்ப போயிரலாம் என்று சொல்லிக் கொண்டே வேகமாக இரண்டு ஐஸ் பெட்டிகளையும் பத்து வெறுமையான கூல் பொக்ஸ்களையும் ஏற்றுகிறான். றமேசுக்கு இரண்டு மனமாக இருக்கிறது. ஆனாலும் கூளர் வாகன ஓட்டிக்கு கைகளை காட்டிவிட்டு இருவரும் புறப்படுகின்றனர். பத்து நிமிடத்துக்குள்ளேயே போட்டு கண் பார்வையிலிருந்து மறைந்து நெடுந்தீவை நோக்கி பறந்து செல்கிறது. அதே வினாடியில் அதைவிட அதிக வேகத்தில் கருமேகத்தின் இருளத்துடன் கூடிய கடும் காற்றும் மழையும் போட்டைத் துரத்திப் பிடித்து சூழ்கிறது. சுத்தி இருந்த தீவுகள் அந்தப் பதினோரு மணி நண்பகலிலே அடையாளம் தெரியாமல் மறைக்கிறது. திசைகள் தெரியாத கடும் புயலுக்குள் போட்டு சிக்கிக் கொள்கின்றது. வழமையைவிட ஒரு தைரிய உணர்வு, கனமழையும் கடும் காற்றும் உடம்பில் பட விசித்திரமான தைரியம் வரு கிறது. என்ன செய்துவிடும் இந்த காற்று மிஞ்சிப் போனா போட்ட பிரட்டும் அவ்வளவுதான் என்று என்ஜின் கவுணரை முறுக்கிப்பிடித்து கவுணர் இறுக்கியை இன்னும் இறுக்குகிறான். ஏனென்றால் இந்த கவுணரின் இறுக்கியை இறுக்கினால் எஞ்சின் தானாகவும் நிற்காது. அதன் வேகமும் குறையாது, மீண்டும் அதை இழக்கினால்தான் என்ஜினை நிறுத்தலாம். இது ஒரு இளரெத்த துடிப்பு காரணமாக செய்த தைரிய செயற்பாடு, இவ்வாறு செய்து கொண்டிருக்க காற்றின் சுழற்சி வேகம் அதிகரிக்கிறது, அலைகளும் அதிகரிக்கின்றன. நான்கு பக்கமும் புயல் காற்றின் காரணமாக எழுந்த அலைகளின் தாக்கத்தில் இருவரும் போட்டில் இருந்து தூக்கி எறியப்படுகின்றனர். ஆனால் போட்டு தானாகவே ஓட ஆரம்பிக்கிறது ஓட்டுநர் இல்லாத எஞ்சின் தானாகவே ஒரு பக்கம் திரும்ப, போட்டு வட்டமாக சுற்றி ஓடுகிறது. தண்ணீருக்குள் மூழ்கி எழுந்து நீந்திக்கொண்டே தலையை தூக்கிப் பார்கிறான். போட்டு வட்டமாக சுற்றி ஓடுகிறது றமேஸ் அண்ணாவை காணவில்லை, 'றமேஸ்



**சோர்ந்து போன மனம் நீந்த முடியாமல் தைரியம் இழந்து மூழ்க ஆரம்பிக்கிறது. மூச்சு எடுக்க முடியாமல் மூச்சுத் திணற.. மனம் மட்டும் பேச ஆரம்பிக்கிறது. அப்பாக்கு நான் மட்டும் தானே உதவி.. இனி யாரு அவரோட உதவிக்கு நிப்பார். தன்னுடைய அக்காக்களுக்காக தான்பட்ட கடன்களையெல்லாம் யார் சுமப்பார்.**

அண்ணா' என உரக்க கூப்பிடுகிறான், ஆள் இல்லை.... தன்னை நம்பி ஒப்படைக்கப்பட்ட போட்டு தனக்கு முன்னாலே சுற்றிச்சுழன்று வட்டமாக ஓடுகிறது, என்ன செய்வது என்று தெரியாமல் அங்கலாய்க்கிறான். எப்படி அதை எட்டிப்பிடிப்பது... அலைகளும் அதிகமாக எழுகிறது அது சாத்தியமற்றது எனப்புரிகிறது. ஏனெனில் போட்டு சுளன்று ஓடும் வேகத்தில், அதுவும், அலைகளுக்குள் எட்டிப்பிடிப்பது என்பது நூற்றுக்கு ஒருவீதமே சாத்தியமாகும். அவ்வாறு பிடிக்கும் அந்த பிடி தவறினால் போட்டும் தனக்கு மேல் ஏறும், என்ஜினின் விசிறியும் வெட்டும் எனப்புரிகிறது. ஆனாலும் இளரத்தம் அல்லவா சற்றும் யோசிக்காமல் அந்த ஒரு வீத முயற்சியை எடுத்து பார்க்கிறது. பிடி தவறுகிறது தோள்ப்பகுதியையும் கன்னத்தையும் கீறிக்கிழிக்கிறது என்ஜினின் விசிறி. அடியும் பலமாக விழுகிறது. வேணாம் நம்ம கரையை நோக்கி நீந்துவம். என எண்ணி தலையை தூக்கிப் பார்க்கிறான் மிக தூரத்தில் நெடுந்தீவும் அதைவிட கிட்டத்தில் நையினா தீவும் தெரிகிறது. ஒருபக்கம் பயமும் தன்னுடன் வந்தவரைக் காணவில்லை என்ற தடுமாற்ற எண்ணமும் மேலிடுகிறது. சரி முதல்ல கரைக்குப்போவம் என தன் இறுக்கமான காற்சட்டையை கழட்டிவிட்டு. உள்ளாடையுடன் நீந்த ஆரம்பிக்கிறான்.

ஏறக்குறைய கால்மணி நேரத்தின் பின் காற்று மட்டும் குறைய மாவலித் துறை முகத்தில் இருந்து றஞ்சன் புறப்படுகிறான். தந்தைக்குத் தெரியுமா தனையனின் இப்பரிதாப நிலை, எதுவும் அறியாதவனாய் நிறைந்த மழைத்துளிகள் முகத்தில் விழ, சற்றும் தென்படாத எதிர்க்கரையான குறிகட்டுவான் நோக்கி மெல்ல மெல்ல றோலரை நகர்த்து கிறான்.

இரத்தக்கசிவும் உடல் எரிவும் ஒருபக்கம் உடலை வருத்த, அதைப்பொருட்படுத்தாமல் 30 நிமிடங்களுக்கு மேல் நீந்துகிறான் தனையன். தொடர்ந்து இரத்தம் கசிந்து கொண்டே

இருந்தபடியால் இளமனம் சோர்வடைகிறது. யாராவது தன்னை காணமாட்டார்களா... காப் பாற்ற மாட்டார்களா.. என்ற எண்ணம் தோன்று கிறது. தூரத்தில் தன் தந்தையின் நீல நிறக் கோடு போட்ட றோலர் வருவது தெரிந்தது. தன் தந்தை தன்னை பார்ப்பாரா... பாக்கணும் என்று தெய்வத்தை வேண்டுகிறான். கனத்த எதிர் மழைத்துளியின் தாக்குதலால் தந்தை றஞ்சன் காணவே இல்லை.. சோர்ந்து போன மனம் நீந்த முடியாமல் தைரியம் இழந்து மூழ்க ஆரம்பிக்கிறது. மூச்சு எடுக்க முடியாமல் மூச்சுத் திணற.. மனம் மட்டும் பேச ஆரம்பிக்கிறது. அப்பாக்கு நான் மட்டும்தானே உதவி.. இனி யாரு அவரோட உதவிக்கு நிப்பார். தன் னுடைய அக்காக்களுக்காக தான்பட்ட கடன் களையெல்லாம் யார் சுமப்பார். இவ்வாறு தன் குடும்பத்தின் அவல நிலையை எண்ணிக் கொண்டே அந்த பொறுப்பு வாய்ந்த இளம் இதயத்தின் துடிப்பு கடல் நீரோடு நீராகிறது. இவ்வளவு காலமும் வாரித் தந்த கடலுக்கு நன்றி கூறும் முகமாக, கடலடி மண்ணை முத்தமிடுகிறது அந்த உயிரற்ற உடலம்.

வறண்டு கிடக்கும் நெய்தல் நிலத்துக்கு மழையையும்... துவண்டு கிடக்கும் மீனவர் களுக்கு கடல் வளங்களையும் அள்ளித்தரும்... ஒரு பக்கத்தை மட்டும் பார்த்தவர்களுக்கு தெரியவில்லை, வாடை காற்றின் மறுபக்கம்.




சேகர் பல்கலைக்கழகத்தில் சந்தித்த இனிமையான நண்பன். இனிமை என்பது அவனது மாறாத புன்னகையே அதன் அடையாளமாகும். இன்றும் அவர் எனக்கு நல்ல நண்பன். பல்கலைக்கழக வாழ்க்கை அவருக்கு நிறைவேறாத கனவாக இருந்தாலும் என்னுடனான நட்பு வலுவானது.

முதல் பல்கலைக்கழக வாழ்க்கை பயமானது. சிரேஸ்ட மாணவர்கள் தொடர்பாகவே அந்த பயம் மனங்களில் இருளை சூழவைத்திருக்கும். நான் கற்று நான்கு தசாப்தங்கள் கடந்த பின்னரும் இன்னும் அந்த பயம் தொடருவதாக வரும் செய்திகளால் கவலைப்படுவது ஒருபுறம் இருக்கின்றது.

சில கொடூரமான விடயங்கள் எம்மத்தியில் காலத்திற்கு காலம் நன்றாக கூர்ப்படைந்து வந்துள்ளதே தவிர குறையவில்லை என்பதே கவலைக்குரியது. எமது கவலைகள் தீர்க்கப்படாத பிரச்சினைகளாகவே தொடருகின்றன. சீழ் பிடித்த மாறாத புண்களாய் வலிகின்றன.

எத்தனையோ பட்டதாரிகள் இன்னமும் ஆறாத உடல் உள வடுக்களுடன் வாழுகின்றனர்.

சேகர் கனவுகள் நிறைந்த இதயத்துடன் பல்கலைக்கழக வளாகத்திற்குள் நுழைந்தவர். அவரது கிராமத்தில் பல்கலைக்கழகத்தில் முதன்முதலில் நுழைந்தவர் அவர்தான்.

அவரது பெற்றோர் அவரது கல்விக்கு நிதியளிக்க ஒரு சிறிய நிலத்தை விற்று பல் கலைக்கழகத்திற்கு அழைத்து வந்தனர்.

சேகரின் பட்டப்படிப்பு தங்களை வாழ்வை மாற்றியமைக்கும் என அவர்கள் கனவுகளுடன் வந்தனர்.

சேகரின் பல்கலைக்கழக ஆரம்ப நாளில் அவரை அழைத்து வந்த பெற்றோரை கேலி செய்த கூட்டத்தினரை கண்டு சேகர் கொதிப் படைந்ததில் தொடங்கிய அவல நாடகம் இரண்டு வாரங்களில் சேகரின் பட்டகனவையும் நிர்மூலமாக்கியது.

தனது பெற்றோரை கேலி செய்த சிரேஸ்ட மாணவர் கூட்டத்தினரை எதிர்த்து குரலெழுப்பிய சேகரின் கோபம் கண்டு, அவ்விடத்தைவிட்டு உடனே அகன்று சென்றாலும் அந்தக் கூட்டம் சேகரை பழிவாங்குவதற்கு மனதிற்குள் திட்டமிட்டுக்கொண்டது யாருக்கும் தெரியாது.

இன்று இலண்டனின் வசந்த காலத்தில் பூத்திருக்கும் மரமொன்றின் கீழ் இருந்து சேகர் என்னுடன் உரையாடிய போதிலும் அவர் இழந்தவற்றின் கண்ணுக்குத் தெரியாத வடுக்களை இன்னும் சுமந்து கொண்டிருக்கிறார் என்பதை அவரின் கண்களில் நான் கண்டு கொண்டேன்.

சேகர் இன்று இலண்டனில் ஒரு தொழிலதிபராக இருக்கின்றார். ஏழை மாணவர்களின் கல்விக்காக முடிந்தவரை உதவுகின்றார்.

அடுத்தநாள் சிரேஸ்ட்ட மாணவர் சேகரை விடுதிக்குப் பின்னால் அழைத்துச் சென்றனர். அவர்கள் முதலில் சிரித்தனர். நாங்கள் பகிடிவிட உன்னை அழைத்து வந்தோம். நாங்கள் என் எதிர்கால நண்பர்கள் என்றார்கள்.

அவர்கள் சேகரை சத்தமாகப் பாடவும், தவளை போல ஊர்ந்து செல்லவும், கடந்து செல்லும் ஒவ்வொரு பெண்ணையும் காலில் விழுந்து வணங்கும்படியும் கேட்டார்கள். அவமானப்படுத்தப்பட்ட சேகர் அதைச் செய்தார். அது அங்கேயே முடிந்துவிடும் என்று அவர் நினைத்தார்.

மூன்றாம் நாள் இரவு அவர்கள் சேகரை தங்களது அறைக்கு அழைத்துச் சென்றார்கள். தங்கள் அறையை கோட்டை என விபரித்தனர்.

அன்று இரவு, அவர்கள் தங்களது ஆடைகளை துவைக்குமாறு சேகரை கட்டாயப்படுத்தினர். மலசலக் கூடத்தை சுத்தம் செய்ய கட்டாயப்படுத்தினர்.

சேகர் மறுத்தபோது அவர்களில் ஒருவன் உன் அப்பனின் தொழில்தானே. உங்களுக்கும் பட்டப்படிப்பு தேவையா என மிரட்டினான்.

சேகருக்கு தனது பெற்றோர் கேலி செய்யப்பட்டதன் பின்னணி அப்போது புரிந்தது. ஆத்திரம் தலைக்கேறியது.

சேகருக்கு அவர்களின் அவலட்சணமான உள்ளம் புரியத்தொடங்கியது.

அருகில் இருந்த கதிரையை கோபத்துடன் சேகர் எட்டி உதைத்தார்.

அவர்கள் சேகரை அறைந்தார்கள். சேகரால் நகர முடியவில்லை.

நிலத்தில் விழுந்து துடித்தார்.

பின்னர் அவர்களிடமிருந்து திமிறிகொண்டு விடுபட்டார். மேலாடை இல்லாத உடம்புடன் வீதியில் ஓடத்தொடங்கினார்.

> **“அவர்கள் சேகரை சத்தமாகப் பாடவும், தவளை போல ஊர்ந்து செல்லவும், கடந்து செல்லும் ஒவ்வொரு பெண்ணையும் காலில் விழுந்து வணங்கும்படியும் கேட்டார்கள். அவமானப்படுத்தப்பட்ட சேகர் அதைச் செய்தார்.**

நேராக பல்கலைக்கழகத்தை நோக்கி ஓடினார். பல்கலைக்கழக நுழைவாயிலின் முன்னே அமர்ந்தார்.

அவரை மாணவர்களும் பல்கலைக்கழக ஊழியர்களும் சூழ்ந்துக்கொண்டு சமாதானப் படுத்த தொடங்கினர்.

சேகர் சமாதானமாகவில்லை.

அடுத்த நாள் விடிந்தது. பல்கலைக்கழகம் பரபரப்பானது.

கலைந்த தலையுடன் வீங்கிய முகத்துடன் சேகர் அங்கே நிலத்தில் அமர்ந்திருந்தார்.

அவர் முன்னே தோன்றிய விரிவுரையாளர்கள் “நீங்கள் சிரேஸ்ட்ட மாணவர்களை தாக்கியது தவறானது. அவர்கள் கோபமாக இருக்கின்றார்கள். முதலில் நீங்கள் அவரிடம் மன்னிப்பு கேட்கவேண்டும். பல்கலைக்கழக கலாசாரத்தில் சிரேஸ்ட மாணவர்களுக்கு மதிப்பளிப்பது பிரதானமானது.” என்று வகுப்பு நடத்தினர்.

சேகர் மௌனமாக எழுந்தார். வீடு செல்வதற்காக பஸ்நிலையத்தினை நோக்கி நடந்தார். நான் அவருக்கு கொடுக்க ஒரு மேலாடையுடன் தொடர்ந்தேன்.

○○○



சிறுகதை



விமல் பரம்
(இலண்டன்)

# ஒரு நாளும் ஓராயிரம் நினைவுகளும்

ஈலிங் அம்மன் கோயிலில் காலைப் பூஜை நடந்து கொண்டிருந்தது. மணியோசையுடன் மந்திரம் ஒலிக்க, கற்பூரமணம் காற்றோடு கலந்திருக்க கைகூப்பியபடி மனமுருக பூஜையில் கரைந்து போயிருந்தார்கள்சுவாதியும் கஸ்தூரியும். இருபது வருடங்களுக்குப் பின் சந்தித்த சந்தோஷம் இருவர் மனங்களிலும்பரவியிருந்தது. பூஜை முடிய வெளியே வந்தார்கள்.

“உன்னோட நிறையக் கதைக்கவேணும் கஸ்தூரி”

வெளிமண்டபத்தின் படிக்கட்டில் வந்து அமர்ந்தார்கள். லண்டனில் குளிர்காலம் ஆரம்பமாகி விட்டது. வீசும்காற்றில் குளிர்ச்சியிருந்தது. சுவற்றர் போட்டிருந்தாலும் குளிர்ந்தகாற்று முகத்தில் படும்போது கஸ்தூரிக்குஉடல் நடுங்கியது. முதல்முறை லண்டனுக்கு வந்திருக்கிறாள். குளிர் அதிகமானால் எப்படித் தாங்கப் போகிறேன் என்னால் குளிரோடு சமாளிக்கமுடியுமா.. யோசனைகள் அவள் மனதில் எழுந்தது.

அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள் சுவாதி.

“பார்த்து எத்தனை வருசமாச்சு. உனக்கு உடம்பு வைச்சிருக்குதடி”

“படிக்கேக்க நீ எப்பிடி இருந்தாயோ அதேமாதிரி இப்பவும் வடிவாய் இருக்கிறாய். இன்று முழுக்கஒண்டாயிருக்க வேணும் எண்டு விடியவே வந்து இழுத்துக் கொண்டு வந்திட்டாய். என்னோட முழு நாளுமிருக்க உனக்கு நேரமிருக்கா” கேட்டாள் கஸ்தூரி.

“நீ மாறவேயில்லை. படிக்கேக்க உன்ர அழகுக்கும் வசதிக்கும் என்னால கிட்ட வர முடியாது எண்டு அலட்டுவாய். இப்ப இப்பிடிக் கேக்கிறாய்”

“உண்மைதானே அழகும் வசதியுமாய்தானே இருக்கிறாய். நீ வந்திறங்கின காரைப் பார்த்தாலே தெரியுதே”

"என்ன பெரிய வசதி அதை விடு. அப்பா இறந்த நேரம் ஊருக்கு வந்து உன்னைப் பார்த்தது அதுக்குப் பிறகுஊருக்கும் வரேல உன்னோட தொடர்பு கொள்ளவும் முடியேல"

"படிப்பு முடிச்ச பிறகும் கடிதத் தொடர்பில இருந்தம். பிறகு குறைஞ்சிட்டுதுதான் ஆனால் உன்னை நினைக்காதநாளேயில்லை ஒரு நாள் சந்திப்பம் எண்ட நம்பிக்கை இருந்தது"

"எதிர்பாராமல் நந்தினியை கோயில் திரு விழாவில பார்த்தன். கதைக்கேக்க தன்ர ஊரைப் பற்றிச் சொன்னாள் அது உன்ர ஊர் எண்டு தெரிஞ்சு உன்னைப் பற்றிக் கேட்டன். உன்னோட படிச்சனான் எண்டதும் உடனே என்ர அம்மாதான் நீங்கள் சுவாதி அன்ரிதானே... அம்மா அடிக்கடி உங்களைப் பற்றிச் சொல்லுவா எண்டாள். நீயும்மறக்கேல சந்தோஷமாயிருந்தது"

"உன்னோட பழகினதையும் பார்த்துப் பார்த்து நீ எனக்குச் செய்த உதவியளையும் மறக்க முடியுமா சொல்லு" நன்றி உணர்வு அவள் குரலில் தெரிந்தது.

"உன்ர நம்பரைக் கேட்டன் நாலு நாளில லண்டனுக்கு வரப் போறா வந்ததும் கதை யுங்கோ எண்டு சொன்னாள். உடன போய் இதை வாங்கினன். இனிமேல் அடிக்கடி கதைக்கலாம்" கஸ்தூரியிடம் ஒரு பார்சலைக்கொடுத்தாள்.

திறந்து பார்த்தவள் முறைத்தபடி அதை சுவாதியிடம் திருப்பிக் கொடுத்தாள்.

"போன் தாறியே அந்த நேரம் செய்த தெல்லாம் போதும். இப்ப எனக்கு என்னடி குறை. வீட்டில போன் இருக்கு. இங்க எனக்கு நந்தினி வாங்கித் தருவாள்"

"இன்று முழுக்க என்னோட இருக்கப் போறாய். நான் என்ன செய்தாலும் ஒண்டும் சொல்லக் கூடாது. நந்தினி இனித்தானே வாங்கித் தருவாள். இதை வைச்சிரு நினைச்ச நேரம் கதைக்கலாம். இப்பவும் உன்னோட இருக்கிறதை நம்ப முடியாமலிருக்கு"

"என்னாலையும்தான். லண்டனுக்கு வருவன் உன்னைச் சந்திப்பன் எண்டு நினைக்கவே இல்லையடி"

"ஐம்பது வருச சிநேகிதம்.. படிக்கிற காலத் தில உயிராயிருந்தம். எத்தனை பேரோடை பழகுவன் பிறகு சண்டைபிடிப்பன் ஆனால் ஒருநாள் கூட உன்னோட கோவப்பட்டதில்லை. எவ்வளவு பக்குவமாய் நடந்திருக்கிறாய். உன்னை நினைச்சால் ஆச்சரியம்தான்டி"

"உன்ர கதையளும் மாறவேயில்லை. இப்பவும் என்னை உயர்த்திக் கதைக்கிறாய்" சிரிப்போடு சொன்னாள் கஸ்தூரி.

கஸ்தூரியின் வாழ்வில் நடந்தவைகளை அவளாலேயே நம்ப முடியவில்லை. வீட்டுக்குத் தனிப்பிள்ளையாகஇருந்தாலும் வறுமையோடு நித்தம் போராட்டம்தான். கடினவேலைக்குப் போகமுடியாத அப்பா. நோயோடுபோராடும் அம்மா. அவர்களுக்கு இருக்கும் ஒரே சொந்தம் அப்பாவின் அக்கா நித்திமாமியும் மாமாவும்தான். சொந்தக்காணிகளோடு குத்தகைக்கும் காணி எடுத்து பெருந்தொகையாக விவசாயம் செய்யும் மாமாதான்சின்னச் சின்ன வேலைகளை அவளின் அப்பாவுக்கும் கொடுத்து அவர்கள் வீட்டிலும் அடுப்பு எரியக் காரணமாய் இருந்திருக்கிறார். ஊரிலுள்ள பாடசாலையில் மாமாவின் பிள்ளை களான பிரபா, மதனாவுடன் கஸ்தூரியும் படித்துக் கொண்டிருந்தாள். அவர்கள் இவளை விட மூத்தவர்கள். தொடர்ந்து படிக்க யாழ்ப் பாணத்திலுள்ளபெண்கள் கல்லூரியில் தன் பிள்ளைகளோடு கஸ்தூரியையும் சேர்ப்பதற்கு ஒழுங்குகளைச் செய்து விட்டுத்தான் அப்பாவிடம் சொன்னார் மாமா.

"சாப்பாட்டுக்கே கஷ்டப்படுறன். யாழ்ப் பாணத்தில தங்கிப் படிக்கச் செலவு கூட இங்கேயே படிக்கட்டும்" அப்பா சம்மதிக்க வில்லை.

"அவளும் என்ர பிள்ளைகளோட சேர்ந்து படிக்கட்டும் விடுங்கோ"

மாமாவின் பேச்சுக்கு மறுபேச்சுப் பேசாதவர் அவளையும் படிக்க அனுப்பினார்.

கஷ்டமான சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் படிக்க அதிஷ்டம் கிடைக்குமென்று அவள் எதிர்பார்க்கவில்லை. வீட்டைவிட்டு எங்கும் போகாதவள் பயத்தோடுதான் போனாள். கல்லூரியோடு இருந்த மூன்று விடுதிக் கட்டிடங்களில் ஒன்றில் இடம் கிடைத்தது. அந்தப் பெரிய மண்டபத்தின் நுழை வாசலில் இரு பக்கமும் இரண்டு அறைகள். அதில் இவர்களைக் கவனிக்கும் பொறுப்பாளர்கள் தங்கியிருந்தார்கள். உள்ளே நடைபாதை விட்டு இரு பக்கமும் வரிசையாக கட்டில்கள் போடப் பட்டியிருந்தது. மதனாவுக்குப் பக்கத்தில் கஸ்தூரிக்கு இடம்கிடைத்தது. மறுபக்கம்

சுவாதி இருந்தாள். தயக்கத்தோடிருக்கும் கஸ் தூரியை வலிந்து நேசக்கரம் நீட்டிதோழியாய் அரவணைத்து அன்பு மழையில் நனைய வைத்தவள் இந்த சுவாதி.

“கதைக்கவேணும் எண்டு கூட்டி வாறன். நீ என்ன யோசனையில இருக்கிறாய்” தோளைத் தட்டினாள் சுவாதி.

“உன்னைச் சந்திச்சதையும் உன்னோட பழகினதையும் நினைச்சுப் பார்க்கிறன். படிச்ச போது உன்ர சினேகிதம்கிடைச்சது பெரி சில்லை. ஐம்பது வருசமாய் தொடருதே அது தாண்டி பெரிய விஷயம்”

“இடையில வந்த பிரிவையே தாங்க முடியாமல் உன்னைத் தேடிக் கண்டு பிடிச்சிட்டன் இனி விடமாட்டன். சரி நீஎப்பிடியிருக்கிறாய் அதைச் சொல்லு.” ஆர்வமாய் கேட்டாள் சுவாதி.

“எனக்கென்ன நல்லாய் இருக்கிறன். ஊரில அவரை விட்டிட்டு வந்ததுதான் கவலை. மகன் இருக்கிறான் எண்டாலும் அவரோட வந்திருந்தால் சந்தோஷம்தானே. குழந்தை கிடைக்கிற நேரத்தில அப்பாவையும்சேர்த்துக் கூப்பிட விசா கிடைக்காவிட்டாலும் நீங்கள் வாங்கோ பிறகு அப்பாவைக் கூப்பிடலாம் எண்டுநந்தினி சொன்னதால நான் வந்திட்டன்”

“படிக்கிற நேரத்தில வீட்டில கஷ்டப்பட்டாய். கலியாணத்துக்குப் பிறகு எப்பிடி”

“பெரிய வசதியில்லாவிட்டாலும் ஓரளவு பரவாயில்லை. காசுக்கு கஷ்டப்பட்டாலும் நல்ல வாழ்க்கை அமைச்சிட்டுது. உதயன் அன்பாய் பாசமாய் இருக்கிறார். மாமாவால நீ எனக்குக் கிடைச்ச மாதிரித்தான் இவரும். மாமாதான் நகை பணம் தந்து கலியாணத்தையும் நடத்தி வைச்சவர்”

“மாமா உங்களை கொஸ்ரலில விட வரேக்க எங்களோடயே எவ்வளவு அன்பாய் கதைப்பார். அவரைப் பார்த்தாலே எல்லாரும் ஓடி வந்து கதைப்பம். அவற்ர சிரிச்ச முகம் இப்பவும் ஞாபகத்தில இருக்குது”

“அவர் செய்த உதவிக்கு அவற்ர கடைசிக் காலத்தில ஒரு மகளாய் அவருக்குச் செய்ய வேண்டிய கடமைகளைநான் செய்தன் எண்டு நினைக்க சந்தோஷமாயிருக்கு”

“ஏன் அவரைப் பிள்ளையள் பார்க்கேலையா”

“அவையள் கலியாணமாகி கனடாவுக்குப் போனாலும் வந்து பார்த்திட்டுப் போவினம். வருத்தம் வந்துபடுக்கையில இருக்கேக்க நாங்கள் மாமாவோட போயிருந்தம். உதயன்தான் சொன்னார் தங்கட வீட்டில இருக்கிறது அவை யளுக்கு வசதியாயிருக்கும் நாங்கள் போய் அவையளோட இருப்பம் எண்டார். அந்த அதிஷ்டம் எங்களுக்கு கிடைச்சிருக்கு”

“வீட்டை விட்டிட்டு உதயன் எப்பிடி உன் னோட வந்தார்”

“அவருக்கும் மாமாவில சரியான மரியாதை. எங்களுக்கு உதயன் சொந்தம் என்னைக் கலியாணம் செய்ய விருப்பமிருந்தாலும் வேலையில்லை. அப்பாவிட்ட கேக்கத் தயங் கினார். அவற்ர நல்ல குணத்தை அறிஞ்சு மாமாதான் கதைச்சு கலியாணமும் செய்து வைச்சு போஸ்ட் ஓபிஸில வேலையும் எடுத்துக் குடுத்தவர் அந்த விசுவாசம் அவருக்கு” சொல்லும் போது கஸ்தூரியின் முகம் மலர்ந்து பிரகாசித்தது.

“நீ சொல்லுறதைக் கேட்க எனக்கு அப்பா வின்ர நினைவு வருகுது. கடைசி நேரத் தில கஷ்டப்பட்டுப் போனார். போய் அவ ரோடயிருக்க முகுந்தனுக்கு லீவு கிடைக்கேல. பிள்ளையளும் படிக்கிற வயசு விட்டிட்டுப் போகமுடியேல. என்னைப் பார்க்க ஆசைப் பட்டு பார்க்காமலே போயிட்டார். பிறகு போய் அவற்ரை காரியங்களைச்செய்திட்டு வந்தம். எவ்வளவு செல்லமாய் என்னை வளர்த்தவர் அவர் உயிரோட இருக்கேக்க போகேலையே எண்ட கவலை ஆறுதேயில்லை. என்ர அதிஷ்டம் அவ்வளவுதான்” கண்கள் கலங்க சுவாதி சொன்னதைக்கேட்டுத் துடித்துப் போனாள்.

“கவலைப்படாத கடைசி நேரம் அவற்ரை முகத்தையாவது போய் பார்த்தனிதானே. தூர வந்திட்டால் நினைச்சவுடன போகேலாதுதானேடி. சரி என்னைப் பற்றிக் கேட்டாய். உன்னைப் பற்றி உன்ர குடும்பத்தைப்பற்றிச் சொல்லு” கதையை மாற்றினாள் கஸ்தூரி.

“நீதான் என்ர காரைப் பார்த்து நான் வசதியாய் இருக்கிறன் எண்டு கண்டு பிடிச் சிட்டியே. எல்லாரும்வேலைக்குப் போறம். நான் ஒரு கொம்பனியில எக்கவுண்டனாய் இருக்கிறன். முகுந்தனும் நல்ல வேலையில இருக்கிறார். மகன் இஞ்சினியர் மகள் டொக்டர். வேலையோட எல்லாரும் பிஸி”

“கேக்கவே சந்தோஷமாயிருக்குது. வீட் டுக்கு வந்து எல்லாரையும் பார்க்கவேணும்”



**அவளுக்குப் பிடித்த வரலாற்று நாவல் படமாக்கப்பட்டு பெரிய திரையில் காட்சிகளாக விரிந்து கொண்டிருந்தது. கண்களை அசைக்கமுடியவில்லை. படத்தோடு ஒன்றிப் போனாள்.**

"கட்டாயம் வா. எனக்குப் பசிக்குது கோயிலுக்கு வந்ததால சாப்பிடேல" இருவரும் காரை நோக்கி நடந்தனர்.

அந்தப் பெரிய ரெஸ்ரோரண்டில் இரண்டு இருக்கையுள்ள மேசையின் முன் எதிரெதிராக இருவரும்அமர்ந்திருந்தார்கள். அந்த இடம் சாப்பிட வந்தவர்களால் நிறைந்திருந்தது.

"எப்ப பார்த்தாலும் சனக்கூட்டம்தான் நல்ல சாப்பாடு. கியூவில நிண்டு சாப்பிட வருங்கள். நான் அடிக்கடி வருவன்"

சுவாதி சொன்னதைக் கேட்டு வாசல் பக்கம் பார்த்தாள். வெளியே வரிசை நீண்டிருந்தது. சாப்பிட்டவர்கள் போக அங்கு நின்றவர்களை அனுப்பிக் கொண்டிருந்தார்கள். தாய் தந்தையின் கை பிடித்து வந்த குழந்தையொன்று உள்ளே நுழைந்ததும் கைகளை உதறிவிட்டு இவளைக் கடந்து பழகிய இடத்துக்கு வந்ததுபோல் உள்ளேஓடியது. நாலு வயதிருக்கும் பொன்னிற முடியும் நீலகண்களோடும் அழகான வெள்ளைக் கார குழந்தை. பார்வையைத் திருப்ப இவர்களுக்குப் பக்கத்தில் இரண்டு மேசைகளை ஒன்றாக்கி குடும்பமாய் இருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். கதையும் சிரிப்புமாய் அந்த இடம் கலகலத்துக் கொண்டிருந்தது. பல இனமக்கள் அங்கே ஒன்றாகயிருந்து சாப்பிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து வியந்து போனாள்.

"என்ன சாப்பிடப் போறாய். மெனுக் காட்டைப் பார்த்து விருப்பமானதைச் சொல்லு. எல்லாத்தையும் ஓடர் பண்ணுவம்" என்றாள் சுவாதி.

"என்ன விளையாடிறியா. இங்க உள்ள சாப்பாட்டைப் பற்றி எனக்கென்ன தெரியும். குழந்தை பிறந்தபிறகுநேரமிருக்காது இப்ப வாஎண்டு வந்த இரண்டாம் நாளே கூட்டியந்திட்டாய். நீயே ஓடர் பண்ணு"

ஓடர் பண்ணி வந்த உணவுகளைப் பார்த்து திகைத்துப் போனாள்.

"எங்கள் இரண்டு பேருக்கு மட்டும்தானே சொன்னனி இதைப் பார்த்தால் அஞ்சு பேர் சாப்பிடலாம்"

"மிஞ்சினால் பரவாயில்லை. எல்லாத் திலையும் ரேஸ்ட் பாரு" தட்டில் எடுத்து வைத்தாள்.

படிக்கும்போதும் இவள் இப்படித்தான். வீட்டிலிருந்து வரும்போது கைநிறைய பணத்தோடு வருவாள். செலவைப்பற்றிக் கவலைப்படாமல் பிடித்ததைக் கேட்டு வாங்கித் தருவாள். உரிமையாய் அதட்டித் தரும்போது மறுக்கவும் முடியாது. இவளின் தாராளகுணம் மாறவேயில்லை.

"என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய் சாப்பிடு" தானும் சாப்பிட்டுக் கொண்டு கஸ்தூரி சாப்பிடுவதையும் கவனித்துக் கொண்டிருந்தாள்.

"போதுமடி இதுக்கு மேல சாப்பிட முடியாது" எழுந்து கை கழுவி வர சிறு துண்டுகளாய் வெட்டி வைத்த பழத்தட்டுடன் வந்தாள் சுவாதி.

"நேரமிருக்கு ஆறுதலாய் இருந்து சாப்பிடு" ஒவ்வொரு பழத்துண்டாய் எடுத்து வாயில் வைத்தாள் கஸ்தூரி.

"எப்பிடி உன்ர பொழுதுகள் போகுது. இப்பவும் கதைப் புத்தகங்கள் வாசிக்கிறனீயா. புத்தகங்களைக் கண்டால் பையித்தியமாயிருந்து வாசிப்பாய். எந்த நேரமும் கதைப் புத்தகமா

எண்டு மேற்றனிட்ட எத்தனை தடவை ஏச்சு வாங்கியிருக்கிறாய்"

"அதை விடவே முடியேல சுவாசக்காத்து மாதிரி என்னோட ஊறிட்டுது. சொந்தமாய் வாங்க வசதியில்லை. லைபிறரியிலயிருந்து புத்தகங்கள் எடுக்கலாம். உதயணும் எடுத்துத் தருவார். நீ வாசிக்கவேமாட்டாய் என்னட்டகதை கேப்பாய். இப்ப புத்தகத்தைப் பாத்தாலே உன்ர நினைவு வந்திடும்"

"எனக்கு கதை கேக்கத்தான் விருப்பம். நீ சொன்ன கதையளை மறக்கேல. அதுவும் பொன்னியின் செல்வன் கதை என்ர மனசில ஆழப் பதிஞ்சிட்டுது. இப்ப படமாய் வந்திருக் குதே பார்த்தியா"

"இல்லையே நாங்கள் இருக்கிற இடத்தில தியேட்டரில்லை. வீட்டில ரிவி இருக்கு அதிலையும் பாக்கேல"

கஸ்தூரி சொன்னதும் தன் தோள்பையி லிருந்து இரண்டு ரிக்கற்றை எடுத்தாள்.

"தியேட்டருக்குப் போய் பொன்னியின் செல்வன் படம் பாப்பம்" கஸ்தூரியால் நம்ப முடியவில்லை. கொஸ்டலில் இருந்தபோது மாதத்தில் ஒரு நாள் பக்திப்படம் அல்லது படிப்போடு சம்பந்தப்பட்ட படத்திற்கு அழைத் துப் போவார்கள். பணத்தை நினைத்து மதனாவிடம் தனக்கு விருப்பமில்லை என்று சொல்லிவிடுவாள். ஆனால் சுவாதி விட மாட்டாள். தானே பணத்தைக் கட்டி இவள் பெயரையும் கொடுத்து விடுவாள். ஒரு முறை மாட்டேன் என்று கஸ்தூரி அடம் பிடிக்க இவள் பெயரோடு தன் பெயரையும் எடுத்து விட்டு நின்று விட்டாள். அதன் பிறகு மறுப்புச் சொல்லாமல் போவாள்.

"உனக்குப் படம் பார்க்க விருப்பம் அதுவும் இந்தப்படம் எண்டால் ரசிச்சுப் பார்ப்பாய் அதுதான் வாங்கிவைச்சிருந்தனான்" சிரிப்போடு சென்னவளைச் சந்தோஷமாகப் பார்த்தாள் கஸ்தூரி.

தியேட்டருக்குள் நுழைந்தபோது அதன் சூழல் அவளைப் பரவசப்படுத்தியது. தங்கள் இருக்கைகளை கண்டு அதில் அமர்ந்தார்கள். சுற்றிப் பார்த்தாள். ஒன்று இரண்டைத்தவிர அனைத்து இருக்கைகளும் நிரம்பியிருந்தது. ஆர்வத்தோடு காத்திருக்க அவளுக்குப் பிடித்த வரலாற்று நாவல் படமாக்கப்பட்டு பெரிய திரையில் காட்சிகளாக விரிந்து கொண்டிருந்தது. கண்களை அசைக்கமுடியவில்லை. படத்தோடு ஒன்றிப் போனாள். சுவாதி அவளைத் திரும்பிப் பார்த்தாள். படத்தின் வெளிச்சம் அவளின் கண்களில் மின்ன ஆர்வத்தோடு பார்ப்பவளைக் குழப்ப மனமின்றி தன் கண்களையும் படத்தில் ஓடவிட்டாள். அவள் மனம் சந்தோஷத்தில் நிறைந்திருந்தது. இவள் மாறவேயில்லை. வாழ்வில் எவ்வளவு கஷ்டங்களைக் கடந்து வந்திருப்பாள். ஆனாலும் அதே அன்பு, பாசம், குழந்தைத்தனம் அவளை விட்டுப் போக வில்லை. படம் முடிந்ததும் வெளியில் வந்தார்கள். பக்கத்திலுள்ள கன்ரீனில் போய் இரண்டு கப் தேனீரோடு அங்கிருந்த இருக்கை யில் அமர்ந்து பார்த்த படத்தை அலசத் தொடங்கினார்கள்.

மாலை நான்கு மணியாகி விட்டது. காரை ஐந்து அடுக்குமாடியுள்ள அந்தப் பெரிய விற்பனை நிலையத்துக்குமுன் நிறுத்தினாள் சுவாதி.

"இதுக்குள்ள போனால் உடுப்புகளோ பொருட்களோ என்ன வேணுமோ வாங்கலாம். சாப்பாடும் இருக்கும்"

"எனக்கு ஒண்டும் வேண்டாம் காலமை யிலயிருந்து செலவழிச்சுக் கொண்டிருக்கிறாய்"

"நிறைய சொப்பிங் செய்ய வேணும் பேசாமல் வா"

உள்ளே போனார்கள்.

"வாறமாதம் கடும்குளிர் தொடங்கிடும். நீ தாங்க மாட்டாய். அதுக்கு ஏற்ற உடுப்புகள் போடோணும். நந்தினிவேண்டித்தந்தாலும் நானும் வாங்கித்தாறன். இதைப் பார் இது உனக்கு அளவாய் இருக்கும். இதையும் எடு"

வேண்டாம் என்று மறுத்தாலும் விலை பாராமல் பிடித்த உடுப்புகளைத் தெரிவு செய்து பையை நிறைத்தாள். அடுத்த மாடிக்குப் போய் குளிருக்கேற்ற சப்பாத்தும் தோளில் தொங்கவிடும் கைப்பையும் வாங்கினாள். பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு கண்கள் முட்டியது.

சுவாதியோடிருந்த ஐந்து வருடங்களில் அவள் வீட்டுக்குப் போய் வரும்போது கஸ்தூ ரிக்கும் பார்சல் வரும். அதில் புது உடுப்புகளும் பொருட்களும் இருக்கும். வாங்குவதற்குத் தயக்கமாயிருக்கும். விடமாட்டாள்.

"நீயும் வீட்டிலயிருந்து சாப்பாடு, பல காரங்கள் கொண்டு வாறாய். வேண்டாம் எண்டு

சொல்லாமல்வாங்கிறனான்தானே நான் தாறதை நீயும் வாங்கத்தான் வேணும்”

அன்றுபோல் இன்றும் கேளாமலே பார்த்துப் பார்த்து செய்பவளின் மனதை நோகடிக்க முடியாமல் தவித்துக்கொண்டிருந்தாள் கஸ்தூரி. மறுத்து ஏதாவது சொன்னால் சிரிப்பும் கதையுமாக கலகலத்துக்கொண்டிருப்பவளின் முகம் வாடி விடுமே. அவளின் சந்தோஷம் குறையக் கூடாது. அன்று எப்படி சிறகடித்துப்பறந்து கொண்டிருந்தாளோ அப்படியே இன்றும் இருக்கிறாள் இருக்கவேண்டும். மனதார வேண்டிக்கொண்டாள்.

“படிக்கிறநேரம் இருந்தமாதிரியே இப்பவும் இருக்கிறாய். கொஸ்ரலில நீ செய்த குழப்படிகளை நினைச்சால் இப்ப சிரிப்பு வருகுது. மாங்காய் நெல்லிக்காய்க்கு கல்லெறிஞ்சு விழுத்துவாய். பிடிபட்டு முழங்காலில இருக்கவிட்டாலும் அடுத்தநாள் மரத்துக்குக்கீழ வந்து நிப்பாய். படுக்கிற நேரத்தில பாட்டுப் பாடப் போறன் எண்டுபெரிய குரலில பாடுவாய். பிடிச்சால் உனக்கு அடி விழுந்திடுமோ எண்டு நான்தான் பயந்து நடுங்குவன்எல்லாத்தையும் விட ஒருநாள் இரவு திடீரெண்டு நித்திரையிலிருந்து எழும்பி கள்ளன் எண்டு நீ கத்தப்பயந்துபோய் எல்லாரும் மேற்றனிட்ட ஓட இடிபட்டு எத்தனை பேருக்கு ரத்தக்காயம். கார் பிடிச்சுகொஸ்பிற்றலுக்குப் போனது நினைவிருக்கா. உனக்குக்கூட நாடியில காயம் வந்து தையல் போட்டதே துடிச்சுப்போயிட்டன்” காயத்தின் தழும்பைப் பார்த்தாள்.

“எப்பிடி மறக்கிறது. எனக்கு ஒண்டெண்டால் துடிச்சுப் போவியே. இப்பகூட ஏதாவது கஷ்டம் வந்தால் உன்ரநினைவு வந்திடும் மனதுக்கு ஆறுதலாய் இருக்கும்”

“உனக்கு என்னடி கஷ்டம் வரப்போகுது. நீ எப்பவும் மகாராணிதான்” அவளின் கை பிடித்து அழுத்தினாள்.

எட்டு மணியானதும் வாங்க வேண்டியதை வாங்கிக் கொண்டு இரவு உணவையும் முடித்துக் கொண்டு வீட்டுக்குவந்து கொண்டிருந்தார்கள்.

“விடிய ஆறு மணிக்கு வந்தம் இப்ப எட்டு மணியாச்சு. காணேலயெண்டு தேடப் போயினம்”

“பத்து மணிக்குள்ள வந்திடுவம் எண்டு நந்தினிக்குச் சொன்னனான். இண்டைக்கு உன்னோட இருந்த ஒவ்வொரு நிமிசமும் எனக்கு படிக்கிற காலங்களை ஞாபகப்படுத்திச்சு. அந்தநேரம் பொறுப்பு கவலை எதுவுமில்லை விளையாட்டுத்தனமாய் இருந்தம். இண்டைக்கு அதே உணர்வை அனுபவிக்கிறன். உனக்கு எப்பிடியிருந்தது”

”உன்னோட மனம் விட்டுக் கதைச்சு வாய் விட்டுச் சிரிச்ச சந்தோஷத்தில இருக்கிறன். ஒரு நாள் போனதுதெரியேல. உன்ர வீட்டையும் குடும்பத்தையும் பாக்கேலையே. போய் பாத்திட்டு வருவமா” கஸ்தூரி கேட்டுக் கொண்டிருந்தபோது நந்தினியின் வீட்டுக்கு முன்னால் கார் வந்து நின்றது.



**ஒரே வீட்டுக்குள்ள இருந்தாலும் எங்களுக்குள்ள பத்து வருசமாய் பேச்சுவார்த்தை இல்லையடி. பிள்ளைகளுக்காகத்தான் பொறுத்திருக்கிறன். ஆனால் பிள்ளைகளுக்கும் வளருமட்டும்தான் அம்மா நான் தேவையாயிருந்தன். இப்ப அப்பாவின்ர அதே குணமும் அலட்சியமும் என்னை நோக வைக்குதுகள். அவர் என்னை மதிச்சால்தானே பிள்ளையளும் மதிக்குங்கள்.**

நிதானமாகத் திரும்பி கஸ்தூரியைப் பார்த்தாள் சுவாதி. அவள் முகம் சந்தோஷத்தைத் தொலைத்து இறுகியிருந்தது.

“மனம் முழுக்க சந்தோஷம் எண்டாயே என்ர வீட்டுக்கு வந்திருந்தால் வேதனைதான் நிரம்பி வழிஞ்சிருக்கும். சிறகை ஒடிச்சு கூண்டுக்குள்ள வாழுற வாழ்க்கைதான் எனக்கு அமைஞ்சிருக்கு. நிறைய உழைக்கிறார் ஆனால் அன்பு பாசம் என்னெண்டு தெரியாது. அம்மா அப்பா இருந்த நேரம் ஊருக்குப் போக அவையளோட இருக்க ஆசைப்பட்டும் விடவேயில்லை. அவர் நினைச்சபடிதான் நான் இருக்கவேணும். எல்லாமே சுயநலம். ஒரே வீட்டுக்குள்ள இருந்தாலும் எங்களுக்குள்ள பத்து வருசமாய் பேச்சு வார்த்தை இல்லையடி. பிள்ளைகளுக்காகத்தான் பொறுத்திருக்கிறன். ஆனால் பிள்ளைகளுக்கும் வளருமட்டும்தான் அம்மா நான் தேவையாயிருந்தன். இப்ப அப்பாவின்ர அதே குணமும் அலட்சியமும் என்னை நோக வைக்குதுகள். அவர் என்னை மதிச்சால்தானே பிள்ளையளும் மதிக்குங்கள். எல்லாரோடையும் போராடித் தோத்துப் போனன். மகன்தனக்கு சுதந்திரம் வேணுமெண்டு விரும்பின பிள்ளையோட தனியப் போயிருக்கிறான். மகளை அப்பிடிவிடமுடியுமே. துணையைத் தெரிவு செய்திட்டாள். கலியாணத்தைப் பற்றிக் கேட்டால் தன்ர சுதந்திரத்தில தலையிடுகிறனாம் தோணும்போது செய்வாளாம். அவளின்ர கலியாணம் முடிஞ்சுதெண்டால் நான் நிம்மதியாய் இருப்பன். தனித் தீவில இருக்கிற மாதிரித்தான் அந்த வீட்டில இருக்கிறன். தைரியமாய்தான் இருக்கிறன். வேலைக்குப் போறன் வாறன். இப்பவெல்லாம் எனக்குப் பிடிச்சதைச் செய்யிறன். ஆனால் அன்பு.. அந்த அன்புக்கு ஏங்கிக் கொண்டிருந்த நேரம்தான் நீ வந்தாய். இந்த ஒரு நாள் நான் பழைய சுவாதியாய் மாறிட்டன். இப்பிடிக் கதைச்சு சிரிச்சு எவ்வளவு நாளாச்சுத் தெரியுமா. சரிடி நேரமாச்சு நந்தினி வாறாள் உள்ள போ. அடிக்கடி சந்திப்பம். பை பை”

வாங்கிய பொருட்களை அவளிடம் கொடுத்துவிட்டுச் சிரித்தபடி கை அசைத்து சென்றவளை இதயம் நொருங்க அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டே நின்றாள் கஸ்தூரி.

○○○

# உறவாடி விடு

மானிடா
மரணம் என்னும் தூது
உனை நோக்கி
வந்த பின்புதான்
நீ ஒருவன் இருக்கின்றாய் என்பதை
உணர்கின்றது உலகு.
மாண்டபின்
ஏன் வாழ்த்தப்படுகின்றாய்
இகழ்ந்து கொண்ட நீ
இன்று புகழ்ந்து கொள்கின்றாய்
இதுதான் மனிதப் பண்பா!
கரடு முரடான
உன்
இதயத்திலும்
கருணை எனும் பொக்கிஷம் உள்ளதா?
ஆயிரம் கேள்விகளை அடுக்க
உன் அருஞ்செயல் காரணமானது
பூட்டி வைத்த
உன் இதயத்தை திறந்து
நீ மானிடன் என்பதை காட்டி விட்டாய்
இருப்பினும்....
மாண்டவருக்கு தெரியுமா?
நீ அவர் மீது கொண்ட நேயம்
உடலில் உயிர் இருக்கும் போது
உறவாடி விடு
உன் பகைவராக இருந்தாலும்
சமமான உலகில்
நீ சமத்துவத்துடன் வாழ்ந்து காட்டு
சாதனை படைக்கா விட்டாலும்
நீயும் சாதனையாளனே!

**கு. யர்சினி**
(தமிழ்த் துறை - நான்காம் வருடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்)

# முஸ்லிம் தனியார் சட்டத்தின் தோற்றமும் வளர்ச்சியும்




**மு. ல. லத்பான் றோஸின்**
(3ஆம் வருடம் - அரசறிவியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)


உலக முஸ்லிம்களிடையே **ஷரீஆ சட்ட பிரயோகம்** இயல்பான ஒன்றாக ஆரம்ப காலம் முதல் இருந்து வருகின்றது. இது இஸ்லாமிய அடிப்படை மூலாதாரங்களான அல் குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் தனியார் சட்டம் என்ற சொற்பிரயோகம் ஐரோப்பியர்கள் முஸ்லிம் நாடுகளையும் மற்றும் ஆசிய, ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளையும் கைப்பற்றிய பின்னரே தோற்றம் பெற்ற ஒன்றாக வரலாறுகளில் கருதப்படுகிறது.

இதற்கு பிரதான காரணம் பொதுச் சட்டங்கள் மேலைத்தேயர்களால் உருவாக்கப்பட்டு பிரயோகிக்கப்படும் போது பல்லின நாடுகளில் காணப்பட்ட சமயரீதியான மரபுகளும், வழக்காறுகளும் குறிப்பாக முஸ்லிம்களின் அடிப்படை அலகான இஸ்லாமிய ஷரீஆ சட்டம் போன்றன தங்களுடைய பொதுச் சட்டங்களை வலிதற்றதாக்கும் என்ற அச்சம் இனங்களுக்கான தனியான ஏற்பாடுகளை ஐரோப்பியர்கள் ஏற்படுத்தினர்.

இதனடிப்படையில் இலங்கையிலும் காலத்திற்கு காலம் பல்வேறு தனியார் சட்ட வழிமுறைகளும் சீர்திருத்த முன்மொழிவுகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. அவை ஒவ்வொன்றும் தனித்தனிப் பிரிவினர்களின் கலாசார மரபுகளுக்கும் முக்கியத்துவம் அளித்திருந்தன. அதில் குறிப்பாக கண்டி சிங்களவர்களுக்கு கண்டியச் சட்டமும், யாழ்ப்பாணத் தமிழர்களுக்கென தேசவழமைச் சட்டமும் முஸ்லிம்களுக்கு அவர்களது தனி நபர் வாழ்க்கையை ஒழுங்கமைத்துக் கொள்ளும் அமைப்பில் இலங்கை முஸ்லிம் தனியார் சட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வாறு இன்று நாம் பின்பற்றி செல்லும் முஸ்லிம் தனியார் சட்டம் இலங்கையில் அறிமுகமாகி வளர்ச்சி கண்டதற்கு தனியான வரலாற்று படிமுறையொன்றும் கடின மனித உழைப்பும போராட்டமும் காணப்படுகிறது. (எம்.ஐ.எம்அமீன்.2008)

### சிங்கள மன்னர்களது காலம்

இலங்கை இந்து சமுத்திரத்தின் மையமாக இருந்ததால் இந்தியர், பாரசீகர், அரேபியர் போன்றவர்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் இந்து சமுத்திரத்தினூடாக வர்த்தக பயணம் செய்தனர். இதில் அரேபியரின் வர்த்தக பாதையின் மையத்தில் இலங்கை அமைந்திருந்தது.

இவ்வாறு இலங்கைக்கு தொடர்புபட்ட அரேபியர்களின் நன்னடத்தை, நேர்மை போன்றவற்றின் காரணமாக அவர்களின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஆதரவும் தங்களுடைய சமய, கலாசார விழுமியங்களை பேணவும் சிங்கள மன்னர்கள் அனுமதி வழங்கினர். இவ்வாறு வர்த்தகத்தை மையப்படுத்தி ஏற்படுத்தப்பட்ட தொடர்பு பிற்பட்ட காலங்களில் கலாசார ரீதியான தொடர்பாக மாறின. இதனால் அரபு தேசத்தில் காணப்பட்ட வைத்திய, விஞ்ஞான, அரபு மொழி நூல்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டன. அதில் 12ஆம் நூற்றாண்டில் ஷபிஈ மத்ஹப் பிரிவைச் சேர்ந்தவர்களால் உம்தா மற்றும் மஹல்லி எனும் அரபு நூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இதில் சொத்துரிமை, விவாகம், விவாகரத்து போன்ற பெரும்பாலான இஸ்லாமிய ஷரீஆ கட்டங்கள் பொதிந்திருந்ததாக ***சேர் அலெக் சாண்டர்*** தெளிவுபடுத்துகின்றார்.

அதேபோல் ***கலீபா உமர்*** (ரழி) அவர் களது காலப்பிரிவில் இலங்கையில் இஸ்லாம் பரப்பப்பட்டது அப்போது மிகச் சொற்ப தொகையினராக இருந்த முஸ்லிம்கள் படிப் படியாக அதிகரிக்க தொடங்கிய போது இஸ்லாமிய வழிமுறைகளை அவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்போதும் இஸ்லாமிய சட்டங் களை கற்று வருவதற்காக இருவர் மக்கா வுக்கு அனுப்பப்பட்டனர் அவர்களுள் ***அப்துர் ரஹ்மான் அபீ–ஹாதீம் அஸ்ஸீலானி*** என்பவரும் ***இஸ்மாயில் பின் முஸ்தபா கலம்பவி*** என்பவரும் குறித்து காட்டப்படுகின்றனர். இவர்களைப் போன்று இன்னும் சிலர் ஹஜ் கடமையை நிறைவேற்ற மக்கா சென்று வந்த போதும் பக்தாதுடன் தொடர்புபட்ட போதும் வியாபார நோக்கங்களுக்காக வெளி நாடுகளுக்கு சென்று வந்த போதும் தாம் அறிந்து கொண்ட இஸ்லாத்தின் போதனைகளை மக்களுக்கு போதித்தனர். இவ்வாறான செயற்பாடுகளால் முஸ்லிம்களுக்கான தனித்துவமான சட்டங் களும் ஒழுங்குகளும் இக்கால பகுதியில் முறையாக பேணப்பட்டதுடன் அதனை பின் பற்றி செல்வதற்காக பள்ளிவாயல்கள், மத்ரஸாகள் மற்றும் நீதிமன்றங்கள் என்ப வற்றை இந்த நாட்டில் நிறுவிக் கொள்வதற்கு எத்தகைய தடைகளும் காணப்படவில்லை. (எம்.ஜ.எம்அமீன்,2008)

## போர்த்துக்கேயர் காலம்

போர்த்துக்கேயர் கி.பி *1505*ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த போது முஸ்லிம்களை தங்களுக்கு சமய, கலாசார, பொருளாதார ரீதியாக எதிரிகளாக கருதினர். காரணம் அப்போது கொழும்பில் முஸ்லிம்கள் பெரும் பான்மையானோர் வாழ்ந்தனர், இலங்கை யின் வெளிநாட்டு வர்த்தகம் முஸ்லிம்களின் கைவசம் இருந்தது, அதேபோல் முஸ்லிம்கள் தங்களுக்கான மத்ரஸாக்கள் மஸ்ஜித்கள் இஸ்லாமிய சட்ட நீதிமன்றங்களை நிருவிக் கொண்டனர். இவ்வாறான நிலைகளை கண்டு ஆத்திரமடைந்து போர்த்துக்கேயர் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்களின் உயிர், உடைமைகளை சேதப்படுத்தி விரட்டி அடித்தனர். இதனால் முஸ்லிம்கள் பிற்பட்ட காலப்பகுதியில் நாட்டின் மத்திய பகுதிகளுக்கு குடியமரத் தொடங்கினர்.

போர்த்துக்கேயர் ஏற்படுத்திய சில தடை களினால் இலங்கை முஸ்லிம்கள் சர்வ தேச சமூக முஸ்லிம் சமூகத்துடன் இருந்த தொடர்பை துண்டித்து வாழ ஏற்பட்டது. இதனால் இஸ்லாமிய போதனைகளை கற்றுக் கொள்ளும் வாய்ப்பும் விழுமியங்களைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களும் முஸ்லிம்கள் இழந்தனர். அத்துடன் படிப் படியாக முஸ்லிம்கள் நிர்மாணித்து வைத் திருந்த மத்ரஸாக்களும், மஸ்ஜித்களும், சட்ட ரீதியாக உருவாக்கப்பட்ட நீதிமன்றங்களும் செயலிழக்கத் தொடங்கியமை இக்கால பகுதியில் முஸ்லிம்களுக்கான தனியான சட்ட ஏற்பாட்டில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது எனலாம். (அமீன். எம்.ஜ.எம். 2000).

## ஒல்லாந்தர் காலம்

கி.பி *1715* இலிருந்து *1785* வரை ஒல்லாந் தர்கள் இந்த நாட்டை ஆட்சி செய்தனர். இவர்கள் இலங்கைக்கு வந்தபோது சுதேச முஸ்லிம்கள் போத்துக்கேயர்களது நடவடிக் கைகளினால் தமது சமய நம்பிக்கைகள் அடிப் படையில் செயற்பட முடியாத ஒரு இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர்.

இவர்களது காலத்தின் இறுதிப் பகுதி யில் கவர்னராக பதவி ஏற்ற ***வில்லியம் போல்க்*** இலங்கையில் ஒரு சட்ட முறையை அறிமுகப்படுத்தும் நோக்கில் சில ஆய்வு களை மேற்கொண்டார். முஸ்லிம் சமூகம் தனித்துவமான ஒரு முறையில் வாழ்ந்து வருவது அவரால் அவதானிக்கப்பட்டது. அப்போது இஸ்லாமிய சட்டங்களை சில துறைகளில் பின் பற்றி வாழ முஸ்லிம்கள் அனுமதிக்கப்பட்ட போதிலும் சர்வதேச சமூகத்தோடு இருந்த தொடர்பு ஏற்கனவே அறுக்கப்பட்டிருந்ததனால் முழுமையான சட்டங்களை அவர்கள் அறிந்து வைத்திருக்கவில்லை.

அப்போது வில்லியம் போல்க் என்பவர் முஸ்லிம் சட்டம் தெரிந்தவர்கள் இலங்கை முஸ்லிம்களில் அரிதாக காணப்படுகின்றனர் என்றும் அவற்றை இங்கு அறிமுகப்படுத்துவது சிரமம் என்றும் சில சட்டங்களை தயாரித்து அனுப்புமாறு ஒல்லாந்து கவர்னரை கேட்டுக்

கொண்டார். அப்போது பதேவியாவிலிருந்து விவாகம், விவாகரத்து, சொத்துரிமை பற்றிய சட்டங்கள் தயாரித்து அனுப்பப்பட்டது. 102 சட்டப்பிரிவுகள் அதில் அடங்கியிருந்தன 1-63 வரை உள்ள பகுதி வாரிசுரிமைச் சட்டத்தையும் 64-102 வரை உள்ள பகுதி விவாகம், விவாகரத்து பற்றிய சட்டங்களையும் விளக்குவதாக அமைந்திருந்தன. முஸ்லிம்கள் மத்தியில் பிரச்சனைகள் தோன்றும் போது இச்சட்டத்தின்படி தீர்ப்பு வழங்க வேண்டும் எனவும் தீர்வு கிட்டாவிட்டால் டச்சு சட்டத்தின் கீழ் பிரச்சனைகள் தீர்க்கப்படவேண்டும் எனவும் கவர்னர் கட்டளையிட்டார். (எம்.ஐ.எம்அமீன்,2008)

முஸ்லிம் தனியார் சட்ட வளர்ச்சி வரலாற்றில் பதேவிய சட்டக்கோவை இலங்கை முஸ்லிம்களுக்கு அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட முதலாவது உத்தியோகபூர்வ தனியார் சட்ட ஏற்பாட்டுக் கோவையாக வரலாற்றில் அடையாளப்படுத்தப்படுகிறது.

**பிரித்தானியர் காலம்**

கி.பி. 1796இல் பிரித்தானியர் இலங்கையின் கரையோரங்களைக் கைப்பற்றிய வேளையில் ஒல்லாந்தர்கள் அறிமுகப்படுத்தியிருந்த சட்ட வழிமுறைகளுக்கு மதிப்பளித்தனர். கி.பி. 1801இல் ஒரு பிரகடனமொன்றைக் கொண்டு வந்த அவர்கள் அதன் எண்-32 விதியின் முலம் முஸ்லிம்களது மரபுச் சட்டங்களை அங்கீகரித்தனர். வில்லியம் பால்கின் பதேவிய ஆர்டிகல் தொடர்ந்தும் நடைமுறையில் இருந்தது. இதனை **முஹம்மதிய சோனகர் பற்றிய விசேட சட்டம்** என்ற பெயர் மாற்றத்தோடு அவர்கள் அமுல்படுத்தினர்.

கி.பி. 1805இல் சேனாதிபதி மெயிட்லனின் அறிவுறுத்தலின் பேரில் **ஸேர்—அலெக்ஸாண்டர் ஜோன்ஸன்** கொழும்பு முஸ்லிம்கள் பின்பற்றிய முஸ்லிம் சட்ட விதிகளைத் தொகுத்து முஸ்லிம் அறிஞர்களது பார்வைக்கு விட்ட போது இருபது பேர் அதில் ஒப்பமிட்டனர். 1806 ஆகஸ்ட் 5ஆம் திகதி இது பிரதம நீதியரசருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. சில திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்ட இச்சட்டக் கோவை **முஹம்மதியர்கள் விஷேட சட்டக் கோவை** எனும் பெயரில் அங்கீகரிக்கப்பட்டது. இது விவாகம், விவாகரத்து, சொத்துரிமை பற்றிய விதிகளைக் கொண்டிருந்தாலும் அவ்விடயங்களோடு தொடர்பான சகல சட்டங்களையும் தெளிவுபடுத்துவதாக இருக்கவில்லை. ஆரம்பத்தில் ஆங்கிலேயரது ஆட்சிக்குட்பட்டிருந்த பிரதேசங்களில் குறிப்பாக கொழும்பு மாவட்ட முஸ்லிம்களுக்கு மட்டுமே ஏற்புடையது என்று பிரகடனப்படுத்தப்பட்டிருந்து.

முஹம்மதிய விஷேட சட்டக் கோவை என அறிமுகப்படுத்தப்பட்ட இச் சட்ட ஏற்பாடு பல கோணங்களில் விமர்சிக்கப்பட்டது. முதலாவது வகையில் இதில் உள்ளடக்கப்பட்ட சில விடயங்கள் இஸ்லாமிய ஷரீஆ சட்டதிற்கு முரணாக காணப்படுகிறது என்ற கருத்து பரவலாக முன்வைக்கப்பட்டது.

உதாரணமாக:- இச் சட்டத் தொகுப்பின் 64ஆம் விதி ஒரு பெண்ணை மணமுடிக்க விரும்புபவர் அப்பெண்ணின் தாயினதும் தந்தையினதும் அனுமதிபெற வேண்டும் என்றும் 65ஆம், விதி பெற்றோர் இல்லாதவிடத்து உறவினர்களின் அனுமதி பெறவேண்டும் எனவும் குறிப்பிடுகிறது. ஆனால் இது ஷரீஆ கண்ணோட்டத்திற்கு தவறானது. ஏனெனில் தந்தை மட்டுமே ஒரு பெண்ணிற்கு வலிகாரர்.

இரண்டாவது வகையில் இச் சட்டத் தொகுப்பு கொழும்பு பிரதேச முஸ்லிம்களுக்கு மாத்திரம் பிரயோகிக்கப்படும் ஒன்றாக காணப்பட்டதுடன் முழு இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு பயன்படுத்திக கொள்ள எவ்வித அனுமதியும் அரசாங்கம் வழங்கவில்லை இதனால் கொழும்பை தவிர்த்து ஏனைய பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் இதனால் பாதிக்கப்பட்டனர்.

உதாரணமாக:- கண்டியைச் சேர்ந்த சின்ன உம்மா என்ற முஸ்லிம் பெண் கண்டியில் வழக்கிலிருந்த தீக என்ற சிங்கள மரபுப்படி விவாகம் செய்தார். பின்னர் தந்தையின் சொத்தில் உரித்து கோரினார். நீதிமன்றத்தில் அவர் கண்டியச் சிங்கள மரபின் படி விவாகம் புரிந்ததால் சொத்துரிமையில்லை என்று பிரதிவாதிகள் வாதிட சின்ன உம்மா முஸ்லிம் பெண் என்பதால் 1806இல் அறிமுகப்படுத்திய முஹம்மதிய விவாக வாரிசுரிமைச் சட்டப்படி சொத்து கிடைக்க வேண்டும் என்று வாதிகள் கோரினர். (எம்.ஐ.எம்அமீன்,2008)

இச்சட்ட ஏற்பாட்டில் காணப்பட்ட பிரச்சனைகளை முஸ்லிம்கள் தொடர்ச்சியாக அரசுக்கு எடுத்துக்காட்டி நிவாரணம் கோரினர். இதன் விளைவாக 1862ஆம் ஆண்டின் 5ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் 1806ஆம் ஆண்டின் முஹம்மதிய விவாக, விவாகரத்து, வாரிசுரிமைச் சட்டம் இலங்கை முழுவதற்கும் செல்லுபடியாகும் என அரசு பிரகடனப்படுத்தியது.

கண்டி சிங்களவர்களுக்கு **கண்டியச் சட்டமும்** யாழ்ப்பாணத் தமிழர்களுக்கென **தேசவழமைச் சட்டமும்** முஸ்லிம்களுக்கு அவர்களது தனிநபர் வாழ்க்கையை ஒழுங்கமைத்துக் கொள்ளும் அமைப்பில் **இலங்கை முஸ்லிம் தனியார் சட்டமும்** அறிமுகப்படுத்தப்பட்டன.

**கி.பி 1862 தொடக்கம் கி.பி 1954 ஆம் ஆண்டுவரை**

கி.பி. *1871இல்* காலி மாவட்ட நீதிபதியாக இருந்த ***கில்மன்***, *1806ஆம்* ஆண்டின் முஸ்லிம் விவாக சட்ட நியதிகளுக்கு வெளியேயும் ஒரு கணவன் விவாகரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தீர்ப்பு வழங்கினார். அத்துடன் *1806ஆம்* ஆண்டின் சட்ட விதி சமூகத் தேவையை நிறைவேற்றக் கூடியதாகவும் இல்லை என்றும் சுட்டிக்காட்டினார். இதனால் படித்த முஸ்லிம்கள் ***எம்.சி. அப்துற்றகுமானின்*** தலைமையில் கூடி லெப்பைமார்களின் ஊழலும் சட்டத்தின் குறைபாடுகளும் ஏற்படுத்தியுள்ள தீய விளைவுகள் பற்றி ஆராய்ந்து முஸ்லிம் விவாகச் சட்டத்தை திருத்துமாறு கி.பி. *1871இல்* கோரினர். இவர்களால் தூண்டப்பட்ட அப்போதைய சட்ட நிரூபண சபையில் உறுப்பினராக இருந்த, திரு. ***முத்துக்குமார சுவாமி*** *1806ஆம்* ஆண்டின் சட்டத்தைத் திருத்தக் கோரி ஒரு பிரேரணையை சட்ட நிரூபண சபையில் முன்வைத்தார். என்றாலும் குறித்த சட்டத் திருத்த முன்மொழிவை அரசு சமய விவகாரங்களில் தலையிடுகிறது என்ற குற்றச் சாட்டை ஏற்க விரும்பவில்லை என்பதை அடிப்படையாகக் கொண்டு மறுத்தது.

சட்ட திருத்த மசோதாவை அரசு ஏற்க மறுத்ததன் பின்னர் முஸ்லிம்களின் விவாகம் விவாகரத்து தொடர்பான ஊழல்கள் நீடித் தன. இதனால் சமூக விடயங்களில் அக்கறை கொண்டுள்ள படித்த முஸ்லிம் பிரமுகர்கள் சிலர் *1884* ஏப்ரல் மாதம் *05ஆம்* திகதி கண்டி மஸ்ஜிதில் கூடிக் கலந்துரையாடினர். விவாகங்களைப் பதிவு செய்வதற்கு அரசு கதீபுமார்களுக்கு அனுமதி கொடுக்கவேண்டும் என்றும் அவர்கள் பதிவு செய்த பதிவேட்டின் ஒரு பிரதியை கச்சேரிக்கு அல்லது பதிவாளர் நாயகத்துக்கு மாதாந்தம் அனுப்பவும் மறு பிரதியை கதீப் தன்னிடம் வைத்திருக்கவும் கூடியதான சட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று அக் கூட்டத்தில் தீர்மாணிக்கப்பட்டது. இதனை அரசின் கவனத்துக்கு எழுத்து மூலம் கொண்டு வரும் பொறுப்பு அக்கூட்டத்துக்கு சமூக மளித்திருந்த அறிஞர் ***சித்தி லெப்பை***யிடம் ஒப் படைக்கப்பட்டது. (எம்.ஐ.எம்அமீன்,2008)

இவ்வேண்டுகோளை ஏற்று அரசு முஸ்லிம் விவாகப் பதிவு பற்றிய சட்ட நகல் ஒன்றை *1886ஆம்* ஆண்டின் எட்டாவது சட்ட அலகாக ***முஹம்மதிய விவாகச் சட்டம்*** எனும் தலைப்பில் சட்ட நிருபண சபைக்கு சமர்ப்பித்தது. விவாகத்தைப் பதிவதற்கும் அதன் பிரதியில் ஒன்றைக் கச் சேரியில் பாதுகாப்பதற்கும், விவாகப் பதி வாளர் உரிய கச்சேரிக்கு அனுப்பாத போது பதிவாளரைத் தண்டிப்பதற்கும், இந்நகல் மசோதா இடம் அளித்தது. நீதிமன்றங்கள் இப்பதிவை மட்டுமே சாட்சியமாக ஏற்க வேண்டும் என்றும் கடுத்தம் உட்பட மற்றெந்தப் பதிவுகளையும் சாட்சியமாக ஏற்கக் கூடாது என்றும் இந்நகல் விதந்துரைத்துள்ளது. இப் பதிவை மட்டுமே விவாகத்தை நிறுவும் சாட்சியமாக நீதிமன்றங்கள் ஏற்க வேண்டும் என்ற நியதியை முஸ்லிம்களில் ஒரு சாரார் கடுமையாக எதிர்த்தனர். இவர்கள் சட்ட நிரூபண சபையின் அப்போதைய உறுப்பினராக இருந்த ***திரு.பொன்னம்பலம் இராமநாதனை*** சந்தித்து தம் கருத்தை எடுத்துரைத்தனர். அதனால் அவர் சட்ட நிரூபண சபையில் குறித்த மசோதாவின் விவாதத்தின் போது விவாகம் கட்டாயம் பதியப்பட வேண்டும் என்ற நியதியை நீக்கு மாறு கேட்டார்.

மேல் மாகாண அதிபர் (Govt. Agent) விவாகப்பதிவைக் கட்டாயப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார். குடியியல் தொடர்பான உடன்படிக்கை ஒன்றைப் பதிவதற்கு ஒழுங்கு செய்து, அது முறிந்து விடும் போது பதியாது விடுவது பெரும் குறைபாடாகும். குறிப்பாக பலதார மணம் அனுஷ்டிக்கும் சமூகத்தில் விவாகரத்தைப் பதியாது விடுவது பெரும் குறைபாடாகும் என்று சுட்டிக் காட்டி விவாகத்தை மட்டுமன்றி விவாகரத்தையும் பதிவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டார். இதற்கு ஆதரவாக பறங்கிய சமூகப் பிரதிநிதியும் கருத்துத் தெரிவித்தார். இரு தரப்புக் கருத்துக்களையும் அரசு செவி மடுத்ததாயினும் *1888ஆம்* ஆண்டின் இரண்டாம் இலக்க கட்டளைச் சட்டத்தின் மூலம் விவாகப் பதிவை நிர்ப்பந்திப்பதை விடுத்து அதனை

விருப்புக்குரியதாக்கியது. விவாகத்தை நிறுவ இப்பதிவு சிறந்த சான்று. ஆயினும், இது மாத்திரமே சான்றல்ல என்று திருத்தியது. இதனால் படித்த முஸ்லிம்களின் கட்டாய விவாகப்பதிவுக் கோரிக்கை உரிய பயனைத் தரவில்லை. எனினும், அரசு விவாகங்களைப் பதி வதற்கான பதிவாளர்களை நியமித்து அவர்களைப் பதிவாளர் நாயகத்தின் பரிபால னத்தின்கீழ் கொண்டுவந்தது. (எம்.ஐ.எம்அமீன்,2008)

விவாகப் பதிவை நிர்ப்பந்திப்பதை விடுத்து அதனை விருப்புக்குரியதாக மாற்றுவதற்கு முன்பிருந்தே விவாகங்களை லெப்பைமார் நடாத்தி வைப்பதும் விவாகரத்தை சமூக அங்கீகாரம் பெற்றவர் ஒருவர் வழங்குவதும் இலங்கையில் நீண்ட காலமாக மரபாக இருந்தது. எனினும் 1925இல் மாவட்ட நீதிமன்றம் மூலம் மட்டுமே பெண் ஒருவர் விவாகரத்தைக் கோரிப் பெறலாம் என்று சுப்ரிம் கோட் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. விவாகம் புரிந்த பெண்ணோ அவரது வலிகாரரோ விவாகரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நாட்டில் வழக்கில் இருந்த மரபு வழிச் சட்டத்தைப் பின்பற்றி காழியாக ஒருவரை நியமித்துக் தீர்ப்பை பெறுவது செல்லுபடியாகாது என்றும் சுப்ரிம் கோட் தீர்ப்பு வழங்கியது. இதனால் விவாகப்பதிவிலும், விவாகரத்தை அமுலாக்குவதிலும் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்தது. அரசு அப்போதைய பதில் சட்டமா அதிபர் M.T.**அக்பர்** தலைமையில் ஒன்பது பேர் கொண்ட ஒரு தெரிவுக் குழுவை நியமித்தது. இதில் N.H.M. **அப்துல் காதர்**, H.M. **மாகான் மாகார்**, T.P. **ஜாயா** எனும் மூன்று முஸ்லிம்களும் இடம் பெற்றிருந்தனர். முஸ்லிம்களின் விவாகம், விவாகரத்து, மரண சாசனம், உயில் எழுதி வைக்கப்படாத உடைமைகள், வாரிசுரிமை, அன்பளிப்பு, சமூக பயன்பாட்டுக்குரிய நம்பிக்கை நிதியம் போன்றன பற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு இக்குழு கேட்கப்பட்டது.

இக்குழு காழி நீதிமன்றம் ஒன்றையும் மேன்முறையீடு செய்வதற்காக (Board of Quazi) காழி சபை ஒன்றையும் நிறுவவும் விவாகப் பதிவையும் கட்டாயப்படுத்தவும் விதந்துரைத்தது. இக்குழுவின் சிபாரிசு 1929ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க அரச ஆணையின் மூலம் செயல் வடிவம் பெற்றது. 1930இல் அரசு மற்றொரு குழுவை திருவாளர் P.E. **பிரிஸ்** என்பவரது தலைமையில் நியமித்தது. இதன் விதந்துரைப்பின் அடியாக குறித்த நபர் சார்ந்துள்ள மத்ஹபின் நியதிகள் கருத்திற் கொள்ளப்பட்டு தீர்ப்புக்கள் வழங்கப் பட வேண்டும் என்ற சிந்தனையும் முன்வைக் கப்பட்டது. இக்குழுவின் விதந்துரைப்புகள் 1934ஆம் ஆண்டின் ஒன்பதாம் இலக்க கட்ட ளைச் சட்ட மூலம் அமுலாக்கபட்டது. அக்பர் குழுவின் சிபாரிசுகள் 1929இல் சட்ட வடிவம் கொடுக்கப்பட்ட போதும் 1937இல் தான் அமுல் செய்யப்பட்டது. இதனால் கட்டாய விவாகப் பதிவும் காழிநீதிமன்றங்களும் முதன் முதலில் 1937இல் தான் நடைமுறைப்படுத்தப்பட்டது.

1929ஆம் ஆண்டின் சட்டம் 1937இல் நடை முறைப்படுத்தப்பட்ட போதும் அதனை சுமுகமாக நடைமுறைப்படுத்த மேலும் சில திருத்தங்களை மேற்கொள்ள 1939இல் பதிவாளர் நாயகத்தின் தலைமையில் M.T. **அக்பர்**, T.B. **ஜாயா**, M.I.M. **ஹனிபா** ஆகிய மூவரையும் உள்ளடக்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழு சட்ட சீர்திருத்தங்களை விதந்துரைத்ததுடன் நடை முறைப்படுத்தும் விதிமுறைகளையம் விதந் துரைத்தது. இக்குழுவின் விதந்துரைப்புகளை மையமாக வைத்தே 1951ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக விவாகரத்து கட்டளைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1954ஆம் ஆண்டில்தான் 1951ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்துக் கட்டளைச் சட்டம் அமுலுக்கு வந்தது. இதுவே இன்றுவரை அமுலில் காணப்படும் முஸ்லிம் விவாகம் விவாகரத்து சட்ட ஏற்பாடாகும். இதற்கு பிற் பட்ட காலங்களில் இச்சட்ட ஏற்பாட்டிலிருந்து மாற்றங்களே தொடர்ச்சியாக கோரப்பட்டன.

முஸ்லிம் விவாகம், விவாகரத்து சட்ட ஏற்பாடு தொடர்பான திருத்த செயன்முறைகள் அல்குர்ஆன், ஸுன்னாவிற்கு உட்பட்டதாக நிகழும்போது அதனை ஏற்று நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை வாழ் ஒவ்வொரு முஸ்லிமும் பின்வாங்கமாட்டான் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

## 1951ஆம் சட்டத்தின்கீழ் பின்வருவன உள்ளடங்குகின்றன

**ஆள்சார் சட்டம்** *( Personal Law )*

1. திருமணம், பலதார மணம்
2. விவாகரத்து
3. பராமரிப்பு
4. பிரதி பலன்களை எதிர்பார்க்காத கொடைகள்
5. பருவமடைதல்
6. தத்தெடுத்தல் அல்லது மகவேற்பு
7. பிள்ளைகளது பாதுக்காப்பு
8. திருமணம் செய்யத் தடுக்கப்பட்டோர்
9. மஹரும் கைக் கூலியும்

**ஆதனம்சார் சட்டம்** *( Law of Property )*

1. உயில் எழுதாத சொத்து வாரிசுரிமை:
2. உயில் எழுதாது மரணிப்பவர் சார்ந்த மத்ஹப் சட்டத்தின் பிரகாரம் வாரிசுகள் சொத்துக்களைப் பெறுவர்.
3. பிறப்பின் மூலம் வாரிசுரிமை
4. வாரிசின் வகை
5. வக்பு அல்லது நம்பிக்கைப் பொறுப்பு

*(All Ceylon Jamiyyathul Ulama, 2022).*

இச்சட்டத்தின்படி காழி நீதிபதிகளையும் சாழிச் சபை (Board of Quazi) உறுப்பினர்களையும் உள்நாட்டமைச்சரே நியமித்தார். ஜைலாப்தீன் எதிர் தனினா உம்மா எனும் வழக்கின் போது காழி நீதிபதி ஒருவரை அமைச்சர் நியமனம் செய்வது நாட்டின் யாப்புச் சட்டத்திற்கு முரணானது என தீர்ப்பு வழங்கியதன் பின்னர் 1965ஆம் ஆண்டு 11 இலக்க கட்டளை சட்டத்தின் கீழ் நீதிச்சேவை ஆணைக்குழு காழி நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் பெற்றது.

இதன்படி காழி நீதிபதிகள் நீதிச்சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட போதும் காழி நீதிபதிகளின் பரிபாலனம் உள்நாட்டமைச்சின் பொறுப்பிலேயே தொடர்ந்து இருந்தது பல சிரமங்களை கொடுத்தது. இது தொடர்பான முறைப்பாடுகள் அப்போதையே ஜனாதிபதியாக இருந்து **சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க** அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதன் விளைவாக 2005.10.11ஆம் திகதி அரசாங்க வர்த்தமானி மூலம் காழி நீதிபதிகளின் பரிபாலனம் நீதி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.

## கி.பி 1954க்கு பிற்பட்ட காலம்

1956ஆம் ஆண்டு முஸ்லிம் தனியார் சட்டத்தின் கீழ் வக்பு தொடர்பான சட்ட முன்மொழிவுகள் முதன் முதலில் முன்வைக்கப்பட்டு வக்பு ஆணையாளர் வக்பு உதவி ஆணையாளர் போன்றோர் நியமிக்கப்பட்டனர்.

1965ஆம் ஆண்டு வக்பு சட்ட ஏற்பாடு பள்ளியை மாத்திரம் குறிக்காது சமய ரீதியான அனைத்து வகை வக்புகளும் ஏற்கப்பட வேண்டும் என சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டது.

1973ஆம் ஆண்டு விவாகம் விவாகரத்தில் ஏற்படுத்தப்பட வேண்டிய புதிய திருத்தங்கள் தொடர்பான முன்மொழிவுகளை H.M.Z **பாருக்** தலைமையிலான ஒரு குழு தெரிவு செய்யப்பட்டு அவர்களின் முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. இதில் குறிப்பிடப்பட்ட பிரதானமான சில விடயங்கள் பின்வருமாறு

- ஆண் 16 வயதுக்கும் பெண் 14 வயதுக்கும் குறைவாக திருமணம் செய்யக் கூடாது.
- 12 தொடக்கம் 14 வயதிற்கு இடைப்பட்ட சிறுமி திருமணம் செய்ய காதி அனுமதி பெற வேண்டும்.
- பெண்கள் நஷ்டஈடு பெறக்கூடிய மதா ஏற்பாடு கொண்டுவரப்பட வேண்டும்.

1982ஆம் ஆண்டு வக்பு சொத்துக்களை பராமரிப்பவர்களின் கடமைகள், நன்கொடை, பொறுப்புக்கள் தனியார் சட்டத்தில் கொண்டு வரப்பட வேண்டும் என்ற திருத்தம் முன்வைக்கப்பட்டதுடன் வக்பு நீதிமன்றங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற சட்டமும் கொண்டுவரப்பட்டது.

1992ஆம் ஆண்டு தனியார் சட்ட ஏற்பாட்டில் பல விடயங்களை உள்ளடக்கி புதிய மாற்றம் காலத்தின் தேவைக்கு ஏற்ப கொண்டு வரப்பட வேண்டும் என்ற நோக்கில் A.M.M ***சஹாப்தீன்*** தலைமையில் குழு நியமிக்கப்பட்டது. இதில் உலமா சபையின் உறுப்பினர்கள், பெண்கள் பிரதிநிதிகள், முஸ்லிம் அரசியல் தலைமைகள் போன்ற பல தரப்பினரும் கலந்து கொண்டு கருத்துக்கள் பரிமாறப்பட்டு 18 மாதங்களின் பின்னர் சில சீர்திருத்த முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. இதில முன் வைக்கப்பட்ட சில பிரதான முன்மொழிவுகள் (வீரகேசரி,2016)

- பலதார மணம் இறுக்கமாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.
- இலங்கை காதி சேவை திறமை, தகுதி அடிப்படையில் திருத்தப்பட வேண்டும்.

- பெண்களை காதிமார்களாக கருதப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் கொண்டு வரப்பட வேண்டும்
- தாபரிப்பு வழங்காத ஆணை சிறை பிடிக்க காழி நீதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.
- திருமணத்திற்கு முன் கணவனுடன் பெண் ஒப்பந்தம் செய்ய அனுமதி வழங்கப்பட வேண்டும்.

இந்த சீர்திருத்த முன்மொழி முன்வைக்கப்பட்டு மிக நீண்ட காலத்தின் பின்னர் 2009ஆம் ஆண்டு **மிலிந்த மொரகொட** நீதி அமைச்சராக இருந்தபோது சலீம் மஸ்ரூப் (ஓய்வு பெற்ற நீதி அரசர்) தலைமையில் 18 பேர் கொண்ட குழு நியமனம் செய்யப்பட்டு பரிந்துரைகளை முன்வைக்க அனுமதி வழங்கப்பட்டது. என்றாலும் இக்குழுவின் பரிந்துரைகள் மிக நீண்ட கால இடைவெளியின் பின்னர் 2018ஆம் ஆண்டு அறிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டது. துரதிரஷ்டவசமாக குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக குறித்த அறிக்கை இரண்டு அறிக்கைகளாக சமர்ப்பிக்கப்பட்டது. (வீரகேசரி,2016)

2018ஆம் ஆண்டிற்கு பிறகு முன்னால் நீதி அமைச்சர் ***அலி சப்ரி*** தலைமையில் ஒன்பது பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

- பலதாரமணம் மலேசியா நாடுகளில் காணப்படுகின்ற கடுமையான நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட வேண்டும்.
- குடும்ப சமரச கோர்ட் உருவாக்கப்பட வேண்டும்.
- குடும்ப சமரச ஆலோசனை சபை நியமிக்கப்பட வேண்டும்.
- திருமண வயது 18 ஆக அதிகரிக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டனர். முஸ்லிம் சமூகம் மத்தியில் பல கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தியதன் விளைவால் வாபஸ் பெறப்பட்டது.

தொடர்ச்சியாக இன்று பதவியில் உள்ள NPP அரசாங்கமானது முஸ்லிம் விவாகம் விவாகரத்து சட்ட ஏற்பாடுத் திருத்தம் தொடர்பான முன்வழிவுகளை முன் வைத்தாலும் அது முழுமையாக இலங்கை முஸ்லிம்களின் சமய தலைமைகள் மற்றும் சிவில் அமைப்புகளின் அனுமதியுடனே நடைபெறும் எனக் கூறிவருகிறது.

மேற்படி முஸ்லிம் தனியார் சட்டத்தின் வரலாற்று சுருக்கத்தை ஆராயும் போது முஸ்லிம் விவாகம் விவாகரத்து சட்ட ஏற்பாடு என்பது இன்று நேற்று தோன்றிய புதிய சட்டம் அல்ல. மாறாக இச்சட்ட ஏற்பாடு புராதன காலத்திலிருந்து முஸ்லிம்களின் தனித்துவத்தையும் அடையாளத்தையும் பேணும் ஒன்றாக பார்க்கப்பட்டு வந்துள்ளதுடன் அதனை ஒவ்வொரு காலகட்டத்திலும் அரச அங்கீகாரத்துடன் பெற்றுக் கொள்வதற்கு அக்காலங்களில் வாழ்ந்த முஸ்லிம் தலைமைகள் போராடியும் வந்துள்ளனர். அதேபோல் ஒவ்வொரு சீர்திருத்த முன்மொழிவுகளும் இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களான அல் குர்ஆன், ஸுன்னாவிற்கு அணுவளவும் முரண்படகூடாது என்ற தூரநோக்கும் ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழ்ந்த முஸ்லிம்களில் மனங்களில் பிரிக்க முடியாதவொன்றாக இருந்து வந்துள்ளது என்பது அடையாளப்படுத்த வேண்டிய விடயமாகும். எனவே இஸ்லாமிய ஷரீஆ நெகிழும் நெகிழாத்தன்மையுடையது என்ற வகையில் முஸ்லிம் விவாகம், விவாகரத்து சட்ட ஏற்பாடு தொடர்பான திருத்த செயன்முறைகள் அல்குர்ஆன், ஸுன்னாவிற்கு உட்பட்டதாக நிகழும் போது அதனை ஏற்று நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை வாழ் ஒவ்வொரு முஸ்லிமும் பின்வாங்கமாட்டான் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

## உசாத்துணைகள்


*1. All Ceylon Jamiyyathul Ulama, (2022). Proposal for the Muslim Marriage Divorce Act Sri Lanka.*

*2. Government of Ceylon. (2006). Muslim Marriage and Divorce Act Government Publication Burau. Department of Government Printing: Colombo.*

*3. Jalaldeen M.S. (1990). The Muslim Law of Marriage Divorce and Maintenance in Sri Lanka*

*4. Federation of Assemblies of Muslim Youth in Sri Lanka. Colombo: A Famys Publication Sri Lanka.*

*5. Qureishi. M.A. (2020). 6th Edition. Textbook on Muslim Law. Central Law Publications: Allahabad.*

6. அமீன். எம்.ஐ.எம். (2008). இஸ்லாமியக் குடும்ப வாழ்வு, அல்ஹஸனாத் பதிப்பகம்: ஹெம்மாதகம.

7. அமீன். எம்.ஐ.எம். (2000). இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும் (1870-1915). அல்ஹஸனாத் பதிப்பகம் ஹெம்மாதகம.

8. பத்மநாதன். சி. (2001). இலங்கைத் தமிழரின் தேச வழமைகளும் சமூக வழமைகளும், குமரன் புத்தக இல்லம்: கொழும்பு.

9. மன்சூர். எம்.ஏ.எம். (2017). முஸ்லிம் தனியார் சட்டம் சில அவதானங்கள். அல்குர்ஆன் திறந்த கல்லூரி, கண்டி.

சிறுகதை



# மறந்து போகுமா?

**ம**லர்களின் வாசம் நெஞ்சைத் தொட்டது. அதிகாலை வேளையில் சூரிய உதயத்தை பார்த்துக்கொண்டு பூந் தோட்டத்தில் துவாரகன் உலாவிக்கொண்டு இருந் தான். மல்லிகை மலர்களின் வாசனை அவனது மனதைக் கவர்ந்தது. அவனது மனதில் அவனது நேசத்திற்குரியவளின் நினைவுகளும் மலர்ந்தன. மறுகணம் அவனது மனதில் கேள்விக் குறியொன்று தோன்றி அவனுக்குள்ளே பேசவைத்தது. “அடே, நான் அவளைக் காணும்பொழுது அவளது நிறத்தையும், அவளது முக வசீகரத்தையும் கண்டு ஏங்குகிறேன். இதனால் எனது மனம் அவளைக் கவர்ந்து விட்டது. நான் அவளை எனது நேசத்திற்குரியவள் என நினைக்கிறேன். ஆனால் அவள் என்னை விரும்புவாளா? என்னடா முட்டாள் நினைவாக இருக்கிறது. எப்படி அவளது மனதை அறிந்து கொள்வது. சிலநேரம் அவள் வேறு யாரையாவது விரும்புகிறாளோ தெரியவில்லையே? அதுதான் அவள் நான் பார்க்கும்போது வேறு பக்கமாக திரும்பிக் கொண்டாளோ? இப்ப என்னடா செய்வது? எப்படி அவளது மனதை அறிந்து கொள்வது?” துவார கனின் நினைவுகள் அலைகடல் போல் பாய்ந்து அவனது மனதை அலைக்கழித்தது.



ஆ. மோகனசுந்தரம்
(குப்பிளான்)

துவாரகன் குன்றூரில் வசிப் பவன். அவனது தந்தை தனி யார் துறையில் ஓர் ஆசிரியர். தந்தை சுகுமார் தனது ஆசிரியத்

தொழில் மூலம் அக்காலத்தில் மிகக் குறைந்த சம்பளமாக மாதம் நானூறு ரூபா பெற்றுவந்தார். தந்தை சுகுமார் குன்றூரி லிருந்து இருநூறு மைல்களுக்கு அப்பாலிருந்த கரூர் என்ற பிரதேசத்திலேயே ஆசிரியராக பணியாற்றினார். தவணை விடுமுறைக் காலங் களிலேயே குன்றூருக்கு வருவார். அவர் தனது செலவுகளுக்காக இருநூறு ரூபாவை வைத்துக்கொண்டு மிகுதியை வீட்டுக்கு அனுப்புவார். தாயும் மூன்று பிள்ளைகளும் இருநூறு ரூபாவிலேயே தமது செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. தாய் மருதாயி வீட்டுவேலைகளை மட்டும் செய்யும் மனைவி யாக இருந்தார்.

துவாரகன் வீட்டில் மூத்த மகனாக இருந் தான். மருதாயி தனது தாயின் துணையுடன் குடும்பத்தை பராமரித்து வந்தார். துவாரகனுக்கு ஒரு தம்பியும், தங்கை ஒருவரும் இருந்தனர். துவாரகன் தற்போது பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வருகிறான். அவனது தம்பி உயர்தர வகுப்பிலும், தங்கை சாதாரணதர வகுப்பிலும் கல்வி கற்கின்றனர். மருதாயிக்கு வீட்டுச் செலவுகளை சமாளிக்க முடியவில்லை. அதனால் அயலில் வசித்த உறவினர் ஒரு வரிடம் கடன் வாங்கி வீட்டுச் செலவை சமாளித்து வந்தாள். குறித்த உறவினரும் தமது வீட்டுக்கு அண்மையில் இருந்த மருதாயியின் பனங்காணியை ஏமாற்றி வாங்குவதற்காக தாராளமாக கடன் வழங்கினார். இதனை விளங்கிக்கொள்ளாது மருதாயி தொடர்ந்து கடன்பெற்று கடன் பொறியில் சிக்கிக் கொண்டார்.

துவாரகனின் அம்மா சிறுவயதில் இருந்தே அவனுக்கு குடும்பத்தின் கஷ்ட நிலைமையையும், அதிலிருந்து மீள்வதற்கு தான்படும் சிரமத்தையும் கூறிவந்தார். இது துவாரகன் நெஞ்சில் ஆழப் பதிந்து இருந்தது. தாய் மருதாயி துவாரகன் மீது அளவிடமுடியாத பாசம் வைத்திருந்தாள். இதனால் துவாரகன் தாய்மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தான். அம்மாவிற்காக தான் எத னையும் தியாகம் செய்யவேண்டுமென்ற எண்ணத்தையும் வளர்த்திருந்தான். எனினும் பருவவயதை அடைந்த பின்னர் காதல் உணர்வுகள் அவனது மனதை வாட்டி வதைத்து வந்தது.

துவாரகன் பொது நிறத்தையும், கவர்ச்சி அற்ற முக அமைப்பினையும் கொண்டிருந்தான். சிறு வயதில் இருந்தே அவனது விளையாட்டு நண்பர்களிலும், பாடசாலை நண்பர்களிலும் பார்க்க அழகு குறைந்தவனாய் இருந்தான். தன்னை அலங்கரிப்பதற்காக கண்ணாடியைப் பயன்படுத்தும் போது தாழ்வுச் சிக்கலால் தன்னையே தான் வெறுத்தான். ஏனெனில் கண்ணாடியில் தெரிந்த அவனது உருவத்தை அவனது மனம் மற்றவர்கள் உடன் ஒப்பிட்டுப் பார்த்தது. அப்போது அவனது எண்ணங்கள் "என்னுடைய தோலின் நிறம் என்னடா? ஒரு சொட்டு வெள்ளைகூட இல்லை.எனக்குப் பார்க்கவே அருவருப்பாக இருக்குது.எனது நண்பர்களின் தோல் எவ்வளவு வெள்ளை யாகவும், சிவப்பாகவும் இருக்குது.ஒவ்வொருவர தும் முகம் எப்பிடி பரந்தும் வட்டமாகவும் இருக்குது. கடவுள் ஏன்தான் என்னை இப்பிடி படைத்தானோ தெரியவில்லை" என்றவாறு ஏங்கியது.

துவாரகனின் மனம் எப்போதும் இவ்வாறு தான் குழம்பிப்போய் இருக்கும். சிறு வயதி லிருந்தே அவனது வீட்டாரும் அயலில் இருந்த உறவினர்களும் அவனது அழகின் மையை விளையாட்டாகப் பரிகாசம் செய்வர். இது அவனது ஆழ்மனதில் ஆழப் பதிந்து விட்டது. இதனால் அவனுடன் படித்த, அவன் பழகவேண்டி வந்த பெண்கள்மீது அவனுக்கு காதலுணர்வுகள் இருந்தாலும், அவர்கள் தன்னை விரும்பமாட்டார்கள் என்ற எதிர்மறை எண்ணத்தை கொண்டிருந்தான். இது நாளடைவில் பெண்களின் மீது அவனுக்கு விரக்தியை ஏற்படுத்தியது. இதனால் படிப்பு ஓடாத, உடலுழைப்பு மூலம் வருமானம் பெற்ற நண்பர்களுடன் சேர்ந்து மதுப்பழக் கத்திற்கு அடிமையானான்.எனினும் துவாரகன் பல்கலைக்கழகத்திற்கு செல்லும் வரையும் நண்பர்களுடன் சேரவில்லை. அவனது மனம் பெண்கள் தொடர்பிலும், தன்னுடைய அழகின் மீதும் குழம்பிக்கொண்டு இருந்த போதும் அவன் தனது கல்வியில் முழுமை யான கவனத்தை செலுத்தினான்.அதனால் முதலாவது முறையிலேயே அவனால் பல்கலைக்கழகத்திற்கு நுழைய முடிந்தது.

பல்கலைக்கழகத்தில் பல பெண்களுடன் நட்பாக பழகினான். ஆயினும் அவனது மனதில் ஆழப் பதிந்து இருந்த பெண்களை பற்றிய அபிப்பிராயத்தினால், எந்த பெண்ணையும் காதலிக்க வேண்டுமென அவனது மனம் விரும்பவில்லை. பல்கலைக்கழகத்தில் அவன் வெளிப்படையாகவே ஒரு மகிழ்ச்சியான ஜாலியான வாழ்க்கையை அனுபவித்தான். இதற்காக அவன் பல்கலைக்கழக பரீட்சை களில் தோல்வியடையவில்லை. பகுதி பகுதி யாக நடைபெற்ற பரீட்சைகளில் சிறந்த பெறு பேற்றைப் பெற்றுக் கொண்டான். அவனது பல்கலைக்கழக காலப்பகுதி பெண்கள் மீதான காதல் எண்ணங்கள் இல்லாது மகிழ்ச்சியாக கழிந்தது.

துவாரகனுக்கு பல்கலைக்கழக காலத்தின் போது அரசாங்கத்திடம் இருந்து கடன் கிடைத்ததால் பணப் பிரச்சனைகள் ஏற்பட வில்லை. பல்கலைக்கழக கல்வி முடிவடைந்த வுடன் அவனுக்கு நிரந்தரமான வேலை கிடைக்கவில்லை. அதேநேரம் தனியார் கல்வி நிலையங்களில் கற்பிப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. அதன் மூலம் கிடைத்த வருவாயில் ஒருபகுதியை தாயிடம் கொடுத்தான். வறுமை யில் இருந்த பெற்றோர் இதனால் மகிழ்ச்சி அடைந்தனர். மிகுதியை தனது செலவுகளுக்காக பயன்படுத்தினான். துவாரகன் வாழ்க்கை துடிப்பு மிக்கதாக நகர்ந்து சென்றது.

இந்நிலையில் துவாரகன் ஒருநாள் குன்றூ ரில் உள்ள தனியார் கல்வி நிலையமொன்றில் வகுப்பு எடுத்துக்கொண்டு இருந்தான். அப்போது அவனது பல்கலைக்கழக நண்பியான கனிஷ்ட மாணவி ஒருத்தியான கமலினி துவாரகனிடம் வந்தாள். “சேர் எனக்கு பைனல் இயர் நோட்ஸ் வேணும். தருவீங்களா?” என்று கேட்டாள்.

துவாரகன் “ஓ.கே. நான் நாளைக்கு இதே நேரம் கிளாஸ்க்கு வருவேன். அப்போது கொண்டுவந்து தருகிறேன்.” என்று கூறினான். அவ்வாறே அடுத்த நாள் கொண்டுவந்து கொடுத்தான். இதேபோல் பலமுறை கமலினி வந்து நோட்ஸ் வாங்கினாள். சிலசமயங்களில் துவாரகன் கமலினியின் வீட்டுக்கே கொண்டு சென்று கொடுத்தான். இவ்வாறு இருவருக்கும் இடையிலான நட்பு நீண்ட நாட்களாக தொடர்ந்தது. ஒருமுறை துவாரகன் அரச அலுவலகத்தில் அதிகாரி மட்டத்திலான பதவி யொன்றுக்கு விண்ணப்பம் செய்தான். பின்னர் அவ்விண்ணப்பப் படிவத்தை கமலினியிடமும் கொண்டுவந்து கொடுத்தான். பின்னர் நடந்த நேர்முகப் பரீட்சைக்கு துவாரகனுக்கு செல்ல முடியவில்லை. கமலினி அதில் பங்குபற்றி குறித்த பதவியை பெற்றுக்கொண்டாள்.

துவாரகனுக்கும் கமலினிக்கும் இடையிலான தொடர்பு மூன்று வருடங்களாக தொடர்ந்து சென்றது. இப்போது துவாரகனின் மனதில் கமலினியை திருமணம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் தோன்றியிருந்தது. கமலினி மீது உண்மையான அன்பு செலுத்தினான். ஆனாலும் கமலினி மீதான தனது காதலை வெளிப்படுத்த முடியாதிருந்தான். ஏனெனில் தான் மது அருந்தும் பழக்கம் கொண்டிருந்ததால், கமலினி தன்னை ஏற்றுகொள்வாளோ எனும் தாழ்வுச் சிக்கலை கொண்டிருந்தான்.

கமலினி தொடர்ந்து அன்பாக பழகினாலும் துவாரகனை காதலிப்பதாக கூறவில்லை. துவாரகனால் கமலினியின் எண்ணத்தை அறிந்து கொள்ள முடியவில்லை. இதேவேளை பல பெற்றோர்கள் துவாரகனுக்கு தமது பெண்ணை திருமணம் செய்து வைப்பதற்காக துவாரகனின் பெற்றோரை வற்புறுத்தி வந்தனர். பெற்றோர் துவாரகனை கேட்டபோது, துவாரகன் கமலினியின் முடிவு தெரியாததால் அதனை பிற்போட்டு வந்தான். கமலினியை அவனால் வெறுக்கவும் முடியவில்லை. மறக்கவும் முடியவில்லை.அவனது மனம் தனக்குள்தானே குழம்பிப் போய் சிந்தனையில் ஈடுபட்டது.

“கடவுள் ஏன்தான் எனக்கு கமலினியுடன் தொடர்பை ஏற்படுத்தினார். எனது மனம் பெண்கள்மீது ஆசைப்பட்டு ஆசைப்பட்டு சிறுவயது முதலே ஏங்கியது. பின்னர் அது வெறுப்பாக மாறி பெண்கள்மீது அன்பு கொண்டு காதலிப்பதையே வெறுத்திருந்தேன். ஏன்தான் இறைவன் என்னை இப்படி சோதிக் கிறாரோ தெரியவில்லை.”

துவாரகன் ஒரு முடிவுக்கு வந்தான். கமலினியிடம் இருந்து அவளது வாய் மூல மாகவே அவளது விருப்பத்தை அறிந்து கொள்வதென தீர்மானித்தான். ஆனால் சாதாரண நிலையில் அவளிடம் கேட்பதற்கு துணிவு வரவில்லை. எனவே ஒருநாள் சிறிது



**எனது மனம் பெண்கள்மீது ஆசைப்பட்டு ஆசைப்பட்டு சிறுவயது முதலே ஏங்கியது. பின்னர் அது வெறுப்பாக மாறி பெண்கள்மீது அன்பு கொண்டு காதலிப்பதையே வெறுத்திருந்தேன். ஏன்தான் இறைவன் என்னை இப்படி சோதிக்கிறாரோ தெரியவில்லை.**

மது அருந்திவிட்டு கமலினியை சந்திப்பதற்காக சென்றான். அப்போது அவனது மனம் என்ன நினைத்ததோ தெரியவில்லை துவாரகன் கமலினியின் வீட்டுக்கு அண்மையில் இருந்த மதீன் என்ற நண்பனின் வீட்டுக்கு சென்றான்

துவாரகன், "மதீன், நீ எப்படி இருக்கிறாய். நீ எனக்கு ஒரு உதவி செய்கிறாயா? உனக்கு தெரியும் தானே கமலினியை. அவள் என்னுடைய பல்கலைக்கழக நண்பி ஒருத்தி. அவளுடன் நான் கொஞ்சம் கதைக்க வேண்டும். நீயும் வருகிறாயா?" என்று கேட்டான்.

மதீன், "சரியடா எனக்கு வேலை ஒன்றும் இல்லை. நானும் உன்னுடன் வருகிறேன்" என்றான்.

துவாரகன், "மச்சான் நீ அங்கை வந்து யோக் ஒன்றும் சொல்ல வேண்டாம்.நான் சீரியஸா கதைக்கப் போகிறேன்." என்றான்.

இருவரும் கமலினியின் வீட்டுக்கு சென்ற போது, கமலினியும் அவளது சகோதரிகளும் அங்கு இருந்தனர். கமலினி இருவரையும் வரவேற்று உபசரித்தாள். எல்லோரும் பல்வேறு கதைகளை கதைத்தனர்.

துவாரகன் ஒரு சந்தர்ப்பத்தில் கமலினியிடம் "நான் குழம்பிப் போய் இருக்கிறேன். எங்களது விசயம் என்ன மாதிரி" என்று கேட்டான்.

கமலினி "என்ன கேட்கிறீங்கள்" என்று உரத்த சத்தத்தில்கேட்டாள்.

துவாரகனுக்கு மிகுந்த அவமானமாகப் போய்விட்டது. அவன் அப்போதே கமலினியை மறந்து விடுவது என தீர்மானித்தான். ஆனால் அவனால் தனது மரணம்வரை கமலினியை மறக்க முடியாது போகும் என்பதை அவன் அன்று உணர முடியவில்லை.

இதன் பின்னர் துவாரகன் மதீனுடன் கமலினியின் வீட்டிலிருந்து வெளியேறினான். மதீனுக்கு உண்மையான விபரங்களை சொல்லாது சமாளித்தான். பின்னர் துவாரகனின் எண்ணங்கள் அலைமோதியது.

"நான் என்ன மனிசன். எனது வயது முப்பது. இவ்வளவு காலமும் எவ்வளவு அனுபவங்களை பெற்றிருக்கிறேன். ஆனால் என்னாலை கமலினி தொடர்பாக சரியான முடிவொன்றை எடுக்க முடியவில்லை. மூன்று வருடமாக அவள் எவ்வளவு அன்பாக பழகினாள். அவளிடமிருந்து ஒரு தெளிவான முடிவைப் பெற முடியவில்லை. அவளுடைய பேச்சு, சிரிப்பு, அன்பு இவற்றால் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருந்தேன். அவள் தான் எனது வருங்கால மனைவி என்று நம்பியிருந்தேன். எல்லாமே தவிடுபொடியாக போய்விட்டதே. கமலினியின் நினைவுகள் மறந்து போகுமா? என்னால் நிம்மதியாக வாழ முடியுமா? கமலினியை மறந்து பெற்றோர் பேசுகின்ற திருமணத்தை செய்து நிம்மதியாக வாழ முடியுமா?"

துவாரகன் வீடு சென்ற பின்னர் ஒரு முடிவுக்கு வந்தான். தான் பாசம் வைத்துள்ள, தன்மீது பாசம் வைத்துள்ள அம்மாவின் ஆசையை திருப்திப்படுத்துவதற்காக பெற்றோர் பேசும் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தான். தாய் மருதாயி மிகுந்த சந்தோசமடைந்தார்.

இதன் பின்னர் பெற்றோர்கள் தெரிவு செய்த தேவகி என்ற பெண்ணுக்கும் துவாரகனுக்கும் திருமணம் நடைபெற்றது. தேவகி

அழகும், செல்வமும் நிறைந்த ஒரு பெண். அதனால் இயல்பாகவே அவளிடம் கர்வம் குடிகொண்டிருந்தது. ஜாதகம் பார்க்கும் நிபுணர் களின் திறமையினால் இருவருக்கும் இடை யிலான உச்சப் பொருத்தம் கண்டுபிடிக்கப்பட்டு திருமணம் நிறைவேறியது. கிட்டத்தட்ட ஒரு வருடமும் சில மாதங்களும் அமைதியும், மகிழ்ச்சியுமாக ஓடியது.ஒரு மகனும் பிறந்தான். அதன்பின் இருவருக்கும் இடையில் வாழ்க்கைப் போராட்டம் ஆரம்பமானது.

தேவகி பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து துவாரகனை கையாலாகாதவன் என நாளாந்தம் தூற்றினாள். துவாரகனும் பதிலடியாக தேவகி மீது பல்வேறு குற்றங்களை சுமத்தி ஏசுவான். இவ்வாறு நடைபெற்ற வாய்ச்சண்டை சிறிது காலத்தில் கைச் சண்டை யாக மாறியது. துவாரகன் நிம்மதி இழந்து மதுவிடம் சரணடைந்தான்.சில நாட்கள் வீட்டுக்கு வருவதில்லை. இவ்வாறு சில நாட்கள் பல நாட்களாகி, பின் பல மாதங்களாகி, பின் பல வருடங்களாகியது.

தேவகி ஐந்து வருடங்களின் பின் பெற் றோரின் உதவியுடன் நீதிமன்றத்தின் மூல மாக விவாகரத்தினை பெற்றுக்கொண்டாள். தேவகியின் பெற்றோர்கள் அவளுக்கு மறு திருமணம் செய்து வைத்தனர். இதன்மூலம் தேவகி புது வாழ்வு பெற்றாள்.

துவாரகன் தேவகியின் விவாகரத்தினால் சஞ்சலமடையவில்லை. துவாரகனின் மனதில் எப்போதும் கமலினியே நிறைந்திருந்தாள். தேவகியின் பேச்சுக்கள், செயல்களை கமலினியுடன் வைத்து ஒப்பிட்டுப் பார்ப் பான். கமலினி இப்படி பேசுவாளா? இப்படி செய்வாளா? என்று சிந்திப்பான். இந்த நிலையில் அவன் கமலினியின் எண்ணங்களுடனே வாழ்ந்து வந்தான். அவனது 55 வயதுவரை கமலினி பற்றிய தகவல்கள் அவனுக்கு கிடைக்கவில்லை. அதன்பின் நண்பன் ஒரு வனின் மூலமாக அவளைப் பற்றிய தகவலை பெற்றுக்கொண்டான்.

இதன்படி சீதனம் கேட்கவில்லை என்பதற்காக வெளிநாட்டில் வேலை செய்துவிட்டு வந்த ஒருவரை திருமணம் செய்துகொண்டாள். கமலினி அரச திணைக்களமொன்றில் உயர் அதிகாரியாக பணியாற்றி வந்தாள். அவள் இடமாற்றம்பெற்று சென்றபோதெல்லாம் கணவன் ராகவனும் அவளுடன் சென்று வசித்து வந்தான். அவர்களுக்கு பிள்ளைகள் கிடைக்கவில்லை. கமலினி தனது பதவி காரணமாக பல ஆண்களுடன் தொடர்பு கொள்ள வேண்டி இருந்தது. இது ராகவனுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. இதனால் ஒன்பது வருட வாழ்க்கையின் பின்னர் ராகவன் கமலினியை விட்டு பிரிந்து சென்றான். இப்பொழுது கமலினி தனியாகவே வசித்து வருகிறாள்.

இத்த கவலை அறிந்த பின்னர் துவாரகன் மிகுந்த கவலை அடைந்தான். இச் சமயத்தில் துவாரகன் தனியார் துறையில் வகித்து வந்த உயர் பதவியில் இருந்து ஓய்வுபெற்று இருந்தான். எனவே உடனடியாக கமலினியை சந்திப்பதற்காக அவளுடைய வதிவிடத்திற்கு சென்றான். அங்கு இருவரும் மனம்விட்டு தமது துயரங்களை பகிர்ந்து கொண்டனர். தமது எதிர்காலத்தை பற்றியும் பேசினர். இதற்கமைய கமலினி நீதிமன்றத்தின் மூலமாக விவாகரத்தினை பெற்றாள். பின்னர் இருவரும் பதிவு திருமணம் செய்து கொண்டனர்.

இவர்கள் இருவரும் பதினைந்து வருடங் களாக தேனும் பாலும் போல இணைந்து மகிழ்ச்சியாக ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு விட்டுக்கொடுப்புகளுடன் உன்னத வாழ்க்கை வாழ்ந்தனர்.

ஒருநாள் இருவரும் மதிய உணவுக்கு பின் கதிரையிலிருந்து கதைத்துக்கொண்டு இருந்த னர். அப்போது கமலினி தனக்கு நெஞ்சு வலிக்குது என துவாரகனிடம் கூறிக்கொண்டு கதிரைமீது சாய்ந்தாள். பதட்டத்துடன் எழுந்த துவாரகன் உடனடியாக குடும்ப டாக்டருக்கு அழைப்பு விடுத்தான். விரைந்து வந்த டாக்டர் கமலினியை பரிசோதித்தபின் எல்லாம் முடிந்து விட்டது என்றார். அப்போது துவாரகன் “அன்பே கமலினி என்னை விட்டு போக துணிந்தாயா?” என்று பலத்த சத்தமிட்டான். அதுவே அவனது இறுதி வார்த்தை. அப்போதே அவனது உடல் அடியுண்ட மரம்போல் சரிந்து விழுந்தது.

(யாவும் கற்பனையே)

❍❍❍

சிறுகதை





வெல்லாவெளி விவேகானந்தம்

# தண்டனை

பேராதனைப் பல்கலைக்கழகம் வந்து அனுசூயா ஆறு மாதங்கள்தான் ஆகி இருந்தன. அவளது காதலன் சீனியர் திலகனுக்குக் கிடைத்த தண்டனை அவளுக்கும் ஒரு தண்டனையாய் அமைந்து விடும் என அவள் கனவில் கூட எதிர்பார்த்திருக்கமாட்டாள்.

அனுசூயா பேராதனைப் பல்கலைக் கழகம் வந்து அப்போது ஒருமாதம் கூட ஆகவில்லை. சீனியர் திலகனின் ஓயாத தொல்லைகள் அவளுக்கு சலிப்பை தந்தன. அவளது விரிவுரை முடிய "கண் கொத்திப் பாம்பு போல்" பாத்திருந்து ராக்கிங் பண்ண அவளை வளைத்துப் பிடித்து விடுவான்.

அது "ராக்கிங்" காலம் அனுசூயாவுக்கு அவனிடமிருந்து தப்ப முடியவில்லை. அவனிடம் எது சொன்னாலும் தட்டிக் கழித்து விடுவான். தினமும் தனியே அழைத்து ராக்கிங் செய்த திலகன் கடைசியில் தன் காதலையும் சொல்லி விட அனுசியா அதிர்ச்சியில் உறைந்து போனது உண்மைதான்.

"நான் என்ன லவ் பண்ணவா இங்கு வந்தன்". அனுசூயா தன் மனதில் எழுந்த கேள்வியைக் திலகனிடம் கேட்க முடியாது தடுமாறினாள்.

அனுசூயா பல்கலைக்கழகம் வரும்போது வீட்டில் ஏகப்பட்ட அறிவுரைகள்.

"சீனியர் திலகன் தனியே அழைத்துக் கதைப்பதால் ஏனைய சீனியர்களது ராக்கிங் தொல்லை இல்லாமல் போனது உண்மைதான். அதற்காக இப்படியா...

"ராக்கிங் பீரியட் முடியும் மட்டும் எப்படியாவது சமாளிக்க வேண்டும்". மனதில் கங்கணம் கட்டிக் கொண்டாள் அனுசூயா.

கண்முன்னே விரிந்து பரந்து கிடக்கும் பல்கலைக்கழக அழகிய சூழலை ரசிக்கவும் அப்போதைய வசந்த காலத்தைக் கண்டு மகிழவும் அவளால் முடியவில்லை. குளு குளுவென இருக்கும் அந்த இயற்கைச் சூழலில் கூட திலகன் அழைத்தால் பயத்தில் வியர்வை வந்து எட்டிப் பார்க்கும்.

முல்லைக் கிராமத்தின் முதலாவது பட்டதாரி மாணவி அனுசூயா. வயலும் குளங்களும் வளம் பெருக்கும் முல்லை மண் அவ்வளவு அற்புதம் நிறைந்தது. அந்த பெருமிதம் அனுசூயாவுக்கு.

சங்கமித்தா விடுதி கிடைக்க மன்னார் மதிவதனி றூம்மேற் ஆனாள். அவர்கள் இருவரும் மிக நெருக்கமான நண்பிகளாயினர்.

"என்ன அனு. உனக்கு இன்றும் அதே பல்லவிதானா".

"மதிவதனி நான் என்னடி செய்வது. அவன் திலகனிடமிருந்து என்னால தப்ப முடியல்லடி"

"சரிடி பாத்துக்கோ. எவரையும் நம்பமுடியாது. அனு இது ஏமாத்திற உலகம் புரிஞ்சுக்கோ".

அனுசூயா சுமாரான அழகிதான். அவள் நிறமும், தோற்றமும், துருதுருவென மிளிரும் விழிகளும், நளினமான நடையும் அவளுக்கு அழகை அள்ளிக் கொடுத்தன.

சீனியர்கள் பலரின் பார்வை அவள் மேல் விழுந்ததைக் கண்ட திலகன் அனுசூயாவின் காதலைப் பெற முடிவு செய்து விட்டான்.

திலகனின் மெலிந்த தோற்றமும், சுமாரான உயரமும், இயல்பான அவனின் தீட்சணியமான பார்வையும், சரளமான பேச்சும்.. அவனது நட்பு வட்டத்தைப் பெரிதாக்கி இருந்தன.

புதிய மாணவர்களுக்கான ராக்கிங் முடிய முன் அனுசூயாவின் காதலைப் பெற்றுவிட துடியாய் துடித்தவன் திலகன். தூக்கத்தை.. ஏன் பசியைக் கூட சில நாட்களாக மறந்து விட்டான்.

“என்னடா மச்சான் புரண்டு புரண்டு படுக் கிறா”. அவன் றூம்மேற் மணியம் கேட்டான்.

“ஒண்ணுமில்ல நீ படுடா. எனக்கு நித்திரை வரல்ல..” அனு நினைவில் கட்டிலில் புரண்ட திலகனுக்கு அதிகாலையில்தான் தூக்கமே வந்தது.

“இன்று எப்படியும் அனுவிடம் காதலச் சொல்லணும்”. நினைவுகள் அலைக்கழிக்க திலகன் கில்டா விடுதியில் இருந்து கிளம்பித் தனியாகவே விரிவுரைக்குப் போனான்.

“இன்று மட்டுமே ராக்கிங் செய்யலாம். நாளை அனுவை அழைச்சாலும் வரமாட்டாள்”.

மனம் அலைபாய அனுவைக் காணும் ஆவல். முடிவு செய்ய வேண்டிய கட்டாயம். நேரத்தைப் பார்த்தான் திலகன்.

“நேரம் சரிதான்”.

அதிர்ஷ்டம் அவன் பக்கம் இருந்தது. அனுவும் விரிவுரை முடிந்து தனது நண்பிகளு டன் வந்து கொண்டு இருந்தாள்.

“அங்க பார்டா மச்சான். திலகன் அனு விடம்.. வழியப்போறான்”.

வசந்தனிடம் சொல்லிச் சிரித்தான் திருக் குமார்.

“நமக்கு எதுக்கு வம்பு. என்னவோ நடந்திட்டு போகட்டும்”.

“அனுசூயா”. அழைத்தான் திலகன்.

“இன்று மட்டுந்தானே போவம்”. கீ கொடுத்து விட்டது போல அவனைப் பின் தொடர்ந்தாள் அனு. வேறு வழி இல்லை அவளுக்கு.

“கெம்பா கன்ரீன் போவம்”.

அங்கு போய் இருந்த அடுத்த நிமிடம் தேநீர் எடுத்து வந்தான்.

“அனு நான் கேட்டதுக்கு இன்னும் நீர் பதிலே சொல்லல்ல”. அனுசூயா தேநீரைத் தொடவில்லை. பயம் தொற்றிக் கொண்டது. உள்ளூர வியர்த்தது அவளுக்கு.

“எனக்கு வீட்டை நினைக்கப் பயமாக இருக்கு. என்னை விடுங்க நான் போறன்”.

“அனு எனக்கு நல்ல பதில் வேணும். என் காதல் உண்மையானது. என்னை நம்பு அனுசூயா. ஐ லவ்யூ அனு”.

திலகன் சொன்ன மறு கணத்தில் அனுவின் கையை இறுகப் பற்றினான்.

அனுசூயா அதிர்ச்சியில் உறைந்தாள். வேர்த்துக் கொட்டியது. அவள் அதனை எதிர்பார்க்கவில்லை. அனுவின் கண்களில நீர் கசிந்தது.

அவன் பிடியில் இருந்து மீள முடியாது சிலகணங்கள் தவித்தாள். அவளது உறுதி மெல்ல அவளை விட்டு விலகிச் செல்வதை உணர்ந்தாள்.

“திலகனும் தனக்கு ஏற்றவன்தானா”. முதல் முறையாக யோசித்தாள்.

திலகன் இதுவரை பண்புடன் நடந்து கொண்ட விதம், இயல்பான அவனது புன்னகை, அன்பான பேச்சு அனுவை எண்ணிப் பார்க்க வைத்தது.

திலகன் கையைப் பிடித்த அதிர்ச்சியில் இருந்து மெல்ல மீண்டாள்.

ஏதோ நம்பிக்கை அவள் உள்ளத்தில் வந்து உதித்தது.

“அனு ஏதாவது பதில் சொல்லன்”. அவ ளிடம் கெஞ்சினான். நிமிடங்கள் சில கழிந்தன. அமைதி நீடித்தது.

“அமைதிக்குப் பின் புயல் வீசுமோ”. திலகனின் மனசு அலை பாய்ந்தது. கழிந்து போய்க் கொண்டிருந்த அந்த நிமிடங்களில்.

“நீங்க என் கையைத் தொட்டதுமே பேரதிர்ச்சி தந்தது. எனது நீண்ட அமைதி புரிந் திருக்கும் என நினைத்தேன்”.

“புரியல்ல அனு”.

“நான் காதலை ஏற்றுக் கொண்டதாக எடுத்துக் கொள்ளக் கூடவா இன்னும் தெரியா மல் உள்ளது”.

அவனுக்கு அது புரியாமலா போகும். அனு காதலை நேரில் சொல்ல வேண்டும் என்று அல்லவா எதிர்பார்த்தான்.

அனுசூயாவின் வார்த்தைகளைக் கேட்ட இரட்டிப்பு மகிழ்ச்சியில் திலகன் கையை இறுகப் பற்றியபடி அனுவின் தேநீர் கோப் பையை பார்த்தான். அது எப்போதோ ஆறிப் போயிருந்தது.

“அனு அது இருக்கட்டும். சுடச்சுட நான் எடுத்து வாறன்”.

இப்போது வெட்கம் மேலிட திலகனை அனு பார்த்தாள். தேநீர் கொண்டு வந்தான்.

“அனு எனக்கு இப்போ விரிவுரை இருக்கு. அது முடிய நூலகம் வாறன்”.



**“என் வாழ்வில் இருந்து விடுபட்டுப் போன காதல் அல்லவா அது. அது இன்று எனது கண்களைப் பறித்து இருக்கிறது. எங்கள் இருவருக்கு மட்டும் தெரிந்த உறவு. இது என்னோடு போகட்டும். எனக்கு இந்தக் கொடூர தண்டனை தேவைதான்”.**

தேநீர் அருந்தி முடிய திலகன் விரிவுரைக்கு எழுந்தான். அனுவும் மகிழ்வில் கன்ரீனில் இருந்து அவனோடு வெளியே வந்தாள்.

அடுத்த விரிவுரைக்கு நண்பிகளுடன் இணைந்து கொண்டாள் அனு.

“நான் தாமதித்து வாறன் மதி. நீ போ. நான் வந்து விபரமாக எல்லாம் சொல்றன்.”

றூம்மேற் மதியிடம் சொன்னாள் அனு.

விரிவுரை முடிய அனு நூலகம் போனாள். திலகனுக்காக அங்கு காத்திருந்தாள்.

“அனு.. வா கதைச்சுக் கொண்டு போகலாம்”. திலகன் அனுவை அழைத்தான். நூலகம் இருந்து அந்த மாலை வேளையில் சங்கமித்தா நோக்கி போயினர்.

கம்பஸ் வந்து மூன்று மாதங்கள். விடுமுறையும் வந்தது. வீடு போகும் ஆவல் உந்தியது. அதற்கு முன்னம் அனுவின் காதல் செய்தி வீடு போய் விட்டது. பொறுமை இழந்து போனார் அவளது தந்தை.

“அனு கம்பஸ் போய் படித்து முடிக்க முன்னம் காதலா. நீ படிச்சது போதும்”.

எதிர்பாராத தந்தையின் தாக்குதல் கண்டு அதிர்ந்துபோனாள் அனுசூயா.

“அப்பா..”

“பிள்ள களைத்து போய் வீட்டுக்கு வந்திருக்காள். பறகு கதைக்கலாம். நீ போய் குளிச்சித்து வந்து சாப்பிடு மகள்”. தாயின் குறுக்கீடு நிலமையைத் தணித்தது.

“எப்படி இந்த சிக்கலில் இருந்து விடுபடலாம்” குழப்பத்துடன் அனுசூயா குளித்து முடித்தாள்.

“அனு நீ வளர்ந்தவள். நான் புத்தி சொல்லத் தேவல. காதல் உன் படிப்ப சீரழிச்சுப் போடும். ஊர் பேர் தெரியாத அந்த உறவு உனக்கு வேணாம் தூக்கி எறிஞ்சிடு”.

“பிள்ளைய சாப்பிட விடாமல் நீங்க என்னப்பா”. தாய் தலையிட்டாள்.

“நீ பேசாமல் இரு. இனி நான் எப்ப கதைப்பது. நீயே சொல்லு ”.

“சரி.. சரியப்பா. நீங்க அத விடுங்க நான் கதைக்கன்”.

“ம்மா.. சூழ்நிலைக்குள் நான் அகப்பட்டுப் போனன். நானும் என் விருப்பத்தைச் சொல்லிப் போட்டன்”.

“எனக்கு புரியுது மகள். இனி நான் எதுவும் சொல்லலல. நீ யோசித்து நல்ல முடிவ எடு”. தாயின் பாசத்தில் கரைந்து போனாள் அனுசூயா.

உறவுகளோடும் நட்புகளோடும் பேராதனை கம்பஸ் வாழ்க்கை, நடந்த ராக்கிங் பற்றிக் கதைத்து மகிழ்ந்த அனுவுக்கு விடுமுறை கழிந்ததே தெரியவில்லை. அவளது காதுக்குள் தந்தையின் எச்சரிக்கைதான் இன்னும் முணு முணுக்கச் செய்தது.

மீண்டும் பேராதனை வந்த அனுவுக்கு பேரிடி ஒன்று காத்திருந்தது.

திலகனின் றூம்மேற் மணியம் சொன்ன செய்தி அது. நிலை குலைந்து போனாள் அனு. “திலகனுக்கு அவனது ஊரில் முன்னைய காதல் முறிவு ஒன்றால் உண்டான விபத்து அது அனுசூயா. அவனை அது தண்டிச்சுப் போட்டுது”.

“திலகன் இப்படிப் பட்டவனா”. அனு தடுமாறினாள்

“படிக்க வந்த எனக்கு பெற்றார் மனம் நோகத் தக்கதாய் ஒரு காதல் தேவைதானா. சீய்.. நானும் ஏமாந்து விட்டனா. எனக்கும் இது ஒரு தண்டனையா”. அவள் வாய் முணு முணுத்தது.

"என்ன மகன் நன்றாக நீ இளைச்சுப் போனாய்". விடுமுறைக்கு கம்பஸில் இருந்து வந்த மகனை வாஞ்சையோடு தலையை வருடியபடி கேட்ட தாயின் பாசத்தில் நெகிழ்ந்து போனான் திலகன்.

"இல்லம்மா.. நான் நல்லாத்தான் இருக்கன்".

"போடா.. எனக்குத் தெரியாதா. உனக்கு நான் வென்னீர் போட்டு வைச்சிருக்கன். போய்க் குளிடா.

"அம்மா உங்களிட்ட ஒன்று சொல்ல வேணும்". திலகன் சொல்லத் தயங்கினான்.

"நீ ஒரு நாளும் இப்படி இல்லையே ஏன்டா என்னடா தயக்கம். என்ன சொல்லப் போறா".

"அம்மா நான் கம்பஸில் அனுசுயாவ விரும்புகிறன். அவள் இப்போ "பர்ஸ்ட் இயர்". அவளும் என்னை விரும்புறாள்".

"ஆ.. என்னடா..." சின்னதாய் ஒரு அதிர்ச்சி. அதிலிருந்து விடுபட்ட தாய் சுதாகரித்துக் கொண்டு கேட்டாள்.

"என்னடா சொல்றா அப்பா அறிஞ்சா என்ன செய்வாரோ தெரியாதே".

"அம்மா கோபப்பட வேணாம்மா. நீங்க அப்பாட்ட மெதுவாச் சொல்லுங்க".

"சரிடா. நீ முதலில் சாப்பிடு. நான் அப்பா வந்ததும் கதைக்கிறன். யோசிக்காம படிக்கிற தப் பாத்துக்க".

அவன் கம்பஸ் காதல் விவகாரம் அவனது ஊரிலும் புகைந்து விட்டது. விடுமுறை முடியும் முதல் நாளன்று அதிகாலை காலை இருள் மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருந்த வேளை அது.

திலகன் வெளியில் இருந்த மலசல கூடத்தினுள் நுழைந்தான். உள்ளே இருந்து வெளியில் வர அவன் கதவைத் திறந்த மறு கணம் திலகன் முகத்தைக் குறி வைத்து வீசிறி அடிக்கப்பட்ட அசிட் தப்பாது அவன் இரு கண்களையும் துல்லியமாய்த் தாக்கியது.

"ஐயோ அம்மா.. அம்மா.." அலறியபடி கண்களைப் பொத்தி நிலத்தில் விழுந்து புழுவாய்த் துடித்து சுழன்று வந்தான். அவனது அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கம் இருந்தவர்கள் ஓடி வந்தனர்.

மகனுக்கு முன்பே எழுந்து தேநீர் தயார் செய்து கொண்டிருந்த தாய் மகனின் அலறல் கேட்டு அதிர்ந்து போனாள்.

"மகனே திலகா". அழுது ஆர்ப்பரித்தபடி விழுந்தடித்து வெளியே பாய்ந்து ஓடி வந்தாள். மகன் நிலத்தில் கிடந்து புழுப் போல் துடிப் பதைக் கண்டாள். மகனை அள்ளி எடுத்து மடியிலே போட்டுக் கொண்டு

செய்வதறியாது பதறினாள்.

"மகன் என்னடா நடந்தது". கண்ணீர் ஆறாகப் பெருக மகனைப் பார்த்தாள். திலகனோ கண் களைப் பொருத்தியபடி துடித்தான் முகத்தில் "அசிட்"பட்ட பகுதி வெந்திருந்தது. அடுத்த சில நிமிடங்களில் அவர்கள் இருவரையும் ஏற்றிய ஆம்புலன்ஸ் வைத்தியசாலைக்கு விரைந்தது.

தீவிர சிகிச்சைகளின் பின் அசிட் அவனது கண்களை மோசமாகத் தாக்கியிருப்பதையும் அதனால் இரு கண்களும் பார்வையை இழந்து விட்டதையும் வைத்தியர்கள் உறுதி செய்தனர்.

ஒரு நொடிக்குள் எல்லாமே தடம் மாறிப் போனது. கொழும்பில் இருந்த தந்தை செய்தி அறிந்து பதறியபடி வந்து சேர்ந்தார். திலகனது கம்பஸ் காதலை சகிக்க முடியாத அங்கு இருந்த குடும்பம் ஒன்றின் திலகனால் பாதிக்கப்பட்ட ஒரு நபர் மட்டும் மகிழ்ச்சியில் இருந்தார் அப்போது.

திலகனுக்கு அந்த வலியிலும் இதைச் செய்தது யாரென்பது தெளிவாகப் புரிந்தது.

"திலகன் கம்பஸ் போனபோது விடுபட்டுப் போன காதல் அது. அந்த தொடர்பு அன்று அவனது கண்களின் பார்வையைப் பறிக்கக் காரணமாக இருந்தது". நினைத்து பார்த்த திலகன் மனதை ஒரு கணம் உலுக்கியது.

"என் வாழ்வில் இருந்து விடுபட்டுப் போன காதல் அல்லவா அது. அது இன்று எனது கண்களைப் பறித்து இருக்கிறது. எங்கள் இருவருக்கு மட்டும் தெரிந்த உறவு. இது என்னோடு போகட்டும். எனக்கு இந்தக் கொடூர தண்டனை தேவைதான்". உள்ளம் குமுறி யது. வாய்விட்டு அழ முடியாமல் தவியாய்த் தவித்தான். கண்கள் இரண்டும் கட்டப்பட்டவாறு பலத்த கட்டுக்களுடன் வைத்தியசாலையில் படுத்திருந்தான் திலகன்.

"நான் மணியம் வந்திருக்கன்டா".

"நீ மட்டுமாடா.. மச்சான்".

"ஏன் நீ அனுசுயா வருவாள் என்று எதிர்பாத்தியா. அவளுக்கு எல்லாம் தெரிஞ்சு போச்சு. எந்த முகத்தோடு அவள் வருவாள்".

"என்விதி என் கண்கள் போய்விட்டன. இந்தக் குருடன் இந்தக் கோரமான முகத்தோடு அவள் வாழ்வில் இனி ஒருபோதும் வரமாட்டான் என்று அனுவுக்குச் சொல்லிவிடு மச்சான்".

"சரிடா மச்சான் நீ உடம்பப் பார்த்துக் கொள். நான் அப்புறம் வாறன்.

வைத்தியசாலை போகும் போதோ திலகனிடம் தனது வருகையைச் சொல்ல வேண்டாம் என கேட்டுக் கொண்டவள் அனுசூயா. மணியனின் பின்னால் அமைதியாக நின்றாள். அனு கண்களில் தேங்கிய கண்ணீர் அருவியாகப் பெருக்கெடுத்தது.

"நானும் திலகனை லவ் பண்ணியவள். அவனது துன்பத்தில் பங்கு கொள்ள வேண்டியவள். அவனுக்குக் கண்ணாக இருக்க வேண்டியவள்தான் நான்".

"ஆனால் என்ன. அவன் லவ் பண்ணி கைவிட்டதால் அவனுக்கு வந்த வினை அது. ஒரு பெண்ணுக்கு அவன் செய்த துரோகத்தால் கிடைத்த தண்டனை. நானும் ஒரு சராசரி மனிசிதானே. நான் மகாத்மாவாக ஆக முடியுமா. என் பெற்றோர்களை வருத்திய எனக்கும் ஒருவகையில் இதுவும் ஒரு தண்டனைதான்". அனுசூயா மனது வேதனையால் குமுறிக் கொந் தளித்தது.

கண்களில் பெருகிய கண்ணீரைக் கைக் குட்டையால் துடைத்து விட்டாள். மானசீகமாக திலகனிடம் இருந்து விடைபெற்றுக் கொள்வதைத் தவிர அவளுக்கு வேறு வழி தெரியவில்லை.

OOO

---



அமரர் கவிஞர்
**நீ. தர்மலிங்கம்**
(புசல்லாவை)

# நாளையொருவன் பிறப்பானா?

யாரிங்கே மனிதன் – தெரிந்தால்
கூறுங்கள் அவனும் எங்கே
குருதி நிரப்பும் குளங்களாய்
எலும்புக் கூடுகள் நிரப்பும் கொள்கலமாய்
புனிதம் அழிந்த பூமியில் – உண்மை
மனிதன் எங்கே வாழ்கிறான்
பிறப்பவனெல்லாம் இனி மனிதனில்லை
தன்னினங்களைக் கொல்லும் விலங்குகள் தான்
மனிதம் அழிந்த இவன் மார்புக்குள்
மறைந்திருப்பதும் கொலைவெறிதான்
தன்னையீன்ற தாய்க்குலத்தை
தன்வழிவந்த உறவுகளை
இன்னும் எத்தனை பழிகொண்டு
இவன் காணத் துடிக்கும் முடிவென்ன?
கண்டங்கள் தாவும் கனைகள் படைத்தான்
காற்றிலும் வேக விமானம் படைத்தான்
நவமண்டலம் செல்ல வழியறிந்தான்
பூமண்டலம் அழியவோ விஞ்ஞானம் கற்றான்
மனிதனை மனிதன் அழிப்பதற்கே
மனிதனே ஆயுதம் ஏந்துகின்றான்
புனிதர்கள் காத்த பூமியையின்று
போரெனும் தீயில் எரிக்கின்றான்
மரித்தவன் உடலை சுமப்பதற்கு
நாளை மற்றோர் மனிதன் இருப்பானா?
அழிவைத் தேடும் உலகைத் திருத்த
ஓர் அகிம்சாவாதி பிறப்பானா?

மலையக கவிதை இலக்கியத்தின் கவனத்துக்குரிய அமரர். கவிஞர் புசல்லாவை நீ. தர்மலிங்கம் அவர்களது பிரசுரமாகாத கவிதைகளில் ஒன்று. இக்கவிதையை அனுப்பி உதவியவர் அ. லெட்சுமணன்.




**ஆறுமுகம் சந்திரமோகன்**
(இரட்டைப்பாதை)



**தே**ர்தல் திருவிழா என்றபடியால் ஊரில் திருவிழாகளை கட்டுவதுபோல சிவப்பு, நீலம் பச்சை, கறுப்பு என இப்படி பல்வேறுபட்ட கொடிகள் ஊரை அலங்கரித்தன. விதம்விதமான விலையுயர்ந்த வாகனங்கள்.. புதிய புதிய மனிதர்கள்,. அந்த ஊர் அவர்களை வியந்து பார்த்துக் கொண்டிருந்தது.

இளைஞர்கள் கூடுதலாக தமது வேலை களுக்கு செல்வதில்லை. அந்தப் பிரதேசத்தில உள்ள உணவு விடுதிகளில் கொத்து, ரைஸ், பராட்டா ஓடர்கள் ஆவிபரப்பிக் கொண்டிருந்தன.. உணவு விடுதியில் தொழில்புரிவோர் விதிமுறை இல்லாமல் திண்டாடினர். அது மட்டுமா, மதுசார கடைகளில் நீண்ட வரிசைகளும் தென்பட்டன.

இளைஞர்கள் ஒவ்வொரு சாராரும் தமக்கு விருப்பமானவர்களின் ட சேர்ட்டுகளை அணிந்து தீபாவளி போல ஊர் தென்பட்டது. வாகன இரைச்சலும், ஒலிபெருக்கி இரைச்சலும், அந்திப் பொழுதில் ஆடல்பாடல்களும் ஊரை அதிர வைத்தன.

இதற்கிடையில் தமது விருப்பமான அர சியல் தலைவர்களைக் கொண்ட போஸ்டர்கள் ஊரில் எந்தச் சுவரையும் விட்டுவைக்கவில்லை. இதன் மத்தியில் காரசாரமான கருத்து மோதல்கள்., சண்டைச் சச்சரவுகள், இதனைக் கண்காணிக்க பொலிஸ் நிலையங்கள் நிரம்பி வழிந்தன. இதனிடையே பிரசாரக் கூட்டங் களில் நம்நாட்டுக் கலைஞர்கள் தமது திறமை யைக் காட்டத்தவறவில்லை. ஊருக்குத் தேவையான அத்தியாவசிய சேவைகள் எதுவும் நடக்கவில்லை. எனினும்கூட அற்ப சொற்ப சந்தோஷங்கள் மட்டுமே முன்னுரிமைப் படுத்தின., கவனமும் இருந்தது.

அரசியல்வாதிகளின் மேடைக்கு ஒரு பேச்சு வீட்டுக்கொரு வாக்குறுதி என்றெல் லாம் அள்ளித் தெளித்தனர். இவ்வாறான சந்தர்ப்பத்திலே சண்முகராஜுக்கு மூளையில் ஒரு விடயம் உறுத்தியது. வீதி ஓரங்களில் அரசுக்குச் சொந்தமான பகுதியில் அரசியல் தலைவர்களின் உருவம் பொறிக்கப்பட்ட காரியாலயங்கள் அமைத்து கட்டவுட்டுக்கள் வைத்து காலம் சிறிதுபோக அது கடைகளாக மாறுவது வழக்கம்.

தேர்தல் முடிய அது அவர்களுக்குச் சொந்தமாகிவிடும் இதற்கென்றே ஒரு சாரார் பிரசாரங்களில் ஈடுபடுவர். இந்த எண்ணம் சண்முகராஜுக்கு வந்தது. வெற்றிவாகை பிடித்த ஒருவரைப்பிடித்து கதைத்தான் சண்முகராஜ்.

அவர்களின் உரையாடல் சிங்கள மொழி யில் அமைந்தது.

“மந்திரியாரே நான் உங்களுக்கு பிரசாரம் செய்கிறேன்.. எந்த விஷயத்தக்கும் நான் தயார். நான் வாக்குளை சேகரித்துத் தரு

வேன். நான் காரியாலயம் திறக்கிறேன்.. எனக்கு உதவி பண்ணுங்க”

“சண்முகராஜ், நீங்க ஒன்னுக்குப் பயப் பட வேணாம். உங்களுக்கு எல்லா வழி களிலும் உதவி செய்கிறேன். உங்ககிட்ட யாரும் சண்டைக்கு வந்தா எங்கட பசங்கள அனுப்புறேன். உங்க பிள்ளைகளுக்கு வேலை வாங்கித் தாரேன். நீங்க வேலையைப் பாருங்க”

சண்முகராஜ் காரியாலயத்தை நிறக் கொடிகளைக் கொண்டு கட்டவுட்டுகளைக் வைத்து ஒருவாறாகத் தயாராக்கினான். பற் றாக்குறையான பணத்திற்கு தனது மனை வியின் காதிலிருந்த தோட்டைக் கேட்க, அவள் முரண்டு பிடிக்க அரசியல்வாதிகளை மிஞ்சிய வாக்குறுதிகளை தன்மனைவிக்கு வழங்கி அதனை அடைவு வைத்து மிகுதி வேலைகளைச் செய்தான்.

கடனோடு கடனாக ஒரு கரம்போட்டை வாங்கி காரியாலயத்தில் வைத்து இளைஞர் களைக் குஷிப்படுத்தினான். பட்டாசு வெடிக்க, பஜாப் பாட்டும்.. பாதி சிங்களமும் பாதி தமிழும் கலந்த பாடல்களும் ஒலிக்க.. ‘ஜயவேவா’ என்ற கரகோஷங்களோடு காரியாலயத்தை ஆரம்பித்தான்.

அந்தக் காரியாலத்தை ஆரம்பிக்கும் வைபவத்தின்போது “சண்முகராஜ் எனது நண்பன், என உடன்பிறப்பு இந்த நாடு எல் லோருக்கும் சொந்தம். இவர் மேல கை வைதால் யாரையும் விடமாட்டேன். இவர் எனது இரத்தம்” என்று மந்திரி பேசினார்.

தேர்தல் சூடுபிடித்தது. சண்முகராஜ் காலநேரம் பாராது பிரசாரத்தில் ஈடுபட்டான். ஒலி பெருக்கி சத்தங்களோடு கையூட்டல்களும் நடந்து கொண்டிருந்தது. குறித்தநாள் வந்தது. சண்முகராஜ் மிகச் சிரமப்பட்டு பிரசாரத்தை முடித்துக் கொண்டார். அந்த அரசியல்வாதியும் வெற்றி பெற்றார்.. வெற்றிபெற்றவர்கள் ஊர்வலம் சென்றனர் வெற்றி பெறாதோர் ஊமையானார்கள். மழைபெய்து ஓய்ந்தால்போல் எல்லாமே அமைதி! அரசியல் தலைவர்கள் கண்டி-கொழும்பு, கொழும்பு-கண்டி என மாறிமாறி ஓடிக்கொண்டிருந்தனர்.

திடீரென்று ஒருநாள் பொலிஸ் அதிகாரிகள் சண்முகராஜ் வீட்டுப்பக்கம் படையெடுத்தனர்.

“இங்க யாரு சண்முகராஜ்”

அதிகாரக் குரலைக்கேட்ட சண்முகராஜின் மனைவி தணிந்தகுரலில் “நீங்க யார்?” என்றார்.

“எங்கே உங்க புருஷன்.. கூட்டி வாங்க கொங்சம் கதைக்கணம்” என்றார் பொலிஸ் அதிகாரி. சண்முகராஜ் வந்தான்.

“இது யாருடைய இடம்? இது அரசாங் கத்துக்கு உரிய இடம் இது. உங்க அப்பாவி னுடைய சொந்த இடமா? எப்புடி இந்த இடத் தைப் புடிச்சே” என்றான் மிரட்டுக் குரலில்..

“இதைக் கொஞ்சம் கேளுங்க சேர்.. குறித்த அரசியல்வாதியினுடைய இடம்.. அவரு தானே இந்த இடத்தில காரியாலயம் அடிக்கச் சொன்னாரு.. இந்தப் பிரதேசத்தில் நிறையப்பேர் அடிச்சிருக்காங்க எனக்கு மட்டும் சொல்ல வாறீங்க”

“அதை எனக்குச் சொல்லத்தேவையில்லை.. நீதியை பத்தி எனக்குச் சொல்லத் தேவையில்லை. இந்த காரியாலயத்தை உடனே அகற்று.”

வாக்குத் தர்க்கம் அதிகரித்தது கைகலப் பாக மாறியது. ஊர்மக்கள் எல்லோரும் திரண்டனர். பல இளைஞர்கள் ஒன்று சேர்ந்து பலவாறாக எடுத்துக் கூறியும் எந்த விடயமும் எடுபடவில்லை.. பொலிஸ்காரன் ஒருவன் கைத்தொலைபேசியில் ஏதோ கூற, இன்னொருவர் வேறொருவருக்குக் கூற ஏராளமான பொலிஸார் வந்து இறங்கினர்.

“நீங்க பெரியாளாக ஏலாது.. ஏதாவது பேசினா எல்லோரையும் கூண்டில போடுவேன்” எனறார் உயர் அதிகாரி.

சண்முகராஜுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தட்டுத் தடுமாறினான்.

அப்போது அவரது மனைவி “என்னங்க அந்த மந்திரிக்கு கோல் எடுங்க” என்றாள்

அவசரமாக அந்த மந்திரியின் தொலை பேசியில் அழைத்தான்.. “ஹலோ ஹலோ” என்றான்...

மறுமுனையில் “ஹலோ.. ஹலோ” என்று முதலில் ஆண்குரல் ஒலித்தது. நொடிப் பொழுதில் பெண்குரல் தொடர்ந்தது.

“காரிய பவுலாய் பஸ்ஸீவ அமத்தன்ன” என தற்போது தொலைபேசியில் தொடர்பு கொள்ளமுடியாது எனும் குரலும் கேட்டது.

காரியாலயம் அடித்து நொறுக்கப்பட்டது.

❍❍❍




## எங்கும் தமிழ் வேண்டும்

அண்மையில் இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். அவர் வருகையை ஒட்டி, விமான நிலையத்தில் இருந்து, அவர் வரும் பாதைதோறும் ஆங்கிலத்திலும், சிங்களத்திலுமே வரவேற்புப் பதாகைகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் தமிழ் இடம்பெற்றிருக்கவில்லை. தமிழுக்குக் கொடுக்கப்படவேண்டிய மரியாதை கொடுக்கப்படவில்லை. ஆனால், இந்தியப் பிரதமர் இலங்கையில் தமது பேச்சின்போது, திருக்குறள் பற்றியும் குறிப்பிட்டு, வணக்கம், நன்றி முதலான தமிழ் வார்த்தைகளையும் பயன்படுத்தினார். எதிர்காலத்திலாவது அரசு தொடர்பான நிகழ்ச்சிகளில் தமிழ் கட்டாயம் இடம்பெறவேண்டும். அதனை, அரசு சார்ந்த தமிழ் அரசியல்வாதிகளும். அதிகாரிகளும் உறுதிசெய்ய வேண்டும். தங்களுக்கு இதனால் என்ன வந்துவிடப்போகிறது, அரச உயர்மட்டத்தின் கடைக்கண் பார்வை தங்கள் மீது பட்டாலே போதும், அதற்குமேல் என்ன வேண்டிக்கிடக்கிறது என்ற அசமந்தப்போக்கில் அரசு சார்ந்த தமிழ் அரசியல்வாதிகள் இருந்துவிடக்கூடாது. உரிய இடங்களில் எல்லாம் தமிழின் பயன்பாடு இடம்பெறுகிறதா என்பதை, அவர்கள் கண்காணிக்க வேண்டும்.

பொதுவாக, அரசு சார்ந்த கலை நிகழ்ச்சிகளில் சிங்கள ஆடல் பாடல் நிகழ்ச்சிகளே இடம்பெறுவது நீண்டகால வழக்கமாக இருந்துவருகிறது. வெளிநாட்டினரின் வருகைகளின்போது நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகளிலும் இதுதான் நடைமுறையில் இருந்துவருகிறது. இந்நாட்டில் ஓர் இனம்தான் வாழ்ந்துவருவது போலவும், அவர்களுக்கு மட்டும்தான் கலை கலாசார அம்சங்கள் இருப்பது போலவும் காட்டிக்கொள்ளும் ஒரு மாயை நீண்டகாலமாக உருவாக்கப்பட்டு வந்துள்ளது. வேண்டும் என்றே தமிழ் மக்களின் கலாசார அம்சங்கள் பெரும்பான்மை இனப் பார்வையாளர்கள் முன்னிலையிலும், வெளிநாடுகளில் இருந்துவரும் பார்வையாளர்கள் முன்னிலையிலும் மறைக்கப்பட்டு வருகின்றன. ஆக மிஞ்சினால், சாட்டுக்காக ஓரிரு தமிழ்க் கலை நிகழ்ச்சிகளைக் கிள்ளித்தெளித்துவிட்டு, இதுவே அதிகம் என்பதுபோல அரச அதிகாரிகள் நடந்துகொள்கின்றனர். நீண்டகாலமாக இதுவே நாட்டின் நடைமுறையாக இருந்துவருகின்றது.

ஆனால், இப்படியெல்லாம் காலங்காலமாக இருந்துவரும் நடைமுறையை மாற்றுவதற்கு, இதுவரையில் தமிழர் தரப்பில் இருந்து எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுதான் பெரிய ஒரு சோகம். நாடு சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து எத்தனையோ தமிழ் மந்திரிபிரதானிகள் அரசவையில் இருந்து வந்திருக்கின்றனர். ஒருவராவது இதுபற்றி வாய் திறப்பதே இல்லை. வாய் திறந்தால் எங்கே தங்கள் எசமானர்களின் கண்டனங்களுக்கு ஆளாகி, தம்து 'மானம் மரியாதை' (அப்படி ஏதாவது இருந்தால்) போய்விடுமோ என்ற அங்கலாய்ப்பில் வாய்மூடி மௌனிகளாகவே இருந்து வந்துள்ளனர். அரசவையில் இருப்பவர்கள்தான் அப்படி என்றால், எதிர்க்கட்சி வரிசையில் வாசம் செய்யும் தமிழ் அரசியல்வாதிகளும்கூட இதுபற்றி எல்லாம் வாய் திறப்பதே இல்லை. 'நாங்கள் கொள்கை கோட்பாடுகளோடு இருப்பவர்கள். இதுபற்றி

எல்லாம் பேசி, நமது நேரத்தை வீணடிக் கக்கூடாது' என்ற 'உயர்ந்த சிந்தனையில்' அவர்கள் இருக்கிறார்கள் போலும்!

எதிர்காலத்திலாவது அரசு சார்பான கலை நிகழ்ச்சிகளில் தமிழுக்கும், தமிழ்க் கலை நிகழ்ச்சிகளுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும். அதனை அரசும், அரச அதிகாரிகளும் நடைமுறைப்படுத்த முயற்சி எடுக்கவேண்டும். ஆளும் தரப்பி லும், எதிர்த்தரப்பிலும் இருக்கும் தமிழ் அரசியல்வாதிகள், வழக்கம் போலக் கதிரை களுக்குப் பாரமாக இல்லாமல், தமிழுக்கும், தமிழ்க் கலைகளுக்கும் முக்கிய இடம் வழங்கப்படவேண்டும் என்பதை, அல்லும் பகலும் வலியுறுத்த வேண்டும்.

## அரசியல் நாகரிகம் வேண்டாமா?

அரசியலில் ஈடுபடுபவர்களுக்குக் கொள்கை கோட்பாடு எவ்வளவு முக்கியமோ, அவ் வளவுக்கு அரசியல் நாகரிகமும் அவசி யம். என்னதான் மந்திரி பிரதானிகளாக இருந்தாலும், அரசியல் நாகரிகம் அவர்களுக்கு இன்றியமையாதது. நமது நாட்டில் சில மந்திரி பிரதானிகள், நாட்டின் உயர்சபையிலும், பொதுவெளியிலும் பேசும் சில பேச்சுகளும், சில கூட்டங்களில் உயர்சபையில் அங்கம் வகிக்கும் சில உறுப்பினர்களை விளிக்கும் முறைகளும் பலரின் முகங்களைச் சுழிக்க வைக்கின்றன. மந்திரி பிரதானிகள் என்ப தால், வாயில் வந்த எதையும் பேசலாம், தம்மை யாரும் தட்டிக்கேட்க முடியாது என்ற இறுமாப்பு நிலை சிலரிடம் காணப்படுகிறது. மக்களை மதிக்கத் தெரியாதவர்கள், மக்கள் பிரதிநிதிகளாக இருப்பதற்கு எத்தகைய தகுதியும் இல்லாதவர்கள். தமிழ் ஓர் அழகான மொழி என்பது, அதனை அறிந்தவர்களுக்கு நன்கு தெரியும். தமிழராகப் பிறந்திருந்தும், சில மந்திரி பிரதானிகளுக்கு, தமிழின் அருமை பெருமையும், அழகும் தெரிவதில்லை. சபை சந்தியில் அழகற்ற வார்த்தைகளையே பயன் படுத்திப் பழகிவிட்டார்கள். அதை ஒரு பெருமையாகவும் அவர்கள் கருதுகிறார்கள் போலும். அவர்கள், எதிர்காலத்திலாவது தமிழின் பெருமையை உணர்ந்து, அழகான வார்த்தைகளைப் பயன்படுத்தப் பயிற்சி பெறுவார்களாக! மந்திரி பிரதானிகளாக இருந்தாலும், கொஞ்சமாவது அரசியல் நாகரிகம் தெரிந்திருக்க வேண்டாமா?

நமது நாட்டின் வடக்குத் திசையில் நடை பெற்ற ஓர் அபிவிருத்திச்சபைக் கூட்டத்தில் இடம்பெற்ற ஒரு விடயத்தை, அதில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்களும், பலரும் கவனிக்கத் தவறவில்லை. அதனால், இரகசியமாக நடைபெற்ற அந்த விடயம் ஊடகங்களில் பரகசியமாகக் கசிந்துவிட்டது. வடக்கில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட ஒரு புதிய நாடாளுமன்ற உறுப்பினர், தாம் கலந்துகொள்ளும் எந்த அபிவிருத்திச்சபைக் கூட்டத்திலும், தமது நியாயமான கருத்துகள், கேள்விகள் காரணமாகப் பல அரசியல் வாதிகளையும், அதிகாரிகளையும் திணற வைத்துக்கொண்டிருக்கிறார். அவர்களுக்கு, அவர் எப்போதும் ஒரு சிம்மசொப்பனமாக விளங்குகிறார். இதனால், திகிலடைந்த, பாரம்பரியத் தமிழ்த் தேசியக் கட்சி ஒன்றின் முக்கிய பொறுப்பில் இருக்கும் ஒருவர், குறிப்பிட்ட அரசியல்வாதியைக் கூட்டத்தில் இருந்து வெளியேற்றுமாறு, அமைச்சருக்கும், அதிகாரிகளுக்கும் இரகசியச் சைகை காட்டியமையை, அவர்கள் கவனித்தார்களோ, இல்லையோ, ஊடகவியலாளர்களும், வேறு பலரும் கவனித்திருக்கிறார்கள். இத்தகைய பாரம்பரிய அரசியல்வாதிகள், மக்கள் தொடர்பான விடயங்களைத் தாங்களும் பேசமாட்டார்கள். பேசுபவர்களையும் விடமாட் டார்கள். அபிவிருத்திச்சபைக் கூட்டங்கள் என்பவை, அரசியல்வாதிகளுக்கும், அதிகாரி களுக்கும் ஒரு பொழுதுபோக்கு நிகழ்வு களாகவே நீண்டகாலமாக இருந்துவந்துள்ளன. இந்த இலட்சணத்தில், சமுதாய அக்கறை கொண்ட ஒரு புதிய தமிழ் அரசியல்வாதி, அரசியல்வாதிகளையும், அதிகாரிகளையும் நோக்கிக் கேள்விக்கணைகளைத் தொடுக்கும் போது, அதனை ஜீரணிக்க முடியாத அரசியல் வாதி ஒருவரின் அரசியல் நாகரிகம் அற்ற செயலே, அத்தகைய சைகை காட்டிய நிலையாகும்.

அதே பாரம்பரியத் தமிழ்த் தேசியக் கட்சியைச் சேர்ந்த இன்னொருவர், அபி

விருத்திச்சபைக் கூட்டங்களில் புதுமையான விளையாட்டு ஒன்றைச் செய்து வருகிறார். முன்னர் குறிப்பிடப்பட்ட புதிய தமிழ் அரசியல்வாதி அதிகாரிகளைப் பார்த்துக் கேள்வி கேட்பது அவருக்குப் பிடிப்பதில்லையாம். அதிகாரிகளைப் பார்த்து அரசியல்வாதிகள் கேள்விகள் கேட்கக் கூடாதாம். அதனால், இரண்டு கூட்டங்களில் அவர் இடைநடுவே வெளி நடப்புச் செய்திருக்கிறார். அப்படி ஒரு 'பெருந்தன்மை' அவரிடம் உண்டு. அரசியல்வாதிகளின் தில்லுமுல்லுகள் அதிகாரிகளுக்குத்தான் தெரியும். அவர்களைப் பகைத்துக்கொண்டு, அரசியல்வாதிகள் எப்படி அரசியல் செய்வது? அதிகாரிகளைப் பார்த்து அரசியல்வாதிகள் கேள்விகள் கேட்பது முறையா, நீதியா, தர்மம் தானா என்பதுதான் அவரின் அரசியல் கொள்கை. மக்களிடம் வாக்குக்கேட்டு, அவர்களினால் நாட்டின் உயர்சபை உறுப்பினர்களாக ஆகும் வாய்ப்புப் பெற்ற இவர்கள், மக்களை மறந்துவிட்டு, அதிகாரிகளை மட்டும் பாதுகாக்க முயல்வது, எந்த வகையில் அரசியல் நாகரிகம் ஆகும் என்பது தெரியவில்லை. மக்களிடம் அன்றி, அதிகாரிகளிடம் 'நல்லபிள்ளைப்' பட்டம் பெறுவதையே அவர் பெரிதாக விரும்புகிறார். மக்களின் பிரச்சினைகள் பற்றி அதிகாரிகளிடம் கேள்விகள் கேட்க, கருத்துகளைத் தெரிவிக்க வக்கில்லை. தங்கள் வாக்குவங்கியை நிரப்புவதற்கு மட்டும் மக்கள் அவர்களுக்குத் தேவை போலும்.

❍❍❍




ஞானம் 299 இதழ் கிடைக்கக்பெற்றேன். வழக்கம்போல் அனைத்து ஆக்கங்களும் சிறப்பாக உள்ளன. குறிப்பாக இந்த இதழில் வெளிவந்துள்ள அனைத்து சிறுகதைகளும் சிந்தனையைத் தூண்டுவனவாக அமைந்துள்ளன. அவற்றை எழுதியோருக்கு எனது வாழ்த்துக்கள்.

**முனைவர் பால. சிவகடாட்சம்**

❍ ❍ ❍

மார்ச் 2025 (ஞானம் 298) இதழில் வெளிவந்த கட்டுரையின்மூலம் திருக்குறளைப் பற்றி முன்னம் அறிந்திராத பல தகவல்களைத் தெரிந்துகொண்டேன். ஞானம் பாலச்சந்திரனுக்கு நன்றிகள் பல. எனினும் குறள் பற்றிய சில ஐயங்கள் எனக்குண்டு.

மூலப்பிரதி தமிழின் எந்த வரிவடிவத்தில் எழுதப்பட்டது? குறள் எழுதப்பட்ட காலத்தில் நாம் இப்போது பயன்படுத்தும் தமிழ் வரிவடிவம் இருந்திருக்கிறது என்றே நினைக்கிறேன். புதிய வரிவடிவம் - தற்போது நாம் பயன்படுத்தும் வரிவடிவத்திற்கு, எப்போது மாற்றப்பட்டது? 1330 குறள்களில் இடைச்செருகல்கள் ஏற்பட்டனவா?

**க. பீற்றர், சாவச்சேரி**

❍ ❍ ❍

பெப்ரவரி (ஞானம் 297) இதழில் ஆசிரியர் தலையங்கம் காலத்துக்கேற்ற ஒன்று. செயற்கை நுண்ணறிவு, உண்மையான - நேர்மையான படைப்பாளிகளுக்கு, அறிஞர்களுக்கு ஒரு சவால். இது ஒருவகையில் சாபக்கேடு எனலாம். மனிதன், விஞ்ஞான தொழிநுட்பங்களினால், எவ்வாறு சோம்பேறியாகி வருகிறான் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணமெனலாம்.

**மொழிவரதன்**

❍ ❍ ❍

# குரு அரவிந்தன் வாசகர் வட்டம்

## திறனாய்வுப் போட்டி (3) - 2025 முடிவுகள்

இந்தப் போட்டிக்கு 134 திறனாய்வுக்கட்டுரைகள் இந்தியா, இலங்கை, பிரித்தானியா, மலேசியா, பிரான்ஸ், ஜெர்மனி, டென்மார்க், அவுஸ்ரேலியா, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து கிடைத்திருந்தன. அவற்றுள் 18 கட்டுரைகள் தெரிவாகின.

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | : | **சிவகலை சிவப்பிரகாசம்,** வவுனியா, இலங்கை. |
| இரண்டாம் பரிசு | : | **சகோதரி அருள் சுனிலா,** தேனி, தமிழ்நாடு. |
| மூன்றாம் பரிசு | : | **மரு.வெ. மாலாபாரதி.** ஆரணி. தமிழ்நாடு. |
| நான்காம் பரிசு | : | **வரதராஜன் ஜூனியர்தேஜ்,** சீர்காழி, தமிழ்நாடு. |
| ஐந்தாம் பரிசு | : | (1) **திவானி கந்தசாமி,** வவுனியா, இலங்கை. |
| | | (2) **சீ. கவிதாராணி,** பாசறை, இலங்கை. |

*பாராட்டுப்பரிசுகள்:* சிவநேஸ் ரஞ்சிதா, இலங்கை. எஸ். ராமேஸ்வரன், இலங்கை. திருமதி. பவானி சச்சிதானந்தன், இலங்கை. பி.பி. புஸ்பராஜா, இலங்கை. சந்திரகௌரி சிவபாலன், ஜெர்மனி. சிந்துஜா சிவகுமார், அவுஸ்ரேலியா. த.வேல்முருகன், தமிழ்நாடு. க.பூமணி, தமிழ்நாடு. இக்பால் அலி, இலங்கை. விமலாதேவி புசுப்பநாதன், கனடா. தீபரதி குபேந்திரன், தமிழ்நாடு. பன்னீர்ச்செல்வம் கருப்பையா, மலேசியா.

*நடுவர்கள்:* பேராசிரியர் கரு முத்தயா (தமிழ்நாடு), ஆய்வாளர் முனைவர் வாசுகி நகுலராஜா (கனடா), ஆய்வாளர் டாக்டர் மேரி கியூரி போல் (கனடா), எழுத்தாளர் கே. எஸ். சுதாகர் (அவுஸ்ரேலியா).

**- செயலாளர்,**
**குரு அரவிந்தன் வாசகர் வட்டம்.**

## கண்ணீர் அஞ்சலி



### எஸ். இராஜேந்திரன்



வீரகேசரி நிறுவனத்தில் நாற்பது வருடங்களுக்கும் மேலாக பணியாற்றிய சுப்பையா இராஜேந்திரன் அவர்கள் சென்ற ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இயற்கை எய்தினார். இவர் வீரகேசரி நிறுவனத்தில் அச்சுக்கோப்பாளர்பிரிவு மேற்பார்வையாளராக வும், புகைப்படக் கலைஞராகவும் பணியாற்றினார்.

அமரர் இராஜேந்திரன் அவர்கள், கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக ஞானம் சஞ்சிகை வடிவமைப்பில் உதவும் சுதா கோபி அவர்களின் தந்தையார் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னாரது இழப்பின் துயரத்தில் பங்கெடுத்து அவரின் ஆத்மா சாந்தியடைய ஞானம் குடும்பம் பிரார்த்தனை செய்கிறது.

GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/News/16/2025


கந்தபுராண கலாசாரத்தின் கலங்கரை விளக்கம்

# காசிவாசி செந்திநாதையர்

## நூற்றாண்டுச் சிறப்பிதழ்

(1924 - 2024)




விலை:
ரூபா 1500/=

ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6.
+ 94 11 2586013 / + 94 717 362 862
editor@gnanam.info


PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 011 2330195

ISSN 2478-0340